UNIVERSAL LIBRARY
OU_208171
UNIVERSAL LIBRARY

உ

சிவமயம்

அமிர்த கவிராயரியற்றிய

# நாணிக்கண் புதைத்தல்

என்னும்

# ஒருதுறைக் கோவை

❋

இதற்கு உரை யெழுதியவர்

சென்னை, மகாவித்வான், காஞ்சிபுரம் - இராமசாமி நாயுடு அவர்கள்

இது

சென்னை, தமிழ்ப்பண்டிதர் கொ. இராமலிங்கத் தம்பிரானவர்களாலும்

சென்னை, தமிழ்ப்பண்டிதர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளையவர்களாலும்

பரிசோதிக்கப் பெற்றது.

❋

இந்நூல்

திருவாவடுதுறை, ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பிள்ளையவர்கள் குமாரர்,

திரைலோக்கி, தமிழறிஞர், ஸ்ரீ திருநாவுக்கரசு பிள்ளையவர்களுடைய

பொருளுதவியைக் கொண்டு

சென்னை

தமிழ்ப்பண்டிதர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால்

வெளியிடப்பட்டது.

1942

[*Copyright, Registered*]

விலை ரூபா 3

முதற் பதிப்பு ஏப்ரல் 1942

பதிப்புரிமை

தமிழ்ப் பண்டிதர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களுக்கு உரியது.

The Jupiter Press, Madras

உ

SIVAMAYAM

# NANICKANPUTHAITHAL

ENNUM

# ORUTHURAICKOVAI

BY

AMIRTHA KAVIRAYAR

*With elaborate commentary*

BY

VIDVAN THE GREAT

Kanjeevaram RAMASAWMI NAIDU

MADRAS.

*Under the kind patronage of*

**TRILOKKI SRI TIRUNAVUCKARASU PILLAI**

*Son of*

TIRUVAVADUTHURAI SRI SUBRAMANIA PILLAI

*Edited and published*

BY

**A. CHOCKALINGAM PILLAI**

*Graduate of the Agricultural College, Saidapet, Madras*

*Retired Sanitary Inspector, Corporation, Madras*

*Joint author of 'Mosquitoes and Malaria'*

*Formerly Tamil Pandit, Sir Theagaraya Chetty School, Washermanpet, Madras*

*Copyright Registered*

**1942**

R 0

உ

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

திருவே யென்செல்வமே தேனேவானோர் செழுஞ்சுடரே
செழுஞ்சுடர் நற்சோதீ மிக்க
உருவே யென்னுறவே யென்னூனேயூனி லுள்ளமே
யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற் கருமணியே
மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினை நோயடையா வண்ணமு
ஆவடுதண் டுறையுறையு மமரரேறே.

—திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

புலவர் பெருமான்கள், தாம் வாழ்ந்துவரும் தலங்களிலும் மிக்க பழக்கமுள்ள தலங்களிலுந் திருக்கோயில் கொண்டுள்ள கடவுளரை யுந் தம்மை ஆர்வததோடு ஆதரித்த சீமான்களையும் புகழ்ந்து அன்பி னாலும் செய்ந்நன்றி யறிவினாலும் நூல்கள் இயற்றுதலும் பல தனிப் பாடல்கள் பாடுதலும் அவர்கட்கு இயல்பாம்.

பிரபந்தங்கள் 96-னுள் கோவைப் பிரபந்தங்கள் தமிழில் எண் ணில. அகப்பொரு ளிலக்கணத்தின்படி துறைகளை யமைத்து நிரல் படக் கோக்கப்படுவது கோவை யெனப்படும். கோவை அகப் பொரு ளிலக்கணத்திற்கு இலக்கியமாகத் தோன்றுகின்றது. கோவைப் பிரபந்தம் அகப்பொருட்டுறை நானூறும் கட்டளைக் கலித்துறையில் அமைந்திருத்தல் வேண்டும். அவ்வாறு எல்லாத் துறைகளும அமையப்பாடிய கோவை ஐந்திணைக் கோவையென்றும் ஓரே துறையில் பல செய்யுட்கள் அமையப் பாடியவை ஒருதுறைக் கோவை யென்றும் சொல்லப்படுகின்றன.

ஒருதுறைக் கோவைகளில் இதுவரையும் நாணிக்கண் புதைத் தல், வெறி விலக்கல், பாலனைப் பழித்தல், புறங்காட்டல் முதலிய துறைகள் அமைந்தனவாயுள்ளன. அவற்றுள் சில செய்யுடகள் வருமாறு :—

எத்தாரணியும்புகழ்வெங்கடேசுரட்டேந்த்ரன்வெற்பில்
வித்தாரமாநிதம்பத்திருவேமணமேசெயுன்ற
னத்தானைவேறுவிட்டம்மானைத்தங்கைக்குக்கூட்டிவிட்ட
ரித்தாரணியினிற்கற்புடையோருக்கியல்பல்லவே,

(நாணிக்கண் புதைத்தல்)

ககரவசனஞ்சொல்சீவிலிமாறன்கனகிரிமேல்
உகரப்படவிருந்தோமிலையேயுளைப்பெற்றவன்றே
வகரம்பிடித்தும்வந்தாரிலையேநல்மகவைப்பெற்றே
யகரவகரத்தனம்படைததேன்பெற்றதத்தனையே.

(பாலனைப் பழித்தல்)

வண்டுறைசோலைமலைப்பரிகாரிவந்தாலிவளுக்
கண்டுபடாதவிக்காமச்சுரம்விடுமாதலினால்
பண்டுபழகினர்போலவிவ்வேளையிற்பாயசத்தைக்
கொண்டுவந்தாலிதிற்ரேஷம்பிறந்திடுங்கோதையர்க்கே.

(வெறி விலக்கல்)

அக்கரவமபுனையாரூர்த்தியாகரணிவரைமே
லிக்கரையும்வென்றவிளமொழியீரிதென்னீளவோ
சர்க்கரைக்கோர்புறங்கைக்குமதோவதுதானுமன்றி
அக்கரையிக்கரையென்றுமுண்டோகங்கையாடுதற்கே.

(புறங்காட்டல்)

ஒருதுறைக்கோவை என்னும் இந்நூல் சென்னை, மகாவித்வான் காஞ்சிபுரம், இராமசாமி நாயுடு அவர்கள் ஏறக்குறைய 40 வருடங்கட்குமுன் எழுதிவைத்திருந்த உரையை யான் பொருள் கொடுத்து வாங்கி இதுபொழுது மூலமும் உரையுமாக யானும் எனது ஆப்த நண்பரும், இலக்கிய இலக்கண விற்பன்னருமாகிய தமிழ்ப்பண்டிதர். சென்னை, கொ. இராமலிங்கத் தம்பிரானுமாகப் பிழையறப் பரிசோதித்துச் சுத்தபாடமாக அச்சிட்டு வெளிப்படுத்தினோம். இந்நாணிக்கண் புதைத்தலென்னுந் துறைக்குள் இடையிடையே சில செய்யுட்களுள் வேறு துறை அமையும்படி பாடியுள்ளார். அன்றியும் சில செய்யுட்களின் பின்இரண்டடிகளில் ஊரின் பெயர்களும் நாட்டின் பெயர்களும் வேறு பெயர்கள் முதலியனவும் அமைத்துப் பாடியுள்ளார். இவற்றைப் புத்தக முடிவில் சேர்த்துள்ளேன்.

இக்கோவையிலுள்ள பல செய்யுட்களிலும் பொதிந்துள்ள சொற்பொருட் பிரயோகங்களும் நடைநயமும் இனிமை பயக்குமென்பது பண்டிதர்களெல்லோர்க்குந் தெரிந்ததே யாயினும், மற்றையோரும் இக் கோவையைக் கற்றுணர்ந்து களிக்கும் பொருட்டு சில செய்யுட்களை உதாரணமாக ஈண்டெடுத்துக்காட்டுவாம் :—

மஞ்சாங் கருதலர் போர்ப்படை மேற்கண்ட மாருதம்போல
விஞ்சாங்க மூல பலரகு நாதன் வியன்சிலம்பிற்
பஞ்சாங்க மோதி மறைநாட்டிச் சொர்க்கமிப் பாற்படுத்தி
யஞ்சாங்க குலத்தவர் பார்ப்பாரைச் சேர்ந்த ததிசயமே,

கடைமுன்னர் நின்று முடிமேற் றமதிரு கைகுவித்துப்
படைமன்னர் போற்றும் ரகுநாத சேது பதிவரைவா
யிடைதான் குறைந்தது மச்சமுங் காட்டுவ தில்லையென்றால்
மடவிருமது தனத்தை யெவ்வாறு மதிப்பதுவே.

இன்னுஞ் சில செய்யுட்களில் தலைவன், நாணமுற்றுக் கண்மூடி நின்ற தலைவியை நோக்கி,

'கண்மூடி யோகியர் போலநின் றீரிக் கருத்தினுக்கு
விண்மூடிய வரைக் கைவிடில் ஏதம் விளைவிக்கும்மே' என்றும்,

'பதிசேரிள மூலைசங்கிலி காட்டும் பணியணிந்தாய்,
துதிசேர் பரவையுங் காட்டில் என்போ லில்லை சுந்தரனே'

என்றும்,

'வெண்காம வெய்ய விடாய்க் கிளைநீர்தந்து வெவ்விடத்தை
யங்காம வல்லி நல்லீர்மறைத்தீர் நன்றறிவுமக்கே' என்றும்,

'பருப்பதமீது மலருஞ் செங்காந்தள்
பரவையிற் பூத்திருப்ப ததிசயங்காண்' என்றும்,

'வெந்தாகப் பசிதணிக்கக் கண்டிற வாமல்
இளநீர் கொடுத்தல் கவை யில்லையே' என்றும்,

'ஒன்றத்தைக் கண்டிருக் கச்சூர்செங் கற்பட்
டுயர்ந்தகழுக் குன்றத்தைக் கண்டனன் காண்பதெப்போ
தினிக் கோவளமே' என்றும்,

'மடலை மிலைந்த குழலீர்சர்க்கரை வட்டுத்தந்தீர்
கடலையும் விட்டுக் கலந்தாலல்லோருசி காண்பதுவே' என்றும்,

இவ்வாறு பற்பலவாறு உரைத்த தொடரின் சொன்னயமும் பொருணயமும் கண்டும் நூலினை முற்ற நோக்கக் கருதாமலிருப்பவர் யாவர்?

இந்நூல் உரை அச்சிடுங்கால், சில செய்யுட்களுக்கு உரை சிதைந்து போனமையால், மூல பாடமாகவே அச்சிடலாமென்று எண்ணிக்கொண்டிருக்கையில், சேதுபதி சமஸ்தான வித்துவானும், பாஷாகவி சேகரரும் ஆகிய பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார் அவர்கள் ஞாபகம் தோன்றி அவர்க்கு எழுதி கேட்டபொழுது சில பாடல்களுக்கு உரை எழுதி அனுப்பினர், அவையும் கைசோர்ந்துவிட்டன. மறுபடியும் வித்துவான் டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M. A. B. L., M. O. L. யவர்கள் மூலமாக எழுதிக் கேட்டபொழுது மீட்டும் ஐயங்கார் அவர்கள் எழுதியனுப்பினர். அவ்வுரைகளைத் தழுவியே உரை எழுதி வெளியிடலானேன். ஆதலால், மேற்கண்ட இரண்டு பெரியார்க்கும் எழுமையும் நன்றி பாராட்டக் கடவேனாக.

அன்றியும், இந்நூலை அச்சிடுதற்கு வேண்டிய பொருளுதவி புரிந்த திரை லோக்கி ஸ்ரீ. திருநாவுக்கரசுப் பிள்ளை அவர்கட்கும், இந்நூலை அச்சிடுங்கால் எனக்கு வேண்டிய உதவி புரிந்து முறைப்படி அச்சிடுவித்த முடிச்சூர் இராமச்சந்திர முதலியாருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்:

**ஏ. சொக்கலிங்கன்**

பதிப்பாசிரியன்.

# முன்னுரை

காதலன் காதலி என்ற இவர்களது அன்பு வரலாறே அகப் பொருள் நூல்கள். இவை தமிழுக்கே சிறந்தன. உலக இன்பத்தை வெளிப்படைப் பொருளாலும் கடவுளின்பத்தைக் குறிப்புப் பொருளாலும் விளக்குவன எனக்கொண்டு யாவரும் இவற்றைப் பாராட்டுவர். தொடக்கத்தில் இவ்வன்பு வரலாற்றில் ஏதேனும் ஒரு நிலையை மட்டும் பாட்டோவியமாக எழுதிக்காட்டி வந்தனர். சங்க நூற்கள் இதனை விளக்கும். பின் வந்தவர்கள் காதலன் காதலியின் வரலாற்றைக் கோவையாக எழுதி முடித்தனர். அகப்பொருள் துறைக் கோவைகளாக அமைந்தமையின் கோவை என்று தொடர் நிலைச் செய்யுள் வகையில் புகுந்தன. திருக்கோவையார் தொடங்கி இப்பழக்கம் தமிழ்நாட்டில் பெருவழக்காயிற்று.

புலவர்கள் தம் புலமையை மன்றுடி நிலைநாட்டும் காலம் வந்தது. பொருட்சிறப்பு உள்ளத் தூறி உண்மைப் பாடல்களாகப் பொங்கி வழிந்த காலம் ஒன்று. தம் பெருமையைக் காட்டத், தம்மைப் பற்றிய உயர்வெண்ணத்தோடு பாடல் பொங்கி வழிந்த காலம் மற்றொன்று. ஒவ்வொரு துறைகளைப் பற்றியும் ஒவ்வொரு பாடலாக நானூறு பாடுவதினும் ஒரு துறையைப் பற்றியே நானூறு பாடுவது பொருளின் அழகைக் காட்டாவிடினும் அதன் பெருமையினையும் அவ்வாறு பாடுவானது பெருமையினையும் ஒரு முறைக்கு நானூறு முறை பறையறையும் அன்றோ. திருவடியைப் பற்றி நானூறு பாடுகின்றேன் என்றால் திருவடி நிலையைப் பற்றி ஆயிரம் பாடுகின்றேன் என்றெழுந்த பெரியாரது மனப்போக்கை ஒத்தது. இம்முயற்சியின் போக்கும் இந்த வகையில் ஒருதுறைக் கோவைகள் எழுந்தன. இந்தப் புது வாய்க்கால் வெட்டி விட்டவர் அமுத கவிராயர். இவ் வகையில் பல கோவைகள் எழவில்லை என்பதொன்றே இது வல்லான் வெட்டிய வாய்க்கால் என்பதை நிலைநாட்டுகிறது. நாணிக் கண் புதைத்தல் என்ற ஒருதுறைப் பொருள் பற்றித் தமது மன்னராகிய தளவாய் இரகுநாத சேதுபதி மேல் நானூறு பாடலும் பாடித் தமது செஞ்சோற்றுக் கடன் கழித்தார் எனலாம், உயிரைக் கொடுப்பர் மறவர். மற்றவர்க்கு மறவனும் இம்மன்னனுக்கு உயிரினும் சிறந்த பாக்களைப் பலியிடுகிறார் இப்புலவர் பெருமான்.

இதன் அழகில் ஈடுபட்டு இந்நூலைப் பயிலாத காலமே யில்லை எனலாம். ஆனாலும் அந்நாளைய வரலாறும் வழக்கங்களும், பிறவும்

அறிந்தாலன்றி இந்நூலை முழுதுந் துய்ப்பது அருமையாகும். கோவை நூல்களிலே பெரும் பயிற்சி பெற்றுக் கோவை இராம சாமி நாயுடு என்று சிறப்புற்ற இராமாநந்த யோகியார் தம் வேலையை விட்டபோது ஆங்கிலேயர் ஒருவர் "கோவை இராமசாமி கோவே (go away)" என்று அழகாகப் பிரிவு வாழ்த்துக் கூறினாராம். அத்தகையார் இந்நூலுக்கு எழுதி வைத்திருந்த உரை இப்போது வெளிவருகிறது. மரபுநிலை வழுவாமல் பழம் புலவர்களிடத்தில் ஓதி யுணர்ந்த திருவாளர் **கொ. இராமலிங்கத் தம்பிரானும்** இராமசாமி நாயுடு அவர்களிடம் தமிழறிந்த **ஏ. சொக்கலிங்கம் பிள்ளையாரும்** இதனைத் திருத்தி வெளியிடுந் தொண்டில் ஈடுபட்டுத் தமிழ் நாட்டிற்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார்கள். இத் தொண்டினும் இதனை வெளியிடப் பொருள் உதவிய திரைலோக்கி **S. திருநாவுக்கரசு பிள்ளையின்** காசுத் தொண்டே இந்நூலைத் தமிழன் தன் கையில் வைத்துக் கண்டு களிக்கச் செய்கிறதாகலின் அவரை மறக்கப்போமோ?

இந்நூலை நன்கு அறிந்தார் சேது சமஸ்தான மகா வித்துவான் **ரா. இராகவையங்கார்** அவர்கள் என்பது யாவரும் அறிவர். இந்நூல் முழுவதையும் அவர் துணைகொண்டு வெளியிட்டிருப்பின் அழகுக்கு அழகு செய்ததாய் முடிந்திருக்கும். உரை யெழுதாது விடப்பட்டிருந்த சில பாடல்களுக்கு, மரபு அறிந்த அப்பெரியாரிடம் இருந்துதான் பொருள் அறிந்து இப்பதிப்பில் வெளியிட்டார்கள். இவ்வுண்மை அங்கங்கே குறிப்பிக்கப்பட்டிருப்பதை இதனை ஓதுவார் உணர்வர். தம்முடைய முதுமையின் பேரிடர்ப்பாட்டையும் பாராது தமிழன்பு ஒன்றே கருதி இவ்வாறு உதவிய அப்பெரியார்க்கும் நமது நன்றி உரியதாகும்.

**தெ. பொ. மீனாட்சிசுந்தரன்**, M.A. B.L., M.O.L.

உ

# நூலாசிரியர் வரலாறு

இந்நூலாசிரியராகிய அமிர்த கவிராய ரென்பவர், மதுரை ஜில்லா சிவகங்கை தாலூகாவிலுள்ள பொன்னுங்கால் என்னுங் கிராமத்தில் பிறந்தவர். இவர் தோன்றியகாலம் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பகாலமெனத் தெரியவருகிறது. கி. பி. 1635-1645-ம் வருடம்வரை அரசாண்ட தளவாய் சேதுபதியின் சகோதரியாகிய கங்கை நாச்சியார்க்குப் புத்திரராயுதித்துத் தன் அம்மானாகிய தளவாய் சேதுபதி தனக்குத் தந்த இராமநாதபுரத்தைக் கைக்கொண்டு முடிசூட்டப்பெற்று, அதற்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள அநேக சிறுநாடுகளைத் தன்வயமாக்கி எங்கும் புகழ்பெற்று, கி. பி. 1645-ம் ஆண்டு முதல் 1670-ம் ஆண்டு வரையில் அரசாண்ட தளவாய் ரகுநாத சேதிபதியின் சமஸ்தான வித்துவான்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அச்சேதுபதியின் வாயில் வித்துவான்கள் பலருள்ளும் இவர் அதிக சிரேட்டராக எண்ணப்பட்டவர். அதற்குக் காரணமென்னவெனின், அரசனும் ஆத்தான வித்வான்களும் ஒருநாள் மாலைப்பொழுது பூம்பொழிலிலிருந்தபோது அரசன் பாவலர்களை மனத்திற்கு இன்பந்தருவதான பற்பல பாடல்களைச் சொல்லச் சொல்லிக் காலங் கழித்துக்கொண் டிருக்கையில், அகப்பொருளைப் பற்றி வார்த்தை நிகழ்ந்த காலத்து, அரசன் தன்னெதிரிலிருந்த புலவர்களை நோக்கி, அகப்பொருட்டுறையில் ஏதேனுமொன்றில் பல பாடல்கள் செய்ய வல்லிரோ என்று கேட்க, அவருள் சிலர் ஒருதுறையிலே பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது பாடல்கள் செய்வோம் என்றார்கள். அமிர்த கவிராயரோ 'நான் நூறு பாடல் செய்வேன்' என்றார். அவர்கள் இவர் சொன்னதை வேறுவிதமாக இசையறுத்து "நானூறு பாடல் செய்வேன்" என்று சொல்வதாகத் தர்க்கிக்கவே இவர் "இதற்கென்ன இவ்வளவு போராட்டம், நானூறும் செய்வேன், அதையும் ஒரு பக்கத்தில் எழுதிமுடிப்பேன்" என்றார். இவ்வாறு செய்வது அருமையென அறிந்த அனைவரும் இவர் எப்படிச் செய்யப்போகிறார் என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், இவர் குறித்த தவணைக்குள் 'நாணிக்கண் புதைத்தல்' என்னுந் துறையில் நானூறு கட்டளைக்கலித்துறை பாடி முடித்து, முதலிரண்டடியில் தன்னரசனுடைய பிரபாவங்களைக் கூறிப் பின்னிரண்டடியில் அகப்பொருளொன்றும் போக்குரையுமாக இரண்டு பொருள் தோன்றும்படி செய்தனர்.

இந்நூலை அரங்கேற்றிய காலத்து அரசனும் அரண்மனை வாயில் வித்துவான்களும் இக்கோவையின் பெருமையையும், அகப்பொருளினிமையையும், போக்குரையின் நயத்தையுங்கண்டு மிக வியந்தனர். அரசன் அவர்மீது பிறந்த அன்பின் அறிகுறியாக

அவர் பிறந்த ஊராகிய பொன்னுங்கால்* என்னும் ஊரையே அவரும் அவர் சந்ததியாரும் சந்திராதித்தருள்ளவரை அனுபவிக்கும்படி மானியமாக விட்டுவிட்டான்.

இவர் காலத்து, சோழநாட்டிலும் தொண்டைநாட்டிலும் விளக்கமுற்றிருந்த புலவர்களுட் சிறந்தோர் முறையே இலக்கண விளக்கஞ் செய்த வைத்தியநாத நாவலரும், கழுக்குன்றப் புராணம் இயற்றிய அந்தகக்கவி வீரராகவ முதலியாருமாம்.†

இவர் இரகுநாத சேதுபதி காலத்திருந்தவர் என்பதைக் கொண்டு, இவர் இருந்தது கி. பி. 1640 வருஷத்திற்கு முன்னும் பின்னும் என்று நிச்சயிக்கப்படலாமோ? இப் பெயரைக்கொண்ட சேதுபதிகள் பலர் இருந்திருக்கிறார்களே எனின், இப் பெயரைக் கொண்டோர் பலர் இருந்திருப்பினும், இக்கோவை 1, 13, 21, 24, 33 முதலிய பல செய்யுட்களிலும் மற்றப் பாக்களிலும கோவை பெற்றவன் தளவாய் இரகுநாத சேதுபதி என்றிருத்தலாலும் 1645—1670-ம் வருஷம் வரையில் அரசாண்டவன் அப்பெயர் கொண்டவன்தான் என்று நிர்ணயிக்கப் போதிய சான்றுளதாலும்‡ மேலும் இச் சேதுபதி கைக்கொண்ட ஊர்ப் பெயரும் நாட்டுப் பெயரும் செய்யுள்களின் முன்னிரண்டடிகளில் குறிக்கப்பட்டிருப்பதாலும் அமிர்தகவிராயர் பதினேழாவது முதலிடைக் காலங்களி லிருந்தன ரென்று ஒருதலையாக்கொள்ள இயலும்.

இங்ஙனம்:

பதிப்பாசிரியர்.

---

* One of the Inam Villages in the Sivaganga Taluk, page 69, Village Statistics, Madura District, Census of India, 1901.

† See P. 4, Preface to the Edition of இலக்கண விளக்கம்.

‡ Robert Sewell's South Indian Dynasties, PP. 87—92.

*

உ

கடவுள் துணை

# இரகுநாத சேதுபதி

# ஒருதுறைக்கோவை

—: o :—

## நாணிக்கண் புதைத்தல்

நாணிக்கண் புதைத்தல் என்பது அகப்பொருட்டுறை நானூற்றின் ஒன்று. இத் துறையின் பொருள் ஒன்றே கருதிவர நானூறு பாடலும் பாடப்பட்டமையால், இந் நூலுக்கு ஒருதுறைக்கோவை யென்பது பெயராயிற்று. நாணிக்கண் புதைத்தல் என்பது தலைமகன் தன் முன்னின்று பெரும்பான்மை கூறக்கேட்ட தலைமகள் பெருநாணினளாதலின், அவன் முன்னிற்கலாகாது நாணி, ஒரு கொடியி லொதுங்கித் தன் கண்புதைத்து வருந்தா நிற்றல். இவ்வாறு தலைமகள் கண் புதைத்து நிற்றலால் தலைமகன் தனக்குண்டான வருத்தத்தைக் கூறுதலின் இதனை இடையூறு கிளத்தல் என்றுங் கூறுவர். நூனுதலிய பொருள் நாணிக்கண் புதைத்தலாயினும் முன்னிலையின்றித் தலைமகன் தன் இடையூறு கிளத்தலையாமையின் இம் முதற் செய்யுளிற் காட்சித்துறை கூறி முன்னிலையாக்கிக்கொண்டான்.

### காட்சி

#### கட்டளைக் கலித்துறை

பூமேவு தெய்வத் தளிர்முகை பூத்தபொற் கோலவல்லி
நாமேவு கல்விப் புயறளை வாய்ரகு நாதனிசைப்
பாமேவு கந்த கிரிமணிச் சாரற் பளிக்கறைசூழ்
காமேவு மற்புத நம்பா லகத்துக் களிதருமே.

(இதன் பொருள்.) பூ மேவு - அழகு பொருந்திய, தெய்வம் - தெய்வத் தன்மையுள்ள, தளிர் - மாந்தளிரையும், முகை - தாமரையரும்பையும், பூத்த - விகசிக்கப்பெற்ற, கோலம் - அழகாகிய, பொன்வல்லி - ஒரு பொற்கொடி, நாமேவு கல்வி புயல் - நாவினிடத்து நிறைந்த கல்வியையுடைய (வரையாக்

கொடையால்) மேகத்தை நிகர்த்த, தளவாய் - தளவாயாகிய, ரகுநாதன் - ரகுநாதசேதுபதியின், இசைப் பா மேவு-புகழமைந்த பாடல்கள் வழங்குகிற, கந்தகிரி - கந்தமாதந கிரியின், மணி சாரல் - அழகிய சாரலிலுள்ள, பளிக்கு அறை சூழ் - பளிக்கறைகள் சூழ்ந்த, கா மேவும் - சோலையிற் பொருந்திய, அற்புதம்-அதிசய வடிவு, (அது), நம்பால் அகத்து-நமது உள்ளத்தின் கண், களிதரும் - பெருமகிழ்ச்சியை யுண்டாக்கா நின்றது; (என்றவாறு.)

எல்லா நூற்கும் முதற்கண் மங்கல மொழி யின்றியமையாமையின் பூ வென்றெடுத்தார். மங்கலமாகிய மொழியை முதலிலமைத்துக் கோடற் பயன் நூல் இனிது முடிதலே யென்பது ஆன்றோர் துணிபு. பூ - பூவையும், மேவு-பொருந்திய, தெய்வம்-தெய்வத்தன்மையுள்ள, தளிர்-மாந்தளிரையும், முகை - தாமரையரும்பையும், பூத்த - விகசிக்கப்பெற்ற என்றிவ்வாறு கூறினும் பொருந்தும். பூ வென்றது முகத்தையும் தளிர் முகை என்பன செங்கையையும் கொங்கையையும் குறித்தன. இவையெல்லாவற்றையும் பூத்த பொற்கோலவல்லியென்றது தலைமகளது முழுவடிவத்தை, பூ தளிர் முகை என்பவற்றில் தெய்வத் தன்மை யென்னெனின் முறையே குவியாமை வாடாமை விரியாமை என்க. நாமேவு கல்விப்புயல் என்பதற்கு, நாவினிடத்துப் பொருந்திய கல்விக் கடல் என்றுரைத்தலுமாம். புயல் நீராதலால் அது நீரையுடைய கடலுக்காயிற்று. தளவாய்-சேநாபதி. கந்தகிரி-கந்தமாதநம்; இஃது இராமேச்சுரத்திலுள்ளதோர் மணற்குன்று. வரையாக் கொடை - அளவுபடாத ஈகை. வல்லி அற்புதம் தரும் என்றியைத்து உரைக்க. 'பூமேவு தெய்வத் தளிர்முகை பூத்த பொற்கோலவல்லி' என்பதற்குச் சரசுவதி யெனப் பொருளுரைத்து, 'நாமேவு கல்விப்புயல்' என்பதற்கு அவள் வந்து தங்கிய நாவினை யுடையனாதலால், 'கல்விப்புயலாயினன்' என்று உரைத்தலுமாம். மணிச் சாரல்-இரத்தினங்களை யுடைய சாரல் எனினுமமையும். பளிங்கு அறை - பளிக்கறையென வலித்தலாயிற்று. இந் நூற்குத் தெய்வ வணக்க மில்லையாலோவெனின், தொல்காப்பியர் முதலியோர் போல இந் நூலாசிரியரும் மாநசிகமாகத் தெய்வ வணக்கஞ் செய்து கொண்டனர் என்க. (1)

சூலங்கைக் கொண்ட விராமேசர் தாண்முடி சூடியெழு
ஞாலங்கைக் கொண்ட ரகுநாய கன்செம்பி நாடனையீர்
சேலங்கைக் கொண்டுயர் வெல்லமென் பாலருள் செய்தனல்ல
காலங்கைக் கொண்டர சாள்வது பார்த்திருங் கண்களித்தே.

## வெளிப்படைப் பொருள்.

(இ - ள்.) சூலம் - சூலப்படையை, கைக்கொண்ட - கையிற் றரித்த, இராமேசர் - இராமநாதரது, தாள் - திருவடிகளை, முடிசூடி - (தனது) சிரத்

திற் சூடி, (அத் திருவடியின் மகிமையால்) எழு ஞாலம் - ஏழுலகங்களையும், கைக்கொண்ட - கைவசமாக்கிக் கொண்ட, ரகுநாயகன் - ரகுநாத சேது பதியின், செம்பிநாடு அனையீர் - செம்பி நாட்டை நிகர்த்தவரே, சேலம் - சேலம் என்னும் ஊரை, கைகொண்டு - நீர் கைப்பற்றிக் கொண்டு, உயர் - உயர்ந்த, வல்லம் - வல்லம் என்னும் ஊரை, என்பால் அருள் செய்தல் - என்னிடத்துக் கிருபை செய்தல், நல்ல காலம் - (எனக்கு) நல்லகாலமே, கைகொண்டு - (அந்த வல்லத்தை) நான் கைப்பற்றி, அரசாள்வது - அர சாள்வதை, கண்களித்து பார்த்து இரும் - (நும்) கண்களிக்கப் பார்த்துக் கொண்டிரும்; (எ-று.)

வல்லத்தை யெனக்குக் கொடுத்தீர், நான் அதைக் கைப்பற்றி அரசா ளுவதை நும் கண்களிக்கப் பார்த்திருப்பதன்றோ நுமக்கழகு என்பது கருத்து.

இறைவரது படைக்கலங்க ளெல்லா வற்றினுஞ் சிறந்ததும், இகல் புகல்களை அழித்தளிக்க வல்லதும் சூலமாதலால், அதன் சிறப்புத்தோன்ற 'சூலங் கைக்கொண்ட விராமேசர்' என்றும், அவர் திருவடியை முடிசூடு தலே ஏழுலகங்களையும் அரசாள முடிசூட்டுமென்பது தோன்ற, 'தாண் முடிசூடி யெழுஞாலங் கைக்கொண்ட' என்றும் கூறினார். ரகுநாயகன் - ரகுநாதன். செம்பிநாடு பார்ப்போருடைய கண் மனங்களைக் களிப்பிப்பது போலத் தலைமகளும் தன்னைக் களிப்பித்தலால், 'செம்பி நாடனையீர்' என் றான். இனி யிவ்வாறு வருவனவற்றுக் கெல்லா மிதுவே பொருளாகக் கொள்க.

## குறிப்புப் பொருள்

சேல்-சேல்மீன் போன்ற கண்களை, அங்கை கொண்டு-அகங்கையால் மூடிக்கொண்டு, உயர் - உயர்ந்த, அம் வல் - அழகாகிய சொக்கட்டான் காய் போன்ற தனத்தை, என்பால் அருள்செய்தல் - எனக்குக் கொடுத்தருளுதல், நல்லகாலம் - (எனக்கு) நல்ல காலமே, கை கொண்டு - அதனை நான் கைப் பற்றி, அரசாள்வது - அரசாள்வதை, கண்களித்து பார்த்திரும் - (நும்) கண் களிக்கப் பார்த்திரும்.

அரசாள்வது இடக்கரடக்கல். அரசு - அரசிலையை முதலாகு பெயரா யுணர்த்தி, அவ்விலை நிதம்பத்தை உவமையாகு பெயரா யுணர்த்திற்று. (2)

ஆயுந் தமிழினும் போரினும் பாரி லகத்தியனுஞ்
சேயும் புகழ்தள வாய்ரகு நாதன் சிலம்பில்வள்ளை
பாயுங் கயலிந்த நேமிகண் டாலெலைப் பார்த்திடினன்
றேயுந் தடமென வேயணங் கேயுனைச் சொல்லுவெனே.

## வெளிப்படைப் பொருள்.

(இ - ள்.) ஆயும் - (வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்தாரால்) ஆராயப் படுகின்ற, தமிழினும் - தமிழ்ப் புலமையினும், போரினும் - யுத்தத்தினும், பாரில் - உலகத்தில் (முறையே), அகத்தியனும் - அகத்திய முனிவனும், சேயும் - முருகக் கடவுளும், புகழ் - புகழ்தற்குரிய, தளவாய் - தளவாயாகிய, ரகுநாதன் - ரகுநாதனது ஆட்சியாகிய, சிலம்பில் - வரையினிடத்து, வள்ளை பாயும் கயல் - வள்ளைத் தண்டின்மேற் பாய்கின்ற கயல்களை, இந்த நேமி கண்டால் என - இந்தச் சக்ரவாகத்தைப் பார்த்தாற்போல, பார்த்திடின்-(உன்னிடத்துக்) காண்பேனாயின், அணங்கே-தெய்வப் பெண்ணே, உன்னை - உன்னை, நான் தோயும் தடம் எனவே சொல்லுவென் - நான் மூழ்குகின்ற தடாகமென்றே சொல்வேன் ; (எ-று)

ஆயுந்தமிழ் என்பதற்கு முதல் இடை கடை என்னு முச் சங்கத்தாராலும் ஆராயப்பட்ட தமிழ் எனினுமமையும். தமிழ் என்பதற்குப் பொருள் இனிமையாதலால் ஆய்தற் குரியதாயிற்று. தமிழினும் போரினும் அகத்தியனும் சேயும் புகழ் என்றது முறைநிரனிறை. அகத்தியனுக்குச் செந்தமிழ்ப் பரமாசிரியராகிய சேயைத் தமிழிற்கு எடுத்து விதவாது அகத்தியனுரை யெடுத்தது, இவரால் இப்பாடை உலகத்தில் பெரும்பாலும் பரவினது காரணமாகவென்க. அன்றி ஏற்ற பெற்றியால் தமிழிற்கு அகத்தியனையும், தமிழிற்கும் போருக்கும் சேயையும் எடுத்துரைத்தாரெனக் கொள்ளினு மிழுக்காது.

அதங்கோட்டாசான், தொல்காப்பியனார், பனம்பாரனார் முதலிய பன்னிருவர்க்குத் தமிழறிவுறுத்தி இயல் இசை நாடகமென்னு முத்தமிழும் அமைந்து நிரம்பின நூலாகிய அகத்தியத்தை யருளிச் செய்ததனால், அகத்தியனாரைத் தமிழிற்கும்,

'பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல்' எனவும்,

'கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங்கடலுங்
கலங்கக் கார்வந்,
துறங்குசிகைப் பொருப்புஞ்சூ ரரப்பொருப்பும் பிளப்பமறை
யுணர்ந்தோ ராற்றும்,
அறங்குலவு மகத்தழலு மவுணமட வார்வயிற்றி
னழலு மூள,
மறங்குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள்
வணக்கஞ் செய்வாம்' எனவும்,

'திரளரக்கரைவென்கண்ட வேலன்' எனவும்,

'தேமொழி யத்தன் பெறவோந் தனக்கன்று சேணுலகத்,
தேமொழியத் தஞ்சினங் காட்ட வுணரைச் சேமகரத்,
தேமொழி யத்தம் புயமவர் சூடிகை சிந்தவென்ற,
தேமொழி யத்தம் பதினு லுலகு மந்தித்த தொன்றே'

எனவும் அறிஞர் கூறுமாற்றால் சேயைப் போருக்கும் விதந்தெடுத்துரைத் தார். இவ்விருவரானும் புகழப்படுவோ னெனவே இவன் கல்வி யறிவா னும் புயவலியானும் அவரினும் மேற்பட்டோ னென்றநாயிற்று.

## குறிப்புப் பொருள்

வள்ளை-காது, கயல்-கண், நேமி-தனம். வள்ளை யென்பதற்கு வள்ளையிலை யெனப் பொருளுரைப்பாரு முளர். அப் பொருள், 'காதை வள்ளைத்தண்டின் வளமென வாழ்த்தியும்' என்னும் பட்டினத்தடிகள் திரு வாக்கானும், பிற அறிஞர் வாக்கானும் மறுக்கப்படும். ஒரு தடத்தில், வள்ளை கயல் நேமி என்பன காணப்படுதல்போல இவளிடத்தும் காணப் படுவனவாகக் கொள்க.

இரு கையும் கண்மே லெறலால் தனங்கள் வெளிப்படத் தோன்றக் கண்டு இந்த நேமி என அண்மையிற் சுட்டினன். எனவே என்னும் ஏகாரம் வேறென்ருகச் சொல்லே னென்பது படநின்றமையின் தேற்றம்; அன் றிப் பிரிநிலை யெனினுமாம். மக்களுள்ளாள் என்னும் நினைவு சிறுபான் மைத்தாகலின் 'அணங்கே' என்ருன்.

'வள்ளைபாயுங்கயல்' என்றதனுல், கண்ணிணை காதளவோடி மீண்டு மிளிர்தல் கொள்ளப்படும். மிளிர்தல் - வலமிடமாகப் பிறழ்தல். 'காதள வோடிய கலகப் பாதகக் கண்ணியர்' என்ருர் பட்டினத்தடிகளும். நேமி - சக்கரவாகப்புள். இது தனத்திற்கு உவமை. நேமி என, அடைகொடுத்துப் புனைந்துரையாது வாளா கூறினது பெண்ணுறுப் பெல்லா வற்றினுஞ் சிறந்த வுறுப்பென்பது போதரற் கென்க. இது

'திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்,
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ,
மருவளர் மாலையோர் வல்லியி னெல்கி யனநடைவாய்ந்,
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே'

என்னுந் திருக்கோவையார் முதற் செய்யுளில் முகத்திற்குத் திருவளர் தாமரை எனவும், கண்களுக்குச் சீர்வளர் காவிகள் எனவும், நாசிக்குக் குருவளர் பூங்குமிழ் எனவும், கைக்குப் பைங்காந்தள் எனவும், அடைதந்

தோதி, பெண்மைக்குச் சிறந்து இன்றியமையாத வுறுப்பாகிய தனத்துக்கு அடைதராது வாளா கோங்கு எனக்கூறிய திருவாதவூரடிகள் திருவாக் கானுமுணர்க. பெண்மைக்குச் சிறந்த வுறுப்புத் தனம் என்பது.

> " கல்லாதான் சொற்கா முறுதன் முலேயிரண்டு,
> மில்லாதாள் பெண்காமுற் றற்று "

என்பதனுல் இனிது விளங்கும். (3)

**தேனர் மணமுல்லே வெண்டாரும்** பைந்தமிழ்ச் செந்தொடையுந்
தானர் தடம்புயத் தான்ரகு நாதன் றமிழ்ச்சிலம்பில்
வாஞ ரிளம்பிறை வாணுத லீர்தும்பி வாழுமுங்கள்
கானர் குறிஞ்சியிற் செல்கின்ற தாரையைக் காட்டிடுமே.

## வெளிப்படைப் பொருள்

(**இ - ள்.**) தேன் ஆர் - தேன் நிறைந்த, மணம் - பரிமளமுள்ள, வெள் - வெண்மையாகிய, முல்லேத்தாரும் - முல்லே மலர்மாலேயும், பைந் தமிழ் செந்தொடையும் - பசிய தமிழ்ச்சொன் மலர்களால் தொடுக்கப்பட்ட அழகிய மாலேயும், ஆர் - பொருந்திய, தடம்புயத்தான் - பெரிய தோள்களே யுடையவனுகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தமிழ்ச்சிலம்பில் - தமிழ்மொழி வழங்கு மலேயினிடத்துள்ள, வான் ஆர் இளம்பிறை - ஆகா யத்திற் பொருந்திய இளம்பிறை போன்ற, வாள் நுதலீர் - ஒளியுள்ள நெற் றியை யுடையவரே, தும்பி வாழும் - யானேகள் வாழுகின்ற, உங்கள் - உம் முடைய, கான் ஆர் - காடுகள் நிறைந்த, குறிஞ்சியில் - குறிஞ்சி நிலத்தில், செல்கின்ற தாரையை - போகின்ற வழியை, காட்டிடும்-காட்டும் ; (எ-று.)

தேன் - வண்டு எனினுமாம். இரண்டாமடியின் முதற்கண்ணுள்ள தான் அசை. இளம்பிறை யென்றது பூர்வபக்கத்து அஷ்டமி சந்திரனேக் குறித்தது. தடம்புயம் - மலேபோலுந் தோள் எனினுமமையும். தமிழ்ச் சிலம்பு என்று மலேயைச் சிறப்பித்தலானே அங்குள்ளாரது தமிழ்த்தேர்ச்சி தானே விளங்கும். குறிஞ்சியின் - மலே நிலம்போல எனினுமாம். இதில் **வழிவினுத** லென்னும் துறையும் அமைந்துள்ளது.

## குறிப்புப் பொருள்

தாரை - கண்மணி, 'தாரையைக் காட்டிடும்' என்றமையால், நாணிக் கண் புதைத்தல் தோன்றிற்று. இனி, தார்+ஐ+ஐ=அழகிய அம்பு போன்ற கண்ணே; (தார் - அம்பு). தும்பி - யானே, (தனம்). வான் ஆர் - மேன்மை பொருந்திய எனினுமாம். தும்பிவாழும் உங்கள் கானர் குறிஞ்சி என்றமையால் தனப்புறப்பாடு தோன்றிற்று. (4)

பண்டேந் தியசங் கினம்போல மல்லிகைப் பாரமுகைச்
செண்டேந் தியகரத் தான்ரகு நாயகன் றேவைவெற்பில்
வண்டேந் தியசெங்கை வாழ்வேயென் னெஞ்ச மறுகுமதங்
கொண்டேந் தியவெங் கரிக்கோடு தோயுங் குருதிகண்டே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பண்டு - முற்காலத்தில், ஏந்திய - தாங்கிய, சங்கு இனம் போல - சங்கின் சாதிபோல, மல்லிகை முகை - மல்லிகை முகைகளாற் றொடுக்கப்பட்ட, பாரம் - பளுவாகிய, செண்டு - செண்டினை, ஏந்திய - தாங்கிய, கரத்தான் - கையை யுடையவனாகிய, ரகுநாயகன் - ரகுநாத சேதுபதியின், தேவை வெற்பில் - தேவை மலையிலுள்ள, வண்டு ஏந்திய - வளையலைத் தாங்கிய, செங்கை - செவந்த கையையுடைய, வாழ்வே - (என்) உயிரே, மதம் கொண்டு - மதத்தைக்கொண்டு, ஏந்திய - தாங்கிய, வெம் கரிக்கோடு - வெவ்விய யானைக்கொம்புகள், தோயும் - (உன் மார்பில்) பட்டுக்குளித்தலா லுண்டாகிய, குருதிகண்டு - உதிரத்தைப் பார்த்து, என் நெஞ்சம் மறுகும் - என்மனம் மயங்காநின்றது; (எ - று.)

அரசர், திருமால்போல் உலகத்தைக் காத்தற்றொழி லுடைய ராதலால், 'பண்டேந்திய சங்கினம் போல மல்லிகைப் பாரமுகைச் செண் டேந்திய கரத்தான் ரகுநாயகன்' என்றார், சங்கு - இவ்விடத்து பாஞ்ச ஜந்யத்தைக் குறித்தது. வாழ்வு - என்னுயிர் வாழ்ச்சிக்குக் காரணம் எனினும் பொருந் தும். வாழ்வு - செல்வமுமாம். யானை ஒன்றின் மேற்பாய்ந்து கொம்புகளில் உதிரம் பட்டிச் செவந்திருந்தலைக் காணின் அஞ்சுதல் உலகத் தியற்கை யாதலால் இவ்வாறு கூறினான். இதில் **நடுங்க நாட்ட**மென்னுந் துறை அமைந்துள்ளது.

## குறிப்புப் பொருள்

'வண்டேந்திய செங்கை' என்றது வளையலைச்சுமந்த சிவந்த கையை. வண்டு-கருவண்டுபோலுங்கண். கரிக்கோடுதோயும் குருதி என்றது, யானைக் கொம்புபோலுந் தனத்தின்மீது அணிந்துள்ள குங்குமக் குழம்பை. 'வண் டேந்திய செங்கை வாழ்வே' என்றமையால் நாணிக்கண் புதைத்தலும், 'மதங்கொண்டேந்திய வெங்கரிக் கோடுதோயுங் குருதி கண்டு' என்றமை யால், தனத்தின் புறப்பாடும் தோன்றுகின்றன. வண்டு - கண். கரிக்கோடு - தனம். (5)

வானைச் சுரபியைச் சிந்தா மணியைமந் தாரமென்னுங்
கானைப் பொருகொடை யான்ரகு நாயகன் கந்தகிரிச்
சோனைப் புதுமது வார்குழ லீரித் துதிக்கைவெம்போ
ரானைக் கிசையி லங்கார மானுக் கழகல்லவே.

## வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** வானை - மேகத்தையும், சுரபியை - காமதேனுவையும், சிந்தாமணியை - சிந்தாமணியையும், மந்தாரம் என்னும் கானை - மந்தாரம் என்கிற கற்பகச் சோலையையும், பொரு - நிகர்த்த, கொடையான் - ஈகையை யுடையவனாய, ரகுநாயகன் - ரகுநாதசேதுபதியின், கந்தகிரி-கந்த மாதன மலையிலுள்ள, சோனை - விடாமழைபோல, புதுமதுவார் - புதுமை யாகிய தேனொழுகுகின்ற, குழலீர்-கூந்தலையுடையவரே, இ-இந்த, துதிக்கை வெம்போர் - தும்பிக்கையினாற் செய்கிற கொடிய யுத்தமானது, ஆனைக்கு இசையில் அலங்காரம் - யானைக்குண்டாயின் அழகாகும், மானுக்கு அழகு அல்ல - மானுக்கு அழகன்று; (எ - று.)

கைம்மாறு கருதாத ஈகையை யுடையவன் என்பதற்கு, 'வானைச் சுரபியைச் சிந்தாமணியை மந்தாரமென்னுங் கானைப்பொருகொடையான்' என்றார். இந் நான்கனுள்ளும் கொடையிற் சிறந்தது மேகமாதலால், 'வானை' என்று அதனை முன் வைத்தார். தேனொழுகுதற்குக் காரணம் மலரணிந்திருக்கை.

## குறிப்புப் பொருள்

துதிகைவெம்போர் - துதித்தற்குரிய கையினது வெம்போர்; அதாவது கையினாற் கண்புதைத்தல். ஆனை யென்றது தலைவனை. மான் என்றது கண்ணை. உன் கையால் மறைக்கத் தகுந்தது தலைமேயன்றிக் கண்ணல்ல வென்பதாம். இவ்வாறு கூறியதனும் கண்புதைத்தலும் தனப்புறப்பாடும் விளங்குகின்றன. (6)

போரேறு வெங்க ணரக்கன்முன் மாதலி பூட்டியபொற்
றேரேறு சிங்கம் ரகுநாதன் றேவைச் சிலம்பில்வெய்ய
காரேறு வன்கண்மை சேர்கையுற் றுயொரு காளைபின்சேர்
வாரேறு கொங்கையை நீதடுத் தாயிலை வன்புறவே.

## வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** போர் ஏறு - போர்க்களத்து எதிர்த்து நின்ற, வெங்கண் அரக்கன் முன் - கொடுமையுடைய அரக்கனாகிய ராவணன் என்னும் யானைக்

கெதிரில், மாதலி பூட்டிய - மாதலி பூட்டிக் கொண்டு வந்த, பொன் தேர் ஏறு - பொன்னாற் செய்த தேரின்மீதேறிய, சிங்கம் - சிங்கமாகிய, ரகுநாதன் - ரகுநாதசேதுபதியின், தேவைச் சிலம்பில் - தேவை மலையில் உள்ள, வல் புறவே - வலிய புறுவே, வெய்ய - கொடிய, கார் ஏறு - (அறிவின்மையாகிய) இருள் செறிந்த, வன்கண்மை சேர்கை உற்றாய் - வன்மையைச் சேர்தலை யடைந்தாய், (ஏனெனின்) ஒரு காளைபின்சேர் - தமியனாகிய ஒரு விடலையின் பின் தொடர்ந்து சென்ற, வார் ஏறு கொங்கையை - கச்சேறிய கொங்கை களையுடைய என் பேதைப் பெண்ணை, நீ தடுத்தாயில்லை - (செல்ல வேண்டா மென்று) நீ தடைசெய்தலை யில்லை யாதலால்; (எ - று.)

'மாதலி பூட்டிய பொற்றேரேறு சிங்கம்' என்றது சக்ரவர்த்தித் திரு மகனாகிய ஸ்ரீராமபிரானை. போர் ஏறு - போரில் மழவிடை எனவும், வெம்கண் - குரூரமான கண்களையுடைய எனவும் உரைப்பினு மமையும். மாதலி - இந்திரசாரதி. ரகுநாதனைச் சிங்கம் என்றதனால் வெங்கணரக் கலை யானையாக்கி யுரைக்கலாயிற்று. இதில் புறவொடு புலம்பல் என் னும் துறை அமைந்துள்ளது.

## குறிப்புப் பொருள்

நலவினை நோக்கி யுரைக்குங்கால் கருமைமிக்க வலியகண்ணிற் றீட்டிய அஞ்சனம் சேர்ந்த கையைப் பொருந்தினாய், ஒரு விடலையாகிய என்பின் தொடர்கின்ற வார் நீங்கிய கொங்கையை நீதடுத்தாயில்லை யெனவும் வேறுமொரு பொருள்படுமாறு காண்க. கைகள் கண்களைத் தொட்டுமூடுத லால் அக் கண்களின் மையானது கைகளிற்பட்டதென்ற தாயிற்று. வார் ஏறு கொங்கை என்றமையால் அடங்கி யிருக்கவேண்டிய வாரினின்றும் நீங்கி வெளியேறினமையும் நீ தடுத்தாயில்லை என்றமையால் தன்னாற் றடுக்க முடியாமையும் ஒரு காளை யென்றமையால் தனது தனிமையும் பின்சேர் என்றமையால் புறக்கொடையும் பெறப்பட்டன.

வாரோடு கூடியிருப்பினும் தாங்குவேன், அங்ஙன மின்மையால் தாங்க கில்லேன் என்பது போதர, 'வாரேறு கொங்கையை நீ தடுத்தாயிலை' யென்றான். வார் ஏறு கொங்கை - அன்மொழி. இது புறவொடு புலத் தல் எனினுமமையும். புறவொடு புலத்தலாவது வேடமாதரைக்கேட்டு அதுவழியாகச் செல்லுகின்ற செவிலி, ஏதிலனுமாய்த் தமியனுமாயவன் சொற்றுணையாக வெய்யசுரத்தே மாது சென்றால், தேவைச் சிலம்பிற் புறவே! 'இது நினக்குத் தகுதியன்றெனக் கூறிற்றிலை' யெனப் புறவொடு புலத்தல். புலத்தல் - பிணங்குதல். இத் துறை சுரம் போக்கி னிகழ்வது.

" புயலன் றலர்சடை யேற்றவன் றில்லைப் பொருப்பரசி
பயலன் றனைப்பணி யாதவர் போன்மிகு பாவஞ்செய்தேற்

கயலன் றமியனஞ் சொற்றுணை வெஞ்சுர மாதர்சென்றால்
இயலன் றெனக்கிற் றிலைமற்று வாழி யெழிற்புறவே"

என்பது திருக்கோவையார். இனி, காளைபின்சேர் - காளையாகிய சுந்தர மூர்த்தி நாயனாரின் பின்சேர்ந்த, வார்ஏறு - விசாலமான, கொங்கு ஐயை - கொங்கு தேசத்திற்குத் தலைவனாகிய சேரமான் பெருமானாயனாரை நீ தடுத்தாயிலை என மற்றொரு பொருள் காண்க. (7)

மைம்மா னிகர்த்த மலைவளர் காதலி மாதுவளர்
பெம்மா னருட்குரி யோன்ரகு நாதன் பிறங்கலன்னீர்
கைம்மான் குதிக்கறி யாதென்று நீரென் கலைமதிக்கு
ளிம்மான் குதிக்குமென் றேபிடித் தீர்கை யிரண்டினுமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மை மால் நிகர்த்த - கரிய மேகத்தை யொத்த, மலைவளர் காதலி மாது - மலைவளர் காதலிப் பெண்ணாகிய உமாதேவி, வளர் - தன் இடப்பாகத்தில் வளர்தற்குரிய, பெம்மான் அருட்கு உரியோன் - சிவபெருமானது திருவருளுக்கு உரியவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், பிறங்கல் அன்னீர் - மலையை நிகர்த்தவரே, என் கலைமதிக்குள் - எனது கலைகளையுடைய சந்திரனிடத்தில், கைம்மான் குதிக்க அறியாது என்றும் - யானையானது குதிக்க அறிந்திலதென்றும், இம் மான் குதிக்கும் என்றே - இந்தமான் குதிக்குமென்றும் நினைத்தோ, நீர் கை யிரண்டினும் பிடித்தீர் - நீர் (இந்த மானைக்) கையிரண்டாலும் பிடித்துக் கொண்டீர்; (எ - று.)

கைம்மான் - என்பதில் இறுதி னகரம் சாரியை. 'கைம்மான் குதிக் கறியாதென்று நீரென் கலைமதிக்குள், இம் மான் குதிக்குமென்றே பிடித் தீர் கையிரண்டினுமே' என்பதில் என்றே வென்னும் ஏகாரம் எதிர்மறை யாய், நும் கண்மானினும் நும் கைம்மான் என் கலைமதியிற் குதித்துக் கலக்கும் என்னும் பொருள் தந்தது. கலைமதி - நூல்களிற் பயின்ற அறிவு.

## குறிப்புப் பொருள்

மான் - கண். கைம்மான் - யானை (தனம்). (8)

ஆரத் தொடையிடை நீலமிட் டாங்களி தோயுமுல்லை
வீரத் தொடைபுனை யோன்ரகு நாயகன் வெற்பனையீர்
மாரத் தொடைக்குண் முகைத்தா மரைவிட்டு வன்கொலைசூழ்
கோரத் தொடையென வோபுதைத் தீர்மைக் குவலயமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஆரத்தொடை யிடை - முத்துமாலையின் இடையிடையே, நீலம் இட்டாங்கு - நீலமணியைக் கோத்து வைத்தாற்போல, அளி தோயும் - வண்டுகள் படிந்த, வீரம் - வீரத்தன்மையுள்ள, முல்லைத் தொடை புனை வோன் - முல்லை மலர்மாலையைத் தரிப்பவனாகிய, ரகுநாயகன் - ரகுநாத சேதுபதியின், வெற்பு அனையீர் - மலையை நிகர்ப்பவரே, மாரத்தொடைக்குள் - மன்மதனுடைய பஞ்சபாணங்களுள், முகைத்தாமரைவிட்டு - தாமரை யரும்பை விடுத்து, வன்கொலைசூழ் - வலிய கொலையையே நாடுகின்ற, கோரத்தொடை எனவோ - கொடுமையாகிய பாணமென்று நினைத்துத் தானோ, மை குவலயம் - கருங்குவளை மலரை, புதைத்தீர்-மூடினீர் ; (எ-று.)

அளி தோய்தற்குக் காரணம் தேன் விருப்பம். நீலப்பூவாகிய பாணம் கொல்லுந் தொழிலுள்ளது ஆகலால், "வன்கொலைசூழ் கோரத்தொடை யெனவோ புதைத்தீர் மைக்குவலயமே" என்றான்.

ரகுநாயகன் வெற்பு "அளக்கலாகாவளவும்,பொருளும், துளக்கலாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரூஉம் வண்மையும் உடைத் தாதல்போல, அளந்தறியப்படாத வுயர்ச்சியளவும், கல்வி கேள்விப்பொருள் களும், யாவராலும் அசைக்கப்படாத கற்புநிலையும், நெடுந்தூரஞ் சென்று தோற்றும் புகழும், வருவாய் குறைபினும் உதவுந் தன்மையாகிய ஔதார் யமும் உடையளென்பது தோன்ற "ரகுநாயகன் வெற்பனையீர்" என்றான். மன்மதனது பஞ்சபாணங்களாவன : தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, நீலப்பூ என்பன. இவற்றின் தொழில் முறையே நினைப்பூட் டல், பசலை போர்த்தல், உணவொழித்தும் நீக்கல், நிடைகாட்டல், கொல்லு தல் என்பன. இவையெய்யுமிடம் முறையே நெஞ்சு, தனம், விழி, சிரம், அல்குல் என்பன. இவற்றின் விரிவெல்லாம் மதநாகமங்களிற் காண்க, வன்கொலை சூழ்தலால் கோரத்தொடை யெனப்பட்டது. மைக் குவலயம் கொலைத்தொழில் வல்லதென்பது "முழுநீலங்கொல்லும்." எனவும், "மதன் நீலக்கணையிற் கைவைத்தானினிச்சற்று நேரநிற்பிற் காலற் கிரையிடுமென் னுவியை" எனவும், "அனங்கனெய்து தன்னஞ் சிலம்பு குவளை யல்லாது தணந்தனனே" எனவும் வரும் செய்யுட்களான் விளங்கும்.

## குறிப்புப் பொருள்

மைக் குவலயம் - அஞ்சனமெழுதிய கண். முகைத்தாமரை - தனம். (9)

நடைநிலஞ் சாதி குலமோ டரிவங்க நல்லதந்திப்
படையணி சேர்முன்றி லான்ரகு நாதன் பனிவரைவாய்க்
குடையலர் காந்தளம் பூம்போது தன்னைக் குறிஞ்சியெங்கோ
னுடையதண் போதென்ன வேவாவிழி மூடிகொண் டொத்தியதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நடை - நடையும், நிலம் - நிலமும், சாதி - சாதியும், குலமோடு - குலத்துடன், அறிவு - அறிவும், அங்கம் - உறுப்பும், நல்ல - நல்லனவாகப்பெற்ற, தந்திப்படை - யானைப்படையானது, அணிசேர் - வரிசையாகப் பொருந்தியிருக்கிற, முன்றிலான் - முற்றத்தை யுடையவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், பனி - குளிர்ச்சி பொருந்திய, வரைவாய் - மலையின்கண், குடைஅலர் - குடைபோல மலர்கின்ற, அம் - அழகிய, காந்தள் பூம்போது தன்னை - காந்தள் மலரை, குறிஞ்சி எம்கோன் உடைய - குறிஞ்சி நிலத்திலையுடைய எம்மிறைவராகிய முருகக்கடவுளது, தண்போது என்னவோ - குளிர்ச்சியாகிய மலரென்றுதானோ, கொண்டு விழியூடு ஒத்தியது - எடுத்துக் கண்களில் ஒத்திக்கொண்டது ; (எ - று.)

நடை நில முதலியவற்றாற் சிறந்த தந்திப்படை யென்றியையும். குதிரைப்படை முதலிய மூன்றினும் யானைப்படை சிறந்தமையின், "தந்திப் படையணிசேர் முன்றிலான்" என்றார். வரை மேகம் பனி அருவியாறுகள் முதலியவற்றால் குளிர்ந்திருத்தலால், 'பனிவரை' என்றான். தந்தி - தந்தத்தையுடையது. தந்தம் - கொம்பு. படை - பகைவரைக் கொல்லுவது என்னும் பொருளது. படுத்தல் - கொல்லுதல், நுமது நிலத்துக் கடவுளுக்குரிய தென்றோ காந்தட் பூவினைக் கண்ணில் ஒத்திக்கொண்டாய் என்றும, நீ முருகக்கடவுளிடத்தே மிக்க அன்புடையை யென்றும் கூறியவாறு.

## குறிப்புப் பொருள்

விழியூடு கொண்டொத்தியது என்றது கையால் கண்புதைத்தலை. காந்தளம் பூம்போது என்றது கைகளை. கண் புதைத்தலைக் கூறினமையால் தனப் புறப்பாடும் தோன்றுநின்றது. (10)

இயலைத் தலைபெற்ற முத்தமிழ் வாணர்க் கெழுமடங்கு
புயலைப் பொருவுகை யான்ரகு நாதன் பொருப்பனையீர்
முயலைத் தவிர்த்த மதியூடு லாவிய மூரிவரிக்
கயலைப் பிடிப்பதென் னேகுற மாதர் களிறிகழ்ந்தே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) இயலை - இயற்றமிழை, தலைபெற்ற - முதலாகவுடைய, முத்தமிழ் வாணர்க்கு - முத்தமிழ் பயிலுவோராகிய பாவலர்க்கு, புயலை - மேகத்தை, எழு மடங்கு பொருவு - எழுமடங்கதிகமாக நிகர்த்திருக்கிற, கையான் - (கொடைக்) கையினை யுடையவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், பொருப்பு அனையீர் - மலையை யொப்பவரே, குறமாதர் - குறப் பெண்கள், களிறு இகழ்ந்து - யானையை விடுத்து, முயலைத்தவிர்த்த - முயற்

கறையை யொழிந்திருக்கிற, மதியூடு உலாவிய - பூர்ணசந்திரனிடத்தே யுலாவுகிற, மூரி - பெருமையுள்ள, வரி - இரேகை படர்ந்த, கயலை - கெண்டை மீன்களை, பிடிப்பது என்னோ - பிடித்தற்குக் காரணம் யாதோ ; (எ - று.)

முத்தமிழாவன - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பன. இவற்றுள் இயற்றமிழ் முதற்கண்ணிற்றலால் இயலைத்தலைபெற்ற எனப் பட்டது. ஏழுமடங்கு புயலைப் பொருவுகையான் என்றமையால் மேகத்தி னும் ஏழுமடங்கதிகமாகக் கொடுக்கின்ற கையை யுடையவனென்ற தாயிற்று. முயலைத் தவிர்த்த மதி என்றது முகத்தை. வரிக்கயல் என்றது ரேகைகளையுடைய கண்களை. களிறு என்றது தனத்தை.

குறமாதர் களிறு பிடித்தலும் நுளைமாதர் கயல் பிடித்தலும் இயல்பா யிருக்க, நீர் நுமது குலத்தொழிலை விட்டு, வேறு குலத்தொழிலைச் செய்தல் அழகல்ல என்றவாறாயிற்று. முகத்தை முயலைத் தவிர்த்தமதி யென்றமை யால் முகத்துக்குக் களங்கமின்மையும் பூர்ண சந்திரனுக்குக் களங்க முண்மையும் கூறியதாயிற்று.

"அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல - மறுவுண்டோ மாதர் முகத்து" என்பது திருக்குறள்.

## குறிப்புப் பொருள்.

கயலைப்பிடிப்பது என்றமையால் கண்புதைத்தலும், களிறிகழ்ந்து என்றமையால் தனப்புறப்பாடும் தோன்று நின்றது. (11)

வரைசேர் மருமத் திருவஞ்சி யாட மணியுஞ்சலாம்
விரைசேர் தளவத் தொடைரகு நாயகன் வெற்பிலின்ப
வுரைசேர் தமனியப் பாவாய்செந் தேனங்கை யூடுறமின்
னிரைசே ரமிர்த கடத்தையென் னோவிட்டு நிற்கின்றதே.

## வெளிப்படைப் பொருள்.

(இ - ள்) வரைசேர் மருமம் - மலைபோலப் பொருந்திய மார்பினிடத்து, திருவஞ்சிஆட - திருமாது ஆடுதற்கு, மணி உஞ்சல்ஆம் - அழகிய ஊசலாகிய, விரைசேர் தளவத் தொடை - மணம் பொருந்திய முல்லைமலர் மாலையைத் தரித்த, ரகுநாயகன் - ரகுநாத சேதுபதியின், வெற்பில் - வரையின்கண், இன்ப உரை சேர் - (கேட்போர்க்கு) இனிமையைத் தருகின்ற இன்சொற் களையுடைய, தமனியப்பாவாய் - பொற்பிரதிமை போல்பவளே, செந்தேன் அங்கையூடு உற - செந்தேனனது அகங்கையிற் பொருந்த, மின் நிரை சேர்-

கிரண வரிசை சேர்ந்த, அமிர்த கடத்தை - அமிர்த கலசத்தை, விட்டு நிற்கின்றது என்னே - விட்டு நிற்பதற்குக் காரணம் யாதோ; (எ - று,)

வரை சேர் - மலையின் றன்மை யமைந்த எனினு மமையும். வரை சேர் - மலை போன்ற எனக் கொள்ளினுமாம், அப்பொருட்கு, சேர் - உவம வுருபு. ஊசல் - உஞ்சல் எனச் சிதைந்தது. மணி யுஞ்சல் - ரத்ந வூஞ்சல் எனினுமாம். தளவம் - முல்லை, இது தன் சினையாகிய மலரை யுணர்த்தலால் முதலாகு பெயர். தபநியம் - பொன், அது தமனியம் எனச்சிதைந்தது. பாவை - பிரதிமை, அங்கையில் தேன்கிடைத்த மாத்திரத்தாலே அமிர்தகலசத்தைவிட்டு நிற்பது பேதைமையாதலால், "செந்தேனங்கை யூடுறமின் னிரைசே ரமிர்த கடத்தையென் னேவிட்டு நிற்கின்றதே" அங்கையூடுறுஞ் செந்தேன் அற்ப அளவினது அற்ப இனிமையைத் தருவது. அமிர்தகடம் பேரளவினது பேரினிமையைத் தருவது, அங்ஙனமாக நீர் சிறந்த பொருளை விட்டுத் தாழ்ந்த பொருளைப் பற்றினது அறியாமையின் காரிய மென்ற தாயிற்று. ஈற்றேகாரம் இரக்கப் பொருளில் வந்தது.

## குறிப்புப் பொருள்

தேன் - வண்டு, இது கண்ணுக்காயிற்று. அமிர்தகடம் - அமிர்த கலசம். இது தனத்துக்காயிற்று.

செந்தேனங்கை யூடுற என்றதனால் கண்புதைத்தலும், அமிர்தகடத்தை விட்டு நிற்கின்றது என்றதனால் தனத்தின்புறப்பாடும் விளங்குகின்றது. (12)

பாகந் தருமிசை வல்லோர்க்கு மான்மதம் பாய்தருகைம்
மேகந் தருதள வாய்ரகு நாயகன் வெற்பிலிந்த்ர
போகந் தருகளி யானை யிலேறுமென் புந்தியின்ப
மோகந் தருகிளியே திட்டி சேர்கை முறையல்லவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பாகு அம் தரும் இசை வல்லோர்க்கு - (கேட்பவர்க்குச்) சர்க்கரைப்பாகின் இனிமையைத் தருகின்ற இசையில் வல்லோர்க்கு, மால் மதம் பாய்தரு - பெரியமத நீர்பாயப்பெற்ற, கைமேகம் - யானைகளை, தரு - பரிசிலாகக்கொடுக்கின்ற, தளவாய் ரகுநாயகன் வெற்பில் - தளவாயாகிய ரகுநாத சேதுபதியின் வரையின்கண், இன்ப மோகம் தரு கிளியே-(எனக்கு) இனிமையாகிய மோகத்தைக் கொடுக்கிற கிள்ளைபோல்வாளே, இந்த்ர போகம் தரு - இந்திர போகத்தைக் கொடுக்கிற, களியானையில் ஏறும் என் புந்தி - களிப்பையுடைய யானைமீதேறுகிற என் அறிவானது, திட்டி சேர்கை முறை அல்லவே - திட்டியில் நுழைவது முறைமையல்லவே; (எ - று,)

பாகம் தரும் - பக்குவமான எனினுமாம், இசை வல்லோர் - சங்கீத வித்வான்கள். பாகந்தருமிசை வல்லோர்க்கு மான் மதம் பாய்தரு கைம்மேகந் தருதளவாய் என்றமையால் ரகுநாயகன் இசைநூற் பயிற்சியுமுள்ளவன் என்பது பெறப்பட்டது. கிளி உவமையாகுபெயர். ஈற்றேகாரம் வினா. மால் மதம் பாய்தரு கை என்ற விசேடணத்தால், மேகம் யானையை யுணர்த்திற்று. திட்டி - சுருங்கை, யானை யேறினேன் திட்டி வாயிலிற் சேறல் முறையல்ல வென்பது கருத்து. இசை வல்லோர்க்குத் தரு என்றியையும். யானை - தனம், திட்டி - கண் (த்ருஷ்டி). திட்டி சேர் கை - கண்ணைச் சேர்ந்த கை. உன் தனத்தை நோக்குவோனாகிய நான் உன் கண்ணை நோக்குதல் முறையல்லவோ என்பது கருத்து.

## குறிப்புப் பொருள்

திட்டி சேர் கை என்றமையால் கண்புதைத்தலும், களியானையிலேறு மென்புந்தி என்றமையால் தனத்தின் புறப்பாடும் தோன்றிற்று. (13)

நாகஞ் செறிமலர்ப் பூங்காவும் பொய்கையு நான்மறையும்
நாகஞ் செறிதமிழ்த் தேவையர் கோன்ரகு நாதன்வெற்பில்
நாகஞ் செறிகின்ற தென்மதி சாயநற் பார்வைதன்னை
நாகஞ் செறிவஞ்சி யாய்மறைத் தாயது நன்றலவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நாகம் செறி - குரங்குகள் நெருங்கியிருக்கிற, மலர்ப்பூங்காவும் பொய்கையும் நான்மறையும் - அழகிய பூஞ்சோலைகளும் தடாகங்களும் நான்கு வேத முழக்கமும், நாகம் செறி - நாகத்தைப் பொருந்தப்பெற்ற, தமிழ் - தமிழ் வழங்குகின்ற, தேவையர்கோன் - தேவை நகரத்தார்க் கிறைவனாகிய, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் வரையின்கண், என் மதி சாய - என்னிடத்தாகிய பூர்ண சந்திரன் தளரும்படி, நாகம் செறிகின்றது - பாம்பு நெருங்கா நின்றது, (இந்தச் சமயத்தில்) நாகம் செறி வஞ்சியாய் - குறிஞ்சி நிலமாதே, நல் பார்வை தன்னை - நல்ல மந்திரத்தை, மறைத்தாய் - ஒளித்தனை, அது நன்று அல்ல - அது (உனக்கு) நன்மையன்று ; (எ-று.)

நாகம் என்பதற்கு ஆகாயம் நாகலோகம் விண்ணுலகம் என்னு மூன்று பொருளுண்டாதலால் பூங்கா ஆகாயத்தைத் தொடுகின்றதெனவும், பொய்கை நாகலோகம் வரையும் ஆழ்ந்திருப்பதெனவும், நான்மறை முழக்கம் விண்ணுலகிற் புகுவதெனவும் பொருளுரைத்துக்கொள்க. சாய்தல் நடுங்குதல் எனினும் பொருந்தும். மதி - அறிவு.

வஞ்சியாய் - கொடிபோல்வாளே. அது - அப்படி மறைப்பது. முதலடியில் நாகம் என்பதற்கு புன்னைமரங்கள் என்றுரைத்தலுமாம். பாம்பு நெருங்கும்போது மந்திரத்தை மறைப்பது நன்றன்றென்பதும், யானை நெருங்கும்போது பார்வையை மறைப்பது நன்றன்றென்பதும் போந்த பொருள், பார்வை - கண். (கணு.) இது ஆகுபெயராய் மூங்கில் எனப் பொருள்பட்டு அது அங்குசத்தை யுணர்த்திற்று, "நறுகண் யானை தான் பெரி தாயினும், சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே" எனப் பிறர் கூறுத லுங்காண்க. இனி, பார்வை - பார்வை மிருகம் (பழகிய மிருகம்) எனினுமாம்.

## குறிப்புப் பொருள்

பார்வை - கண். நாகம் - யானை. (14)

மாவான சூர னிருப்பையெல் லாமத்தி வாய்க்குதவுந்
தேவா னவனைப் பணிரகு நாதன் சிலம்பிலென்மேற்
காவான பைங்குழ லீர்படி னோமென்று கைகளினாற்
பூவான துந்தடுத் தீர்விடுத் தீர்பொற் பொருப்பினையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மா ஆன சூரன் இருப்பையெல்லாம் - மாமர வடிவாய் வந்த சூரனது செல்வத்தை யெல்லாம், அத்தி வாய்க்கு உதவும் - கடலின் வாய்க்கு உணவாகக் கொடுத்த, தே ஆனவனை - தேவனாகிய முருகக்கடவுளை, பணி - வணங்குகின்ற, ரகுநாதன் சிலம்பில் - ரகுநாத சேதுபதியின் மலையி லுள்ள, கா ஆன பைங்குழலீர் - சோலைபோலிருண்ட பசிய கூந்தலையுடையீரே, என்மேல் படின்நோம் என்று - என்மீதுபட்டால் நோகுமெனக் கருதி, பூ ஆனதும் கைகளினால் தடுத்தீர் - மலரையும் கைகளினால் தடைசெய்தீர், பொன் பொருப்பினை விடுத்தீர் - பொன் மலைகளை யேவினீர், ஏ - இஃ தென்ன வியப்பு ; (எ - று.)

சூரனும் அவன் செல்வங்களும் அழிந்து சிந்தினது கடலின் கண்ணாத லால் 'அத்திவாய்க்குதவும்' என்றார். என்மீது பூப்பட்டால் நோகுமென்று தடுத்த நீர் மலைபட்டால் நோவாதென்று ஏவினது வியப்புடைத் தென்றவாறு யிற்று. இவ்விரண்டும் உவமையாகு பெயர்கள். பொன் பொருப்பு - தேமல் படர்ந்த பொருப்பு எனினுமாம். தேவானவனை என்பதை தேவு ஆனவனை எனவும், தே - வானவனை எனவும் பிரிக்கலாம். காவானபைங் குழலீர் என்பதற்கு கற்பகச் சோலைபோன்ற ஒளதார்யத்தையுடைய பசிய கூந்தலை யுடையீரே எனப் பொருளுரைப்பினு மமையும்.

மாவான சூரனிருப்பை யெல்லாம் அத்திவாய்க்குதவும் தேவானவன் என்பதற்கு மாமரமாய் வந்த சூரனது இருப்பை மரத்தை அத்திமரத்துக்கு

உணவாகக் கொடுத்த தேவன் எனவும், மா - குதிரை, குதிரையாய் வந்த சூரனது நிலைமையை யெல்லாம் யானைக்கு உணவாகக் கொடுத்த தேவனெனவும் சொன்னயந் தோன்றுமாறுரைத்துக் கொள்க. அத்தி - அப்தியென்னும் வடசொற்றிரிபு. பூவானதும் என் மேற்படின் நோமென்று தடுத்தீர் பொற்பொருப்பினை விடுத்தீர் என்றநவயித் துரைத்துக் கொள்க.

## குறிப்புப் பொருள்

பூ - மலர் போன்ற கண், பொற்பொருப்பு - மலைபோன்ற தனம். பூவானதுந் தடுத்தீர் என்றதனால் கண் புதைத்தலும், பொற் பொருப்பினை விடுத்தீர் என்றதனால் தனப்புறப்பாடும் தோன்றுகின்றன. (15)

*தார்கொண்ட பாடலம் பேரோடை யாம்ப றருங்கமலச்*
*சீர்கொண்ட செங்கரத் தான்ரகு நாயகன் றேவைவெற்பி*
*லேர்கொண்ட நீல மடலே றுகைபெரி தீனமன்றோ*
*வார்கொண்ட கொம்மைப் புளகப் படாமுலை வஞ்சியர்க்கே.*

## வெளிப்படைப் பொருள்.

(இ - ள்.) தார்கொண்ட - கிங்கிணிமாலையைத் தரித்த, பாடலம் - குதிரைகளையும், பேர் ஓடை - பெரிய முகபடாத்தை யணிந்த, ஆம்பல் - யானைகளையும், தரும்-(பாவலர்க்குக்) கொடுக்கு மியல்புள்ள, கமலச் சீர்கொண்ட - தாமரை மலரின் அழகைக்கொண்ட, செங்கரத்தான் - செவந்த கையையுடையவனாகிய, ரகு நாயகன் - ரகுநாதனது, தேவை வெற்பில் - தேவை மலையில், வார்கொண்ட - கச்சை யணிந்த, கொம்மை - திரட்சியாகிய, புளகம் - புளகம்போர்த்த, படாமுலை - சாயாத முலைகளையுடைய, வஞ்சியர்க்கு - மாதருக்கு, ஏர்கொண்ட - அழகைக்கொண்ட, நீலமடல் ஏறுகை - பனைமடலூர்தல், பெரிது ஈனம் அன்றோ - மிகவும் இழிவல்லவா; (எ - று)

குதிரைக்குக் கிங்கிணிமாலையும், யானைக்கு முகபடாமும் சிறந்தனவென்பது தோன்ற, 'தார்கொண்ட பாடலம் பேரோடை யாம்பல்' என்றார்.

முற்காலத்தரசர் வித்வான்களை யுள்ளிட்டோர்க்குக் குதிரை, யானை முதலியவற்றைத் தந்துவந்தல் பெருவழக்கென்பதை, " உயர், பாவலர்க்கு வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன் " என்றற் றொடக்கத்துச் செய்யுட்களானுணர்க. கமலம் - பதுமநிதி யென்றுரைத்தலு மமையும், இதனான் அவனது ஔதார்ய வைசேஷ்யந் தோற்றுகிறது. நீலம் - பனைமரம். முலைகளின்வார்கோடல், கொம்மை, புளகம் முதலியவற்றைக் கண்டு இவை இனி யெஞ்ஞான்றுஞ் சாயாவெனக் கருதிப் 'படாமுலை' யென்றான். இது

" கடாஅக் களிற்றின்மேல் கட்படா மாதர்,
படாஅ முலைமேற் றுகில் "

என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் வரைந்த வுரையானு முணர்க. மடலூர்தல் ஆண்மக்கட்கே யன்றிப் பெண்மக்கட் கடாதென்பான், 'வஞ்சியர்க்கு, நீல மடலேறுகை பெரி தீனமன்றோ' என்றான்.

நீலமடல் ஏறுகை - கருங்குவளை மலரிதழில் ஏறிய கை, கருங்குவளை மலர் - கண், மடலூர்தல் என்பது தலைமகளைக் கிடைக்கப்பெறுதற்கு வேறுபாயமில்லாத தலைமகன், தோழியை நோக்கி நீயிர் அருளாமையின் யான் மடலூர்ந்தாயினும் நுந் தலைவியைப் பெறுவேனென்றுரைத்துப் பனைமடலாற் குதிரையாக்கி, தலைவியின் உருவ முதலியவற்றைக் கிழி யெழுதிக் கைக்கொண்டு, உடம்பு முழுதும் திருநீறுபூசி, எருக்கம்பூ மாலையைத் தரித்துத் தலைவிரி கோலமாய்,அப் பனைமடன்மாவின் மேலூர்ந்து தெருக்கள் தோறுந் திரிவது. இதின் விரிவெல்லாம் பெருநூல்களிற்காண்க.

"காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் நார்வியன் றென்புலிபூ
ரீசன சாந்து மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே"

என்னுந் திருக் கோவையார் வாயிலானும் பிறவாற்றானும் மடற்றிறமறியும் விசதம் காண்க. இதில், பாடலம் - பாதிரி, ஆம்பல் - அல்லி, கமலம் - தாமரை. நீலம் - கருங்குவளை, முலை வஞ்சி - முல்லைக்கொடி, என சொன்னயமுந் தோற்றுதல் காண்க.

## குறிப்புப் பொருள்

இதில், வார்கொண்ட கொம்மைப் புளகப் படாமுலை என்றமையான் முலைகளின் புறப்பாடும், நீலமடலேறுகை என்றமையால் கண்புதைத்தலும் ஆகிய தன் குறிப்புப்பொருளும் தோன்றின. (16)

தன்னம் புயத்திற் குவலயந் தார்முல்லை தாங்கிமன்னர்
சின்னம் பறித்த ரகுநாதன் றேவைச் சிலம்பிலின்று
பொன்னங் குடத்தை யெதிர்கண்ட லென்னமைப் போதுங்கண்டாற்
கன்னங் கறுத்த குழலாய் நற்காரியங் கைப்பலனே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தன் - தன்னுடைய, அம் - அழகாகிய, புயத்தில் - தோளின் மீது, குவலயம் - உலகத்தையும், தார்முல்லை - முல்லை மாலையையும், தாங்கி- ஏந்தி, மன்னர் - (பகை) அரசருடைய, சின்னம்பறித்த - விருதுகளைப் பறித்த, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், தேவைச் சிலம்பில் - தேவை மலையில், இன்று - இப்பொழுது, பொன்னங்குடத்தை - பொற்குடங்களை

எதிர்காண்டல் என்ன - எதிரே காண்டல் போல, மைப்போதும் கண்டால் - கருங்குவளை மலரையுங் கண்டால், கன்னங் கறுத்த குழலாய்-மிகக் கறுத்த கூந்தலை யுடையவளே, நல்காரியம் - (எனது) சுபகாரியம், கைப்பலனே - கைப்பலந்தான் ; (எ - று.)

சின்னம்பறித்த என்றதனல், மன்னர் என்றது பகையரசரைக் குறித்தது. பொன்னங்குடம் என்பதில் அம் சாரியை, அழகெனினுமாம். பொற்கலசங்களும் பூவும் நன்னிமித்தங்களாதலால் இவ்வாறு கூறினன். தன்னம்புயத்திற் குவலயந் தார் முல்லை தாங்கி என்பதில் தனது தாமரை மலரின் மீது குவளை மாலையையும் முல்லை மாலையையுந் தாங்கி எனச் சொன்னயந் தோன்றுமாறு காண்க. கன்னங்கறுத்த என்பது மிகக்கறுத்த என்றபடி. இது சின்னஞ் சிறுத்தவிடை, பென்னம் பெருத்த முலை என்றாற்போல்வது.

## குறிப்புப் பொருள்

பொன்னங்குடம் - பொற்குடம் போன்ற தனம், மைப்போது - நீல மலர்போலும் கண், "மைப்போதுங் கண்டால்" என்றமையால் கண் புதைத்தலும், 'பொன்னங் குடத்தை யெதிர் காண்ட லென்ன' என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றுகின்றன. (17)

செந்தாதும் பூவுஞ் சுருதிவண் டார்ப்பத் தினம்பொழியு
மந்தார மன்னகை யான்ரகு நாதன் மழவையன்னீர்
நந்தா மணம்பெற வந்தேனுக் கின்று நறியமல
ரந்தா மரையொளித் தீரளித் தீர்சிற் றரும்பினையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சுருதி வண்டு ஆர்ப்ப-ஒலியையுடைய வண்டுகள் ஆரவாரிக்க, (அவற்றின் பொருட்டுச்) செந்தாதும் - செம்மையாகிய பூந்தாதையும், பூவும் - மலர்களையும், தினம்பொழியும் - நாடோறுஞ் சொரிகின்ற, மந்தாரம் அன்ன - மந்தார விருக்ஷத்தை நிகர்த்த, கையான் - கொடைக்கையினை யுடையவனாகிய, ரகு நாதன்-ரகுநாத சேதுபதியின், மழவை அன்னீர் - மழவை நகரை யொப்பவரே, நந்தா மணம்பெற வந்தேனுக்கு - கெடாதமணத்தைப் பெறவந்த எனக்கு, இன்று - இப்பொழுது, நறிய அம் தாமரைமலர் ஒளித்தீர் - நறுமணமுள்ள அழகிய தாமரை மலரை மறைத்து,சிறுஅரும்பினை அளித்தீர்-சிறிய அரும்பைத் தந்தீர், ஏ-இஃதென்ன வியப்பு ; (எ - று.)

ரகுநாதனுக்குக் கூறுங்கால் சுருதி வண்டார்ப்பச் செந்தாதும் பூவும் தினம்பொழி மந்தாரமன்ன கையான் ; எனவும், (சுருதி - ஒலி, வண்டு - வண்டுகள், தாது - மகரந்தம், பூ - மலர்.)

வேதியர் பாவலர் முதலியோர்க்குக் கூறுங்கால் வேத ஒலியோடு மங்கல சங்கமும் முழங்கப் பொன்னையும், நிலத்தையும், தினம்பொழியும் எனவும் பொருளுரைத்துக் கொள்க. (சுருதி - வேதம், வண்டு - சங்கு, செந்தாது - பொன், பூ - பூமி.)

மந்தாரம் - ஐந்தருவிலொன்று. மணத்தல் - கலத்தல், ஒளித்தீர் - முற்றெச்சம். இவ்வெச்சம் அளித்தீர் என்னும் வினைகொண்டு முடிந்தது.

## குறிப்புப் பொருள்

தாமரை மலர் - கண், சிற்றரும்பு - தனம். மணம்பெற வந்தேனுக்கு மணமுள்ள மலரைத்தாராது மணமில்லாத அரும்பைத் தருதல் தகாதென்ற வாருயிற்று. அந்தாமரை யொளித்தீர் என்றமையால் கண்புதைத்தலும்,சிற்றரும்பினையளித்தீர் என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றுகின்றனர்.

மணம்பெற வந்தேனுக்கு - உனது கல்வியைப்பெற வந்தேனுக்கு எனினுமாம். (18)

பாரேழ் கழனியும் வாடாது தன்மப் பயிர்விளைக்குங்
காரே யனைய ரகுநாதன் றேவைக் கனங்குழையீர்
நீரே பொறிவெம் படநாகங் கைவிட்டு நின்றுவெய்ய
சூரே புரிநஞ்ச மெவ்வாறு கையிற் றொடுகின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஏழ் பார் கழனியும் - ஏழுலகங்களாகிய வயல்களினும், தன்மப்பயிர் - தர்மமென்கிற பயிரானது, வாடாது - வாடிப்போகாமல், விளைக்கும் - விளைவிக்கின்ற, காரே அனைய - மேகத்தையே நிகர்த்த, ரகுநாதன்-ரகுநாத சேதுபதியின், தேவை-தேவை நகரிலுள்ள, கனங்குழையீர்-காதணியை யுடையவரே, நீர் - நீர், பொறி - புள்ளிகளுள்ள, வெம்படம் - கொடியபடத்தை யுடைய, நாகம் - பாம்பை, கைவிட்டு நின்று - கைவிட்டு நின்று, வெய்ய - வெவ்விய, சூர்புரி - அச்சத்தை யுண்டாக்குகிற, நஞ்சம் - விஷத்தை, எவ்வாறு - எப்படி, கையின் தொடுகின்றது - கையினால்தீண்டுவது; (எ-று.)

நஞ்சம் - கண்ணைக்குறித்தது.

பொறிவெம் படம் நாகம் - முகத்தில் புள்ளிகளையும் முகபடாத்தையு மணிந்த யானை. தேமற் புள்ளிகளையும் விருப்பத்தைத் தருகின்ற உத்தரீயத்தையுமுடைய மலை, இவ்விரண்டும் தனத்தைக் குறித்தன. கையிற்றொடுகின்றதே என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றுவதன் கருவிப் பொரு

ளில் வந்தது. நாகத்தைக் கைவிட்ட நீர் நஞ்சினையும் கைவிடலாகாதோ வென்றவாறாயிற்று. நாகம் - பாம்பு, யானை, மலை. படம் - பாம்பின் படம், யானை முகபடாம், வஸ்திரம் (உத்தரீயம்.)

## குறிப்புப் பொருள்

"வெய்ய சூரே புரிநஞ்ச மெவ்வாறு கையிற் றெடுகின்றதே" என்றமையால் கண்புதைத்தலும், "பொறிவெம் படநாகங் கைவிட்டு நின்று" என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றுகின்றன. (19)

யாழுங் குழலும் பசுந்தேனும் பாகு மிசைந்துகுடி
வாழுந் திருமொழி யாய்ரகு நாதன் மணவைவண்டு
சூழுங் களப முலையானை முன்னித் துயர்க்கடல்வாய்
வீழுங் கொடுமையெல் லாங்கண் டிலார்செங்கை வேலவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) யாழும் - யாழோசைச் சுவையும், குழலும் - குழலோசைச் சுவையும், பசுந்தேனும் - பசுமையாகிய தேன்சுவையும், பாகும் - சர்க்கரைப் பாகின் சுவையும், இசைந்து - ஒன்றாகக் கூடி, குடிவாழும் - குடிகொண்டு வாழ்கின்ற, திருமொழியாய் - இன்சொல்லை யுடையவளே, ரகு நாதன்-ரகுநாத சேதுபதியின், மணவை - மணவை நகரில், வண்டு சூழும் - (மதநீரால்) வண்டுகள் சூழ்ந்திருக்கிற, களபம் - கன்றுகளோடுகூடிய, முலையானை முன் - முல்லைநிலத்து யானைக்கெதிரில், இத் துயர்க் கடல்வாய் வீழும் - (யாம்) இந்தத் துன்பக் கடலில் வீழ்கின்ற, கொடுமையெல்லாம் - கொடுமை முழுதும், செங்கை வேலவர் கண்டிலார் - செவந்த கையினிடத்து வேலாயுதத்தைத் தாங்கிய முருகக்கடவுள் கண்டிலர்; (எ - று.)

முல்லை நிலத்தியானையை வனசரம் எனக் கூறுவர். களபம் - கலவைச் சந்தனம். முலையானை முன் என்பதை, முலையால் நைமுன் எனப் பிரித்து, முலையால் நைவதற்கு முன் எனவும், செங்கை வேலவர் என்பதற்கு செங்கையிலடங்கிய வேல்போன்ற கண் எனவும் பொருளுரைத்துக் கொள்க. "யாழுங் குழலும் பசுந்தேனும் பாகு மிசைந்துகுடி வாழுந் திருமொழியாய்" என்றமையால் தலைவியின் மொழிச்சுவை மிகுதி விளங்குகின்றது. களபம் - யானைக் கன்று. அன்று குறிஞ்சி நிலத்தில் வள்ளி நாயகிக்கு யானையாலுண்டாகிய அச்சந் தவிர்த்த செங்கை வேலவர் இன்று முல்லை நிலத்தில் எனக்கு யானையாலுண்டாகிய அச்சத்தைக் கண்டிலார்; காண்பராயின் என்னைக் காவாதிரார் என்றதாயிற்று. திரு என்றது இனிமைப்பொருளில் வந்தது.

## குறிப்புப் பொருள்

'கண்டிலார் செங்கை வேலவர்' என்றமையால் கண்புதைத்தலும், 'வண்டு சூழுங்களப முலையானை' என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றுகின்றன. (20)

*நீலக் கரும்புய ருரா கணம்வெண் ணிலாவணிந்து*
*ஞாலத் துவந்தமின் னேதள வாய்ரகு நாதன்வரைக்*
*கோலத் தினைக்கு ளினமென்று மானினங் கூடுமென்றோ*
*சாலப் புதைத்துநின் றாய்செங்கண் வேழந் தருங்கொங்கையே.*

## வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** *நீலம் கரும்புயல்* - மிகவுங் கருமையாகிய மேகத்தையும், *தாராகணம்* - நக்ஷத்ர கூட்டத்தையும், *வெள்நிலா* - வெண்மையாகிய பிறையையும், *அணிந்து* - தரித்து, *ஞாலத்துவந்த* - உலகின்கண்வந்த, *மின்னே* - மின்னற்கொடி போல்பவளே, *வேழம்தரும் கொங்கையே* - யானைபோலுந் தனத்தை யுடையாளே, *தளவாய் ரகுநாதன்* - தளவாயாகிய ரகுநாத சேதுபதியின், *வரை* - மலையிலுள்ள, *கோலம்* - அழகாகிய, *தினைக்குள்* - தினைப்புனத்தில், *மான் இனம்* - மான் கூட்டங்கள், *இனம் என்று* - தமக்கு இனமென்று நினைந்து வந்து, *கூடும் என்றோ* - சேருமென்றெண்ணியோ, *செங்கண்* - செம்மையாகிய கண்களை, *சாலப்புதைத்து நின்றாய்* - முழுதும் மூடிக்கொண்டு நிற்கின்றாய்; (எ - று.)

நீலக் கரும்புயல் - கூந்தல், தாராகணம் - அதிற் செருகிய மலர்கள், வெண்ணிலா - நெற்றி, மான் கண்ணுக்கு உவமையாதலால், தமக்கினமா மென்று நினைத்து மான் கூட்டங்கள் வந்து தினைப்புனத்தை யழிக்குமென்று கருதியோ இவ்வாறு கண்புதைத்து நின்றாய் என்றபடி. நீலக்கரும்புயல், தாராகணம், வெண்ணிலா, என்பவற்றீற்றில் இரண்டனுருபுகளும் எண்ணும்மைகளும் தொக்கன. அணிந்து என்னும் வினையெச்சம் வந்த என்னும் வினைகொண்டது, மின் - உவமையாகு பெயர், வேழந்தருங் கொங்கை என்பதில் தரு உவமவுருபு. கோலத்தினை என்பதை கோல் அத் தினை எனப் பிரித்து நீங்கள் கோலிய (விளைத்த) அந்தத் தினைப்புனம் என்றுரைத்தலுமாம், மின் தனக்கினமாகிய நீலக்கரும்புயல் தாராகணம் வெண்ணிலா என்பவற்றை உடன் கொண்டு வந்தாற்போல கண்மான் காட்டுமான்களை யழைத்துத் தினைப்புனத்தை யழிக்குமென்று கருதியோ கண்புதைத்தது என்பது கருத்து.

## குறிப்புப் பொருள்

"இனமென்று மானினங் கூடுமென்றோ சாலப் புதைத்துநின் ருய்செங்கண்" என்றமையால் கண்புதைத்தமையும், "வேழந்தருங் கொங் கையே" என்றமையால் தனம் வெளிப்படத் தோன்றினமையும் பெறப் பட்டன. (21)

சேயென் றுவந்த தளவாய்க்கு நாவலந் தீவிற்குமோர்
தாயென் றுவந்த ரகுநாதன் றேவைத் தமிழ்வரைமேற்
காயென் றுவில்வக் கனியளித் தீரென் கலைமதிக்கு
வாயென் றுசற்று மலராது பாணிக்குண் மைம்மலரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சேய் என்று வந்த - முருகனென்று சொல்லப்பட்டுத் தோன்றிய, தளவாய்க்கும் - தளவாய்ப் பட்டத்துக்கும், நாவலந்தீவிற்கும் - நாவலந் தீவுக்கும், ஓர் தாய் என்றுவந்த - ஒப்பற்ற தாயென்று சொல்லும் படி வந்த, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், தேவைத் தமிழ் வரைமேல் - தேவை நகரத்துத் தமிழ் மலைமீது, காய் என்று வில்வக்கனி அளித்தீர் - காயென்று சொல்லி வில்வக்கனியைத் தந்தீர், என் கலைமதிக்கு - என் கலை கள் நிறைந்த சந்திரனுக்கு, வாய் என்று - பொருத்தமென்று, பாணிக்குள் மை மலர் - நீரின்கண்ணுள்ள கருங்குவளைமலர், சற்றும் மலராது - சிறி தும் மலராதிருந்தது, (இஃதென்னவியல்பு); (எ - று.)

தளவாய்க்குத் தாய் என்றதனுல், தளவாய்ப் பட்டத்துக்குரியா னென் பதும், நாவலந் தீவிற்கு மோர் தாய் என்றதனுல், ஜம்புத்வீபத்திலுள்ளா ரெல்லாரையும் காப்பாற்றுவதில் தாய்போலுங் கருணையுள்ளா னென்பதும் வெளியாயின. தமிழ் வரை - தமிழ்மொழி வழங்கும் வரை, காய் என்று - வருத்துவாயென்று. சந்திரனைக் கண்டால் கருங்குவளை மலர்வது இயற் கையாதலால் இவ்வாறு வியந்து கூறினுன். கலைமதி - நூலறிவு மிக்க புத்தி. வில்வக்கனி - தனம், பாணிக்குள் மைம்மலர் - கைக்குள்ளடங்கிய கண், சேய் - முருகவேள். பாணி - நீர், கை. மைமலர் - நீலமலர், அஞ்சனமெழுதினமலர் (கண்) மலரே என்புழி - ஏ, வியப்பிடைச்சொல்.

## குறிப்புப் பொருள்

'பாணிக்குள் மைம்மலர் மலராது' என்றமையால் கண் புதைத் தலும், 'வில்வக் கனியளித்தீர்' என்றமையால் தனப்புறப்பாடும் தோன்று கின்றன. (22)

கோட்டந் தவிர்த்த குடைமன்னர் கேசரி கூட்டமன்ன
ராட்டந் தவிர்த்த ரகுநாதன் வெற்பிலென் னாருயிர்க்கு
வாட்டந் தவிர்த்த வரிவிழி யாரை மறைத்தருளி
னீட்டந் தவிர்ப்பதென் னோகுன்ற வாண ரிளங்கொடியே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கோட்டம் தவிர்த்த - கொடுங்கோன்மையை நீக்கின, குடை - வெண்கொற்றக் குடையையுடைய, மன்னர் - அரசர்களுக்குள், கேசரி - ஆண்சிங்கம்போல்பவன், கூட்டம் மன்னர் - அரசர் கூட்டங்களின், ஆட்டம் தவிர்த்த - சலநத்தை யொழித்த, ரகு நாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதி வெற்பில் - (அவனது மலையின்கண்), என் ஆர் உயிர்க்கு - எனது அரிய வுயிருக்கு (நேர்ந்த), வாட்டம் தவிர்த்த - வாட்டத்தை நீக்கின, வரிவிழி யாரை மறைத்து - இரேகை படர்ந்த கண்களையுடைய மாதரை மறைத்து. அருளின் ஈட்டம் தவிர்ப்பது என்னோ - (உனது) அருளின் மிகுதியை விடு தற்குக் காரணம் யாதோ, குன்றவாணர் இளங்கொடியே - குன்றவாணரது இளங்கொடி போல்பவளே; (எ - று.)

கோட்டந் தவிர்த்த குடை - எல்லார்க்கும் ஒப்ப நிழற்றுங்குடை; கோட்டம் - கோடுதல். குன்றவாணர் - குன்றத்தின்கண் வாழ்பவர் (குறவர்) கண்ணுக்கு அருளுடைமை யியல்பாதலால், " வரிவிழி யாரை மறைத்தருளி னீட்டந் தவிர்ப்ப தென்னோ " என்றான். ஈட்டம் - சம்பாதித்த தனம், இளங்கொடி - பண்புத்தொகைப் புறந்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர்.

குறிப்புப் பொருள்

" வரிவிழியாரை மறைத்து " என்றமையால் கன்ன புதைத்தமையும், அருளின் ஈட்டம் தவிர்ப்ப தென்னோ என்றமையால் தனம் வெளிப்பட்டமை யும் வெளியாயின. குன்றவாணர் - குன்றங்களோடு கூடி வாழ்பவர் என்று உரைத்துக்கொள்க. ஈட்டம் - தனம் (முலை.) (23)

ககராச வீரவெங் கேதனத் தான்கந்த மாதனப்பொன்
னகராசன் வீரைக் கிறைதள வாய்ரகு நாதன்வரைச்
சிகராச லத்தின் மலராத நீதி தெளிந்துகொண்டோ
மகரா லயத்தின் மலரவைத் தீர்செம் மலர்க்கஞ்சமே.

வெளிப்படைப்பொருள்

(இ - ள்.) வீரம் - வீரத்தன்மையும், வெம் - வெம்மையும் உள்ள ககராச கேதநத்தான் - கருடக் கொடியை யுடையவனும், கந்தமாதநம் -

கந்தமாதநம் என்கிற, பொன் - அழகிய, நகம் - மலைக்கு, ராசன் - அரச னும், வீரைக்கு இறை - வீரைநகரத்துக்கிறைவனும், தளவாய் ரகுநாதன் - தளவாயாகிய ரகுநாத சேதுபதியின், வரை - வரையினிடத்து, செம்மலர்க் கஞ்சம் - செந்தாமரை மலரானது, சிகரம் - சிகரங்களையுடைய, அசலத் தில் - மலையின்மேல், மலராத - மலர்தலில்லாத, நீதி - நியாயத்தை, தெளிந்துகொண்டோ - தெளிந்து கொண்டதாலோ, மகராலயத்தில் - கடலில், மலர வைத்தீர் - மலரச்செய்தீர் ; (எ - று.)

ககம் - பறவை, பறவைகட்கெல்லாம் அரசனுதலால் கருடனைக் 'ககரா சன்' என்ருர். மகரம் ஆலயம் எனப் பிரிந்து மகரமீன்களுக் கிருப்பிடம் எனப் பொருள்கொள்க. இக் காரணத்தானே கடல் மகராலயம் எனப் பட்டது. சிகராசலம் - மலை (தனம்), மகராலயம் - கடல் (கண்), செம் மலர்க்கஞ்சம் - தாமரை (கை). கேதனம் - கொடி (துவசம்). பொன் - அழகு, நகம் - மலை, இறை - பண்பாகு பெயர்.

## குறிப்புப் பொருள்

"மகராலயத்தின் மலரவைத்தீர் செம்மலர்க்கஞ்சமே" என்றமையால் கண் புதைத்தலும், "சிகரா சலத்தின் மலராத நீதி தெளிந்துகொண்டோ" என்றமையால், தனம் வெளிப்பட்டமையும் பெறப்பட்டன. சலம்-சலித்தல். அது இன்மையால் மலை அசலம் எனப்பட்டது. (24)

கம்பக் கருணையந் தேனூறு ஞானக் கனியருள்சே
ரும்பர்க் கரசனை யான்ரகு நாத னுயர்வரைவாய்
விம்பக் கனியித ழீர்மணி மார்பில்வெங் கோடுடைய
கும்பக் கரிகொடி தாம்விலக் கீர்மத குஞ்சரமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கம்பம் - அசையாநின்ற, கருணையந்தேன் ஊறும் - அரு ளாகிய தேன்சுரக்கின்ற, ஞானக்கனி-ஞானக்கனியாகிய சிவபெருமானது, அருள்சேர் - திருவருள்பெற்ற, உம்பர்க்கு அரசு அனையான் - தேவர்க்கரச ஞகிய இந்திரனை நிகர்த்தவனுகிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், உயர்வரைவாய் - உயர்வாகிய மலையினிடத்து, விம்பக்கனி இதழீர் - கோவைக்கனிபோன்ற அதரத்தையுடையவரே, மணி மார்பில் - அழகிய மார்பில் உள்ள, வெங்கோடு உடைய - வெவ்விய கொம்புகளையுடைய, கும் பக்கரி - மத்தகத்தையுடைய யானையானது, கொடிது ஆம் - கொடிதா யிரா நின்றது, (ஆதலால்) மதகுஞ்சரம் - (இந்த) மதயானையை, விலக்கீர் - விலக்குவீராக ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

மதகுஞ் சரம் - கண், கும்பக்கரி - தனம், மதகுஞ்சரம் என்பதை மத கும் சரம் எனப் பிரித்து - மதகும் பாணமும் ஆகிய இவற்றை யென்று பொருள் கொள்க. 'கோடுடைய கும்பக்கரி கொடிதாம்' என்றமையால் தனம் வெளிப்பட்டமையும் 'மதகும் சரம் விலக்குவீர்' என்றமையால் கண் புதைத்தமையும் தோன்றும். கண் அருள்மடை திறத்தற்கு மதகு போறலின் என்க. (25)

தொடைபெற்ற கொண்டல் பிறையிள நீர்சுமந் தோதிமத்தி
னடைபெற்ற கன்னிக் கரும்பனை யாய்ரகு நாயகன்வேற்
படைபெற்ற செங்கையும் வேழமு மாய்நிற்றல் பார்த்துமதிக்
குடைபெற்ற வெய்யவ னெய்யவன் போர்க்குறி கொண்டனனே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தொடைபெற்ற - பூமாலைகளை யணிந்த, கொண்டல் - மேகத்தையும், பிறை - பிறையையும், இளநீர் - இளநீர்களையும், சுமந்து - தாங்கி, ஓதிமத்தின் நடைபெற்ற - அன்னத்தின் நடையைக் கொண்டிருக்கிற, கன்னி கரும்பு அனையாய் - இளங்கரும்பை யொத்தவளே, ரகு நாயகன் - ரகுநாத சேதுபதியின், வேல்படைபெற்ற - வேலாயுதத்தை யேந்திய, செங்கையும் - செவந்த கையும், வேழமும் ஆய் - யானையுமாகி, நிற்றல் - (நீ) நிற்பதை, பார்த்து - கண்டு, மதிகுடைபெற்ற - சந்திரனாகிய குடையைக் கொண்ட, வெய்யவன் - கொடியவனாகிய மன்மதன், எய்ய - என் மீது மலரம்புகளை எய்யும்பொருட்டு, வல் போர்க் குறிகொண்டனன் - வலிய யுத்த வேஷத்தைக் கொண்டான்; (எ - று.)

தொடைபெற்ற கொண்டல் - கூந்தல். பிறை - நெற்றி. இளநீர் - தனம். வேற்படை - கண். வேழம் - யானை, (தனம்). தொடை - தொடுத்தல்; இது தொழிலாகு பெயராய்த் தொடுக்கப்பட்ட பூமாலையை யுணர்த்திற்று. ஓதிமம் - அன்னம். தண்ணிய மதிக்குடையை யுடையனு யிருந்தும் விரகிகளை வருத்துகின்றானதலால், 'மதிக்குடைபெற்ற வெய்யவன்' என்றான்.

## குறிப்புப் பொருள்

ரகுநாயகன் வேற்படைபெற்ற செங்கையும் வேழமுமாய் நிற்றல் என்றமையானே, கண் புதைத்தலும், தனத்தின் வெளிப்பாடும் வெளிப்பட்டன. (26)

கீதங் குழல்கஞ்சம் வீணை தடாரி கிளந்தபஞ்ச
நாதஞ் சிலம்பிய தேவையர் கோன்ரகு நாதன்வரைக்
காதங் கமழ்குழ லீரென தாவி கலக்கில்வரு
மேதம் பெரிதென்ன வோமறைத் தீரின் றிணைக்கயலே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கீதம் - மிடற்றுக்கருவி, குழல் - தொளைக்கருவி, கஞ்சம் - கஞ்சக்கருவி, வீணை - நரப்புக்கருவி, தடாரி - தோற்கருவி, (என்று) கிளந்த- சொல்லப்பட்ட, பஞ்சநாதம் - ஐவகைக் கருவிகளின் ஐவகை நாதமும், சிலம்பிய - ஒலிக்கின்ற, தேவையர்கோன் - தேவை நகரத்தார்க் கிறைவ னுகிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையிலுள்ள, காதம் கமழ் குழலீர் - காததூரம் நறுநாற்றம் வீசுகின்ற கூந்தலையுடையவரே, எனது ஆவி - எனது தடாகத்தை, கலக்கில் - கலக்கினுல், வரும் - அதனுல் உண்டாகின்ற, ஏதம் - குற்றம், பெரிது என்னவோ - பெரிதாமென்று நினைத்தோ, இன்று - இப்பொழுது, இணைக்கயல் - இரண்டு சேல் மீன்களை யும், மறைத்தீர் - மூடினீர் ; (எ - று.)

மிடற்றுக்கருவி - பாடுதல் முதலியன. தொளைக்கருவி - வேய்ங்குழல் முதலியன. கஞ்சக்கருவி - கைத்தாளம் முதலியன. நரப்புக்கருவி - யாழ் முதலியன, தோற்கருவி - மத்தளம் முதலியன. ஆவி - உயிர். என்னவோ என்னும் ஓகாரம் எதிர்மறை.

## குறிப்புப் பொருள்

"என தாவி கலக்கில்வரு மேதம் பெரிதென்னவோ மறைத்தீரின் றிணைக் கயலே" என்றமையால் உன் கண்களினும் என்னுயிரை மிக வருத் துவனவா யிருந்தன இக் கொங்கைகள் என்ருயிற்று.

இணைக்கயல் - இரண்டு மீன்கள், இவை என் தடாகத்தைக் கலக்கு மென்றெண்ணியோ மறைத்தீர் என்றமையால், கண்புதைத்தலும், (கலக்கா வென்றெண்ணி இரண்டு யானைகளை விடுத்தீர்) என வருவித்து இதனுல் தனத்தின் புறப்பாடும் கொள்க. (27)

பண்மூ டியசெங் கனியிதழ் ரீரேழு பாரகந்தன்
னுண்மூ டியபுக ழான்ரகு நாத னுயர்வரைவாய்க்
கண்மூ டியோகியர் போலநின் றீரிக் கருத்தினுக்கு
விண்மூ டியவரை கைவிடி லேதம் விளைவிக்குமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பண்மூடிய - பண்களை (வென்று) மறைத்த, செங்கனி இதழீர் - கோவைக்கனிபோலும் அதரத்தை யுடையீர், எழுபாரகம் - ஏழுலகங்களையும், தன்னுள்மூடிய - தன்னுள்ளே யடக்கி மறைத்த, புகழான் - புகழையுடையவனாகிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், உயர்வரைவாய் - உயர்ந்த மலையினிடத்து, கண்மூடி - கண்களை மூடிக்கொண்டு, யோகியர்போல நின்றீர் - யோகிகள்போல நின்றீர், இக் கருத்தினுக்கு - இந்த அபிப்பிராயத்துக்கு, விண் மூடிய வரை கை விடில் - ஆகாயத்தை மறைத்த மலையைக் கை விட்டால், ஏதம் விளைவிக்கும் - (அது) துன்பத்தை யுண்டாக்கும்; (எ - று.)

செங்கனி யென்றது இதழீர் என மேல் வருதலால் இவ்விடத்துக் கோவைக்கனியைக் குறித்து நின்றது. இதழ் - இதழோடு கூடிய வாய், இதன்கண் எல்லாப் பாடல்களு மடங்கி யிருக்கின்றன வென்பது கருத்து. எழுபாரகம் தன்னுள் மூடிய என்பதற்கு ஏழுலகத்தினும் பரவிய எனினு மமையும். யோகியர் மலையை விடலாகா தாதலால், 'வரை கைவிடி லேதம் விளைவிக்கும்' என்றான்.

## குறிப்புப் பொருள்

கண்மூடி யோகியர்போல நின்றீர் என்றதனால், கண்புதைத்தமையும், விண்மூடியவரை கைவிடில் என்றதனால், தனங்கள் வெளிப்பட்டமையும், ஏதம் விளைவிக்கும் என்றதனால், எம்போலியர்க்குத் துன்பஞ் செய்யு மென்பதும் வெளியாயின. (28)

மேகந் தருமணி வெண்முத்த ராசியின் மென்மலர்ப்புன்
னாகந் தருகடற் றேவையர் கோன்ரகு நாதன்வெற்பி
லேகந் தருபதின் மூன்றொன்ப தான்மறைத் திங்குநின்றீ
ராகந் தருமைந்து மொன்பது மேவெளி யாகியவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மேகம் தரு மணி - மேகத்தையும் கற்பகத்தருவையும் சிந்தாமணியையும் போல்பவன், வெண்முத்த ராசியின் - வெண்மையாகிய முத்துத் தொகுதிபோல, புன்னாகம் - புன்னாகமரங்கள், மெல் மலர்தரு - மெல்லிய மலர்களை யுதிர்க்கிற, கடல் - கடற்கரையிலுள்ள, தேவையர்கோன் - தேவை நகரத்தார்க்கிறைவன், ரகு நாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வெற்பில் - மலையில், ஏகம்தரு பதின்மூன்று - பன்னிரண்டை, ஒன்பதால் மறைத்து - ஒன்பதினால்மூடி, இங்கு நின்றீர் - இவ்விடத்து நின்றீர், (நிற்ற

லும்), ஆகம் தரும் - மார்பினால் தரப்பட்ட, ஐந்தும் ஒன்பதும் வெளியாகிய- ஐந்தும் ஒன்பதும் வெளியாயின ;—(எ-று.)

## குறிப்புப் பொருள்

ஏகம்தரு பதின்மூன்று - ஒன்றை நீக்கிய பதின்மூன்று, அதாவது பன்னிரண்டாவது இராசியாகிய மீனம், இது கண்ணினை யுணர்த்தி நின்றது. அன்றி ஒரு பதின்மூன்றென்னும் தொகைபெற்றதாகிய அஸ்தம் என்னும் நக்ஷத்திரத்தை யுணர்த்தி அது கையையுணர்த்திற் றெனினுமமையும்.

ஒன்பதால் மறைத்து என்றது நவநிதிகளுள் பதுமநிதி ஒன்பதாவது நிதியாதலாலும், பதுமம் கைக்கு உவமையாதலாலும் கையால் மூடியென்றபடி; ஐந்தும் ஒன்பதும் என்றது ஐந்தாவது நக்ஷத்திரமாகிய மிருகசீரிடத்தையும் ஒன்பதாவது நக்ஷத்திரமாகிய ஆயிலியத்தையும் உணர்த்தி நின்று, யானையின் தலை (மத்தகம்) பாம்பு எனப் பொருள்பட்டு, தனத்தையும் இடையையும் உணர்த்தின.

" பாரி லிடைக்கரவும் பைங்கொடியும் பூங்கொம்பும்
மார னுடம்பும் வகிரிழையும்—நேர்கைப்
பிடியளவுந் தேய்ந்த பிறைக்கொழுந்து மின்னும்
துடியளவுங் கோளரியுஞ் சொல்"

என்னும் உவமாந சங்கிரகச் செய்யுளாலும்,

" அணியு மமிழ்துமென் னாவியு மாயவன் றில்லைச்சிந்தா
மணியும் பராபரறி யாமறை யோனடி வாழ்த்தலரிற்
பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே "

என்னும் திருக்கோவையார் செய்யுளாலும் இடைக்குப் பாம்பு உவமைப் பொருளாதல் காண்க. (29)

பாவாய் நிறைகின்ற செம்பொரு ளோடுநற் பைம்பொருளு
நாவாய் தருகடற் றேவையர் கோன்ரகு நாதன்வரைப்
பூவாய் மனுமுறை யாலெமை வாழப் புரக்குமிளங்
கோவா யவரை யிறைமறைத் தாலது கொள்கையன்றே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பாவாய் நிறைகின்ற - பாடல்களில் நிரம்பிய, செம்பொருளோடு - செவ்விய பொருளுடன், நல் பைம்பொருளும்-நன்மையாகிய பசிய

பொன் முதலிய பொருள்களையும், நாவாய் தரு - மரக்கலங்கள் கொண்டுவந்து கொடுக்கின்ற, கடல் தேவையர் கோன்-கடல் சூழ்ந்த தேவை நகரத்தார்க் கிறைவனாகிய, ரகுநாதன்-ரகு நாத சேதுபதியின், வரை - மலையில் உள்ள, பூவாய் - பூவை போல்வாளே, மநுமுறையால் - மநுதர்ம சாஸ்திரத்தின் முறைமையால், எமை வாழப் புரக்கும் - எம்மை வாழும்படி காக்கின்ற, இளங்கோ ஆயவரை - இளவரசானவரை, இறை மறைத்தால்-பெருவேந் தன் தடுத்தால், அது கொள்கை அன்று - அது நல்ல கோட்பாடன்று; (எ-று.)

'பாவாய் நிறைகின்ற செம்பொருள்' என்றது - கண்கூடாகக் கண்ட பொருள்களன்றி நூல்களாற் சொல்லப்பட்ட பிறபொருள்களை, இவ்வா றன்றி நூற் பொருள்களை மரக்கலங்கள் தரும் எனவும் தனித்தனியே பொருத்தியுரைப்பினு மமையும். பூவை - நாகணவாய்ப்புள், இது மொழி யானுவமை. பூவாய் - முன்னிலை விளி, நாவாய் - மரக்கலம்.

கோ - கண், இறை - கையிறை, கோவாய வரை - ஆகாயத்தின் மேலுள்ள மலை (ஆகாயம் - இடை.) இறை - சற்று, கையிறை, அது கொள் கையன்றே - அது சரியான கொள்கையல்லவே, கண்களைக் கையிறை யால் மறைத்தலே நற்கொள்கையோ, அதுபோலத் தனங்களை மறைத்தல் நற்கொள்கை யல்லவோ யென்பது கருத்து.

## குறிப்புப் பொருள்

'கோவாயவரை யிறை மறைத்தாலது கொள்கையன்றே' என்றது கண்புதைத்தலையும், தனத்தின் வெளிப்பாட்டையும் விளக்கிநின்றது. (30)

வில்லிளங் காளை மயில்காப்ப மானை வெருண்டெழுந்த
நல்லிளங் கேசரி தேவையர் கோன்ரகு நாதன்வரை
வல்லிளங் கோல மணிமுலை சால வருத்தும்வண்டு
புல்லிளங் காமர் விரிந்தசெங் காந்தட் புதுமலரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வில் இளங்காளை - வில்லைத் தாங்கிய இளங்காளை, மயில் காப்ப - மயிலைக்காக்க, மானை வெருண்டு எழுந்த-மானைக் கோபித்தெழுந்த, நல் இளங் கேசரி - நல்ல இளமையாகிய சிங்கமும், தேவையர்கோன் - தேவை நகரத்தார்க் கிறைவனு மாகிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையிலுள்ள, வல் இளங் கோல மணிமுலை - சூதாடு கருவிபோன்ற இளமையாகிய அழகிய மணியணிந்த தனங்களை யுடையாளே, வண்டு புல் -

வண்டுகள் மொய்த்த, இளங் காமர் விரிந்த - இளமையாகிய அழகோடு விரிந்த, செங்காந்தள் புதுமலர் - செங்காந்தளின் புதிய மலர்கள், சால வருத்தும்- (என்னை) மிகவும் வருத்தா நின்றன ; ஏ-இஃதென்ன வியப்பு; (எ-று.)

வில்லிளங்காளை - இலக்குமணன், மயில் - சீதை, மான் - மாரீசன், வெகுண்டெழுந்த நல்லிளங் கேசரி - ஸ்ரீராமர், கைக்கு வண்டு - வளையல்.

"வண்டு புல்லிளங் காமர் விரிந்த செங்காந்தட் புதுமலரே" என்பதற்கு, வண்டு மொய்த்த இளமையு மழகுமுள்ள மலர்ந்த செங்காந்தண் மலர் போன்ற கண்களா என்னை வருத்துவது, அன்று ; எனவும், "வல்லிளங் கோல மணிமுலை சால வருத்தும்" என்பதற்கு, சூதாடு கருவிபோன்ற இளமையு மழகுமுள்ள மணியணி யணிந்த தனங்களே என்னை மிகவும் வருத்தா நின்றன எனவும் பொருள் கூறினுமாம். காந்தட் புதுமலரே மணி முலை சால வருத்தும் என்றியைத்து காந்தளின் புது மலரா என்னை வருத்துவது, அன்று, அழகிய முல்லை மலரே மிகவும் வருத்தா நின்றன என்றலுமொன்று.

## குறிப்புப் பொருள்

"வல்லிளங் கோல மணிமுலை" என்றமையால் தனத்தின் புறப்பாடும், 'வண்டு புல்லிளங் காமர் விரிந்த செங்காந்தட் புதுமலர்' என்றமையால் கையாற் கண்புதைத்தமையும் குறிக்கப்பட்டன. (31)

கல்லொன் றிரண்டிள நீர்தாங்கி முன்வரக் கண்டுமுனி
சொல்லென் றுநின்ற ரகுநாதன் றேவைச் சுரும்பின்மணி
வில்லொன் றுவாணுத லீர்செப்பி னூடத்த மேவுமல்லா
லல்லொன் றுநீலக் கடலூடு சேர்ப்ப தறிவின்மையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கல் ஒன்று - ஒரு கல்லானது, இரண்டு இளநீர் தாங்கி முன்வரக் கண்டு - இரண்டிளநீர்களை யேந்திக்கொண்டு எதிரே வரப் பார்த்து, முனி - முனிசிரேஷ்டனே, சொல் என்று - இதின் வரலாற்றைச் சவிஸ்தாரமாகச் சொல்வாயாக வென்று, நின்ற - (சொல்லுமளவும் அவ் விடத்திற்றானே) நின்ற, ரகுநாதன் - ரகு நாத சேதுபதியின், தேவைச் சுரும்பில் - தேவை மலையில், மணி - அழகாகிய, வில் ஒன்று - வில்லின்றன்மை யமைந்த, வாள்நுதலீர் - ஒண்ணுதலீர், அத்தம் - பொருளானது, செப்பினூடு மேவுமல்லால் - செப்பினிடத்துப் பொருந்துமேயன்றி, (அப்பொருளை) அல் ஒன்று - இருள் செறிந்த, நீலக்கடலூடு சேர்ப்பது - கருங்கடலிற் சேர்ப்பது, அறிவின்மையே - பேதமையே, (சந்தேகமின்று) ;—(எ - று.)

கல் - அகலிகை. இரண்டிளநீர் தாங்கி முன் வர என்றது அவள் இரு தனக்கும்பமேத்தி மங்களசூசகமா யெதிர்வந்ததை. முனியென்றது விசுவா மித்திர முனிவனை. ரகுநாதன் சக்ரவர்த்தித் திருமகன் (ஸ்ரீராமன்) பார் தாங்கு பார்த்திபன் வார்தாங்கு பூண்முலைமா மணாளனமிசமாதலால் இவ் வாறு கூறினர். மிதிலைக்குச் சென்று முடிக்கப்புகும் மங்களகாரியத்துக் கீதொரு நன்னிமித்தமெனக் கண்டோர் கொண்டாட வந்த அகலிகை வர லாற்றை யீண்டுக் கூறினராயிற்று.

செப்புதனங்களுக் குவமையாதலை

'பைங்குரும்பை செப்புமுடி'

என்னும் உபமானசங்க்ரகச் செய்யுளானும்,

"பொருப்பிளநீர் வேண்மகுடம் பொற்குடஞ்செப் பியானை, மருப்பு" என்னும் இரத்தினச் சுருக்கச் செய்யுளானும்,

"கயலுள வேக மலத்தலர் மீது கனிபவளந்
தயலுள வேமுத்த மொத்த நிரையர னம்பலத்தின்
இயலுள வேயிணைச் செப்புவெற் பாநின தீர்ங்கொடிமேற்
புயலுள வேமலர் சூழ்ந்திரு ணீங்கிப் புரள்வனவே"

என்னும் திருக்கோவையார் செய்யுளானும் காண்க. அண்மைவிளியாத லால் முனி இயல்பாயது. நின்ற என்றமையால் சொல்லுந்தனையு மவ் விடத்து நின்றமை பெறப்பட்டது. கரைக்கணிமையாயினும் ஒருகாற் றடவி யாராய்ந்தெடுத்தலியையும் அதுவு மியையாதாதலால்

'அல்லொன்று நீலக் கடலூடு சேர்ப்ப தறிவின்மையே'

என்றான்.

## குறிப்புப் பொருள்

'செப்பி னூடத்த மேவுமல்லால்' என்பதற்கு, செப்புபோன்ற தனங் களின்மீது கை பொருந்தத் தகுமன்றி எனவும், 'அல்லொன்று நீலக்கட லூடு சேர்ப்ப தறிவின்மையே' என்பதற்கு அக் கைகளை இருள்மிக்க நீலக் கடல்போன்ற கண்களிற் சேர்த்து மூடுவது பேதைமையே எனவும் தான் குறித்த பொருள் தோன்றுதல் காண்க. (32)

பண்ணார் குதலைக் கனிவாய் சிவந்த பசுங்கிளியீர்
நண்ணார் சமரிற் புலிதள வாய்ரகு நாதன்வரைக்
கண்ணா ரிணைக்கயன் மங்கல மாமெனக் கைக்கொண்டநீர்
தண்ணார் தரள மணிக்கும்ப நீக்குத றக்கதன்றே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பண் ஆர் - பண்போலப் பொருந்திய, குதலை - மழலைச் சொல்லையுடைய, கனிவாய் சிவந்த - கோவைக் கனிபோல் வாய் சிவந்த பசுங்கிளியீர்-பச்சைக் கிளியை நிகர்த்தவரே, நண்ணார் சமரில் புலி - பகைவரது போரில் புலியை நிகர்த்த, தளவாய் - தளவாயாகிய, ரகுநாதன் வரைக்கண் - ரகுநாத சேதுபதியின் வரையில், ஆர் - அருமையாகிய, இணைக்கயல் - இரட்டைமீனை, மங்கலம் ஆம் என - மங்கலப் பொருளென்று கருதி, கைக்கொண்ட நீர் - கையிற்கொண்ட நீர், தண் ஆர் - குளிர்ச்சி பொருந்திய, தரளம் மணிக் கும்பம் நீக்குதல் - முத்துமணி முதலியவை பொதிந்த பூரணகும்பங்களை நீக்குதல், தக்கது அன்று - தகுதியாகிய காரியமன்று ; (எ - று.)

முத்துமாலை ரத்நமாலைகள் தனத்தின் மீதணிந்திருத்தலால் அவற்றைத் 'தரள மணிக் கும்பம்' என்றார். கனியென வாளாகூறினும் வாய் என மேல்வருதலால் கோவைக்கனி யெனப்பட்டது. 'கண் ணுரிணைக்கயல்' என வைத்து பெருமை நிறைந்த இணைக்கயலெனினுமாம். இணைக்கயல் மங்கலமாதலை,

"சாற்றுங் கவரி நிறைகுடந் தோட்டிமுன் றர்ப்பணமா
மேற்றிய தீப முரசம் பதாகை யிணைக்கயலே
நாற்றிசை சூழ்புவி மீதட்ட மங்கல நன்குரையின்
மேற்றிகழ் வேற்றடங் கட்செய்ய வாய்ப்பைம்பொன் மெய்த்திருவே'

என்னும் இரத்திநச் சுருக்கச் செய்யுளானுணர்க.

"பூவும் பழுத்த செழுந்தீங் கனியும் பொழியமுத
மேவுங் குடங்க ளிரண்டுட னேயிரு மீனுங்கொண்டு"

என்றார் பிறரும்.

### குறிப்புப் பொருள்

இணைக்கயல் - இரண்டுகண். தரளமணிக் கும்பம் - தனம். (33)

சந்தே றியதடஞ் சார லிலாயிரந் தண்மதிபோ
னந்தே றியகந்த மாதனத் தான்ரகு நாதன்வரைக்
கொந்தே றியமலர் வாள்புனைந் தீர்மத குஞ்சரந்தேன்
வந்தே றியமொழி யீர்புனை வீர்செங்கை மாமலரே.

### வெளிப்படைப் பொருள்.

(இ - ள்.) சந்து ஏறிய - சந்தநமரங்க ளடர்ந்த, தடம் சாரலில்-விசாலமாகிய சாரலின்கண், ஆயிரம் தண்மதிபோல் - ஆயிரம் குளிர்ச்சியாகிய

சந்திரர்போல, நந்து ஏறிய - சங்குகள் ஊர்கின்ற, கந்தமாதநத்தான் - கந்தமாதநகிரியை யுடையவனாகிய, ரகு நாதன்வரை - ரகுநாத சேதுபதியின் வரையின்கண், தேன் வந்து ஏறிய மொழியீர் - தேனின் சுவை வந்து பொருந்தியிருக்கிற மொழியை யுடையீர், கொந்து ஏறிய மலர் - கொத்தாகிய தாமரை மலரை, வாள் புனைந்தீர் - வாளுக்குச் சூட்டி யலங்கரித்தீர், செங்கை மா மலர் - உமது செம்மையாகிய கையிலுள்ள அழகிய மலரை, மத குஞ்சரம் புனைவீர் - மதயானைக்குச் சூட்டி யலங்கரிப்பீர்; (எ - று.)

கந்தமாதநம் கடற்கரையிலுள்ள தாதலாலும், கடற்சங்குகள் அதின் சாரலில் வந்து தவழ்தலியற்கையாதலாலும், அவை வெண்ணிறமுள்ளன வாதலாலும்

> " சங்தே றியதடஞ் சார லிலாயிரந் தண்மதிபோல்
> நந்தே றியகந்த மாதநத்தான் "

மென்றார்.

வாள் - கண், மத குஞ்சரம் - யானை (தனம்). தடஞ்சாரல் - மலைச் சாரல் எனினுமாம். தடம் - மலை, வரைக்கொந்தேறிய மலர் - காந்தள் மலர் என்றலு மமையும். காந்தள் மலர் கைக்குவமையாதலால் காண்க.

> " காந்த ளிரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை
> வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே "

என்றார் பிறரும்.

## குறிப்புப் பொருள்

'வரைக்கொந்தேறியமலர் வாள் புனைந்தீர்' என்றமையால், கலவி புதைந்ததும், " மதகுஞ்சரம் புனைவீர் செங்கை மாமலரே " என்றமையால் தனத்தின் புறப்பாடும் பெறப்பட்டன. (34)

> கார்பூத்த புன்னைவெள் ளோதிமஞ் சீதரன் கைவளைபோ
> லேர்பூத்த தேவையர் கோன்ரகு நாயக னேமவெற்பில்
> வார்பூத்த பூண்முலை யீரறிந் தாய்ந்து மணப்பதற்கோ
> தார்பூத்த செங்கையி லேந்திநின் றீரின்ப சாகரமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கார்பூத்த - கார்காலத்திற் பூத்த, புன்னை - புன்னை மரங்களும், வெள் ஓதிமம் - வெண்மையான அன்னங்களும், சீதரன் கைவளை போல் - திருமாலும் அவன் கையிலுள்ள பாஞ்சஜன்யமும்போல, ஏர்

பூத்த - அழகைச் செய்கிற, தேவையர்கோன் - தேவைநகரத்தார்க்கிறைவன் ஆகிய, ரகு நாயகன் - ரகுநாத சேதுபதியின், ஏம வெற்பில் - பொன் மலை மேல் உள்ள, வார்பூத்த - கச்சணிந்த, பூண் முலையீர் - ஆபரணங்களோடு கூடிய தனங்களையுடையவரே, அறிந்து ஆய்ந்து மணப்பதற்கோ - (குண விசேடங்களை) அறிந்து ஆராய்ந்து பிறகு கூடுதற்கோ, இன்பசாகரம் - இன்பக் கடலை, தார்பூத்த செங்கையில் ஏந்தி நின்றீர் - தாமரைமலர் போன்ற செங்கையிலேந்தி நிற்கிறீர்; (எ - று.)

'கார்பூத்த புன்னை வெள்ளோதிமம்' என்பதற்குக் கருமையாகிய புன்னைமரத்தின் மேலுள்ள வெண்மையாகிய அன்னம் என்றலும் பொருந்தும், இவ்வாறு கொள்ளுங்கால் புன்னை சீதரனுக்கும், ஓதிமம் அவனது கைவளைக்கும் உவமையாகக் கொள்க.

'கார்பூத்த புன்னை' கருநிறம் பொருந்திய புன்னைமரம் எனினுமாம், 'வெள்ளோதிமம்' என்பதில் வெண்மை சாதியடை, தார் - மலர். அது கைக்கு உவமிக்கப்படு பொருளாயினமையால் தாமரை மலர் என்றுரைக்கலாயிற்று. 'இன்பசாகரம்' என்றது கண்ணை, இது

'வேலும் கடலும் விடமு மமுதும்வாளும்
சேலும் பிணையுமிணை செப்பு'

என்பதனு லினிதுவிளங்கும்.

## குறிப்புப் பொருள்

இன்பசாகரம் - கடல் (கண்). வார்பூத்த பூண்முலையீர் என்றதனால், தனத்தின் வெளிப்பாடும், இன்பசாகரம் செங்கையிலேந்தி நின்றீர் என்றதனால், கண்புதைத்தமையும் வெளியாயின. (35)

பால்வாய்ப் பசுந்தமிழ் வீசிய வாசம் பரந்தவைகைக்
கால்வாய்த்த வீரையர் கோன்ரகு நாதன் கரந்தைவெற்பின்
மேல்வாய்த் திருந்த வெழுத்தா றரிதின் விளங்குமென்றே
நால்வாய்த்த நுண்ணிடை யீர்மறைத் தீரணி நோக்கினையே,

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) நால் வாய்த்த - நாலையொத்த, நுண் இடையீர் - நுண்ணிய இடையை யுடையவரே! பால்வாய் - பாலின் இனிமை வாய்ந்த, பசுந்தமிழ் வீசிய - பசுமையான தமிழின் மணம் வீசிய, வாசம் பரந்த - வாசனை விரிந்த, வைகைக் கால் வாய்த்த - வைகையாற்றின் கால்வாய்களினிடத்து வந்த நன்னீரின் வளம் பெற்ற, வீரையர் கோன் - வீரை நகரத்தார்க்கு

அதிபனுகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், கரந்தை வெற்பின் மேல் - கரந்தை நகரத்து மலையினிடத்து, அரிதின் - அருமையாக, வாய்த்திருந்த - எழுந்தருளி யிருந்த, எழுத்தாறு - சடாக்ஷரப் பொருளாகிய குமரக்கடவுள், விளங்கும் என்றே - (மனத்தின்கண்) விளங்குமென எண்ணியோ, அணி நோக்கினையே - (புறத்திற் சென்று விஷயங்களைக் கவரும்) அழகிய கண் களையே, மறைத்தீர் - மறைத்துக்கொண்டீர்; (எ - று.)

ஏனை பாஷைகள் போலாது இனிமையுடைமையால், 'பால்வாய்ப் பசுந் தமிழ்' என்றார். இனி, தமிழ்ப்பாஷையைப் படிக்குந்தோறும் இனிமை வாய்ந்திருத்தலின் அங்ஙனம் கூறினர் என்னலுமாம். இதனை,

"மட்டாருந் தென்களந்தை படிக்காச னுரைத்ததமிழ்
வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்த வேட்டைத்
தொட்டாலுங் கைம்மணக்குஞ் சொன்னலு வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே பாட்டினுறு
நளினந் தானே".

எனவும்,

"சுந்தர மங்கையர் சொல்விழை காம
மைந்தரின் யாருமகிழ்ச்சி திளைக்கும்
செந்தமி ழென்னுந்தி ருத்தகு பாடை
தந்தருண் ஞானமுந் தந்தரு ளென்றான்"

எனவும் வருஞ் செய்யுட்களானுமுணர்க. (இது தணிகை-அகத். ௪. செய்)

இனி, இறைவி அருளிய ஞானப்பாலுண்ட ஞான சம்பந்தப் பிள்ளை யாரது திருவாக்கிற்பிறந்த தேவாரப்பாக்கள் பொருந்திய வைகையாதலின், "பால்வாய்ப் பசுந்தமிழ் வீசிய வாசம் பரந்த வைகை" என்றார்.

பால்வாய் என்பதை ஆகுபெயராவது அன்மொழி யாவது கொண்டு, திருஞான சம்பந்தப் பிள்ளையை யுணர்த்திற்று எனினுமாம். முந்திய பொருட்கு விளைத்தொகையாதலின் இயல்பாய் நிற்கவேண்டியது பால் வாய்ப் பசுந்தமிழ் என நின்றது சந்த வின்பம் நோக்கி; முதனிலைத் தொழிற் பெயராகக் கொள்ளினு மமையும்,

'கரந்தை வெற்பின்' என்றதால், ரகுநாதன் தன் பகைமேற் சென்று வந்தகாலத்து அப் பகைவரால் தம் நிரையை மீட்ட மாட்டாத வெற்புடை யான் என அவனது மலைச்சிறப்பும் கூறப்பட்டது; மீட்டல் கரந்தை யாதலின்.

### குறிப்புப் பொருள்

நுண்ணிடையீர் ! மேன்மையாகப்பொருந்திய எழுவாலாகிய அங்குசம் தோன்று மென்று கருதியோ அழகிய நோக்கினை மறைத்தீர்.

எழுத்தாறு - எழுவாலாகிய அங்குசம் ; (தாறு - அங்குசம்.)

நீர் கண்களை மூடியதனால், அங்குசத்தை யொத்த மூன்றுறுப்பும் மறைந்தது. என்னை, கைப்பிடியை யொத்த நீண்ட மூக்கும், பிறைமுக வடிவான இரும்பை யொத்த நெற்றியும், வடித்த நுதியை யொத்த கூந்தல் வகிர்ந்த கீற்றும் ஆகிய இம் மூன்றுறுப்பும் சேர்ந்து அங்குசம். (கூந்தல் வகிர்ந்த கீற்று என்கிறது சீமந்தரேகையை,)

இதனை,

"பிடிநெடு நாசி பிறைமுகத் திரும்பு
பெருகொளி வாணுதல் புண்டோய்
வடிநுதி செந்தூ ளட்டுவார் கூந்தல்
வகிர்ந்தகீற் றுகமூன் றுறுப்பும்
கடிமலர்ப் பகழிக் கழைச்சிலைத் தடக்கைக்
காமவேள் காரிரு ளோதித்
துடியடிக் கயவாய் முறஞ்செவி வேழந்
தூண்டுகைத் தோட்டிபோன் றனவே"

எனவரும் தணிகைப் புராணக் களவுப்படலச் செய்யுளானு முணர்க,

அங்குசத்தை மறைத்தது யானை தடைபடாது போர் செய்யு மென்று கருதியது போலும், அங்ஙன மறைந்ததனால், அவ்வியானை என்மீது தாவுகின்றது. ஆகையால். அவ்வங்குசத்தை வெளிப்படுத்தினால், அது என்மீது தாவாமல் நிற்கும் ; அதுபொழுது யான் உய்வன் என்க. கண்மறைத்தலும் தனம் வெளிப்படுதலும் எனக்கு ஏதம் விளைக்கும், தனம் - முலை (யானை). (36)

ஆவியும் பூவுந் தகரமுந் தேனு மணிந்துநறு
நாவியுஞ் சேர்குழ லீர்தள ரய்ரகு நாதன்வரைக்
காவியங் கைபுனைந் தீர்விடுத் தீர்தனங் கஞ்சமலர்த்
தேவியும் போலநின் றீர்விருப் பேதுங்கள் சிந்தனைக்கே.

### வெளிப்படைப் பொருள்

ஆவியும் - அகிற்புகை முதலியவற்றையும், பூவும் - மலரையும், தகரமும் - மயிர்ச்சாந்தையும், தேனும் - தேனையும், அணிந்து - தரித்து, நறுநாவியும் சேர் குழலீர் - பரிமளமுள்ள கஸ்தூரியும் சேர்ந்த கூந்தலையுடையவரே,

தளவாய் - தளவாயாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையின் கண், காவியங் கைபுனைந்தீர் - காவியத்தைக் கைக்கொண்டீர், தனம் விடுத்தீர் - பொன் முதலிய பொருள்களைக் கைவிட்டீர், கஞ்சமலர்த் தேவியும் போல நின்றீர் - தாமரை மலரிலுள்ள சிதேவி போலவும் நிற்கின்றீர், உங்கள் சிந்தனைக்கு - உமது சித்தத்திற்கு, விருப்பு ஏது - விருப்பமாகிய பொருள் யாது; (எ - று.)

தேன் மலரிலுள்ளது; அன்றி, வண்டு எனினும் பொருந்தும். காவிய முதலியவற்றைக் கற்றறிவு முதிர்ந்துழி பொன் முதலியவற்றை விடுத்துப் பற்றற்றிருத்தல் திண்ணமாதலால் "காவியங் கைபுனைந்தீர்விடுத்தீர் தநம்" என்றான். ஆவி - புகை. நறுநாவியுஞ் சேர் குழலீர் என மேல்வருதலால் அது அகிற்புகை முதலியவற்றை யுணர்த்திற்று. "விருப்பு" - விரும்பப்படு பொருள். 'கஞ்சம்' கம்சம் எனப் பிரிக்கப்பட்டு நீரிற் பிறப்பது எனப் பொருள்படும். நீரிற் பிறப்பன குவளை முதலிய பிறபொருள்க ளுளவாயினும் 'தேவியும் போல நின்றீர்' என மேல் வருதலால், தாமரை மலரையே குறித்தது. காவி - கருங்கு வளைமலர், இது கண்ணைக் குறித்தது. தனம் - முலையைக் குறித்தது.

## குறிப்புப் பொருள்

'காவி யங் கைபுனைந்தீர்' என்றமையால், கையினால் கண் புதைத்தமையும், 'விடுத்தீர் தனம்' என்றமையால், தனம் வெளிப்பட்டமையும் வெளியாயின. (37)

வாவிக்கு ளொற்றை வனசமென் றோதுமை வானிலங்கும்
காவிச் செழுங்குடை யான்ரகு நாயகன் காவிரிநாட்
டாவிக் குயிர்தந்த கோட்டூர் தொழுதன மப்படிநீர்
சேவிக்க நல்கும் கமலா லயமுத்தி சித்திக்கவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வாவிக்குள் - தடாகத்தில், ஒற்றை - தனிமையாகிய, வனசம் என்று ஓதும் - செந்தாமரை மலர் போலும் என்று சொல்லுதற்குரிய, மை வான் இலங்கும் - கருமையாகிய ஆகாயத்தில் விளங்குகின்ற, செழு செழுமையாகிய, காவிக்குடையான் - காவிக்குடையை யுடையவனாகிய, ரகுநாயகன் - ரகுநாத சேதுபதியின், காவிரிநாட்டு - காவேரி நதிசூழ்ந்த நாட்டின்கண், ஆவிக்கு - எம்முயிருக்கு, உயிர் தந்த - உயிரைத் தந்த, கோட்டூர் தொழுதனம் - கோட்டூரைச் சேவித்தோம், அப்படி - அவ்வாறே, நீர் - நீர், முத்தி சித்திக்க - முத்தி கைகூடும்படி, கமலாலயம் - திருவாரூரை, சேவிக்க - (யாம்) சேவிக்கும் பொருட்டு, நல்கும் - தந்தருளுவீர்; (எ - று.)

'வாவி' வானுக்கும், 'வனசம்' காவிக்குடைக்கும் உவமை. "ஆவிக் குயிர் தந்த கோட்டூர்" என்றான் மூலெவெளிப் பாட்டால் தன் றுயர் சிறிது தணிதலால், கோடு - யானைக் கொம்பு, கோட்டூர் - தனம். கமலாலயம் - கம லா ஆலயம் - கமலைக்கு இருப்பிடம் தாமரை ; அது கண், தாமரை மலரை ஆசனமாக வுடையவள் (திருமகள்).

## குறிப்புப் பொருள்

'நீர் சேவிக்க நல்குங் கமலா லயமுந்தி சிந்திக்கவே' என்றமையால் கண் புதைத்தலும் 'ஆவிக் குயிர்தந்த கோட்டூர் தொழுதனம்' என்றமை யால் தனத்தின் வெளிப்பாடும் பெறப்பட்டன. (38)

சங்கே கொடைத்தரு வேயென வாழ்வு தருங்கருட
வெங்கே தனத்தள வாய்ரகு நாயகன் வீரைசுற்றும்
பங்கே ருகத்தன மேயொளி சேர்தன பாரமலை
யிங்கே யிருக்கக் கடலே றினரென் னிறையவரே.

## வெளிப்படைப் பொருள்

சங்கே - சங்கநிதியே, கொடைத்தருவே - ஈகையிற் சிறந்த கற்பகந் தருவே, என - என்று வித்வஜ்ஜனங்கள் முதலியோர் புகழ்ந்து சொல்லும்படி, வாழ்வுதரும்-(அவர்களுக்கு) சுகவாழ்வைக்கொடுக்கிற, வெம்-(பகைவர்க்கு) வெம்மையாகிய, கருடகேதனம் - கருடக்கொடியை யுயர்த்த, தளவாய் - தளவாயாகிய, ரகுநாயகன் - ரகுநாதசேது பதியின், வீரைசுற்றும் - வீரை நகரத்தைச் சூழ்ந்த, பங்கேருகத்து அன்னமே - தாமரை அன்னமே, ஒளி சேர் - ஒளிபொருந்திய, தனம் - பொன்னாலாகிய, பாரம் மலை - பெரிய மலைகள், இங்கே இருக்க - இவ்விடத்தி லிருக்க, (இவற்றை விட்டு) இறைய வர் - தலைவர், கடல் ஏறினர் - (அந்தத்திரவியத்தைத் தேடும் பொருட்டு) கடலேறிச்சென்றார், என் - இது என்ன பேதைமை ; (எ - று.)

ஏகாரம் தேற்றம், கொடையைச் சங்குக்குஞ் சேர்த்துரைக்க. சங்கு என - சங்கநிதி போலவும், கொடைத்தரு என - கொடைத்தருப் போலவும் என்றுரைத்தலுங்கூடும், அன்றி, சங்கே - சங்கநிதியே, கொடைத்தருவே - கொடையிற் சிறந்த கற்பகத் தருவே, என - என்று சொல்லவே, வாழ்வு தரும் - வாழ்வைக் கொடுக்கிற எனினும் பொருந்தும், வாழ்வு என்றது வாழ்ச்சிக்குக் காரண மாகிய செல்வத்தை. கருடனுக்கு வெம்மையாவது, பெருமானை அணுகாதார் மீதுள்ள சினம். இது, 'விண்ணோர் தொழுக் கடவுந்தழற்போல் சினத்தவம் புள்ளின்பின் போனதனி நெஞ்சமே' என்னும்

திருநாவீறன் சூக்தியானு முணர்க. பாட்டுடைத் தலைவன் காவிக்கொடியை யுடையவனாகவும், 'கருடகேதநன்' என்றார், அவனை விண்டுவாய்க் கோடலால். என்னிறையவர் என்பதற்கு என்னையகர் எனப் பொருள் கொண்டு திரை கடலோடித் திரவியந் தேடச் சென்ற தலைமகன் பிரிவாற்றாத் தலைமகள் கூறி யிரங்கலாகக் கூறினும் பொருந்தும். தாமரைக்கும் அன்னத்துக்கும் பொருத்த முண்மை தோன்றப் "பங்கேருகத் தன்னமே" யென்றான். 'பங் கேருகத்தனமே' என்பதற்குத் தாமரை மலரிலுள்ள அன்னத்தை நிகர்த்த திருமகளை நிகர்த்தவளே யெனினு மமையும்.

## குறிப்புப் பொருள்

ஒளிசேர் தனமலை - பொன்மலை (கொங்கை). இறையவர்-கை, கடல்-கண். இறை - கீற்று; அது ஆகுபெயராய் விரல்களையுணர்த்திப் பின்னர்க் கையை யுணர்த்திற்று, அர் - உயர்வு பொருட்டு, இறையவர் கடலேறினர் என்றமையால், கண்புதைந்தலும், ஒளி சேர் தன பார மலையிங்கே யிருக்க என்றமையால் தத்னதின் வெளிப்பாடும் பெறப்பட்டன.

இவ்விடத்துத் திரவியங் கிடைக்கப் பெறுதார் 'திரைகட லோடியுந் திர வியந் தேடு' என்ற மூதறிவாட்டித் திருவாக்கின்படி கடலேற லமையும், இவரும் இறைவர், திரவியமும் மலைபோல்வது, இங்ஙனமாகவும் கடலேறு தல் பேதைமை யென்பது தோன்ற 'ஒளி சேர் தன பாரமலை யிங்கே யிருக்க' என்பதற்கு இயற்கை யொளியும் ஆபரணதிகளானுகிய செயற்கை யொளி யும் விரும்பிவந் தடைதற் கிடமாகிய தனங்கள் என்கிற பெரியமலைகளோ ரிரண்டு மிங்ஙனே வெளிப்படத் தோன்று நிற்க எனவும், இறைவர் கடலேறி னார் என்பதற்கு, இறையை யுடைய கைகள் கண்களாகிய கடலி லேறினமை எற்றுக்கு எனவும் தன்குறிப்புப் பொருள் தோன்றுதலுங் காண்க. இதில் பொருள்வயிற் பிரிவு என்னுந் துறை அமைந்துள்ளது. (39)

கன்னித் திரைச்சங்கு மிப்பியு மீனுங் கராவுமொளிர்
நன்னித் திலஞ்சொரி தேவையர் கோன்ரகு நாதன்வெற்பின்
மின்னிற் சிறந்தமின் னேகரிக் கோட்டுவெண் முத்திருக்க
மன்னித் திகழ்கஞ்ச முத்தமென் னேகை வளைகின்றதே.

## வெளிப்படைப் பொருள்

கன்னி - தென்குமரியின், திரை - அலைகளிலுள்ள, சங்கும் - சங்கு களும், இப்பியும் - சிப்பிகளும், மீனும் - மீன்களும், கராவும் - முதலை களும். ஒளிர் - விளங்குகின்ற. நல் நித்திலம் - உயர்வாகிய முத்துக்களை, சொரி - சொரியாநிற்றற்கிடமாகிய, தேவையர்கோன் - தேவை நகரத் தார்க் கிறைவனாகிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், வெற்பில் - மலையில்

உள்ள, மின்னின் சிறந்த மின்னே - மின்னற் கொடியினுஞ் சிறந்த பெண்ணே, கரிக்கோட்டு வெண் முத்து இருக்க-யானை கொம்பிலுண்டாகிய வெள்ளிய முத்துக ளிருக்க, மன் னி திகழ் - நிலைபெற்று விளங்குகிற, கஞ்ச முத்தம் - தாமரை மலரின் முத்துக்களைப் பெறும்பொருட்டு, கை வளை கின்றது - கை வளையாநின்றது, என் - (இதற்குக்காரணம்) யாது; (எ - று.)

கரிக்கோடு - தனம், வெண்முத்து - வெள்ளிய முத்துவடம், கஞ்சம் - கண், முத்தம் - நீர்த்துளி. யானைக்கொம்பு, தாமரை முதலியவற்றில் முத்துண்டாதலை,

'தந்தி வராக மருப்பிப்பி பூகந் தனிக்கதலி
நந்து சலஞ்சல மீன்றலை கொக்கு நளின மின்னார்
கந்தரஞ் சாலி கழைகன்ன லாவின்பல் கட்செவிகார்
இந்து வுடும்பு கராமுத்த மீனு மிருபதுமே'

என்பதனாலறிக.

## குறிப்புப் பொருள்.

'கஞ்ச முத்தமென்றே கை வளைகின்றதே' என்றமையால் கண்புதைத்தலும், 'கரிக்கோட்டுவெண்முத்திருக்க' என்றமையால் தனத்தின் வெளிப்பாடும் தோன்றுகின்றன. (40)

போரயி னாகம் புலிசிலை வாள்வெம் பொறிவழங்கு
மாரெயில் வீரையர் கோன்ரகு நாத னணிவரைக்கு
ணீரர ணாகிய மைவேலை கைக்கொண்ட நேரிழையீர்
பேரர ணான கிரிதுர்க்க நீக்குதல் பெண்புத்தியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) போர் அயில் - போர்க்குரிய வேற்படையையும், நாகம் - பாம்பையும், புலி - புலியையும், சிலை - வில்லையும், வாள் - வாட்படையையும், வெம்பொறி வழங்கும் - வெவ்விய யந்திரங்கள் வழங்க வமைத்த, ஆர் எயில் - அருமையாகிய மதில் சூழ்ந்த, வீரையர்கோன் - வீரைநகரத்தார்க்கிறைவனாகிய, ரகு நாதன்-ரகுநாத சேதுபதியின், அணிவரைக்குள் - அழகிய மலையினிடத்து, நீர் அரண் ஆகிய-நீரரணாகிய, மைவேலை-கருங்கடலை, கைக்கொண்ட - கைவசப்படுத்தி யிருக்கின்ற, நேரிழையீர் - நேரிய ஆபரணத்தை யணிந்தவரே, பேர் அரண் ஆன-பெரிய அரணாகிய, கிரிதுர்க்கம் - மலையரணை, நீக்குதல் - நீக்கிவிடுதல், பெண் புத்தியே - பெண்மைக்குணமாகிய பேதைமையே யன்றி வேறல்ல; (எ - று.)

மலையரண், காட்டரண், நீரரண், மதிலரண் என்னும் நான்கனுள் மலையரண் சிறந்ததாதலால், அதனை நீக்குதல் பெண்புத்தி என்றான். 'மை வேலை' - கண். கிரிதுர்க்கம் - தனம். பகைவரணுகாதபடி மதிலின்மீது பல வகையான யந்திரங்க ளமைக்கப் பட்டிருப்பது வழக்க மாதலால் 'போர யினுகம் புலிசிலைவாள்வெம் பொறிவழங்கு மாரெயில்' என்றார். பொறி - யந்திரம்.

## குறிப்புப் பொருள்

'நீரரணாகிய மைவேலை கைக்கொண்ட நேரிழையீர்' என்றமையால் கண்புதைத்தலும், 'பேரரணை கிரிதுர்க்க நீக்குதல் பெண் புத்தியே' என்ற மையால் தனத்தின் வெளிப்பாடும் விளங்குகின்றன. (41)

திரையோங்கு பாற்கடற் பூந்தா மரைச்செழுந் தேனிருக்கும்
வரையோங்கு மார்பன் ரகுநாதன் றேவை மணிவரைமேல்
விரையோங்கு பங்கயந் தாங்கிய நீரிரு வெற்பொளித்தா[ரே.
லுரையோங்கு விண்மணி யெண்மணி னீரென் றுரைசெய்வ

## வெளிப்படைப் பொருள்

திரை ஓங்கு - அலைகள் உயர்ந்த, பால்கடல் - திருப்பாற்கடலிற் றோன்றிய, பூந் தாமரை - அழகிய தாமரை மலரிலுள்ள, செழுந்தே னிருக்கும் - செழுமையாகிய தேன் தங்குதற் கிடமாகிய, வரையோங்கு மார்பன் - மலைபோ லுயர்ந்த மார்பை யுடையவ னாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதி யின், மணிவரைமேல் - அழகிய மலையின்மீது, விரை ஓங்கு - வாசனை மிகுந்த, பங்கயம் தாங்கிய நீர்-தாமரை மலர்களைத் தாங்கிய நீர், இருவெற்பு ஒளித்தால் - இரண்டு மலைகளை யொளித்தால், எண் மண்ணில் - மதிக்கத் தக்க பூமியில், நீர் - நீர், உரை ஓங்கு - புகழ் மிகுந்த, விண்மணி யென்று - சூரிய னென்று, உரை செய்வர் - (மேலோர்) சொல்லுவர் ; (எ - று.)

ஒளித்தால் என்பதற்கு ஒளியைச் செய்தால் எனவும், மறைத்தால் எனவும் பொருளுரைத்து; ஒளியைச் செய்தல் உதயகிரியி லென்றும், மறைதல் அஸ்தமன கிரியி லென்றும் பொருள் கொள்க. தாமரைச் செழுந் தேன் என்றது திருமகளை, பங்கயம் - கண். இரு வெற்பு - இரண்டு தனம். ஆகாயத்தி லுள்ள ஓர் மாணிக்கம் போறலால் சூரியனை, 'விண்மணி' என்றார். தாமரையில் தேனிருத்த லியல்பாதலால் 'பூந்தாமரைச் செழுந்தேன்' என்றார்.

### குறிப்புப் பொருள்

'விரையோங்கு பங்கயந் தாங்கிய நீர்' என்றமையால், கண் புதைத்தலும், 'இருவெற் பொளித்தால்' என்றமையால், தனத்தின் புறப்பாடும் தோன்றின. 'இருவெற் பொளித்தால்' என்றமையால் ஒளியாமை பெறப் பட்டது. (42)

மதிசே ரமுத விதழியஞ் சீதள வாசவைகை
நதிசேர் தெளிபுனல் வீரையர் கோன்ரகு நாதன்வரைப்
பதிசே ரிளமுலை சங்கிலி காட்டும் பணியணிந்தாய்
துதிசேர் பரவையுங் காட்டிலென் போலில்லை சுந்தரனே.

### வெளிப்படைப் பொருள்

மதிசேர் - சந்திரமண்டலத்தைச் சேர்ந்த, அமுத இதழி - தேன்பொருந்திய கொன்றை மரங்களின், அம் - அழகாகிய, சீதளம் - குளிர்ச்சி பொருந்திய, வாசம்-பரிமளமுள்ள, வைகை நதிசேர் - வைகைநதியில் பொருந்திய, தெளிபுனல் - தெளிந்த நீர்சூழ்ந்த, வீரையர்கோன் - வீரைநகரத்தார்க்கிறைவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையி லுள்ள, பதிசேர் - ஊரைச் சேர்ந்த, இளமுலை - இளமையாகிய தனங்களையுடையாளே, சங்கிலிகாட்டும் பணி அணிந்தாய் - சங்கிலி நாய்ச்சியாரைக் காட்டும் தொழிலைப் பொருந்தினாய், துதிசேர் - புகழ் பொருந்திய, பரவையுங் காட்டில் - பரவை நாய்ச்சியாரையுங் காட்டினால், என்போல் - என்னைப் போல, சுந்தரன் இல்லை - சுந்தரன் என்பவன் இவ்வுலகில் இல்லை; (எ - று.)

'மதிசே ரமுத விதழி' என்றமையால் கொன்றை மரங்கள் சந்திர மண்டலத்தளவு மோங்கி யிருக்கின்றன வென்பது பெறப்பட்டது. 'மதிசே ரமுத விதழியஞ்சீதளவாசவைகை,நதிசேர் தெளிபுனல்' என்பதற்குப் பிறையைச் சேர்ந்த தேனோடு கூடிய கொன்றை மலர்களின் அழகும் குளிர்ச்சியும் பரிமளமும் பொருந்திய வைகை நதியிலுள்ள தெளிந்தநீர் என்றுரைத்தலுமாம். இப் பொருள் செம்மனச் செல்வியின் பிட்டின் பொருட்டுச் சிவபெருமான் மண்சுமந்த செய்தியைக் குறித்தது. சங்கிலி - பொன் வடமுதலிய ஆபரண மணிந்த தனம். சங்கிலி - பொன் வடத்தின் மேற்று; உரோம தாரையுமாம். பரவை - கடல் (கண்.)

### குறிப்புப் பொருள்

'பரவையுங் காட்டில்' என்றமையால் கண் புதைத்தலும், 'இளமுலை சங்கிலி காட்டும் பணி யணிந்தாய்' என்றமையால் தனத்தின் புறப்பாடும் பெறப்பட்டன, சுந்தரன் - சுந்தர மூர்த்தி நாயனர், (43)

முள்ளார்வெங் கானந் திரைவரை வான முகடுசென்று
நள்ளார் புகவெஞ் சிலைகுனித் தோன்ரகு நாதன்வரைக்
கள்ளார் கருங்குழ லீர்கொடுங் கூற்றையுங் கையமைத்தீர்
புள்ளார் தமைவிலக் கீரெமை வாழப் புரக்கிலின்றே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) முள்ஆர் வெம்கானம் - முட்கள் நிறைந்த வெவ்விய காட்டிலும், திரை - கடலிலும், வரை - மலையிலும், வானமுகடு - அண்டமுகட்டிலும், நள்ளார் சென்று புக - பகைவர் போய்ப் புகும்படி, வெம்சிலை குனித்தோன் - கொடுமையாகிய வில்லை வளைத்தவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையிலுள்ள, கள்ஆர் - (மலர்த்)தேன் பொருந்திய, கருங்குழலீர் - கரிய கூந்தலை யுடையவரே, கொடுங்கூற்றையும் கையமைத்தீர் - கொடிய யமனையும் கையி லடக்கினீர், இன்று - இப்பொழுது, எம்மை வாழ புரக்கில் - எம்மை இவ்வுலகில் வாழும்படி காப்பதுண்டாயின், புள்ளார்தமை விலக்கீர் - பறவைகளையும் விலக்குவீராக ; (எ - று,)

இவன் அம்பெய்ய வேண்டா, வில்வளைத்த மாத்திரை யானே பகைவர் இரிந்தோடுவர் என்றற்கு ‘முள்ளார் வெங்கானந் திரைவரை வான முகடு சென்று, நள்ளார் புகவெஞ் சிலைகுனித்தோன்’ என்றார். “மாயப் பொருபடை வாணனை யாயிரந் தோளும் பொழிகுருதி பாயச் சுழற்றிய வாழிவில்லான்” என்றார் மேலோரும். திரை - சினையாகுபெயர். கூற்றையும் என்ற வும்மை உயர்வு சிறப்பு. புள்ளார் தமை என்பத னீற்றில் இறந்தது தழீஇய வெச்சவும்மை தொக்கது. தம் - சாரியை. விலக்கீர் - விலக்கிலீர் எனினுமாம். கூற்று - யமன் (கண்), புள் - சக்ரவாகப் பறவை (தனம்).

## குறிப்புப் பொருள்

‘கொடுங் கூற்றையுங் கையமைத்தீர்’ என்றமையால் கண் புதைத்தலும், ‘புள்ளார் தமை விலக்கீர்’ என்றமையால் தனத்தின் புறப்பாடும் பெறப்பட்டன. கூற்றை யடக்கின வுமக்கு இரண்டு புட்களை யடக்குதல் அருமையன்று என்பது கருத்து. (44)

போற்றுங் கமடம் பணிகுல நாகம் பொறுத்தசுமை
யாற்றும் புயவரை யான்ரகு நாத னணிவரையீர் [தீர்
தோற்றுங் கயலை மறைத்தீர்பொற் கஞ்சமுந் தோற்றுவித்
சாற்றும் பொழுதினி னீரோ மதுரைத் தடம்பொய்கையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) போற்றும் கமடம் - துதித்தற்குரிய ஆதிகூர்மமும், பணி குல நாகம் - பாம்புகளிற் சிறந்த பாம்பாகிய ஆதிசேஷனும், பொறுத்த - தாங்கிய, சுமை - (பூ) பாரத்தை, ஆற்றும் - தாங்குகின்ற, புயம் - தோள்களாகிய, வரையான் - மலைகளையுடையவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், அணிவரையீர் - அழகிய மலையி லுள்ளவரே, தோற்றுங் கயலை மறைத்தீர் - கண்ணுக்குத் தோன்றுகின்ற சேல்மீன்களை ஒளித்தீர், பொன் கஞ்சமுந் தோற்றுவித்தீர் - பொற்றாமரையையும் கண்ணுக்குத் தோன்றும்படி செய்தீர், (ஆகையால்), சாற்றும் பொழுதினில் - சொல்லுமிடத்தில், மதுரை - தென்மதுரையிலுள்ள, தடம் பொய்கை - பெரிய பொற்றாமரைப் பொய்கை, நீரோ - நீர்தாமோ ; (எ - று.)

மதுரையிலுள்ள பொற்றாமரைப் பொய்கையில் கயல் இலவாதலும், பொற்றாமரை மலர் பூத்திருத்தலும் உண்மை யாதலால், இவ்வாறு கூறினார். முதுகினால் ஆதிகூர்மமும் ஆயிரந்தலை ஆதிசேஷனும் தாங்கும் பூபாரத்தைத் தன்னிரண்டு தோள்களாற் சுமத்தற்குரிய ஆற்றலுடையான் என்பது தோன்ற, 'போற்றுங்கமடம் பணிகுல நாகம் பொறுத்த சுமை, யாற்றும் புயவரையான்' என்றார். கமடம் - ஆமை (கூர்மம்.) 'தோற்றுங் கயல்' - எல்லாப் பொருள்களையுந் தோன்றுவித்தற்குரிய கயல்போலுங் கண். பொற்கஞ்சம் - தேமலையுடைய தாமரை யரும்பு போலுந்தனம்.

### குறிப்புப் பொருள்

'தோற்றுங் கயலை மறைத்தீர்' என்றமையால் கண்புதைத்தலும் 'பொற்கஞ்சமுந் தோற்றுவித்தீர்' என்றமையால் தனத்தின் வெளிப்பாடும் பெறப்பட்டன. (45)

நறைபெற்ற மாலைக் கதிர்வேலு மாலுமெந் நாளுஞ்செவ்வி
யுறைபெற்ற தேவை ரகுநாதன் வெற்பிலென் னுள்ள மென்
குறைபெற்ற தாருவை மைந்நீல வண்டு குடைந்துதிரா[ னுங்
திறைபெற்ற போதமைத் தீர்வந்து சாய்க்கு மிபக்குன்றமே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்) நறை பெற்ற - மணம் பொருந்திய, மாலை - பூமாலையையணிந்த, கதிர் வேலும் - ஒளியுள்ள வேற்படையும், மாலும் - பெருமையும், எந் நாளும் - எக்காலத்திலும், செவ்வி - அழகாகிய, உறைபெற்ற - உறையைப் பொருந்திய, தேவை - தேவை நகரத்திலுள்ள, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வெற்பில் - மலையில், என் உள்ளம் என்னும் - என் மன

மென்கிற, குறைபெற்ற தாருவை - குறைக்கப்பட்ட கற்பகத் தருவை, மை நீல வண்டு - மிகக் கரிய வண்டுகள், குடைந்து உதிராது-கிண்டி உதிர்க்காமல், இறைபெற்ற போது அமைத்தீர் - தலைமை பெற்ற தாமரை மலரால் அடக்கினீர், (ஆயினும்) இபக்குன்றம் - யானையாகிய மலைகள், வந்து சாய்க்கும் - வந்து அத் தருவை சாய்க்கின்றன; (எ - று.)

வேல் உறை பெறுகையாவது, எதிர்ப்பவ ரில்லாமையால் உறையிலடங்கி யிருத்தல். மால் உறை பெறுகையாவது, பெருமையானது வாழ்ந்திருத்தல். உறை - முதனிலைத் தொழிற்பெயர். மைநீலவண்டு - கண். இறைபெற்ற போது - கை. இறை - கையிறை. இபக்குன்றம் - தனம். இபக்குன்றம் - மலைபோன்ற யானைகள்.

## குறிப்புப் பொருள்

'என்னுள்ள மென்னும், குறை பெற்ற தாருவை மைந்நீலவண்டு குடைந்துதிரா, திறைபெற்ற போதமைத்தீர்' என்றமையால் கண்புதைத்தலும், 'வந்து சாய்க்கு மிபக்குன்றமே' என்றமையால் தனத்தின் வெளிப்பாடும் தோன்றின. (46)

ஆடக மாமதில் வீரையர் கோன்வண் டலம்புமுல்லை
யேடலர் மாலிகை யான்ரகு நாயக னேமவெற்பிற்
சூடக மேவுகைக் கொண்டீர் குவலயந் தோகையன்னீர்
கூடலை வேண்டிவந் தேனளித் தீர்பரங் குன்றினையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஆடகம் - பொன்னாற் செய்த, மா மதில் - பெரிய மதில் சூழ்ந்த, வீரையர் - வீரை நகரத்தார்க்கு, கோன் - தலைவன், வண்டு அலம்பும் - வண்டுகள் சூழ்ந்தொலிக்கப் பெற்ற, ஏடு அலர் - இதழ் விரிந்த, முல்லை மாலிகையான் - முல்லை மலர் மாலையை யணிந்தவன், ரகு நாயகன் - ரகுநாத சேதுபதி (அவனது), ஏம வெற்பில் - பொன் மலையின் மேலுள்ள, தோகை யன்னீர்-மயிலை யொப்பவரே, குவலயம் - உலகமுழுதும், சூடகம் மேவு - வளையலை யணிந்த, கைக்கொண்டீர்-கையினிடத் தடக்கி யிருக்கின்றீர், (அங்ஙனமாகக்) கூடலை வேண்டி வந்தேன் - யான் மதுரைமாநகரத்தை விரும்பி வந்தேன், (எனக்கு) பரங்குன்றினை அளித்தீர் - திருப்பரங்குன்றத்தைக் கிருபை செய்தீர், (இது என்ன பிரபுத்துவம்); (எ - று.)

ஏமவெற்பில் தோகை நிலப் பொலிவு தோன்ற நின்றது. கு-பூமி, வலயம் - மண்டலம் (பூ மண்டலம்). உலகமுழுதும் கைக் கொண்டிருக்கிற

உமக்கு, கூடலை வேண்டி வந்தேற்குப் பரங்குன்றத்தை யளித்தல் தருமமன் றென்ற தாயிற்று. குவலயம் - (கருங்குவளை) கண். கூடல் - சங்கம். பரங் குன்று - உயர்வாகிய மலை எனவும்; கூடுஅலை வேண்டி - சேர்ந்த அலைகளை யுடைய கடலை விரும்பி எனினுமாம். சூடகமேவு மென்பதனை, சூடு அகம் ஏவு எனப் பிரித்து உஷ்ணத்தைத் தன்னிடத்துக் கொண்டிருக்கிற அம்பு எனப்பொருள் கொள்ளினு மிழுக்காது. அம்பு - கண்ணுக்கு உவமைப் பொருள். அம்பையும் கருங்குவளை மலரையும் நிகர்த்த கண்ணைக் கையால் மறைத்தீர் என்ற தாயிற்று.

## குறிப்புப் பொருள்

'சூடக மேவுகைக் கொண்டீர் குவலயம்' என்றமையால் கண்புதைத் தலும், 'அளித்தீர் பரங்குன்றினையே' என்றமையால் தனத்தின் வெளிப் பாடும் பெறப்பட்டன. (47)

கங்கமுஞ் சீனமுஞ் சோனக நாடுங் கலிங்கமும்போர்
வங்கமுஞ் சேர்முன்றி லான்ரகு நாதன் மணவைவரைச்
சிங்கமுஞ் சாய வருகரிப் போரிலென் சிற்றுயிரு
மங்கமுந் தேய்வது பார்த்திரங் காததென் னாரணங்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கங்கமும்-பருந்தும், சீனமும்-சீன தேசத்தாரும், சோனக நாடும்-சோனக நாட்டாரும், கலிங்கமும் - கலிங்க நாட்டாரும், போர் வங்க மும்-போர்த் தொழிலில் வல்ல வங்கதேசத்தாரும், சேர் - கூடுகின்ற, முன்றி லான் - முற்றத்தை யுடையவன் ஆகிய, ரகுநாதன்-ரகு நாத சேதுபதியின், மணவை வரை - மணவை வரையில், சிங்கமும் சாய - சிங்கமும் தளரும் படி, வரு - வருகின்ற, கரிப்போரில் - யானைப் போரில், என் சிற்றுயிரும் - என் அற்ப உயிரும், அங்கமும் - உடம்பும், தேய்வது - மெலிவதை, பார்த்து - கண்ணுற் கண்டு, இரங்காதது என் - இரக்கஞ் செய்யாமைக்குக் காரணம் யாது, ஆரணங்கே - அருமையாகிய தெய்வப் பெண்ணே; (எ - று.)

பகைவரைக் கொன்று அவருடம்பைப் பருந்துக்கு விருந்தளிப்பவ னாதலாலும், சீனம் முதலிய தேசத்தார் வந்து இறையிறுக்கக் காத்திருக்கு முற்றத்தை யுடையவனாதலாலும் 'கங்கமுஞ் சீனமுஞ் சோனக நாடுங் கலிங் கமும் போர், வங்கமுஞ் சேர் முன்றிலான்' என்றார். சிங்கம் சாய்தல் - இடை துவளல். சீனம் சோனகநாடு கலிங்கம் வங்கம் என்பன இடவாகு பெயர்கள். சிங்கம் உவமையாகு பெயராய் இடையைக் குறித்தது.

## குறிப்புப் பொருள்

'என் சிற்றுயிரு, மங்கமுந் தேய்வது பார்த்திரங் காதநெஞ்சே ணங்கே' என்றமையால் கண் புதைத்தலும், 'சிங்கமுஞ் சாய வருகரிப் போரில்' என்றமையால் தனத்தின் வெளிப்பாடும் பெறப்பட்டன. (48)

"பங்கந்தனக்கிலன் வெங்கையி லேதும் பணைமுலைமா
தங்கந் தனக்குமம் மாதங்கபாரந்தரிக்கு மிடைச்
சிங்கந் தனக்குந் தளர்வதல் லாமற் சினவிலங்கின்
சங்கந் தனக்கொரு நாளே தளர்குவன் ருழ்குழலே"

என்றார் பிறரும்.

நூலுந் துடியுங் கொடிமின்னு நாகமு நுண்மதியும்
போலுந் தளரிடை யாய்ரகு நாதன் புனற்கரந்தைச்
சேலுங் கமலமுங் காவியு மாவுந்தெவ் வேந்தைவென்ற
வேலும்பொருவும் விழியையெந்நாட் கண்டு மேவுவனே.

## வெளிப்படைப் பொருள்.

(இ - ள்,) நூலும் - இழையையும், துடியும்-உடுக்கையையும், கொடி மின்னும் - மின்னற் கொடியையும், நாகமும் - பாம்பையும், நுண்மதியும் - நுட்பமாகிய அறிவையும், போலும் - நிகர்க்கின்ற, தளர் இடையாய் - தள ரிடையையுடையவளே, ரகுநாதன் - ரகுநாத சேது பதியின், புனல் - நீர் வளமுள்ள, கரந்தை - கரந்தை நகரில், சேலும் - சேல்மீனையும், கமலமும் - தாமரைமலரையும், காவியும் - நீலோத்பலமலரையும், மாவும் - மாவடு வகிரையும், தெவ்வேந்தை வென்றவேலும் - பகையரசரை வென்றடக்கிய வேற்படையையும், பொருவும் - நிகர்த்த, விழியை - கண்களையுடையாளை, எந் நாள் கண்டு மேவுவன் - எந்நாளில் கண்டு தழுவுவேன்; (எ - று.)

இது தலைமகன் நீடுநினைந்திரங்கற் றுறைபோலக் கூறப்பட்டது; இப் பொருட்கு, 'தளரிடையாய்' என்றது தோழியை எனக்கொள்க,

## குறிப்புப் பெருள்.

'விழியை யெந்நாட் கண்டு மேவுவன்' என்பதற்கு மறைக்கப்பட்ட கண்ணை யெந்நாளில் கண்டு தரித்திருப்பேன் என - நாணிக் கண்புதைத்தற் கேற்றவாறுங் கொள்க, இங்ஙனம் கூறவே தனத்தின் வெளிப்பாடும் விளங்கியது. (49)

மல்குங் கிரண மணிசெம்பொன் வாரி மருங்கிருபா
னல்குந் திரைவைகை நாடனெங் கோன்ரகு நாதன்முறைப்
புல்கும் பதியில் விசும்பிடை நீண்டு புகுதருமீ [தே.
னெல்குந் துடியிடை தோற்றுதென் றேவின் றொளிக்கின்ற

வெளிப்படைப் பொருள்.

(இ - ள்.) மல்கும் கிரணம் மணி-நிறைந்த கிரணங்களையுடைய மணிகளையும், செம்பொன்-செம்பொன்னையும், வாரி-வாரிக் கொண்டு, மருங்கு இருபால்-இருபக்கத்துக் கரைகளிலும், நல்கும்-இரைக்கின்ற, திரை - அலைகளையுடைய, வைகை நாடன் - வையைநதிசூழ்ந்த நாட்டை யுடையவனும், எம் கோன் - எம்மிறைவனுமாகிய, ரகுநாதன் - ரகுநாதசேதுபதியானவன், முறை புல்கும் பதியில் - மநுமுறைப்படி செங்கோல் செலுத்தி வாழும் ஊரின்கண், ஒல்கும் துடி இடை-துவளாநின்ற துடி யிடையை யுடையாளே, விசும்பிடை-ஆகாயத்தில், நீண்டு புகுதரும் மீன் - நீண்டு வருகிற மீனராசியானது, தோற்றுது என்றே - (நம்மழகுக்குத்தோற்றுக்) கட்புலனுக்குத் தோற்றுமல் மறையுமெனக் கருதியோ, இன்று ஒளிக்கின்றது - இப்பொழுது (உன் கண்கள்) மறைவது ; (எ - று.)

குறிப்புப் பொருள்.

'துடி யிடை தோற்றுதென்றே மீன் ஒளிக்கின்றது' என இயைத்து துடியிடைகண்ணுக்குப் புலப்படாதென்று துணிந்தோ மீனும் அவ்வாறு மறைவது என்றுரைப்பினும் பொருந்தும். மீன் - கண்.

"வள்ளைக் குழைபொரு கண்ணுக்குத் தோற்றம்பும் வாரியும்
கள்ளக் கயலு மிராசியின் மீனுங் கடைப்பட்டதே"

என்றார் பிறரும். இடை தோன்றுமை கண்டாறுதலால் தனத்தின் புறப்பாடுங் கண்டாறுதல் உய்த்துணர்க. (50)

மகக்கண்ணிற் சில மறையோரை வாழ்வித்து வான்கொணர்ந்து
சகக்கண்ணிற் சேர்த்த ரகுநாதன் றேவைச் சயிலமன்னீர்
முகக்கண்ணிற் காண்ட லரிதென்ப தோவிழி மூடியன்பா
லகக்கண்ணிற் காணப் பதிநோக் கினீர்நன் றறிவுமக்கே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மகக் கண்ணில் - யாக காரியங்களில், சீலம் - ஒழுகுதலையுடைய, மறையோரை - வேதியரை, வாழ்வித்து - வாழச் செய்து, வான் கொணர்ந்து - சுவர்க்க இன்பத்தைக் கொண்டுவந்து, சகக்கண்ணில் சேர்த்த- உலகத்திற் சேர்த்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தேவைச் சயிலம்

அன்னீர் - தேவமலையை யொப்பவரே, முகக்கண்ணின் - முகக்கண்ணினால், காண்டல் - காணுதல், அரிது என்பதோ - அருமையா மென்பது பற்றியோ, விழிமூடி - முகக் கண்ணைமூடி, அன்பால் - அன்பினால், அகக் கண்ணின் - மனக் கண்ணினால், காண் - (யோகிகள்) காண்பதற்குரிய, அப் பதி நோக்கினீர் - அந்த இறைவனை நோக்கினீர், உமக்கு அறிவு நன்று - உமக்கு அறிவானது அழகிது ; (எ - று.)

அகம் - மலை - தனம். கண் - முலைக்கண். பதி - இடம். மகம் - யாகம். கண் - ஏழனுருபு. வான் - இடவாகு பெயர்.

## குறிப்புப் பொருள்

'முகக்கண்ணிற் காண்ட லரிதென்பதோ விழிமூடி' என்றமையால் கண் புதைத்தமையும், 'அகக்கண்ணின் காணப்பதி நோக்கினீர்' என்றமையால் தனத்தின் புறப்பாடும் தோன்றுகின்றன. (51)

மலைவேலி வையம் புரந்தசெங் கோன்மனு ராசன்மனுக்
கலைநூ றெரிந்தவெங் கோன்ரகு நாதன் கரந்தைவெற்பிற்
றொலையா திருந்தெம் மனத்தூடு தோன்றுந் துயர்தொலைக்கக்
கொலைவே லிருந்தகை யாற்குறிப் பீர்மணிக் கொம்பினையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மலை வேலி வையம் புரந்த - மலையாகிய வேலி சூழ்ந்த நாட்டைக்காத்த, செங்கோல் - செங்கோலையுடைய, மனுராசன் - நரபதியும், மனு - மநுவினாற் செய்யப்பட்ட, கலை நூல் தெரிந்த - கலைகளையும் வேறு சாத்திரங்களையும் ஐயந்திரிபறவுணர்ந்த, எங்கோன் - எம் மிறைவனுமாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், கரந்தை வெற்பில் - கரந்தை மலையில், தொலையாது இருந்து - நீங்காதிருந்து, எம் மனத்தூடு தோன்றும் துயர் தொலைக்க - எமது மனத்தின்கண் ணுண்டாகின்ற துன்பத்தை நீக்கும் பொருட்டு, கொலை வேல் இருந்த கையால் - கொலைத்தொழிலையுடைய வேலிருந்த கையினால், மணிக் கொம்பினைக் குறிப்பீர் - அழகிய யானைக் கொம்பைப் பற்றுவீராக ; (எ - று.)

'மலைவேலி வையம்' என்றது மலை நாடு என்றபடி. 'கொலை வேல்' - கண், மணிக்கொம்பு - தனம்.

## குறிப்புப் பொருள்

'கொலை வேலிருந்த கையால்' என்றமையால் கண் புதைத்தலும், 'குறிப்பீர் மணிக் கொம்பினை' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (52)

தேசிகப் போதணி சண்பகக் காடு திருந்திழையார்
நாசியொப் பாமலர் வீரையர் கோன்ரகு நாதன்வரைப்
பாசிழைப் பூவை முகைக்கோங்கில் வேடன்கைப் பாணமுற்றாற்
காசினிப் பாலுனைப் பாலையென் பார்கலை கற்றவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தேசிகப் போது அணி சண்பகக்காடு - பொன்போலு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சண்பகமரச் சோலையானது, திருந்து இழையார் - திருத்தமாகிய ஆபரணங்களை யணிந்த மாதருடைய, நாசி ஒப்பு ஆம் - நாசிக்கு உவமையாகின்ற, அலர் - விசாலமாகிய, வீரையர் கோன் - வீரை நகரத்தார்க்கு இறைவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையினிடத்து, பாசு இழை பூவை - பசுமையாகிய பொன்னாபரணங்களை யணிந்த பெண்ணே, முகைக் கோங்கில் - கோங்கரும்பின் மீது, வேடன் கைப்பாணம் உற்றால் - வேடன் கையம்பு பட்டால், கலை கற்றவர் - நூல்களைக் கற்றஅறிஞர், காசினிப்பால் - உலகின்கண், உனை - உன்னை, பாலை என்பார் - பாலை நிலமென்றுசொல்லுவார்கள் ; (எ - று.)

முகைக் கோங்கு - தனம். வேடன் - வேடுவன். வேடன் கைப்பாணம் - தாமரை - கை. இப் பொருளில் வேள் தன் கைப்பாணம் எனப் பிரித்து மன்மதன் கை யம்பாகிய தாமரை மலரெனப் பொருளுரைத்துக் கொள்க. பாலை - இளம்பெண் - பாசிழை என்றமையால் பசும் பொன்னாபரண மென்றுரைக்கப்பட்டது. பூவை - நாகணவாய்ப் புள். இது மொழியாலுவமை.

## குறிப்புப் பொருள்

'வேடன் கைப்பாணம்' என்றமையால் கண்புதைத்தலும், 'முகைக் கோங்கு' என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றின. (53)

முகைகாட் டியமுன் றின் முல்லைநல் லார்தம் முகமதிவெண்
ணகைகாட் டியபுக லூர்த்தள வாய்ரகு நாதன்வரைத்
தகைகாட் டியசெவ் விளநீ ரிலம்புயஞ் சாரிலகிற்
புகைகாட் டியகுழ லன்போகி நீயும் புனலுலகே.

(இ - ள்.) முன்றில் முகை காட்டிய முல்லை - முற்றங்களில்உள்ள அரும்பெடுத்த முல்லைக்கொடிகள், நல்லார் தம் முகமதி - மாதருடைய முகமாகிய பூர்ண சந்திரனிடத்துள்ள, வெள்நகை காட்டிய - வெண்மையாகிய ஒளியையுடைய பல்லழகைக் காட்டுகின்ற, புகலூர் தளவாய் - புக

லூர்த் தளவாயாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலேயி லுள்ள, அகிற்புகை காட்டிய குழல் - அகிற்புகை பொருந்திய கூந்தலே யுடையாளே, தகைகாட்டிய - அழகைக் காட்டுகின்ற, செவ்விளநீரில் - செவ்விளநீர்களின்மேல், அம்புயம் சாரில் - தாமரைமலர்கள் பொருந் திலுல், நான் போகி - நான் இந்திரன், நீயும் புனலுலகு - நீயும் நீர்சூழ்ந்த மருதநிலம் போல்வாய் ; (எ - று.)

இளநீரில் என்பதற்கு இளநீர்போல எனவும், இளநீரோடு எனவும் உரைப்பினு மமையும். இளநீரும் தாமரையும் மருதநிலப் பொருள்களாத லால், இவ்வாறு கூறிஞன். வரைத்தகை காட்டிய செவ்விளநீர் எனினும் பொருந்தும், இந்திரனுக்கு மருதநில மாதலால் 'நான்போகி நீயும் புன லுலகு' என்ருன் செவ்விளநீர் - தனம். அம்புயம் - கை.

## குறிப்புப் பொருள்

'செவ்விளநீ ரிலம்புயஞ் சாரில்' என்றமையால் கண் புதைத்தலும் தனப் புறப்பாடும் ஒருங்கு தோன்றின. (54)

ஆடிய தோகையன் ஞர்முகம் போன்மதி யம்பொனெயில்
சூடிய காலேப் பதிரகு நாதன் சுரும்பில்வள
நீடிய பெண்ணைக் குரும்பைகண் டேன்மலர் நெய்தல்கண்டால்
வாடிய சிற்றிடை யீருமைப் போலு மணலுலகே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) ஆடிய தோகை அன்ஞர் - ஆடுகின்ற மயிலே யொத்தவராகிய மாதரது, முகம் போல் - முகத்தை நிகர்த்த, மதி - பூர்ணசந்திரனே, அம் - அழகாகிய, பொன் எயில் - பொன் மதிலானது, சூடிய - மேற்கொண்ட, காலேப் பதி - காலே நகரத்தையுடைய, ரகுநாதன் சுரும்பில் - ரகுநாத சேதுபதியின் மலேயின்மீது, வளம் நீடிய - வளமிகுந்த, பெண்ணைக் குரும்பை கண்டேன் - பனங் குரும்பைகளேப் பார்த்தேன், மலர் நெய்தல் கண்டால் - நெய்தற் பூக்களேயும் காண்பேஞயின், வாடிய சிற்றிடையீர் - வருந்துகின்ற சிற்றிடையை யுடையீரே, மணல் உலகு - நெய்தல் நிலம், உமைப்போலும் - உம்மை நிகர்க்கும் ; (எ - று.)

'ஆடிய தோகை' சாயலுக்குவமை. 'முகம் போல்' என்றதனுல், மதி பூர்ண சந்திரனேக் குறித்தது. பெண்ணைக் குரும்பை - தனம், நெய்தல் மலர் - கண், 'மதி அம்பொனெயில் சூடிய' என்றதனுல் மதில் சந்திர மண்டலத்தளவு முயர்ந்திருப்ப தென்ருயிற்று. பனேயும் நெய்த லும் நெய்தல் நிலத்துப் பொருள்களாதலால் இவ்வாறு கூறிஞன். மலர்

நெய்தல் என்பது நெய்தல் மலர் என மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது. அன்றி மலர்ந்த நெய்தல் எனினும் பொருந்தும். தனப் பொறையால் தேம்புதலால் 'வாடிய சிற்றிடை' எனப்பட்டது. 'பணைமுலைக்கே தேம்பற்றுடியிடை' என்றார் மேலோரும்.

## குறிப்புப் பொருள்

'மலர் நெய்தல் கண்டால்' என்றமையால் கண் புதைத்தலும், 'பெண்ணைக் குரும்பை கண்டேன்' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின, (55)

கொத்தூர் குழலியர் கண்டமொப் பாவெழில் கொண்டமுத்தீ
னத்தூர் கரந்தை ரகுநா யகன்செம்பி நாட்டுவரை
முத்தூர் மருப்பிற் கருவிளங் காணின் முளரிமல
ரொத்தூர் மதிமுகத் தீருமைக் கார்வெற் புலகென்பரே.

## வெளிப்படைப் பொருள்

கொத்து ஊர் குழலியர் - பூங்கொத்துகள் பொருந்திய கூந்தலை யுடைய மாதரது, கண்டம் ஒப்பு ஆ - கழுத்துக்கு உவமையாக, எழில்கொண்ட - அழகைக் கொண்ட, முத்து ஈன் - முத்துக்களை யீனுகின்ற, நத்து ஊர் - சங்குகள் தவழ்கின்ற, கரந்தை - கரந்தை நகரையுடைய, ரகுநாயகன் - ரகுநாத சேதுபதியின், செம்பி நாட்டு வரை-சோழ நாட்டு மலையில், முத்து ஊர் மருப்பின் - முத்துக்கள் பொருந்திய யானைக்கொம்பைக் கண்டாற் போல, கருவிளங் காணின் - கருவிளமலர்களையும் உம்மிடத்துக் கண்டால், முளரி மலர் ஒத்து - தாமரை மலரை நிகர்த்து, ஊர்மதி முகத்தீர் - கலைகள் நிறைந்த பூர்ண சந்திரன் போன்ற முகத்தை யுடையவரே, உமை - உம்மை, கார் - கருமையாகிய, வெற்பு உலகு என்பர் - குறிஞ்சிநில மென்று சொல்லுவர் மேலோர் ; (எ - று.)

கருவிளம் - காக்கணம் பூ. வெற்புலகு - மலை நிலம், 'வரை முத்தூர் மருப்பு' - மலையை நிகர்த்து முத்துவட மணிந்த தனம், கருவிளம் - கண். 'எழில் கொண்ட நத்து' எனவும் 'முத்தீன் நத்து' எனவும் இயைக்க. 'முளரிமல ரொத்தூர் மதிமுகத்தீர்' என்றது வேல் போலும் வாட்கண்கள் என்றார் போல்வது. இவ்வாறன்றி தாமரை மலரை நிகர்த்து உலகத்தாரால் மதிக்கப்பட்ட முகத்தை யுடையவரே எனினுமாம். முத்தூர் மருப்பும் கருவிள மலரும் குறிஞ்சி நிலப்பொருள்க ளாதலால் இவ்வாறு கூறினான்.

## குறிப்புப் பொருள்

'கருவிளங் காணின்' என்றமையால் கண் புதைத்தலும், 'முத்தூர் மருப்பின்' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (56)

தொடைகாட்டும் பூங்குழ லார்நடை போலிளந் தூவியன்ன
நடைகாட்டும் வைகையம் பூந்துறை யான்ரகு நாதன்வெற்பி
லிடைகாட்டு நூல்வெற் பிளமுலை காட்டு மிளங்கொடியீர்
படைகாட்டு மைவிழி கண்டுரைப் பேனிப் படியென்னவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தொடை காட்டும் பூ - தொடுக்கப்பட்ட மலர்களை யணிந்த, குழலார் - கூந்தலை யுடைய மாதரது, நடைபோல் - நடையைப் போல, இளந் தூவி அன்னம் - இளமையாகிய சிறகையுடைய அன்னப் பறவைகள், நடைகாட்டும் - நடத்தலைச் செய்கிற, வைகை அம் பூந்துறையான் - அழகிய வைகைத் துறையையுடையவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வெற்பில் - மலையில், இளங்கொடியீர் - இளங்கொடிபோல் வீரே, இடை நூற் காட்டும் - உமது இடையானது நூலினழகைக் காட்டாநின்றது, இளமுலை வெற்புகாட்டும் - இளமுலைகள் மலையினழகைக் காட்டாநின்றன, படை காட்டும் மை விழி கண்டு - வேலாயுதம் போன்ற மை விழியைப் பார்த்து, இப்படி யென்ன உரைப்பேன் - இப்படி யிருக்கின்றன வென்று சொல்லுவேன் ; (எ-று.)

தொடை காட்டும் பூ - பூமாலை. 'தொடைகாட்டும் பூங்குழலார்நடை போலிளந் தூவியன்னம் நடைகாட்டும்' என்றமையால் அன்னங்கள் மாதர் நடையை நோக்கித் தாமும் அவ்வாறு நடக்கக் கற்கின்ற என்றதாயிற்று. 'கற்றில கண்டன்ன மென்னடை' என்றார் மேலோரும். மை விழி - மை யெழுதிய கண். படைகாட்டு மை விழி - மை யெழுதியகண். படை காட்டு மை விழி என்பதனை படைகாட்டு உம் மை விழி எனப் பிரித்து, வேற் படையி னழகைக் காட்டுகின்ற உமது மைக்கண் எனலுமாம்.

## குறிப்புப் பொருள்

'இடைகாட்டு நூல்' என்றமையாலும், 'வெற்பிள முலைகாட்டும்' என்றமையாலும் இடையும் தனமும் வெளிப்படத் தோன்றுமாறும், 'மைவிழி கண்டு உரைப்பேன்' என்றமையால் கண்கள் புதைக்கப்பட்டிருக்கின்றமையும் வெளியாயின. (57)

*பூவளர் வாவிக் கமலமும் வீதியும் பொன்மனையு*
*மாவளர் தேவைப் பதிரகு நாதன் மணிவரைமேற்*
*கோவளர் தானத் தினங்கன்று சேர்கை குறித்தமைத்தீர்*
*காவளர் பூவைக் கரசுமைப் போலெவர் காசினிக்கே.*

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) பூவளர் வாவிக் கமலமும் - அழகு வளராநின்ற தடாகங்களி லுள்ள தாமரை மலர்களிலும், வீதியும் - தெருக்களிலும், பொன்மனை யும் - பொன்னாற் சமைக்கப்பட்ட வீடுகளிலும், மா வளர் - மா வளராநின்ற, தேவைப்பதி - தேவை நகரத்துக் கிறைவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேது பதியின், மணி வரைமேல் - அழகிய மலையின்மீது, கோ வளர் தானத்தின் - பசு இருக்கு மிடத்தில், அம் கன்று சேர்கை - அழகிய கன்றும் சேர்ந்திருத் தலை, குறித்து அமைத்தீர் - கருதி அவ்வாறே அமைத்தீர், (ஆதலால்) காவளர் பூவைக் கரசு - சோலையில் உறைகின்ற பூவை போல்வாளே, காசினிக்கு - உலகத்தில், உம்மைப்போல் எவர் - உம்மைப்போல் அறிவுடையார் யாவர் உளர்; (எ - று,)

காவளர் பூவைக் கரசு - கற்பகச் சோலையி லுறைகின்ற பூவை என வும், இந்திரணி எனவும் பொருள் கோடலுமமையும், கோவளர்தானம் கோதானமெனக் கொண்டு, கன்றுடனே கோதானஞ் செய்யவேண்டு மெனக் குறித்தமைத்தீர் என வுரைத்தலு மொன்று, கன்றுடன் கூடிய கோதானஞ் செய்தவர் இந்திரபத மடைவரென்பது நூற்றுணிபாதலால் இவ்வாறு கூறப்பட்டது, மா என்பது பல பொருள் குறித்த வொருசொல் லாதலால் கமலத்துக் கேற்பத் திருமகள் எனவும், வீதிக்கேற்ப அழகு என வும், மனைக்கேற்பச் செல்வம் எனவும் பொருளுரைக்க. கோவளர் தானம் - கண்ணிருக்கும் இடம். அம் கன்று சேர்கை - அழகிய வளையல் பொருந்திய கை. கோ - கண்,

## குறிப்புப் பொருள்

'கோவளர் தானத் தினங்கன்று சேர்கை குறித்தமைத்தீர்' என்றமை யால் கண் புதைத்தலும் தனப்புறப்பாடும் தோன்றின. (58)

*அறங்காவல் கொண்ட மனுமுறை யாலணி நாவசைந்து*
*கறங்கா மணிமுன்றி லான்ரகு நாதன் கரந்தையன்னீ*
*ருறங்காத வெங்கண் மதகரி பாயநெஞ் சூடுருவிப்*
*புறங்காணி லார்பொறுப் பார்பிணை பாயப் பொறுக்கினுமே.*

## வெளிப்படைப் பொருள்

அறம் காவல் கொண்ட - தருமத்தைக் காத்தலை மேற்கொண்ட, மனு முறையால் - மநு முறைமையால், அணி நா அசைந்து கறங்கா - அழகிய நாவசைந்து ஒலிக்காத, மணி - ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருக்கிற, முன்றிலான் - முற்றத்தை யுடையவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், கரந்தை அன்னீர் - கரந்தை நகரத்தை யொப்பவரே, பிணைபாயப் பொறுக்கினும் - பெண்மான் பாயப் பொறுத்திருந்தாலும், உறங்காத - தாங்காத, வெங்கண் - கொடுங்கண்மை யுள்ள, மதகரி பாய - மதயானை பாய்தலால், நெஞ்சு ஊடுருவி - (அதன் கொம்புகள்) என் மார்பிற்பட்டு உருவிச்சென்று, புறங்காணில் - முதுகில் காணப்பட்டால், ஆர் பொறுப்பார்-யாவர் பொறுக்கவல்லார்; (எ - று,)

வெங்கண் மதகரி - விருப்பத்தைத் தருகிற கண்ணை யுடைய தனம். பிணை - கண். 'நெஞ்சூடுருவிப் புறங்காணில்' என்றதற் கேற்பக் கொம்பு வருவித் துரைக்கப்பட்டது. 'நாவசைந்து கறங்கா மணிமுன்றிலான்' என்றது அவனது நாட்டில் அநீதி செய்வாரில்லை யென்பதை விளக்குதற்கு. ஒருவரும் பொறுக்கமாட்டா ரென்றற்கு ஆர் பொறுப்பா ரென்றார்.

## குறிப்புப் பொருள்

'பிணைபாயப் பொறுக்கினும்' என்றமையால் கண் புதைத்தலும், 'வெங்கண் மதகரி பாயநெஞ் சூடுருவிப் புறங்காணி லார்பொறுப்பார் என்றமையால் தனப் புறப்பாடுந்தோன்றின. (59)

நங்காம தேனு வெனவந்த கார்செம்பி நாடனுயர்
செங்காவி யங்குடை யான்ரகு நாதன் சிலம்பின்மிக்க
வெங்காம வெய்ய விடாய்க்கிள நீர்தந்து வெவ்விடத்தை
யங்காம வல்லிநல் லீர்மறைத் தீர்நன் றறிவுமக்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நம் காமதேனுவென வந்த கார் - நம் காமதேனுவென்று சொல்லும்படி வந்த மேகம், செம்பி நாடன் - சோழ நாடன், உயர் - உயர்ந்த, செம் அம்காவி குடையான் - செவந்த அழகிய காவிக்குடையை யுடையவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) சிலம்பில் - மலையில், மிக்க - மிகுந்த, வெங்காமம் - வெவ்விய காம மாகிய, வெய்ய விடாய்க்கு - கொடிய விடாய்க்கு, இளநீர் தந்து - இளநீர்களைக் கொடுத்து, வெவ் விடத்தை - கொடிய விஷத்தை, மறைத்தீர் - ஒளித்தீர், (ஆதலால்) அம்

காமர் வல்லி நல்லீர் - அழகிய காமவல்லி போன்ற அழகுடையவரே, உமக்கு அறிவு நன்று - உமக்கு அறிவானது அழகிது; (எ - று.)

விடாய் - தாகம். காமவல்லி - கற்பகத் தருவிற் படர்கொடி. இளநீர் இளநீர் போன்ற தனம். விடம் - விஷம்போன்ற கண்.

## குறிப்புப் பொருள்

'வெவ்விடத்தை யங்காமவல்லி நல்லீர் மறைத்தீர்' என்றமையால் கண் புதைத்தலும், 'மிக்க வெங்காம வெய்ய விடாய்க்கு இளநீர் தந்து' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (60)

நிலையேந்து மாளிகை மாளிகை மாதர்க ணெஞ்சமதிக்
கலையேந்துந் தேவை ரகுநாதன் வெற்பில்வெங் கள்ளைவரிச்
சிலையேந்தும் வாணுத லீரங்கை யேந்துஞ் செயலிதென்னோ
விலையேந்து மாணிக்க வள்ளமிங் கேவைத்து மெய்ம்மறந்தே.

## வெளிப்படைப் பொருள்.

(இ - ள்.) நிலை ஏந்தும் மாளிகை - நிலைகளைக் கொண்ட மாளிகைகளும், மாளிகை மாதர்கள் நெஞ்சம் - அம் மாளிகைகளி லுள்ள மாதர்களுடைய மனமும், மதிக் கலை யேந்தும் - மதிக் கலையைத் தாங்குகின்ற, தேவை ரகுநாதன் - தேவை நகரத்தி லுள்ள ரகுநாத சேதுபதியின், வெற்பில் - மலையிலுள்ள, வரிச் சிலை யேந்தும் வாள் நுதலீர்-கட்டமைந்த வில்லினழகைத் தாங்கிய ஒளிபொருந்திய நெற்றியை யுடையவரே, விலை யேந்தும் மாணிக்க வள்ளம் - விலையுயர்ந்த மாணிக்கக் கிண்ணங்களை, மெய்ம் மறந்து இங்கே வைத்து - உடம்பு மறந்து இவ்விடத்தில் வைத்துவிட்டு, வெம் கள்ளை - விரும்புதற்குரிய மதுவை, அங்கை ஏந்தும் செயல் இது - அங்கையிலேந்தி நிற்குஞ் செய்கையாகிய இது, என் - யாதென்று சொல்லப்படுவது; (எ - று.)

மாளிகைக்கு மதிக் கலை - சந்திர கண்டம், மாதர்கள் நெஞ்சத்துக்கு மதிக் கலை - அறிவு நூல்கள். கள் - கள்ளைப்போலு மயக்குகிற கண். அங்கை யேந்துஞ் செயல் - கையாற் கண் புதைத்தல். மாணிக்க வள்ளம் - மாணிக்கக் கிண்ணம்போன்ற தனம். மாணிக்கக் கிண்ண மிருக்கக் கள்ளைக் கையி லேந்துதல் யாதுக்கு என்பது கருத்து. என்னோ என்பதில் ஓ - அசை.

## குறிப்புப் பொருள்

'வெங்கள்ளை வரிச் சிலை யேந்தும் வாணுதலீ ரங்கை யேந்துஞ் செயலிதென்னோ' என்றமையால் கண் புதைத்தலும், 'விலை யேந்து மாணிக்க

"வள்ள மிங்கே வைத்து மெய்ம் மறந்தே" என்றமையால் தனப் புறப் தோன்றின, (61)

பொற்பணை வேழம் புரவிவெள் ளோதிமம் பூவையர்தோ
ணற்பணை மேவுங் கரந்தையர் கோன்ரகு நாதன்மணி
வெற்பணை வாழ்வெம தென்றோ மறைத்துமை வேலைவளர்
கற்பணை தோகை மயிலே வரைவளங் காட்டியதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வளர் கற்பு அணை தோகை மயிலே - வளராநின்ற கற்பை யுடைய தோகைமயில் போல்பவளே, பொற்பு அணை வேழம் - அழகு பொருந்திய யானையும், புரவி - குதிரையும், வெள் ஓதிமம் - வெண்மை யாகிய அன்னமும், பூவையர் தோள் - மாதருடைய தோள்களும், நல் பணை மேவும் - நல்ல பணையைப் பொருந்துகின்ற, கரந்தையர் கோன் - கரந்தை நகரத்தார்க் கிறைவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மணி வெற்பு அணை வாழ்வு - அழகிய மலையைச் சேர்ந்து வாழும் வாழ்வு, எமது என்றோ, எமதென் றுணர்த்தும் பொருட்டோ, மை வேலை மறைத்து - கருங்கடலை யொளித்து, வரைவளங் காட்டியது - மலைவளத்தை யெனக்குக் காட்டி னது ; (எ - று.)

வேழம், புரவி, ஓதிமம், பூவையர் தோள் என்பவற்றுடன் நற்பணை மேவும் என்பதனை யிசைத்து, வேழம் நல்ல பெருமையைப் பொருந்தும் எனவும், புரவி நல்ல குதிரைப் பந்தியைப் பொருந்து மெனவும், ஓதிமம் நல்ல வயல்களைப் பொருந்து மெனவும், பூவையர் தோள் நல்ல மூங்கிலி னழகைப் பொருந்து மெனவும் பொருளுரைத்துக் கொள்க. பண்ணை என் பது பணை என்றாயது. மை வேலை - கருங்கடல் போன்ற கண். மறைத்தல் - புதைத்தல். வரைவளம் - மலையி னழகைக் கொண்ட தனம்,

## குறிப்புப் பொருள்

'மறைத்து மைவேலை' என்றமையால் கண் புதைத்தலும், 'வெற் பணை வாழ்வெம தென்றோ வரைவளங் காட்டியதே' என்றமையால் தனப் புறப்பாடுந் தோன்றின. (62)

விரைக்குள் வந்தசிந் தாமணி நீதி விளங்கவெழு
பாரைப் புரந்த ரகுநாதன் வெற்பிற் பகலில்விண்சேர்
தாரைக் குலம்புவி காணவொண் ணுதெனுந் தன்மைகொண்டோ
வாரைச் சுமந்த தனத்தாய்நின் செங்கை மறைக்கின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(**இ - ள்.**) *வீரைக்குள் வந்த-வீரை நகரத்தில் வந்த, சிந்தாமணி - சிந்தாமணி, நீதி விளங்க - நீதிநெறி விளங்கும்படி, எழு பாரைப் புரந்த - சப்தத்வீபங்களையுங் காத்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வெற்பில் - மலையினுள்ள, வாரைச் சுமந்த தனத்தாய் - கச்சை யேந்திய கொங்கைகளையுடையாளே, பகலில் - பகற்காலத்தில், விண்சேர் - ஆகாயத்திற் பொருந்திய, தாரைக்குலம் - விண்மீனின் கூட்டத்தை, புவி காண வொண்ணாது எனும் - உலகத்தார் காண வொண்ணா தென்கிற, தன்மை கொண்டோ - மேலோர் வாக்கியத்தின் நியதியை மேற்கொண்டோ, நின் செங்கை மறைக்கின்றது - உன் செங்கைகள் (அவற்றை) மறைப்பது ; (எ-று.)*

*தாரை விண்மீன் - அது விண்ணிடத்து மீன ராசியை யுணர்த்தி அது கண்ணை யுணர்த்திற்று. விண்மீனைப் பகலிற் காண்போர்க்கு மரணம் நெருங்கி விட்டதென்னும் நூல் வழக்குண்மையான் 'தாரைக் குலம்புவி காணவொண் ணாதெனுந் தன்மை கொண்டோ நின் செங்கை மறைக்கின் றதே' என்றான்.*

## குறிப்புப் பொருள்

*'தாரைக்குலம் புவிகாணவொண் ணாதெனுந் தன்மைகொண்டோ நின் செங்கை மறைக்கின்றது' என்றதனால் கண் புதைத்தமையும், 'வாரைச் சுமந்த தனத்தாய்' என்றதனால் தனம் வெளிப்பட்டமையும் அமைந்தன.* (63)

வழியும் பிரசமலர் முல்லையான் வையமே ழும்பொய்யும்
பழியுந் தவிர்த்த ரகுநாத சேது பதிவரையீர்
மொழியுங் குவலயம் பாணியி னலின்று மூடவந்து
சுழியுந் திரையுங் குமிழியுந் தோன்றித் துயர்செய்யுமே.

## வெளிப்படைப் பொருள்

(**இ - ள்.**) *வழியும் பிரசம் - வழிந்தோடுகின்ற தேனையுடைய, மலர் முல்லையான் - முல்லைமலர் மாலையை யுடையவன், வையம் ஏழும் - உலக மேழினு முள்ள, பொய்யும் பழியும் - பொய்யினையும் பழியினையும், தவிர்த்த - நீக்கிய, ரகுநாத சேதுபதி வரையீர் - ரகுநாத சேதுபதியின் மலையி லுள்ளவரே, மொழியும் குவலயம் - சொல்லப்பட்ட உலகமானது, பாணியினால் இன்று மூட-பிரளய வெள்ளத்தினால் இப்பொழுது மூடப்படுதலும், சுழியும் - நீர்ச்சுழியும், திரையும் - அலைகளும், குமிழியும் - நீர்க்*

குமிழிகளும், வந்து தோன்றி - வந்து காணப்பட்டு, துயர் செய்யும் - (எனக்குத்) துன்பத்தைச் செய்யாநின்றன ; (எ - று.)

குவலயம் - கருங்குவளை - (கண்). பாணி - கை. சுழி - உந்தி. திரை - வயிற்று மூவிரேகை (மடிப்பு). குமிழி - தனம்.

## குறிப்புப் பொருள்

'குவலயம் பாணியினு லின்றுமூட' என்றமையால் கண் புதைத்தலும், 'அழியுந் திரையுங் குமிழியுந் தோன்றித் துயர் செய்யுமே' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (64)

சத்தந் தெளிக்குங் கலைவாணர் சங்கத் தமிழ்க்குருகிச்
சித்தங் களிக்கும் ரகுநாதன் றேவைச் சிலம்பின்மணி
முத்தம் பதிக்கும் பவளச்செவ் வாயிள மூரன்மின்னே
யத்தந் தனக்குக் கடல்பொருந் தாதென்ப ராய்ந்தவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ ள்.) சத்தம் தெளிக்கும் - சப்தங்களைத் தெளிவிக்கிற, கலைவாணர் - வித்வான்களுடைய, சங்கத் தமிழ்க்கு உருகி - சங்கத் தமிழ்ப்பாடல்களுக்குக் கரைந்து, சித்தங் களிக்கும் - மனங் களிக்கிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தேவைச் சிலம்பில் - தேவை மலையி லுள்ள, மணிமுத்தம் பதிக்கும் - அழகிய முத்துகளைப் பதிக்கப்பெற்ற, பவளச் செவ்வாய் - பவளம் போன்ற செவ்வாயினையும், இளமூரல் - புன்சிரிப்பினையு முடைய, மின்னே - மின்னற் கொடியை நிகர்த்தவளே, ஆய்ந்தவர் - பல நூல்களையும் ஆராய்ந்தவர், அத்தம் தனக்கு - ஆபரணம் முதலிய பொருள் வைப்பதற்கு, கடல் பொருந்தாது - (செப்புப் பொருந்துதலன்றி) கடலானது பொருந்தாது, என்பர் - என்று சொல்லுவர் ; (எ - று,)

'அத்தந் தனக்குக் கடல் பொருந்தாது' என்றமையால் செப்புப் பொருந்தும் என்பது பெறப்படும். செப்பு - தனம். முத்தம் - முத்துப் போலும் பல். அத்தம் - கை. கடல் - கண்.

## குறிப்புப் பொருள்

'அத்தந் தனக்குக் கடல்பொருந் தாதென்ப ராய்ந்தவரே' என்றமையால் கண் புதைத்தலும், தனப் புறப்பாடும் ஒருங்கு தோன்றின, (65)

முன்னீர் சொரிமுத்த மாணிக்க ராசி முகந்தருவி
நன்னீர் சொரிகந்த மாதனத் தான்ரகு நாதன்வரைப்

பொன்னீர் பவளத் தமுதெமக் கீயும் பொழுதினஞ்சு
தன்னீர் தருமென வோமறைத் தீர்செழுந் தாமரைக்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) முன்னீர் சொரி முத்தம் ராசி - கடல் சொரிகின்ற முத்தின் தொகுதியையும், மாணிக்க ராசி - மாணிக்கத் தொகுதியையும், அருவி நல் நீர் - அருவி யாறுகளின் நல்ல நீரானது, முகந்து சொரி - மொண்டு சொரி கின்ற, கந்தமாதநத்தான் - கந்தமாதநத்தை யுடையவனாகிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையி லுள்ள, பொன் - திருமகளை நிகர்த்த வரே, நீர் - நீர், பவளத்து அமுது - பவளக் கிண்ணத்தி லுள்ள அமிர் தத்தை, எமக்கு ஈயும் பொழுதில் - எமக்குக் கொடுக்குங் காலத்தில், நஞ்சு - நஞ்சானது, தன்னீர் தரும் எனவோ - தன் கொடிய குணத்தைக் கொடுக்கு மென்று நினைத்தோ, செழுந் தாமரைக்கு - செழுமையாகிய தாமரை மல ரால், மறைத்தீர் - (அதை) மூடினீர் ; (எ - று.)

பொன்னீர் - பொன் போல்பவர் எனினும் பொருந்தும். பவளத்த முது - அதராமிர்தம். நஞ்சு - கண். செழுந்தாமரை - கை. எல்லா நீர்க்கும் ஆதியாதலால் கடல் முன்னீர் எனப்பட்டது. அன்றி, முந்நீர் எனப் பாட மோதி மூன்று நீரையுடைய தென்பாரு முளர். முந்நீர் - ஆற்றுநீர், ஊற்று நீர், வேற்றுநீர் என்பன. ராசி முத்தத் தோடும் கூட்டி யுரைக்கப்பட்டது.

## குறிப்புப் பொருள்

'பொன்னீர் பவளத் தமுதெமக் கீயும் பொழுதினஞ்சு, தன்னீர் தரு மென வோமறைத் தீர்செழுந் தாமரைக்கே' என்றமையால் கண் புதைத்த லும், தனப் புறப்பாடும் தோன்றின. (66)

மானார் விழியென மைந்நீலம் பூத்த வயற்புகலூர்
ஞான கரனிசை சேர்தள வாய்ரகு நாதன்வரைக்
கானார் கருங்குழ லீர்சுற வார்கடல் கைப்படுத்தீ
ரானல் விடுத்ததென் னீர்வரை யீழத் தகலிடமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மானார் விழியென - மாதருடைய கண்கள் போல, மை நீலம் பூத்த - கருங்குவளை மலர்கள் பூத்த, வயல் - கழனிகள் சூழ்ந்த, புகலூர் - புக லூரிலுள்ள, ஞானகரன் - ஞானத்திற்குப் பிறப்பிடமாயுள்ளவன், இசை சேர் தளவாய் - புகழ் பொருந்திய தளவாய், ரகு நாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வரை - மலையி லுள்ள, கான் ஆர் - இயற்கை மணமும் செயற்கை

மணமு மண்மந்த, கருங்குழலீர் - கரிய கூந்தலை யுடையவரே, சுறவு ஆர் கடல் கைப்படுத்தீர் - சுறுமீன்கள் பொருந்திய கடலைக் கைவச மாக்கினீர், ஆனல் - ஆயின், நீர் - நீர், வரை - மலைகள் சூழ்ந்த, ஈழத்து அகல் இடம் - ஈழ நாட்டின் அகன்ற இடத்தை, விடுத்தது என் - (கைப்படுத்தாது) விடுத்ததற்குக் காரணம் யாது ; (எ - று.)

ஞானஆகரன் எனப் பிரிக்க. இயற்கை மணம் - இயல்பாகவே யுண்டாயிருக்கு மணம், செயற்கை மணம் - மயிர்ச் சாந்து மலர் முதலியவற்று லுண்டாகு மணம். சுறவு - மகரக்குழை, கடல் - கண், கைப்படுத்தல் - கையாற் புதைத்தல், வரை - தனம், ஈழம் - பொன் (தேமல்). 'சுறவார்கடல்' என்பதற்கு மகரக்குழையைச் சென்று தொட்டு மீளுகிற கண்ணென்று பொருள் கூறுக.

## குறிப்புப் பொருள்

'சுறவார்கடல் கைப்படுத்தீர்' என்றமையால் கண் புதைத்தலும், 'விடுத்ததென் னீர்வரை யீழத் தகலிடமே' என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றின. (67)

நல்லார் நகைக்கு மனைவளர் தாளி நனைமலரு
மல்லார் கரந்தை ரகுநாதன் றேவை வரையின்மணிக்
கல்லார் கனங்குழை யீர்மருண் டீரின்று கண்டசர
மெல்லார் வரிவளைக் கைபுனைந் தீர்குரு கெய்தவுமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) நல்லார் நகைக்கும் மனை - மாதர் பெருங் களிப்பாற் சிரித்து விளையாடுகின்ற வீடுகளில், வளர் - விருத்தி யடைய நிற்கிற, தாளி - தாளிக் கொடிகளின், நனை - அரும்புகள், மலரும் - மலர்கின்ற, மல்ஆர் - வளம் பொருந்திய, கரந்தை - கரந்தை நகரை யுடைய, ரகு நாதன் - ரகுநாத சேது பதியின், தேவை வரையில் - தேவை மலையி லுள்ள, மணிக்கல் ஆர் கனங் குழையீர் - இரத்தினக் கற்கள் இழைத்த கனத்த காதணியை யுடையவரே, இன்று மருண்டீர் - இன்று மன மருண்டீர், (ஏனெனின்) எல் ஆர் - ஒளி நிறைந்த, வரிவளைக்கை - விரலிறையோடு கூடி வளைதலை யுடைய கையின் கண், குருகு எய்தவும் - வளையல் பொருந்தியிருக்கவும், கண்ட சரம் புனைந்தீர் - (அதனிடத்து) கண்ட சரத்தை யணிந்தீர் (ஆதலால்) ; (எ - று.)

கண்டசரம் - மாதர் கழுத்தி லணியப்படுவதோ ராபரணம், இதைக் கை புனைந்ததினல் மருண்டீ ரென்றான். கண்ட சரம் - பார்க்கும் இயல்புள்ள

பாணம் (கண்), குருகு - சக்ரவாகப் புள், (தனம்). எய்தவும் - வெளியா யிருக்கவும். கை புனைதல் - கையாற் புதைத்தல்.

## குறிப்புப் பொருள்

'கண்டசர மெல்லார் வரி வளைக்கை புனைந்தீர்' என்றமையால் கண் புதைத்தலும், 'குருகெய்தவும்' என்றமையால் தனப் புறப்பாடும் தோன் றின. (68)

ஆரியர் போற்று மிராமேசர் தாளிணைக் கன்புவைத்த
சூரியன் வீரையர் கோன்ரகு நாதன் சுரும்பிலின்று
கூரிய வாளிரண் டங்கையி லேந்திய கொங்கையிளங்
காரிகை யீருமை மாதங்கி யாரென்பர் கண்டவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஆரியர் போற்றும் - அறிவுடையோர் வணங்குகின்ற, இராமேசர் - இராமேச்சுரருடைய, தாளிணைக்கு - திருவடி யிணைக்கு, அன்பு வைத்த - அன்பை வைத்த, சூரியன் - ஞான சூரியன், வீரையர் கோன் - வீரை நகரத்தார்க் கிறைவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) சுரும்பில் - மலையில், இன்று - இப்பொழுது, கூரிய வாள் இரண்டு - கூர்மை யாகிய இரண்டு வாள்களை, அங் கையில் ஏந்திய - அங்கையிற் றாங்கிய, கொங்கை யிளங் காரிகையீர் - இளங் கொங்கைகளை யுடைய காரிகையாரே, உமை கண்டவர் - உம்மைப் பார்த்தவர், மாதங்கியார் என்பர் - மாதங்கிய ரென்று சொல்லுவர்; (எ - று.)

மாதங்கியார் - வாள்கொண்டு சுழன்று ஆடுபவள், வாள் - கண் காரிகை - அழகு.

## குறிப்புப் பொருள்

'கூரிய வாளிரண் டங்கையி லேந்திய' என்றதனால் கண் புதைத்தமை யும், 'கொங்கை யிளங் காரிகையீர்' என்றதனால் தனத்தின் வெளிப்பாடும் பெறப்பட்டன. (69)

வாளும் பரசும் வயிரமு மேகொண்டு மாற்றலரை
யாளுந் தனிவடி வேல்ரகு நாத னணிவரையீர்
தோளுங் கரும்பு மெனதா ருயிர்வந்து சூறைகொள்ள
நீளுங் கணைகொண்டு நின்றாலெவ் வாறுயிர் நிற்கின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வாளும் - வாளையும், பரசும் - மழுவையும், வயிரமும் - வஜ்ராயுதத்தையும், கொண்டு - கைக்கொண்டு, மாற்றலரை - பகைவரை, ஆளும் - அடக்கி ஆளுகின்ற, தனி - ஒப்பற்ற, வடி வேல் - வடித்த வேற் படையை யுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், அணி வரையீர் - அழகிய மலையை யுடையவரே, தோளும் கரும்பும் - உன் தோள்களும் மன் மதனது கருப்பு வில்லும், வந்து எனது ஆர் உயிர் சூறை கொள்ள - வந்து எனது அரிய உயிரைச் சூறை யாடாநிற்க, (அதன் மேலும்) நீளுங் கணை கொண்டு நின்றால் - நீண்ட அம்புகளைக் கொண்டு நின்றால், உயிர் நிற்கின் றது எவ்வாறு - எனது உயிர் நிற்பது எவ்வண்ணம்; (எ - று.)

தோள் இவ்விடத்துத் தனத்தை யுணர்த்திற்று. கரும்பு - அதரம், கணை - கண், தோள்களைக் காண்டலும் விரக மதிகரிக்கையால் 'தோளுங் கரும்பு மெனதா ருயிர்வந்து சூறைகொள்ள' என்றான்.

## குறிப்புப் பொருள்

'நீளுங் கணைகொண்டு நின்றாலெவ் வாறுயிர் நிற்கின்றதே' என்றமை யால் கண் புதைத்தலும், 'தோளுங் கரும்பு மெனதா ருயிர்வந்து சூறை கொள்ள' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. கரும்பு - தொய் யிலுமாம். (மதன் வில்) (70)

இலையே தழைத்துக் கொழுங்கனல் பூத்திகல் காய்த்துவெய்ய
கொலையே பழுத்தசெவ் வேல்ரகு நாதனைக் கூடலர்போன்
மலையே யெனக்களித் தீர்கட லேறுகை வாய்த்துநின் றீர்
சிலையே படைத்த நுதலீர் திகைத்ததென் சிந்தனையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சிலையே படைத்த நுதலீர் - வில்லின் றன்மையையே கொண்டிருக்கிற நெற்றியை யுடையவரே, இலை தழைத்து - முத்தலை யாகிய இலைகள் செழித்து, கொழுங்கனல் பூத்து - கொழுமையாகிய நெருப்பென் கிற பூவைப் பூத்து, இகல் காய்த்து - வலிமையாகிய காயைக் காய்த்து, வெய்ய கொலை பழுத்த - கொடிய கொலைத் தொழிலாகிய பழம் பழுத்த, செவ்வேல் - செவந்த வேலையுடைய, ரகுநாதனை - ரகுநாத சேதுபதியை, கூடலர்போல் - சேராதவர் போல, எனக்கு மலை அளித்தீர் - எனக்கு மலை நிலத்தைக் கொடுத்து, கடல் ஏறுகை வாய்த்து நின்றீர் - கடலேறிச் செல் வதைப் பொருந்தி நின்றீர், (ஆதலால்) என் சிந்தனை திகைத்தது - என்மனம் பிரமித்தது; (எ - று.)

இலைதழைத்தல் முதலியவற்றை வேல மரத்துக்கும் பொருத்தி யுரைத்துக்கொள்க. செவ்வேல் என்றார் பகைவ ருதிரந் தோய்ந்து செவந்திருத்தலால். மலை - தனம். கடல் - கண். ஏறு கை - ஏறிய கை.

## குறிப்புப் பொருள்

'கடலேறு கைவாய்த்து நின்றீர்' என்றமையால் கண் புதைத்தலும், 'மலையே யெனக்களித்தீர்' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின.

நெய்வாய்த் திகன்மன்னர் சோரியின் மூழ்கி நிணமருந்து
மைவாய்த்த வேற்படை யான்ரகு நாதன் மணவையன்னீர்
மெய்வாய்த்த கோல வனமுலை யார்தம்மை விட்டுவளைக்
கைவாய்த்த மைவிழி யாருடன் சேர்தல் கடனல்லவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நெய்வாய்த்து - நெய் பூசப்பெற்று, இகல் மன்னர் சோரியில் மூழ்கி - பகை யரசருடைய உதிரத்தில் முழுகி, நிணம் அருந்தும் - அவரது கொழுப்பை உண்ணுகின்ற, மை வாய்த்த - கொடுமை யமைந்த, வேல் படையான் - வேலாயுதத்தை யுடையவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மணவை யன்னீர் - மணவை நகரை நிகர்த்தவரே, மெய்வாய்த்த - உண்மை பொருந்திய, கோலம் - சந்தனகோல மெழுதிய, வனம் - அழகாகிய முலையார் தம்மைவிட்டு - தனங்களையுடைய குலமாதரை விட்டு, வளைக்கை வாய்த்த - வளையல்களை யணிந்த கையை யுடைய, மை விழியாருடன் - அஞ்சன மெழுதிய கண்களையுடைய பொதுமாதருடன், சேர்தல் - கூடுதல், கடன் அல்ல - முறைமையன்று ; (எ - று.)

மை - கொலை எனினுமாம். வளைக்கை வாய்த்த என்பதற்கு ஆடவரை வளைத்தற் றொழிலமைந்த என்றலும் ஒன்று. 'மெய்வாய்த்த கோலவன முலையார்' எனக் குலமாதரைக் கூறினமையின் 'மைவிழியார்' என்றது பொதுமாதரை ; இது 'மைவிழியார் மனையகல்' என்று மூதறிவாட்டியாகிய ஔவை வாக்கானும் இனிது விளங்கும். 'வேற்படையான்' என்பதற்கு வேலேந்திய சேனையை யுடையவன் எனினுமாம்.

## குறிப்புப் பொருள்

'கோல வனமுலையார் தம்மைவிட்டு' என்றதனால் தனம் வெளிப்பட்டமையும், 'வளைக்கை வாய்த்த மைவிழியாருடன் சேர்தல்' என்றதனால் கண் புதைத்தமையும் வெளியாயின. 'வளைக்கை வாய்த்த மைவிழியாருடன் சேர்தல்' என்பதற்கு வளையலை யணிந்த கைகள் மையெழுதிய கண்களுடன் சேர்தல் எனப் பொருள் உரைக்க. (72)

செம்பேந் தியமதில் வீரையர் கோன்முச் செகமனைத்து
நம்பேந்தி வாழு மனுமுறை யான்ரகு நாதன்வெற்பி
லம்பேந்தி நிற்பதுங் கண்டே னினியுந் தமங்கையினுற்
கொம்பேந்தி நின்றென்னிடையூறு தீரக் குறிக்கொள்ளுமே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) செம்பு ஏந்திய மதில் - செம்பினலாகிய மதில் சூழ்ந்த, வீரையர்கோன் - வீரைநகரத்தார்க்கிறைவன், முச்செகம் அனைத்தும் - மூன்றுலக முழுவதும், நம்பு ஏந்தி வாழும் - நம்புதலுடையனவாகி வாழ்தற் குரிய, மனுமுறையான் - மநுமுறையை யுடையவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வெற்பில் - மலையில், உம் தம் அங்கையினுல் - உமது அகங்கையால், அம்பு ஏந்தி நிற்பதும் கண்டேன் - அம்புகளைத் தாங்கி நிற்பதையுங் கண்டேன், இனி கொம்பு ஏந்தி நின்று - இனியானைக் கொம்புகளையுந் தாங்கி நின்று, என் இடையூறு தீர - என் துன்பமொழியும் படி, குறிக்கொள்ளும் - நினைப்பீராக ; (எ - று.)

அம்பு - அம்புபோலுங் கண், கொம்பு - யானைக் கொம்புபோலுந்தனம். மனுமுறைப்படி செங்கோல் செலுத்துதலால் செகமனைத்தும் நம்புதற் குரிமை யுண்டாயிற்று. குறிக்கொள்ளுதல் - குறிக்கொண்டு காத்தல் எனினு மமையும்.

குறிப்புப் பொருள்

'அங்கையினுல் அம்பேந்தி நிற்பது' என்றதனுல் கண்புதைத்து நிற்றலும் 'கொம்பேந்தி நின்றென் னிடையூறு தீரக் குறிக்கொள்ளுமே' என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றின. (73)

பாவுக் கிசையும் பெயரே புனைந்துமெய்ப் பாவலர்தந்
நாவுக் கிசையும் பெரும்புக ழான்ரகு நாதன்வரைக்
கோவுக் கிறையின் றளித்தீ ரெமக்குக் கொடுத்தவிரு
மாவுக் கிறையிலி செய்தீர் புகழும் வகையறிந்தே.

வெளிப்படைப் பொருள்

( இ - ள். ) பாவுக்கு இசையும் பெயரே புனைந்து - பாடலுக்கு இசைந்த பெயரையே தரித்து, மெய்ப்பாவலர்தம் - உண்மையாகிய வித்து வான்களுடைய, நாவுக்கு இசையும் - நாவுக்கு இசைந்திருக்கிற, பெரும் புகழான் - பெருங்கீர்த்தியை யுடையவனுகிய, ரகுநாதன் - ரகுநாத சேது பதியின், வரை - மலையில், கோவுக்கு - பெரிய அரசனுக்கு, இறை இன்று

அளித்தீர் - இறைப்பணம் இன்று தந்தீர், எமக்குக் கொடுத்த - எமக்குத் தந்த இருமாவுக்கு - இருமாவுக்கு, புகழும் வகை அறிந்து - யாம் புகழுமாறறிந்து, இறையிலி செய்தீர் - இறையில்லையாகச் செய்தீர் ; (எ - று.)

இருமா - ஓர் சிற்றெண். கோ - கண். இறை - கையிறை. இருமா - இரண்டு யானைகள் (தனம்). இறையிலி செய்தல் - கையில்லாமையாக வெளிப்படச் செய்தல்.

## குறிப்புப் பொருள்

'கோவுக் கிறையின் றளித்தீர்' என்றமையால் கண் புதைத்தலும், 'இருமாவுக் கிறையிலி செய்தீர்' என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றின. (74)

தாருஞ் சிலையுங் கலவையும் பூணுந் தருந்தருவுங்
காரும் பொருவுகை யான்ரகு நாதன் கரந்தையன்னீர்
வாருந் துவண்ட மருங்குலு நானும் வருந்தலைநீர்
பாருங் கொடிது கொடிதுகண் டீரிப் பணைமுலையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தாரும் - பூமாலைகளையும், சிலையும் - இரத்தினக் கற்களையும், கலவையும் - கலவைச் சாந்தையும், பூணும் - ஆபரணங்களையும், தரும் - (அவரவர் விரும்பியபடியே) கொடுக்கின்ற, தருவும் - கற்பகத் தருவையும், காரும் - (கைம்மாறு கருதாது நீரைப் பெய்கிற) மேகத்தையும், பொருவு - நிகர்த்த, கையான் - (கொடைக்) கையினை யுடையவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், கரந்தை அன்னீர் - கரந்தை நகரை யொப்பவரே, வாரும் - கச்சும், துவண்ட மருங்குலும் - துவட்சி யடைந்த இடையும், நானும் - யானும், வருந்தலை - வருந்துவதை, நீர்பாரும் - நீர் நோக்கும், இப் பணைமுலை - இந்தப் பருத்தமுலை, கொடிது கொடிது - கொடியது கொடியது ; (எ - று.)

கண்டீர் - முன்னிலையசை யிடைச்சொல். வார்வருந்தல் - கிழிதல், மருங்குல் வருந்தல் - முறியப்பார்த்தல், நான்வருந்தல் என்றது தன்னைத் தனம் வெளிப்பட்டு மோக முண்டாக்குதல்.

## குறிப்புப் பொருள்

'வருந்தலை நீர்பாரும்' என்றமையால் கண் புதைத்தலும், 'இப்பணை முலை கொடிது கொடிது' என்றமையால் தனத்தின் புறப்பாடும் தோன்றுகின்றன. (75)

*கார்த்தலந் தோயுங் கொடிமதில் சூழுங் கரந்தையர்கோன்*
*பார்த்தலம் போற்றும் ரகுநாதன் வெற்பிற் பசுங்கதிர்ப்பூண்*
*சேர்த்தலங் காரித்த மின்னே யினிமைச்செந் தேனிங்ஙனே*
*கூர்த்தலங் கைத்தல மேவிய வாறு கொடுமையின்றே.*

## வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** *கார்த்தலம் தோயும் - மேகமண்டலத்தை யளாவிய, கொடி - கொடிகள் கட்டிய, மதில் - மதிலானது, சூழும் - வளைந்த, கரந்தையர் கோன் - கரந்தை நகரத்தார்க் கிறைவன், பார்த்தலம் போற்றும் - பூதலம் பணியும்படியான, ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வெற்பில் - மலையில், பசுங் கதிர்ப் பூண் சேர்த்து - பசுமையாகிய ஒளியையுடைய பொன் னுபரணங்களைச் சேர்த்து, அலங்காரித்த - அலங்கரிக்கப்பட்ட, மின்னே - மின்கொடி போல்பவளே, இனிமைச் செந்தேன் - இனிமையாகிய செந்தே னது, இங்ஙனே - இவ்வாறு, கூர்த்தல் அங்கைத் தலம் - உவர்த்தற்குரிய தாய் அகங்கையி னிடத்தை, மேவிய ஆறு - பொருந்திய விதம், இன்று கொடுமை - இப்பொழுது கொடுமையா யிராநின்றது ; (எ - று.)*

*இனிமைச் செந்தேன் - இனிமையாகிய செந்தேன் போல்பவ ளாகிய சாநகி, இங்ஙனே - இப்படி, கூர்த்த - வெறுக்கத்தக்க, லங்கைத் தலம் - லங்காத்வீபத்தை, மேவியவாறு - அடைந்தவிதம், இன்று கொடுமை - இப்பொழுது கொடுமையாயிரா நின்றது என்று கூறினும் பொருந்தும். செந்தேன் மலையி லிருந்தாற் சிறவாது என்பது கருத்து. மை செந் தேன் - கருமையும் செவ்வியுமுடைய வண்டு (கண்). இது அங்கைத்தலம் மேவியவாறு - கையாற் புதைக்கப்படுதல். 'கூர்த்தலங் கைத்தல மேவிய வாறு' என்பதற்கு கூர்மையாகிய இடத்தை யுடையதாகிய வாளின்மீது கை சேர்ந்தவிதம் என்றுரைத்தலுமாம். கூர்த்தலம் - அன்மொழியாய் வாளை யுணர்த்திற்று. வாள் - வாள்போலுங்கண்.*

## குறிப்புப் பொருள்

*'இனிமைச் செந்தேனிங்ஙனே கூர்த்தலம் கைத்தல மேவிய வாறு கொடுமையின்றே' என்றமையால் கண் புதைத்தலும் தனப் புறப்பாடும் தோன்றின.* (76)

*மடற்கே தகைசுற்றுந் தேவையர் கோன்வய மன்னர்க்கெல்லா*
*மடற்கே சரிதள ராய்ரகு நாத னணிவரையீர்*
*விடற்கே துணிவுற் றிருநாக மும்வெளி விட்டுவெங்கட்*
*கடற்கே திருநெடும் பூட்கைதந் தீரென்ன காரணமே,*

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மடல் கேதகை சுற்றும் - மடல்களையுடைய தாழை வேலி சூழ்ந்த, தேவையர்கோன் - தேவை நகரத்தார்க்கிறைவன், வய மன்னர்க்கு எல்லாம் - வெற்றியை யுடைய அரசர் என்கிற யானைகளுக் கெல்லாம், அடல்கேசரி - வலிமையுள்ள ஆண்சிங்கம் போல்பவன், தளவாய் - தளவாய், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) அணிவரையீர் - அழகிய மலையிலுள்ளவரே, விடற்கே துணிவுற்று - (யான்) சாதற்கே துணிந்து, இருநாகமும் வெளிவிட்டு - இரண்டு யானைகளையும் வெளியில் விடுத்து, வெம் கண் கடற்கு - வெம்மையாகிய இடமகன்ற கடலுக்கு, திருநெடும் பூட்கை தந்தீர் - ஒரு அழகிய நெடிய யானையைக் கொடுத்தீர், காரணம் என்ன - இதற்குக் காரணம் யாது ; (எ - று.)

ரகுநாதனை 'அடற்கேசரி' என்றமையால் வயமன்னரை யானையாக்கி யுரைக்கலாயிற்று. இருநாகம் - இரண்டு மலைபோன்ற தனம். கடல் - கண், திரு நெடும் பூண் கை - அழகும் நெடுமையு முள்ள வளையல் முதலிய ஆபரண மணிந்த கை.

## குறிப்புப் பொருள்

'வெங்கட் கடற்கே திருநெடும் பூட்கை தந்தீர்' என்றமையால் கண் புதைத்தலும், 'இருநாகமும் வெளிவிட்டு' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (77)

மேவிய தூதின் மெலிவுரைத் தேயன்று மெய்த்தரும
னேவிய மேகம் ரகுநாதன் றேவையி லெண்டிசையுந்
தாவிய செங்கண் மடப்பிணைக் கேயிறை தாவவுயி
ரோவிய நீகொடுத் தாலென்செய் யாதிவ் வுலகினையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மேவிய தூதின் மெலிவு உரைத்து - பொருந்திய தூதன் போலத் தன் மெலிவைச் சொல்லி, அன்று - அக்காலத்தில், மெய்த், தருமன் - சத்தியசந்தனாகிய தர்மராஜன், ஏவிய - துரியோதனனிடத்துக் கனுப்பிய, மேகம் - மேக வண்ணன் ஆகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தேவையில் - தேவை நகரத்தில் உள்ள, உயிர் ஓவியம் - உயிர் பிரதிமையே, எண்திசையும் தாவிய - அஷ்ட திக்குகளிலுந் தாவிச் சென்ற. செங்கண் மடப் பிணைக்கு - செவந்த கண்களையும் இளமையையு முடைய பெண்மானுக்கு, இறை தாவ நீ கொடுத்தால் - இறைவனேற நீ

கொடுத்தால் இவ்வுலகினை என் செய்யாது - இவ்வுலகத்தை என்ன செய்யாது ; (எ - று.)

யானையின்மீது அரசனேறுவ தியற்கை, அங்ஙனமன்றி அரசனேறுதற் குரிய பெருமையை ஒரு பெண் மானுக்குக் கொடுத்தால், அது இறுமாப்பினால் உலகத்தை என்ன செய்யாது என்பது கருத்து. பிணை - கண் இறை - கையிறை.

## குறிப்புப் பொருள்

'எண்டிசையுந் தாவிய செங்கண் மடப்பிணைக் கேயிறை தாவவுயி, ரோவிய நீகொடுத் தாலென்செய் யாதிவ் வுலகினையே' என்றமையால் கண் புதைத்தலும் தனப் புறப்பாடும் ஒருங்கு தோன்றின. (78)

சொற்பேறு பெற்ற தளவா யெனுந்துரை ராயனரு
ணற்பேறு தேவை ரகுநா யகன்செம்பி நாட்டிலுயர்
வேற்பேற விட்டுத் துணையார்கண் ணேணி விரைந்தொளித்தா
லற்பேறு நெஞ்ச மினியென் படாதுபெண் ணாரமுதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சொல் பேறு பெற்ற - புகழாகிய பேறு பெற்ற, தளவாய் என்னும் - தளவா யென்கிற, துரைராயன் - துரைராஜன், அருள் - அருளிய, நல்பேறு - நல்லபேற்றையுடைய, தேவை ரகுநாயகன் - தேவை ரகுநாத சேதுபதி, (அவனது) செம்பி நாட்டில் - சோழ நாட்டில் உள்ள, பெண் ஆர் அமுதே - பெண்களுள் அரிய அமிர்தம் போல்பவரே, உயர் வெற்பு ஏறவிட்டு - உயர்ந்த மலையில் ஏறவிட்டு, துணை ஆர் - துணையாகப் பொருந்திய, கண் ஏணி - கணுக்களை யுடைய ஏணியை, விரைந்து ஒளித்தால் - விரைந்து மறைத்தால், அற்பு ஏறு நெஞ்சம் - அன்புமிக்க என் மனமானது, இனி என்படாது - இனி என்ன பாடுபடாது ; (எ - று.)

பேறு - பயன். துணைஆர் என்றது ஏறவும் இறங்கவும் உதவியாயிருந்தபடி. அன்பு அற்பென வலித்தல் பெற்றது. உயர் வெற்பு ஏறவிட்டு - உயர்ந்த தனங்களை வெளிவிட்டு. துணைஆர் கண் ஏணி - இரண்டாகிய அரிய கண்க ளென்கிற மான் கன்றுகளை.

## குறிப்புப் பொருள்

'துணையார்கண் ணேணி விரைந்தொளித்தால்' என்றமையால் கண் புதைத்தலும், 'வெற்பேற விட்டு' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (79)

கோங்கார் முகிழ்முலைக் கொம்பரன் னீரண்ட கோளமெல்லா
நீங்காத மெய்ப்புக ழான்ரகு நாத னெடுங்கரந்தைப்
பாங்கார் கொடிக்கய லாங்காநின் றீர்தண் பயோதரத்தே
தீங்காந் தளையிடி லாங்காண் மதிகுலத் தென்னவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கோங்கு ஆர் முகிழ் - கோங்கினது அரிய அரும்பு போன்ற முலை - தனத்தையுடைய, கொம்பர் அன்னீர் - பூங்கொம்பு போல்பவரே, அண்டகோளம் எல்லாம் - அண்டகோள முழுதும், நீங்காத - பிரியாமல் வியாபித்திருக்கிற, மெய்ப்புகழான் - உண்மையாகிய புகழை யுடையவனு கிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், நெடுங் கரந்தைப் பாங்கு - பெரிய கரந்தை நகரத்தின் அயலில், ஆர் - அருமையாகிய, கொடிக்கயல் தாங்கா நின்றீர் - மீனக் கொடியை யேந்தாநின்றீர், தண் பயோதரத்தே - குளிர்ந்த மேகத்தின்கண், தீங்கு ஆம் தளையிடில் - தீமை யாகிய தளை யிடுவீராயின், மதி குலத் தென்னவர் ஆம் - நீரே சந்திர குலத்திற் றோன்றிய பாண்டியர் ஆவிர்; (எ - று.)

பாங்கு - அழகு எனினுமாம். பயோதரம் - தனம். காந்தள் - காந்தள் மலர் போலுங் கை. மதிகுலத் தென்னவர் என்பதற்கு அறிவி னுயர்ச் சிய ராகிய அழகையுடையவர் என வேறொரு பொருள் தோன்றுதல் காண்க. தென்னவர் - தென்னாட்டார் எனினுமாம்.

## குறிப்புப் பொருள்

'கயல்தாங்காநின்றீர்' என்றமையால் கண் புதைத்தலும், 'தண்ப யோதரத்தே தீங்காந் தளைபிடில்' என்றமையால் தனங்களின் வெளிப் பாடும் தோன்றின. (80)

தூதே நடந்த கவிகுல மாமணி தோன்றுகொடி
மீதே யுயர்த்த ரகுநா யகன்றமிழ் வீரையிலிப்
போதே வனத்தி னிறைகங்கை மேவப் புரிந்ததனுன்
மாதே யுனையுஞ் சொலலாம் ரவிகுல மன்னனென்றே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தூது நடந்த - இலங்கைக்குத் தூது சென்ற, கவி குல மாமணி-வானர குலத்துப் பெரிய ரத்தினம் போன்ற அநுமானை, தோன்று கொடிமீது உயர்த்த - காணப்பட்ட தன் கொடியின் மேலுயர்த்திய, ரகு நாயகன் - ரகுநாத சேதுபதியின், தமிழ் வீரையில் - தமிழ் வீரை நகரில்,

இப்போது - இப்பொழுது, வனத்தில் - அரண்யத்தில், நிறை கங்கை மேவப் புரிந்ததனால் - நிறைந்த கங்கை யாற்றை யடைய விரும்பினதனால், மாதே - பெண்ணே, உன்னையும் - நின்னையும், ரவிகுல மன்னன் என்றே சொல்லலாம் - சூரியகுலத் தரசனாகிய தாசரதி யென்றே சொல்லலாம்; (எ - று.)

இப் போது - இந்தத் தாமரை மலர் (கை). வனத்தின். நிறை கங்கை - நீரினால் நிறைகங்கை - கடல் (கண்). வனம் - அழகு எனினுமாம்.

## குறிப்புப் பொருள்

'இப்போதே வனத்தி னிறைகங்கை மேவப் புரிந்ததனால்' என்றமை யால் கண் புதைத்தலும், தனப் புறப்பாடும் ஒருங்கு தோன்றின. (81)

செய்க்கஞ்ச நந்தம் பயில்செம்பி நாடன் சினவடிவேற்
பொய்க்கஞ்ச னந்தப் பொருரகு நாதன் பொலங்கிரிமேன்
மெய்க்கஞ்ச னந்தகு மின்னே யதிசய மெல்லியநின்
கைக்கஞ்ச னந்தங்க விங்கெனக் கேதனங் கண்ணுற்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) செய் - கழனிகளிலுள்ள, கஞ்சம் - தாமரை மலர்களின் மீது, நந்து - சங்குகள், அம் - அழகாக, பயில் - தவழ்கின்ற, செம்பி நாடன் - சோழ நாட்டை யுடையவன், சினம் - கோவத்தை யுடைய, வடிவேல் - வடித்த வேலாயுதத்தையுடைய, பொய்க்கஞ்சன் - பொய்மையை யுடைய கஞ்சனைவன், நந்த - அழியும்படி, பொரு - போர் செய்த, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், பொலம் கிரிமேல் - அழகிய மலையின் மீதுள்ள, மெய் - உடம்பு, கஞ்சனம் தகும் - ஒளியினால் கண்ணாடியை நிகர்த்த, மின்னே - மின்னற்கொடி போல்பவளே, அதிசயம் - ஆச்சரியம், மெல்லிய - மென்மையாகிய, நின்கைக்கு - உன் கையின்கண், அஞ்சனந் தங்க - அஞ்சனந் தங்கியிருக்க, இங்கு எனக்கு - இவ்விடத்தில் எனக்கு, தனம் கண்ணுற்றது - பொற்புதையல் காணப்பட்டது; (எ - று.)

உடையவன் சினம் உடைமைமே லேற்றி யுரைக்கப் பட்டது. அஞ்சனம் - புதை பொருளைக் கண்ணுக்குத் தோற்றுவிக்கும் மை. நின் கைக்கு அஞ்சனம் தங்க என்பதற்கு, உன் கையின்கண் மையானது படும்படி எனவும், இங்கெனக்கே தனம் கண்ணுற்றது என்பதற்கு, இவ் விடத்திலுள்ள எனக்கு உன் கொங்கைகள் வெளிபட்டுத் தோன்றுநின்றன எனவும் பொருள் கொள்க.

அஞ்சன மணிந்த உன் கண்ணுக்குத் தோற்றும் புதையல், அஞ்சன மணியாத என் கண்ணுக்குத் தோற்றுவது அதிசய மென்பது கருத்து.

### குறிப்புப் பொருள்

'கைக்கஞ்சனந்தங்க' என்பது கண் புதைத்தலைக் குறித்தது. (கைக்கு + அஞ்சனம் + தங்க) (82)

கண்டே யெனுஞ்செங் கனிமொழி யீர்சிலைக் கார்விசயன்
றிண்டேர் கடவும் ரகுநாதன் வெற்பிற்செந் தாமரைமேற்
கொண்டே குவளை யிருத்தல்கண் டேனக் குவளையின்மேல்
வண்டேய் கமலமுங் கண்டே னிதுவென்ன மாயங்களே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கண்டே என்னும் - கற்கண்டே யென்று சொல்லுதற்குரிய, செங்கனி மொழியீர் - செம்மையாகிய முக்கனிகளின் சுவை போலுஞ் சுவையுள்ள இன்சொல்லை யுடையீர், சிலை - காண்டீவ மென்னும் வில்லைத் தாங்கிய, கார் விசயன் - கரிய பார்த்தனது, திண் தேர் கடவும் - வலிமை யாகிய தேரைச் செலுத்திய, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையில், குவளை செந்தாமரைமேற் கொண்டு இருத்தல் கண்டேன் - குவளைமலர்கள் செந்தாமரை மலரின் மீதேறி யிருத்தலை நோக்கினேன், அக் குவளையின்மேல் - அந்தக் குவளை மலர்களின்மீது, வண்டு ஏய் கமலமும் கண்டேன் - வண்டுகள் பொருந்திய தாமரை மலர்கள் இருத்தலை யும் நோக்கினேன், இது என்ன மாயங்கள் - இது என்ன மாயா காரியங் கள்; (எ - று.)

கற்கண்டு கண்டு என முதற்குறை யாயிற்று; முன்மொழி கெட்டபின் மொழி நிலையல், எனவும் கூறுப. விற்றொழிலிற் சிறந்தவன் அருச்சுந னாதலால் 'சிலைக்கார்விசயன்' என்றார். விசயன் தேர் செலுத்தினது ஸ்ரீ கண்ணபிரானா யிருக்க, 'சிலைக்கார் விசயன் றிண்டேர்கடவும் ரகு நாதன்' என்பது "திருவுடை மன்னரைக் காணிற் திருமாலைக் கண்டேன் என்னும்" என்று பெரியாரும் பணித்தமையால், ரகுநாத சேதுபதி திருமாலின் அம்ச மாதலானும், அப் பெயர்க்கேற்ற அடையாதலானும் இங்ஙனங் கூறலாயிற்று.

### குறிப்புப் பொருள்

செந்தாமரைமேற் குவளை யிருப்பதும், குவளையின்மேற் கமல மிருப்பதும் வியக்கத் தக்கவை யாதலால் இவ்வாறு கூறினான், செந்தா மரை - முகம், குவளை - கண், வண்டேய் கமலம்-கை, வண்டு - வளையல். கண் புதைத்தல் கூறவே தனப்புறப்பாடு தானே வெளிப்பட்டது. (83)

நீதநந் தாத தளவாய் குமார னெடுங்கருட
கேதனங் கொண்ட ரகுநாதன் றேவைக் கிளர்ந்தகந்த
மாதனங் கண்டுவந் தேன்றனுக் கோடி வளைகடலெப்
போதனம் போனடை யீர்கண்டு நானுடல் பூரிப்பதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) *நீதம் நந்தாத* - நீதி தவறாத, *தளவாய் குமாரன்* - தளவாயின் புதல்வன், *நெடு* - நெடுமையாகிய, *கருட கேதனம் கொண்ட* - கருடக் கொடியை யுடைய, *ரகுநாதன்* - ரகுநாத சேதுபதியின், *தேவை* - தேவை நகரத்தில், *கிளர்ந்த* - பிரகாசிக்கிற, *கந்த மாதனம்* - கந்த மாதன கிரியை, *கண்டு உவந்தேன்* - நோக்கி மகிழ்ந்தேன், (அவ்வாறே) *அன்னம்போல் நடையீர்* - அன்ன நடைபோலும் நடையை யுடையவரே, *தனுக்கோடி வளைகடல்* - தனுக்கோடி தீர்த்த மென்னும் பெயருள்ள வளைந்த கடலை, *நான் கண்டு உடல் பூரிப்பது* - நான் நோக்கி உடம்பு பூரிக்கப் பெறுவது, *எப்போது* - எக் காலம்; (எ - று.)

*கந்தம் மா தனம்* - சந்தநம் பூசப்பெற்ற பெரிய தனம், *தனுக்கோடி வளைகடல்* - வில்லின் கடைபோன்ற புருவத்தால் வளைக்கப்பட்ட கண்.

## குறிப்புப் பொருள்

'கந்த மாதனங் கண்டு வந்தேன்' என்றமையால், தனத்தின் வெளிப்பாடும், தனுக்கோடி வளைகடல் கண்டு நானுடல் பூரிப்பது எப்போது, என்றமையால் கண் புதைத்தமையும் தோன்றின. (84)

ஊனிட மான முனைவேற் பகைதிகைத் தோடிநெடுங்
கானிட மாகவென் றோன்ரகு நாயகன் கந்தகிரித்
தேனிட மாமொழி யீர்கணப் போதிற் செறிவிலங்கை
மானிட மாக்கிவிட் டருமைப் போலெவர் வல்லவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) *ஊன் இடம் ஆன* - மாமிசத்துக் கிடமாகிய, *முனை வேல்* - கூர்மையாகிய வேற்படையை யுடைய, *பகை* - பகைவர், *திகைத்து ஓடி* - மயங்கி ஓடி, *நெடு கான் இடம் ஆக* - பெரிய காட்டை யிடமாகக் கொண்டு வாழும்படி, *வென்றோன்* - வென்றவனாகிய, *ரகுநாயகன்* - ரகுநாத சேதுபதியின், *கந்தகிரி* - கந்த மாதந கிரியிலுள்ள, *தேன் இடம் ஆம் மொழியீர்* - தேனின் சுவைக்குப் பிறப்பிடமாயுள்ள சொல்லை யுடையவரே, *கணப்*

போதில் - கணப் பொழுதில், செறி - நெருங்கிய, விலங்கை - மிருகத்தை, மானிடம் ஆக்கிவிட்டீர் - மாநுட சாதி யாக்கிவிட்டீர், (ஆதலால்) உம்மைப் போல் வல்லவர் எவர் - உம்மைப் போலச் சமர்த்தர் யாவருளர் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

கண் அப் போதில் - கண்ணாகிய அந்தக் கருங்குவளை மலரின்மேல், செறி - மிருதியாகிய, வில் - ஒளியுள்ள, அங்கை - அகங்கையாகிய, மானிட மாக்கிவிட்டீர் - திருமகளுக் கிருப்பிடமாகிய தாமரை மலரைப் பொருந்து வித்தீர். கண் புதைத்தீர் என்றபடி. வல்லவர் - சொக்கட்டான் காய் போன்ற தனத்தை யுடையவர். இதனால் தனத்தின் புறப்பாடுந் தோன்று கின்றது. (85)

காேனர் பொருப்பு மருவியும் போற்கமழ் முல்லையந்தார்
தானே விளங்கும் புயரகு நாதன் றமிழ்க்கரந்தைத்
தேனே வளவ னிலைமைவிட் டேசென்று தென்பொதிய
மானே ரடைதனன் றோபுண்ட ரீக மணிக்கொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கான் நேர் பொருப்பும் அருவியும் போல் - மணம் பொருந்திய மலையையும் அதன்கண்ணே தவழ்ந் தொழுகாநின்ற அருவி யாற்றையும் போல, கமழ் - பரிமளிக்கின்ற, முல்லைஅம்தார் தானே விளங் கும் புயம் - முல்லை மலர்மாலை விளங்கப்பெற்ற புயத்தை யுடைய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், தமிழ்க் கரந்தை - தமிழ் வழங்குங் கரந்தை நகரிலுள்ள, தேனே - தேன் போல்வாளே, மணி - அழகாகிய, புண்டரீகக் கொடி - புலிக் கொடியானது, வளவன் நிலைமை விட்டு சென்று - சோழ னது இருப்பிடத்தை விட்டுப்போய், தென் பொதியமான் நேர் அடைதல் - தென் பொதிய வெற்பனாகிய பாண்டியனுக் கெதிரில் சேர்தல், நன்றோ- அழகிதோ ; (எ - று.)

பொருப்பு புயத்துக்கும், அருவி முல்லை மாலைக்கும் உவமை. மணிக் கொடியே - அழகாகிய பூங்கொடி போல்வாளே, புண்டரீகம் - தாமரை மலர், வளம் வல் நிலைமை விட்டு சென்று - வளமாகிய சூதாடு கருவியின் நிலை மையை விட்டுப்போய், தென்பொதி - அழகு பொருந்திய, அ மான் நேர் அடைதல் நன்றோ - அந்த மானுக்கு நேரே சேர்வது நன்மையோ ; (எ - று.)

புண்டரீகம் - கை, வல் - தனம், மான் - கண்.

### குறிப்புப் பொருள்

'வளவனிலைமைவிட்டு' என்றமையால் தனப்புறப்பாடும், (வளம்+வல்+நிலைமை விட்டு.) 'தென் பொதியமானே ரடைதனன்றோ புண்டரீகம்' என்றமையால் கண் புதைத்தலும் தோன்றின. (86)

சீலத்து மிக்க தளவா யளித்தருள் செல்வனொரு
காலத்தும் பொய்யுரை யான்ரகு நாதன் கரந்தைநகர்
போலத் துலங்கும் பொலங்குழை யீர்சென்று பூம்புனறோ
யாலத்து மாந்தளிர் கண்டோ மிதுவென்ன வற்புதமே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சீலத்துமிக்க - ஒழுக்கத்தால் மேம்பட்ட, தளவாய் அளித்தருள் செல்வன் - தளவாயீன்றருளிய புதல்வன், ஒரு காலத்தும் பொய்யுரையான் - ஒரு காலத்திலும் பொய் சொல்லாதவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) கரந்தை நகர்போல - கரந்தை நகரம்போல, துலங்கும் - விளங்குகின்ற, பொலம் குழையீர் - பொற்குழையை யுடையவரே, சென்று - போய், பூம் புனல் தோய் ஆலத்து - அழகாகிய நீரிற் படிந்த ஆல மரத்தின்மீது, மாந்தளிர் கண்டோம் - மாந்தளிரைப் பார்த்தோம், இது என்ன அற்புதம் - இது என்ன ஆச்சரியம்; (எ - று.)

சென்று கண்டோம் என இயையும். ஆலம் - விஷம், (கண்). மாந்தளிர் - கை. மாந்தளிர் கைக்கு உவமைப் பொருளாதலே, 'தேம்பதும மாந்தளிர்பூஞ் செங்காந்தள், யாம் புகல்வோம் அங்கை' என்னும் உவமானச் சங்கிரகச் செய்யுளானுணர்க.

### குறிப்புப் பொருள்

'ஆலத்து மாந்தளிர் கண்டோம்' என்றமையால் கண் புதைத்தலும் தனப்புறப்பாடும் ஒருங்கு தோன்றின. (87)

நடுப்பது மாலய மாதனை யாய்நடை கற்றவன்றே
கொடுப்பதுங் கற்ற ரகுநாதன் றேவைக் குவட்டின்மத
னெடுப்பது மெய்வதும் பாராய் வளைதரு மிக்கையினி
லடுப்பதுங் கஞ்சத் தரும்பாகும் வேலுக் கழகல்லவே

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்) நடு பதும ஆலயம் - தாமரைமலரின் நடுவிடத்தைக் கோயிலாகவுடைய, மாது அனையாய் - திருமகளை யொப்பவளே, நடை

கற்ற அன்றே - நடத்தலைக் கற்ற அந் நாளிற்றானே, கொடுப்பதுங் கற்ற - கொடையையுங் கற்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தேவைக் குவட்டில் - தேவை மலையில், மதன் - மன்மதனானவன், எடுப்பதும் - மலரம்புகளை யெடுப்பதையும், எய்வதும் - எய்வதையும், பாராய் - நோக்காய், வளைதரும் இக் கையினில் அடுப்பதும் - வளையலை யணிந்த இந்தக் கையில் அடுத்திருப்பதும், கஞ்சத்து அரும்பு ஆகும் - தாமரை யரும்புக் கழகாகும் அன்றி, வேலுக்கு அழகு அல்ல - வேலாயுதத்துக்கு அழகன்று; (எ - று.)

'வளைதரும் இக் கை' என்றதனால் மாதர் கையென்று பொருள் கொள்க. நடை கற்றவன்றே கொடை கற்றவன்' என்றது கொடையிவற்கியற்கை யென்பதை வற்புறுத்தற்கு; அன்றியும் குல தர்மம் என்க. கஞ்சத்தரும்பு - தனம், வேல் - கண். வேல் - வேலந்தழை யெனினுமாம். மாதர் கைக்குத் தாமரை யரும்பு அழகாகுமன்றி வேலழகன் றென்பது கருத்து.

### குறிப்புப் பொருள்

'பாராய்' என்றது கண் புதைத்தலும், 'இக் கையினிலடுப்பதுங் கஞ்சத் தரும்பாகும்' என்றமையால் தனப்புறப்பாடும் தோன்றின. (88)

மெய்ம்மல ராசன மின்னன் மிதிலையில் வில்வளைத்த
கைம்மலர் மேகந் துரைரகு நாதன் கரந்தைவெற்பிற்
செம்மலர் மேவுந் தேனுள தேயன் றித் தேனிடத்தி
லம்மலர் தோற்றுங்கொல் லோசொல் லுவாய்முலை யாரணங்கே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மெய் - உண்மையாகிய, மலர் ஆசன மின்னல் - புஷ்பாசனத்தை யுடைய திருமகள் பொருட்டு, மிதிலையில் - மிதிலா நகரத்தில், வில் வளைத்த - தநுசை வளைத் தொடித்த, கைம்மலர் - தாமரை மலர் போன்ற கையையுடைய, மேகம் - மேகவண்ணன், துரை - பிரபு, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், கரந்தை வெற்பில் - கரந்தை மலையிலுள்ள, முல்லைஆர் அணங்கே - கற்புப் பொருந்திய தெய்வப் பெண்ணே, செம்மலர் மேவவும்-செந்தாமரை மலர்மீது பொருந்தவும், தேன் உளதே யன்றி - தேனுண்டே யன்றி, தேனிடத்தில் - தேனினிடத்து, அம் மலர் தோற்றும் கொல்லோ - அந்தத் தாமரை மலர் தோன்றுவதுண்டோ, சொல்லுவாய்—சொல்லக் கடவாய்; (எ - று.)

'மலராசனமின்' என்றது சீதையை. 'வில்வளைத்த கைம்மலர் மேகம்' என்றது ஸ்ரீராமரை. அம்மலர் - செந்தாமரை மலர் (கை,) தேன் - வண்டு (கண்). முல்லை என்பது முலை என இடைக்குறை.

### குறிப்புப் பொருள்

மலர்மீது தேன் பொருந்துவதன்றித் தேனின்மீது மலர் பொருந்துவ துண்டோ வென்பது கருத்து. 'மூலையாரணங்கே' என்றமையால் தனத் தின் புறப்பாடு பெறப்பட்டது. (89)

வணங்காத தெவ்வைப் பொருமால் சொரிமுத்து வன்னியன்பொன்
னணங்காரு மார்பன் ரகுநாதன் றேவை யணிவரைமேற்
குணங்காத லிக்கு நெடுமீனந் தன்னுடன் கூடியத்த
மிணங்கா திணங்கு மழியாத கன்னி யிளம்பிடியே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வணங்காத தெவ்வை-பணியாத பகைவரை, பொரும்-போர் செய்தழிக்கவல்ல, மால் சொரி முத்து வன்னியன் - மேகஞ் சொரிந்த முத்து வன்னியன், பொன்அணங்கு ஆரும் மார்பன் - திருமகள் பொருந்திய மார்பை யுடையவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) தேவை அணிவரைமேல் - தேவை நகரின்கண்ணுள்ள அழகிய மலைமீதுள்ள, அழியாத கன்னி இளம்பிடியே - கெடாத கற்பினையுடைய இளம்பிடியே, குணம் காதலிக்கும் - குணத்தினால் எல்லாரும் விரும்புதற்குரிய, நெடு மீனம் தன்னுடன் - நெடிய மீனராசியுடன், அத்தம் கூடி - அஸ்தம் சேர்ந்து, இணங்காது இணங்கும் - பொருந்தாமற் பொருந்தும்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

மீனராசிக்கும் அஸ்த நக்ஷத்திரத்துக்கும் இணக்க மின்மையால் இவ்வாறு கூறினன். மீனம் - கண், அத்தம்-கை. 'கன்னியிளம் பிடியே' என்றமையால் தனத்தின் புறப்பாடுந் தோன்றுகின்றது. பிடி - பெண் யானை.

முறையுந் தருமமு நீங்காத மான்மும் முரசுமன்னர்
திறையுந் தருமுன் றிலான்ரகு நாயகன் றேவைவெற்பி
னிறையுங் கமலத் திருப்பதல்லா லிந்திர நீலத்தின்மே
லிறையுங் குடிபுக் கிருப்பதுண் டோபுவி யேழினுமே.

### வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) முறையும் - செங்கோல் முறைமையும், தருமமும்-தர்ம மார்க்கமும், நீங்காத - தன்னைவிட்டு நீங்காத, மால் - பெரியோன், மும்முரசு - மும்முரசும், மன்னர்திறையும் - வேற்றரசர் திறையும், தரும்முன்றிலான்-முழக்கவும் அளக்கவும் இடமாகிய முற்றத்தை யுடையவன், ரகுநாயகன் - ரகு

நாத சேதுபதி, (அவனது) தேவை வெற்பில் - தேவை மலையில், இறையும்பிரமனும், நிறையும் கமலத்து இருப்பது அல்லால் - நிறையாகிய கமலத்தின்மீதிருப்பதே யன்றி, புவி யேழினும் - ஏழுலகத்தினும், இந்த்ரநீலத்தின் மேல் - இந்திரநீலத்தின்மீது, குடிபுக்கு இருப்பது உண்டோ - குடிபுகுந்திருத்தலுளதோ; (எ - று.)

மும்முரசு மன்னர்க்கு விசேடணமாக்கினுமாம், மும்முரசு மன்னர் - மூவேந்தர் என்றலு மொன்று மும்முரசு - மங்கல முரசு, வெற்றி முரசு, கொடை முரசு.

## குறிப்புப் பொருள்

கமலம் - தாமரை யரும்பு (தனம்) இந்த்ரநீலம் - கண், இறை - கை யிறை. 'இறையுங் கமலத் திருப்பதல்லால்' என்றதனால் தனப்புறப்பாடும் 'இந்திர நீலத்தின்மேல் இறையுங் குடிபுக் கிருப்பதுண்டோ' என்றதனால் கண்புதைத்தலுந் தோன்றின. (91)

கலைக்கே நெடுங்கட லன்னா னடைக்கலங் காத்தவன்செஞ்
சிலைக்கே விசயன் ரகுநா யகன்தமிழ்த் தேவையிலா
லிலைக்கே கருங்கொழுந் தேந்துமின் னேகுன் றியற்கையன்றே
வலைக்கே வளர்வதென் றோசங்க பாணி யமர்கின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) கலைக்கு - நாலாராய்ச்சிக்கு, நெடு கடல் அன்னான் - பரந்த கடல் போன்றவன், அடைக்கலங்காத்தவன் - அடைக்கலம் புகுந்தாரைக் காத்தவன், செஞ்சிலைக்கு விசயன் - செவ்வியவில்லாண்மைக்கு அருச்சுனன், ரகுநாயகன் - ரகுநாத சேதுபதி, (அவனது) தமிழ் தேவையில் - தமிழ் வழங்கும் தேவை நகரின்கண், ஆல் இலைக்கே கருங்கொழுந்து ஏந்தும் மின்னே - ஆலிலையின் மீது கரிய கொழுந்தையுமேந்தி நிற்கின்ற மின் போல்வாளே, குன்று இயற்கை அன்றே - குன்றினியற்கை யல்லவோ, அலைக்கே வளர்வது என்றோ - கடலின்கண்ணே கண்வளர்த இயற்கை யென்றுதானோ, சங்கபாணி அமர்கின்றது - திருமால் விரும்புகின்றது; (எ - று.)

சங்கபாணி - பாஞ்சஜன்யம் என்னுஞ்சங்கத்தைக் கையிலுடையவன் என்க.

## குறிப்புப் பொருள்

ஆலிலை - வயிறு. கருங் கொழுந்து - ரோமரேகை (மயிரொழுங்கு). 'ஆலிலைக்கே கருங்கொழுந்தேந்துமின்' இல்பொருளுவமம். மின் - ஆகு

பெயர். குன்று - தனம். அலை - கடல் (கண்) சங்கபாணி - சங்கவளையலை யணிந்தகை. இதனால் கண் புதைத்தலும் தனப் புறப்பாடும் தோன்றின.

பணையே தடங்கண் டுயிலாத வீரைப் பதியுரக
வணையே துயிலும் ரகுநாதன் வெற்பிலென் னாருயிர்க்குத்
துணையே யுனைவந் திரந்தேற்கு வெந்துயர் தோன்றவடிக்
கணையே பிடித்துச் சிலைவிடுத் தாய்கற்ற கல்விநன்றே.

## வெளிப்படைப் பொருள்

(இ-ள்) பணை - மும்முரசும், தடம் கண் துயிலாத-பெரிதாகிய கண்ணுறங்காத, வீரைப்பதி-வீரை நகர்க்கிறைவன், உரக அணைதுயிலும்-சர்ப்பசயநத்தில் நித்திரை செய்கிற, ரகுநாதன் - ரகுநாயகனது, வெற்பில் - மலையில், என் ஆர் உயிர்க்குத் துணையே - எனது அரிய உயிருக்குத் துணையாதலையே, (விரும்பி) உன்னை வந்து இரந்தேற்கு - உன்னைவந்து இரந்த எனக்கு, வெம்துயர் தோன்ற - கொடிய துன்ப முண்டாக, வடிக்கணை பிடித்து - வடித்தலமைந்த அம்பைப் பற்றிக்கொண்டு, சிலைவிடுத்தாய் - வில்லை விடுத்தனை, கற்ற - நீகற்ற, கல்வி - வித்தையானது, நன்று - அழகிது ; (எ - று.)

கண்துயிலாத என்றது. இடையறு தொலிக்கின்ற என்றபடி.

## குறிப்புப் பொருள்

வடிக்கணையே பிடித்து - வடுவகிர்போலுங் கண்ணை மூடி. சிலை - மலை (தனம்). கணை பிடித்து எனவும் சிலை விடுத்து எனவும் கூறினமையால் கண் புதைத்தலும் தனப் புறப்பாடும் தோன்றின. (93)

நெய்க்கின்ற கூந்தற் கொடியிடை யீர்மனு நீதியினால்
மெய்க்கின்ற வாய்மை ரகுநா யகன்கந்த வெற்பிலிப்போ
துய்க்கின்ற மான்மறி யும்புண் டரீகமு மோரிடைநீர்
வைக்கின்ற நீதி யினாலிணை யோவஞ்சி மன்னனுமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நெய்க்கின்ற கூந்தல்-நெய்பூசிய கூந்தலையும், கொடியிடையீர் - கொடி போலும் இடையையும் உடையவரே, மநுநீதியினால் - மனு நீதியைக் கொண்டு, மெய்க்கின்ற வாய்மை - மெய்த்தலாகிய சொல்லையுடைய, ரகுநாயகன் - ரகுநாத சேதுபதியின், கந்தவெற்பில் - கந்தமாதந கிரியில், இப்போது - இப்பொழுது, உய்க்கின்ற மான்மறியும் - செலுத்தப்

படுகின்ற மான்கன்றையும், புண்டரீகமும் - புலியையும், ஓர் இடை - ஓரிடத்தில், நீர் வைக்கின்ற நீதியினால் - நீர் வைத்தடக்கியாளுகின்ற நியாயத்தால், வஞ்சி மன்னனும் - சேரனும், இணையோ - உமக்கு ஒப்பாவனோ ; (எ - று.)

'நெய்க்கின்ற கூந்தற் கொடியிடையீர்' என்பதற்கு நெய்த்த கூந்தலையுடைய ஓர் கொடி போலும் இடையை யுடையவரே என்றுரைப்பினுமாம். 'மனுநீதியினான்', 'மெய்க்கின்ற வாய்மை ரகுநாயகன்' என இரண்டாக்கி யுரைப்பினும் பொருந்தும். வஞ்சி - கருவூர். புண்டரீகம் - புலி. புலியும் மானும் ஒரு துறையில் நீர் குடிக்கும்படி அரசு செலுத்தினோன் ; அவன் சேரன்.

## குறிப்புப் பொருள்

மான்மறி - கண், புண்டரீகம் - தாமரை (கை.) மான்போன்ற கண்ணிடத்துப் புண்டரீகம் (தாமரை) போன்ற கை வைக்கின்றமையால் கண் புதைத்தல் தோன்றவே தனப் புறப்பாடு வெளியாயிற்று. (94)

பிறியாத தெவ்வர்க்கும் பின்னிட்ட பேர்க்கும் பிறங்கிலைவே
லெறியாத வன்ரகு நாயகன் றேவையி லென்றுங்கண்டே
யறியாத சிற்றிடை யீர்பொருந் தாரை யடக்கியநீர்
பொறியாது விட்டதென் னோபொறி சூழ்ந்தபொற் கோட்டையின்றே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) பிறியாத தெவ்வர்க்கும் - தன்னையடுத்த பகைவர்மீதும், பின்னிட்டபேர்க்கும்-பின்னிட்டோடினவர் மீதும், பிறங்கு - விளங்குகின்ற, இலை- இலை வடிவினதாகிய, வேல் - வேற்படையை, எறியாதவன் - ஏவாதவன், ரகுநாயகன் - ரகுநாத சேதுபதி, (அவனது) தேவையில் - தேவை நகரத்தில், என்றும் கண்டு அறியாத - எக்காலத்துங் கண்டுணர வொண்ணாத, சிற்றிடையீர் - சிறிய இடையை யுடையவரே, பொருந்தாரை அடக்கிய நீர் - பகைவரை வென்றடக்கினநீர், பொறிசூழ்ந்த - எந்திரங்களால் சூழப்பட்ட, பொன்கோட்டை - (அவரது) பொற்கோட்டையை, இன்றே - இப்பொழுதே, பொறியாது விட்டது என்னோ - (உம்மதென்று) எழுதாதுவிட்டதற்குக் காரணம் யாதோ (அறிகிலேன்); (எ - று.)

அடைந்தவர்மீதும், முதுகிட்டோடினவர் மீதும் வேல்விடாமை மன்னர்க்கு முறைமையாதலால், 'பிறியாத தெவ்வர்க்கும் பின்னிட்ட பேர்க்கும் பிறங்கிலைவே லெறியாதவன்' என்றார். பொறித்தல் - தன் பெயர் முதலிய

வற்றை யெழுதின கொடியைத் தன்னெல்லை மலைமேல் நாட்டுதல். பொறியாதுவிட்டது - இலச்சினை வையாது விட்டது என்றலு மொன்று.

## குறிப்புப் பொருள்

பொரும் தாரை - பொருகின்ற விண்மீன் (கண்), பொற்கோடு-பொன் மலை; அழகிய யானைக்கொம்பு (தனம்), பொறி - தேமல். தாரையடக்கிய நீர் என்றதனால் கண் புதைத்தலும், பொற்கோட்டைப் பொறியாது விட்டது என்றோ என்றமையால் தனப் புறப்பாடும் பெறப்பட்டன. (95)

காரண வுங்கொடை வீரையர் கோனன்று கஞ்சன்விட்ட
வாரணம் வென்ற ரகுநாதன் வெற்பின் மணக்குறிபோற்
றோரண முத்தத் தொடுமா விளந்தளிர் தோன்றவெதிர்
பூரண கும்பம்வைத் தாய்மலர் வீட்டிற் பொலங்கொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கார் அணவும் கொடை-மேகம்போன்ற கொடையையுடைய, வீரையர்கோன் - வீரை நகரத்தார்க் கிறைவன், அன்று கஞ்சன்விட்ட-அந் நாளில் கஞ்சனேவிய, வாரணம் - (குவலயாபீடம் என்னும்) யானையை, வென்ற - வென்ற, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையில் உள்ள, மலர் வீட்டில் பொலங்கொடியே - மலர்மாளிகைப் பொற்கொடியே, மணக்குறிபோல் - மணத்துக்குரிய அடையாளம் போல, தோரணமுத்தத் தொடு - முத்தமாலைகளுடன், மா இளம் தளிர் தோன்ற - மாவினது இளந் தளிர்கள் தோன்றுநிற்க, எதிர் - எனக்கெதிரில், பூரண கும்பம் வைத்தாய் - பூரண கும்பங்களை வைத்தனை, (இஃது அழகிது); (எ - று.)

'தோரண முத்தத்தொடு மாவிளந்தளிர் தோன்ற வெதிர் பூரண கும்பம் வைத்தாய்' என்பதற்கு முத்து மாலையோடு இளமையாகிய மாந்தளிர் போன்ற மேனியுந் தோன்றும்படி எனக்கெதிரே தனத்தைக் காட்டினை என்பது கருத்து.

## குறிப்புப் பொருள்

தோரண முத்தம் - கண்; (ஆகு பெயர்), மாவிளந்தளிர் - கை, இது கண் புதைத்தலையும், பூரண கும்பம் வைத்தாய் என்பது தனத்தின் வெளிப்பாட்டையும் உணர்த்தின. (96)

அலம்பணி வீரை புடைசூழும் வீரைக் கதிபனெழு
தலம்பணி தேவையர் கோன்ரகு நாதன் றமிழ்க்கரந்தைப்
புலம்பணி மேகலைப் பொன்னே மறந்துங்கைப் போதின்மின்னார்
சிலம்பணி யாரென்ப தோவரி பாய்வண்டு சேர்க்கின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அலம்பு அணி வீரை புடைசூழும் - ஒலித்தலைக் கொண்ட அழகாகிய கடல் பக்கத்திற் சூழ்ந்திருக்கிற, வீரைக்கதிபன் - வீரை நகரத்துக் கிறைவன், எழுதலம் பணி தேவையர்கோன் - சப்தத்வீபங்களிலுள்ளாரும் வணங்குகின்ற தேவையர்பிரான், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) தமிழ்க்கரந்தை - தமிழ்க்கரந்தையிலுள்ள, புலம்பு அணி மேகலைப் பொன்னே - ஒலிக்கின்ற ஆபரணமாகிய மேகலையையணிந்த பொன்போல் வாளே, மின்னார் - மாதர், மறந்தும் - மறந்தாயினும், கைப்போதில்-தாமரை மலர் போன்ற கையில், சிலம்பு அணியார் என்பதோ - சிலம்பைத் தரியா ரென்பது பற்றியோ, வரிபாய் வண்டு சேர்க்கின்றது - கீற்றமைந்த வளையலைச் சேர்க்கிறது ; (எ - று.)

பொன் - திருமகள் எனினுமாம். சிலம்பு - காலணி. சிலம்பு - மலை (தனம்). வரிபாய் வண்டு - இரேகைகள் படர்ந்த வண்டு, போதுக்கும் வண்டுக்கும் பொருத்த முண்மையால் கைப்போதில் வண்டு சேர்க்கின்றது என்றான்.

## குறிப்புப் பொருள்

‘கைப்போதில் வரிபாய் வண்டு சேர்க்கின்றதே’ என்றமையால் கண் புதைத்தலும், ‘சிலம்பணியார்’ என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (97)

நிதிகொண்ட வண்மைத் தளவாய் குமார னிலந்தழைக்குந்
துதிகொண்ட தேவை ரகுநாதன் மால்வரைத் தோகையன்னீர்
கதிகொண்டு தாமரை தாங்கிநின் றீர்செங் கலசவிம்ப
மதிகொண்டு தாங்குமின் மாலா மெனக்கலர் மாதென்னவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நிதிகொண்ட வண்மை-செல்வத்துக்கேற்ற கொடைத்தன்மையுள்ள, தளவாய் குமாரன்-தளவாய்புதல்வன், நிலம் தழைக்கும் துதிகொண்ட -நிலவுலகம் செழித்தற்குரிய துதிகளைக் கொண்ட, தேவை ரகுநாதன் -

தேவை ரகுநாத சேதுபதியின், மால்வரை - பெரிய மலையிலுள்ள, தோகை அன்னீர் - மயிலை நிகர்ப்பவரே, அலர்மாது என்ன மால் ஆம் எனக்கு - திருமகளென்று மால்கொண்ட என் பொருட்டு, கதிகொண்டு தாமரை தாங்கி நின்றீர் - நடந்துவந்து தாமரை மலரைத் தாங்கி நிற்கின்றீர், (அவ்வாறே) செங் கலச விம்பம் - வட்டவடிவாகிய செம்பொற் கலசத்தையும், மதி கொண்டு தாங்குமின் - அறிவு கொண்டு ஏந்துவீர் ; (எ - று.)

வரைத் தோகை நிலப்பொலிவு தோன்றி நின்றது. திருமகள் பாற்கடலிற் பிறந்தபோது தாமரை மலரையும் பொற்கலசத்தையும் தாங்கி நின்றமையால் இவ்வாறு கூறினன். தாமரை - கண், செங்கலச விம்பம் - தனம். (முன் மொழியாகு பெயர்.) மாலாமெனக்கு - விஷ்ணுவாகிய எனக்கு.

## குறிப்புப் பொருள்

' தாமரை தாங்கி நின்றீர் ' என்றமையால் கண் புதைத்தலும், ' செங் கலச விம்ப மதிகொண்டு தாங்குமின் ' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (98)

மழையணி வார்குழன் மின்னிடை மாதர் மருளவிசைக்
கழையணி தேவை ரகுநாதன் வெற்பிற் கதிரொளியோ
டுழையணி யாழின் விரலா லிசைத்துள் ளுருக்குதலாற்
றழையணி கானத் தவரெனும் வாய்மை தகுமுமக்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மழை - கார்காலத்து மேகம்போல, அணி - அழகாகிய, வார் குழல்-நீண்ட கூந்தலையும், மின் இடை - மின்போலும் இடையையுமுடைய, மாதர் - பெண்கள், மருள - மருளும்படி, இசைக் கழை அணி - வேய்ங்குழலைத்தரித்த, தேவை ரகுநாதன் வெற்பில் - தேவை ரகுநாத சேதுபதியின் மலையில், கதிர்ஒளியோடு உழை அணியாழ் - சந்திரசூரியர்களினொளியோடு கூடிய அயலில் அலங்கரிக்கப்பட்டிருக்கிற வீணையை, இன் விரலால் இசைத்து - இனிதாகிய விரல்களைக் கொண்டு இசைவித்து, உள் உருக்குதலால் - (எமது) மனத்தை யுருகச் செய்தலால், தழை - செழித்த, அணி - அழகிய, கானத்தவர் என்னும் வாய்மை - இசைவல்லார் என்னும் சொல், உமக்குத் தகும் - உமக்குத் தகுதியாகும் ; (எ - று.)

' கதிரொளியோடுழை யணியாழ் ' என்றது பலநிற மணிகளால் அலங் கரிக்கப்பட்ட வீணையை, கதிரொளியோடு உழை - சந்திரனொளிவட்டத் துட்பட்டமானை, அணி யாழின் விரலால் இசைத்து - அழகிய வீணையை

நிகர்த்த முன் கைவிரலாற்றடுத்து, உள்உருக்குதலால் - மனமுருகப் பண்ணுதலால், தழையணி கானத்தவர் - தழைகளால் அலங்கரிக்கப்பட்ட குறிஞ்சி நிலத்தவர் என்றுரைப்பினு மமையும்.

## குறிப்புப் பொருள்

உழை - மான் (கண்), யாழின்விரல்-கை. உழையணியாழின் விரலால் இசைத்து என்றமையால் கண் புதைத்தல் புலப்படவே தனப் புறப்பாடு தானே புலப்பட்டது. (99)

முத்திக்கு வேலி தழைக்கின்ற தேவை முதல்வனருட்
பத்திக்கு வாய்த்த ரகுநாத சேது பதிவரைமே
லெத்திக்குங் கண்டறி யோமணங் கேபச் செனுங்குழைசே
ரத்திக்குஞ் செம்மலர் காட்டிநின் றாயின் றதிசயமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) முத்திக்கு வேலிதழைக்கின்ற-மோக்ஷமாகிய பயிருக்கு வேலியாகத்தழைக்கிற, தேவை முதல்வன் - தேவை நகரி லெழுந்தருளியிருக்கும் முதல்வனாகிய சிவபெருமானது, அருள்பத்திக்கு வாய்த்த - அருளுக்கும் பத்திக்கும் வாய்த்துப் பிறந்த, ரகுநாத சேதுபதிவரைமேல் - ரகுநாதசேதுபதியின் மலையில் உள்ள, அணங்கே - தெய்வப் பெண்ணே, எத்திக்கும் கண்டறியோம் - எத்திசையினும் பார்த்தறியோம், இன்று - இப்பொழுது, பச்செனும் குழை சேர் - பச்சென்ற தளிர் சேர்ந்த, அத்திக்கும் - அத்திமரத்தினும், செம்மலர்காட்டி நின்றாய் - அழகாகிய மலரைத் தோற்றுவித்து நின்றாய், அதிசயம் - (இஃது) ஆச்சரியம்; (எ - று.)

முத்திக்கு வேலி என்பதனை முத்து இக்கு வேலி எனப் பிரித்து முத்துக் களையுடைய கரும்பை வேலியாக வுடைய என்றுரைப்பினு மமையும். அத்திமரத்துக்கு மலரே யின்மையால் இவ்வாறு கூறினன். அன்றி. அத்திமரத்தில் செந்தாமரை மலரைக் காட்டி நின்றாயென வேறுமொரு பொருள் தோன்றுதல் காண்க. பச்செனும் குழை சேர் அத்திக்கும் - பச்சைநிறமாகிய சேறு பொருந்திய கடலினும், செம்மலர் காட்டி நின்றாய் - செந்தாமரை மலரைத் தோற்றுவித்து நின்றனையென வேறுமொரு பொருள். பச்செனும் குழை சேர்அத்தி - பசுமையாகிய பொற்குழை யணிந்தகடல் (கண்); (இல் பொருளுவமை). செம்மலர் - செந்தாமரை மலர் (கை.)

## குறிப்புப் பொருள்

'பச்செனுங் குழை சேரத்திக்குஞ் செம்மலர் காட்டி நின்றாய்,' என்றமையால் கண் புதைத்தலும் தனப் புறப்பாடும் ஒருங்கு தோன்றின. (100)

மையாழி வையம் புகழ்செம்பி நாடன் மறந்தும்பொய்யா
மெய்யால் விளங்கும் ரகுநாதன் வெற்பில்வெங் கோவடையக்
கையார வேய்நின் றிசைத்திடக் குன்றங் கவிகைசெய்தாற்
பொய்யா துனைச்சொல் லலாங்கண் ணனென்று பூங்கொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மை ஆழி வையம்-கருங்கடல் சூழ்ந்த நிலவுலகத்தார், புகழ்-புகழ்தற்குரிய, செம்பிநாடன் - சோணாட்டை யுடையவன், மறந்தும் பொய்யா - மறந்தும் பொய்க்காத, மெய்யால் - உண்மையால், விளங்கும் - பிரகாசிக்கிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வெற்பில் - மலையின்கண்ணுள்ள, பூங்கொடியே - பூங்கொடி போல்பவளே, வெம் கோ அடைய - (கண்டார்க்கு) விருப்பத்தை யுண்டாக்குகிற பசுக்கள் வந்து சேர, கை யார வேய்நின்று இசைத்து - கை யமைய வேய்ங்குழலை யூதி, இடக்குன்றம் - இடமகன்ற கோவர்த்தன மலையை, கவிகை செய்தால் - குடையாகச் செய்வையாயின், பொய்யாது - உண்மையாக, உனை - உன்னை, கண்ணன் என்று சொல்லலாம் - கிருஷ்ணமூர்த்தி யென்று சொல்லலாகும்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

வெம் கோ அடை அக் கை - விருப்பத்தையுண்டாக்குகிற கண்ணைச் சேர்த்த அந்தக் கையை, ஆரவேய்நின்று இசைத்திடு - முத்துவடங்களின் அழகு நின்று ஒன்றோடொன்று தாக்குண் டொலித்தற் கிடமாகிய, அக் குன்றம் கவிகை செய்தால் - அந்த மலைபோன்ற தனத்தை மூடுகிற கையாகச் செய்வையாயின்,—என்பது குறிப்புப் பொருள். வெம் கோ என்புழி 'வெம்மை வேண்டல்'. கண்ணனுர் என்பதற்குக் கண்போலச் சிறந்தவர் எனப் பொருளுரைக்க. வேய்நின்றிசைத்திடு அக் குன்றம் - மூங்கில் நின்றொலிக்கிற அந்த மலையெனினும் அமையும். 'கோவடையக்கை' என்றமையால் கண்புதைத்தலும், 'குன்றங் கவிகை செய்தால்' என்றமையால் தனப் புறப்பாடுந் தோன்றின. (101)

பலவுங் கமுகும் பசும்பனிக் கோடும் படைத்துநின்று
நிலவுங் கரந்தை ரகுநாதன் காக்கு நெறியியல்பா
மிலவுந் துகிரும் பொருமித ழாய்நின் னிருகையினுங்
குலவும் படிசெங் கதிர்மாழை யேந்திக் குலாவுவதே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பலவும் - பலாமரங்களும், கமுகும் - கமுகமரங்களும், பசும்பனிக் கோடும் - குளிர்ந்த பனியை யுடைத்தாகிய பிறையையும், படைத்து நின்று - தாங்கி நின்று, நிலவும் - விளங்குகின்ற, கரந்தை - கரந்தை நகரத்தை யுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியானவன், காக்கும் நெறி இயல்பு ஆம் - உலகத்தைக் காக்கின்ற மநுநெறியினது நல்லியல்பாகும், (யாது எனின்) இலவும் துகிரும் பொரும் இதழாய் - இலவம் பூவையும் பவளத்தையும் நிகர்த்த அதரத்தை யுடையவளே, நின் இரு கையினும் - உன்னிரண்டு கைகளிலும், குலவும்படி - யாவரும் கொண்டாடும்படி, செங்கதிர் - செவ்வொளியை யுடைய, மாழை ஏந்தி - பொன்னை யேந்தி, குலாவுவது - விளங்குவது ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

பலவும் கமுகும் கோடும் படைத்து நின்று நிலவும் கரந்தை என்றமையால் நீர்வளமுடைத்து எனப் போதரும். ரகுநாதன், திருட்டு முதலியன இல்லாமற் காக்கும் புண்ணிய விசேடத்தால், அவனது நாட்டிலுள்ள நீ யுன்னிரண்டு கைகளாலும் பொன்னேந்தி நிற்கின்றனை யென்பதாம். (மாழை - பொன்). மாழை - மாவடு வகிர் (கண்). இருகையிலும் மாழை யேந்தல் - இரண்டு கைகளாலும் கண் புதைத்தல். கண் புதைத்தல் கூறவே தனப் புறப்பாடு தானே வெளிப்பட்டது. (102)

காக்குங் கருணையுங் கல்வியும் வாழ்வும் கவிமதுர
வாக்குந் தழைத்த ரகுநாதன் றேவை வருவிருந்தாத்
தேக்கும் படிகனி வாயமு தாரவந் தேற்கினிமை
நோக்கந் தனைமறைத் தாலியல் போவஞ்சி நுண்ணிடையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) காக்கும் கருணையும் - அடுத்தவரைக் காத்தற்குரிய தயையும், கல்வியும்-வித்தையும், வாழ்வும் - வாழ்க்கையும், கவி மதுர வாக்கும் - கவிகளில் மதுரவாக்கும், தழைத்த - செழித்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தேவை - தேவை நகரத்திலுள்ள, வஞ்சி நுண்ணிடையே - கொடிபோல நுண்மையாகிய இடையையுடையவளே, வருவிருந்து ஆ - வருதற்குரிய விருந்தாக, தேக்கும்படி - வயிறு நிறையும்படி, கனிவு ஆய் அமுது ஆரவந்தேற்கு - விருப்பமாக அமுதுண்ண வந்த எனக்கு, இனிமை நோக்கந்தனை மறைத்தால் - இனிமையாகிய பார்வையை மறைத்தால், இயல்போ - (அது) விருந்தோம்பலின் இயல்பாமோ (ஆகா என்றபடி) ; (எ - று.)

'கனி வாய் அமுது' என்பதற்கு முக்கனிகளோடு கூடிய அமுது என்றுரைப்பினுமமையும். இனி, 'கனி வாய்அமுது' - கொவ்வைக்கனி போலும் அதராமிர்தம் எனினுமமையும்.

## குறிப்புப் பொருள்

'மை நோக்கம்'-மை யெழுதிய கண். விருந்தோம்புவார்க்குக் குளிர்ந்த பார்வை இன்றியமையாமையான் "வருவிருந்தாத் தேக்கும்படி கனிவாயமுதாரவந்தேற்கினிமை நோக்கந்தனை மறைத்தாலியல்போ," என்றான் இதனை,

> "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
> னல்விருந்து வானத் தவர்க்கு,"
> "மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
> நோக்கக் குழையும் விருந்து"

என்னுந் திருக்குறள்களா னுணர்க.

"அமுதார விருந்தா வந்தேற்கு அஞ்சி நோக்கந்தனை மறைத்தாலியல்போ" என்றநவயித்தும் பொருள் கூறலாம். நோக்கந்தனை மறைத்தல் இயல்போ என்றமையால் கண்புதைத்தல் வெளிப்பட்டது; (அதனால்) தனம் புறப்பாடு தானே வெளிப்பட்டது. (103)

பன்னுந் தமிழ்ப்பயிர் வாடாது மாரியிப் பாரின்முத்தும்
பொன்னுஞ் சொரியும் ரகுநாதன் றேவைப் பொருப்பிலுயர்
மன்னும் பெரிய வரைநீத் துறுகண் மருவுகையாற்
பின்னுங் குழலணங் கேயறிந் தேனுன்றன் பேதைமையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பன்னும் - சொல்லப்பட்ட, இப் பாரில் - இவ்வுலகிலுள்ள, தமிழ்ப் பயிர் வாடாது - தமிழாகிய பயிர் வாடாமல், முத்தும் பொன்னும் மாரி சொரியும் - முத்தையும் பொன்னையும் மழையாகப் பொழிகின்ற, ரகுநாதன்-ரகுநாத சேதுபதி யென்னும் மேகத்திற்கு இடமாகிய, தேவைப் பொருப்பில் - தேவைமலையின், உயர் மன்னும் - உயர்வு நிலைபெற்ற பெரியவரை நீத்து - பெரியாரைவிட்டு, உறுகண் மருவுகையால் - துன்பத்தைப் பொருந்துதலால், பின்னும் குழல் அணங்கே - பின்னப்பட்ட கூந்தலையுடைய தெய்வப்பெண்ணே, உன்றன் பேதைமை - உன் அறியாமையை, அறிந்தேன் - உணர்ந்தேன்; (எ - று.)

தமிழைப் பயிராகவும், முத்தையும் பொன்னையும் மழையாகவும் உருவகித்தமையினால் ரகுநாதனை மேகமாக வுருவகித்துரைக்கலாயிற்று.

"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்"

"தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்"

என்று பெருநாவலர் கூறுதலுங் காண்க.

## குறிப்புப் பொருள்

பெரிய வரை நீத்து - பெரிய மலைபோலுந் தனங்களைவிட்டு, உறு கண் மருவு கையால் - பொருந்திய கண்ணிற் சேர்ந்த கையினை யுடைமையால், பேதைமை - பெண்டன்மை. பெரியவரை நீத்து என்றமையாலும், உறு கண் மருவு கையால் என்றமையாலும் அவ்விரண்டும் வெளியாயின. 104

தெளியேக வொண்குடை தன்னாற் குளிர்செக மேழுமிசை
யொளியே பரவும் ரகுநாதன் றேவையி லோங்குபசுங்
கிளியே யெனுமொழி யீரிரங் காதின்று கேழ்கிளர்தண்
ணளியே மறைத்தத னாற்கொடி யாரென் றறிந்தனமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஏக ஒண் குடை தன்னால் - ஒப்பமாகிய ஒற்றைக் குடையினால், குளிர்-குளிர்ந்த, செகம் ஏழும் - ஏழுலகத்தினும், இசை ஒளியே பரவும் - புகழாகிய ஒளியே பரவுகின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தேவையில் - தேவை நகரத்தில், ஓங்கு - உயர்ந்த, பசுங்கிளியே என்னு மொழியீர்-பச்சைக் கிளியே யென்று சொல்லத்தக்க இன்சொல்லை யுடையவரே, இன்று இரங்காது - இப்பொழுது இரக்கஞ் செய்யாமல், கேழ்கிளர் - நிறத்தால் விளங்குகின்ற, தண்ணளியே மறைத்ததனால் - குளிர்ச்சி பொருந்திய கிருபையையே மறைத்தமையால், கொடியார் என்று தெள்ளி அறிந்தனம் - நீர் கொடியவர் என்று தேர்ந்துணர்ந்தோம் (எ - று.)

தெளி - தெளியெனினுமாம். (நீ) தெளிவாய்; தெளி என்பதை வினையச்சமாகவும் வினைமுற்றாகவும் கொள்க. கேழ் - புகழைக் குறித்தது.

## குறிப்புப் பொருள்

இரங்காது - ஒலிக்காமல், அளி - வண்டு (கண்), கொடியார் - கொடி போல்பவர். அளியே மறைத்ததினால் என்றமையால் கண் புதைத்தல் புறப்படவே தனத்தின் வெளிப்பாடுந்தானே விளங்கிற்று. (105)

*வேரிப் பசுந்துணர் வார்குழ லீர்கலி வெப்பொழிக்கு*
*மாரிப் பருவம் ரகுநாதன் றேவையில் வண்குடத்தே*
*பூரிப்ப நெஞ்சிற் கருதா மனஞ்சிற் புரிந்ததுகை*
*நீரிப் படிக்கலந் தாற்பிறி தேது நிகழ்த்துவதே.*

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வேரி - மணம் பொருந்திய, பசுந்துணர் - பசுமையாகிய பூங்கொத்துக்களை யணிந்த, வார் குழலீர் - நெடிய கூந்தலை யுடையவரே, கலி வெப்பு ஒழிக்கும் - வறுமையாகிய கோடையை நீக்குகிற, மாரிப் பருவம் - கார்ப்பருவமாகிய, ரகுநாதன் றேவையில் - ரகுநாத சேதுபதியின் தேவை நகரில், வண் குடத்தே பூரிப்ப - வளமாகிய குடத்தின்கண் நிரப்புதற்கு, நெஞ்சில் கருதாமல் - மனத்தில் நினையாமல், நஞ்சில் புரிந்தது கைநீர் - நஞ்சின்கண் விரும்பிச் சேர்ந்ததாகிய கைநீரை, இப்படி கலந்தால் - இவ்வாறு கலந்துவிட்டால், பிறிது ஏது நிகழ்த்துவது - வேறேது சொல்லத்தகுவது; (எ - று.)

வேரி - தேன் எனினுமாம்.

## குறிப்புப் பொருள்

குடம் - தனம், நஞ்சு - கண், கைநீர் - கையின் குணம், 'வண் குடத்தே பூரிப்ப நெஞ்சிற் கருதாமல்' என்றமையால் தனப்புறப்பாடும், 'நஞ்சிற் புரிந்தது கை' என்றமையால் கண் புதைத்தலுந் தோன்றின. (106)

*ஆர்க்குங் கலாப மயிலனை யீர்பகி ரண்டமெல்லாம்*
*போர்க்கும் புகழ்த்தள வாய்ரகு நாதன் பொருப்பிலணி*
*சேர்க்குந் தனங்கண் மலைபோற்கண் மூடித் திறக்குமுன்னே*
*பார்க்கும் படியிப் படிக்கண் டிலேமொரு பாரினுமே.*

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஆர்க்கும் - ஆரவாரிக்கின்ற, கலாபம் மயில் அனையீர் - தோகையை யுடைய மயிலையொப்பவரே, பகிரண்டமெல்லாம் போர்க்கும் - பகிரண்டங்களையெல்லாம் மூடிக் கொள்ளுகின்ற, புகழ் - கீர்த்தியையுடைய, தளவாய் ரகுநாதன் பொருப்பில் - தளவாயாகிய ரகுநாத சேதுபதியின் மலையில், அணி சேர்க்கும் தனங்கள் - எல்லா அழகுகளையும் கூட்டுகிற தனங்கள், மலைபோல் - மலைகள் போல, கண் மூடி திறக்கும் முன்னே - கண் மூடி விழிப்பதற்கு முன்னமே, பார்க்கும்படி - எல்லாரும் நோக்கும்

படி, இப்படி - இவ்வாறு விருத்தி யடைந்திருக்க, ஒரு பாரினும் கண்டிலேம்- ஒரு உலகத்திலும் கண்டோமில்லே; (எ - று.)

'பகிரண்டம்' - வெளியண்டம். இது அண்ட முகட்டுக்கு மேற்பட்டது, எல்லா அழகையும் உண்டாக்குவது திரவியமாதலால் 'அணிசேர்க்குந் தனம்' என்றான்.

## குறிப்புப் பொருள்

'கண் மூடித் திறக்குமுன்னே' யென்றதனுல் கண் புதைத்தலும், 'அணிசேர்க்குந் தனங்கள் மலைபோல் பார்க்கும்படி யிப்படிக் கண்டிலே மொருபாரினும்' என்றதனுல் தனங்களின் புறப்பாடும் தோன்றின. அணி - ஆபரணமுமாம். (107)

திவளக் களிவண் டிசைபாடத் தானந் தினம்பொழியுங்
கவளக் கடாசலத் தான்ரகு நாதன் கரந்தையன்னீர்
தவளக் குளிர்முத்த மல்லா மலத்தந் தனிற்சிறந்த
பவளக் குலமும் படுவதுண் டோமலர்ப் பங்கயத்தே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) திவள் - அசையாநின்ற, அ - அந்த, களிவண்டு - களிப்பை யுடைய வண்டுகள், இசை பாட - பண்களைப் பாடாநிற்க, தினம் - நாள் தோறும், தானம் பொழியும் - தானஞ் சொரிகின்ற, கவளக் கடாசலத்தான் - கவளம் வாங்கி யுண்கின்ற மதயானையையுடையவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) கரந்தை அன்னீர் - கரந்தை நகரை நிகர்த்தவரே, அத்தம் தன்னில் - அஸ்த நக்ஷத்திரத்தில், மலர்ப்பங்கயத்து - தாமரை மலரில், தவளம் - வெண்மையாகிய, குளிர் - குளிர்ந்த, முத்தம் அல்லாமல்- முத்துக்களேயன்றி, சிறந்த பவளக் குலமும் படுவதுண்டோ - சிறந்த பவளத் திரளும் படுவதுண்டோ; (எ - று.)

தானம் - மதம். வண்டு இசை பாடுதலால் மெச்சி தானம் பொழிகிற எனச் சொன்னயம். வண்டுகள் மதநீரை யுண்ணுவதியற்கை என்பதனு லறிக. தாமரையில் முத்துப் படுவதுண்டு, பவளமும் படுவதுண்டோ வென்பது கருத்து.

## குறிப்புப் பொருள்

தவளக் குளிர் முத்தம் - வெண்மையாகிய குளிர்ந்த முத்துமாலே. (தனத்தின்மீதணியப்பட்டது), அத்தம் தன்னில் - கையில், சிறந்த பவளக் குலம் - மேன்மையாகிய பவளக்கொடிபோன்ற விரல்கள், பங்கயம் - கண். மலர்ப்பங்கயத்துத் தவளக்குளிர் முத்தமல்லால் பவளக்குலம்

படுவதுண்டோ என்றமையால் கண்புதைத்தல் தோன்றவே தனப்புறப் பாடுந்தானே தோன்றியது. (108)

ஒன்னா ருயிர்விடச் செங்கையில் வேலை யுறைவிடுங்கைப்
பொன்னாடர் தாரு ரகுநாதன் றேவைப் பொலங்கிரிவேள்
வின்னாண் மறைத்த கரும்பனை யீரந்த வேள்வனச
வன்னாண் முகையென்கொ லோவினை யேனுயிர் வாட்டுவதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஒன்னார் - பகைவர், உயிர்விட - தம்முயிரை விடும்படி, செங்கையில் வேலை - தன் செங்கையிலுள்ள வேற்படையை, உறைவிடும் - உறைகழித்து விடுகின்ற, கை - கையினையுடைய, பொன்னாடர் தாரு - பொன்னுலகத்தாரது கற்பகமரம் போன்ற, ரகுநாதன் - ரகுநாத சேது பதியின், தேவை - தேவை நகரிலுள்ள, பொலங்கிரி - பொன்மலைமீது, வேள் வில் நாண் மறைத்த - மன்மதனது வில்லின் நாணை மறைத்த, கரும்பு அனையீர் - கரும்பையொத்தவரே, அந்த வேள் - அந்த மன்மதனது, வல் - வலிமையாகிய, நாள் - புதிய, வனசமுகை - தாமரையரும்பு, வினையேன் உயிர் வாட்டுவது - தீவினையையுடையேனது உயிரை வருத்தாநின்றது, என்கொல் - இதற்குக் காரணம் யாதோ ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

வில் நாணை மறைத்த நீர் தாமரைக் கணையையும் மறையாது விடுத்தற்குக் காரணம் யாதென்பது கருத்து. வல் - சொக்கட்டான் காய். வேள் நாண் - வண்டு (கண்). வன்னாண் வனசமுகை - தனம், 'வேள்வின்னாண் மறைத்த' என்றமையால் கண் புதைத்தலும், 'அந்த வேள்வனசவன்னாண் முகை யென்கொலோ வினையேனுயிர் வாட்டுவதே' என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (109)

சினத்தா மரையரெல் லாந்தனை யேதொழச் செங்கடுக்கை
யினத்தா மரைத்தொழு மால்ரகு நாதனை யெண்ணலர்போங்
கனத்தா மரையிருள் வார்குழ லீர்கட் கருஞ்சுரும்பென்
மனத்தா மரைபுகு மென்றோகை யார மறைக்கின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சினத்து ஆம் அரையர் எல்லாம் - தன்னோடு பிணக்கங் கொண்ட வேந்தரெல்லாரும், தனையே தொழ - தன்னையே வணங்கும்படி,

செங்கடுக்கையின்-செம்மையாகிய கொன்றை மலர்களாற் றொடுக்கப்பட்ட, அ-அந்த, தாமரை - மாலையை யணிந்த பரமசிவனை, தொழும் - வணங்குகின்ற, மால் - பெரியோனாகிய, ரகுநாதனை - ரகுநாத சேதுபதியை, எண்ணலர் போம் - மதியாதார் செல்கின்ற, கனத்து ஆம் - மிகுதியாகிய, அரையிருள் - அர்த்த யாமத்திருள் போன்ற, வார் குழலீர் - நெடிய கூந்தலையுடையவரே, கட்கு - தேனின் பொருட்டு, அருஞ் சுரும்பு - அருமையாகிய வண்டுகள், என் மனத்தாமரை புகும் என்றோ - என் மனமாகிய தாமரை மலரில் நுழையுமென் றெண்ணியோ, கையார மறைக்கின்றது - அவற்றை உன் கையார மறைக்கிறது ; (எ - று.)

கடுக்கை இனம் எனவும் பிரிக்கலாம். தாமம் - மாலை. கனத்து மேகத்துடன் எனினுமாம். கனமும் இருளும் போன்று நீண்டகுழல் என இயைக்க.

## குறிப்புப் பொருள்

கட் கருஞ் சுரும்பு - கண்ணாகிய கருவண்டு, கை யார மறைத்தல்-கை நிரம்பப் புதைத்தல். சுரும்பு புகு மென்று நினைத்து மறைத்தநீர் இனமாகிய தாமரை யரும்பு புகு மென்று மறையாது விடுத்தல் நீதி யன்றென்பதாம். சுரும்பு புகு மென்றோ மறைந்த தென்றமையால் தாமரை யரும்பு புகா தென்றோ விடுத்த தென்பது எதிர்மறை ஓகாரத்தால் பெறப்பட்டுத் தனத்தின் புறப்பாடுந் தோன்றிற்று. (110)

தரியார் வணங்குந் தளவாய் குமாரன்செந் தாமரையாள்
பிரியாத தேவை ரகுநாதன் வெற்பிலென் பேரறிவாம்
விரியாழி மாயக் கயல்குடி யாது விலக்கியபின்
கிரியா லுழக்குத னன்றோ மழலைக் கிளிமொழியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தரியார் வணங்கும் - பகைவர் தொழுதற்குரிய, தளவாய் குமாரன் - தளவாய் புதல்வன், செந்தாமரையாள் - திருமகள், பிரியாத - விட்டு நீங்காத, தேவை ரகுநாதன் வெற்பில் - தேவை ரகுநாத சேதுபதியின் மலைமீதுள்ள, மழலைக் கிளிமொழியே - மழலைச் சொல்லையுடைய கிளி போலப் பேசுகின்ற மொழியை யுடையாளே, என்பேர் அறிவு ஆம் - என் பேரறிவாகிய, விரிஆழி மாய - விரிந்த கடல் வறளும்படி, கயல்குடியாது - மீன்கள் குடித்துவிடாமல், விலக்கியபின் - நீ விலக்கின பிறகு, கிரியால் உழக்குதல் நன்றோ - மலைகளால் கலக்குவது நன்மையாமோ ; (எ - று.)

'செந்தாமரையாள் பிரியாத தேவை' என்றமையால் செல்வப் பெருக்கால் மிக்கது தேவை நகரென்பது பெறப்பட்டது.

## குறிப்புப் பொருள்

கயல் - கண். கிரி - தனம். 'என் பேரறிவாம் விரியாழிமாயக்கயல் குடியாது விலக்கியபின்' என்றமையால் கண் புதைத்தலும், கிரியாலுழக்குதனன்றே' என்றமையால் தனப் புறப்பாடுந் தோன்றின. (111)

சீதக் கமல வயற்றேவை காவலன் செந்தமிழுங்
கீதக் கலையும்வல் லான்ரகு நாதன் கிரியினெடுங்
காதற் கடல்வெள்ள நீந்துதற் கேகுடங் காட்டியநீ
பேதக் கவலை யொளித்ததென் னேபுகல் பெண்கொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சீதம் - குளிர்ச்சி பொருந்திய, கமலம் - தாமரைமலர்களடர்ந்த, வயல் - கழனி சூழ்ந்த, தேவைக் காவலன் - தேவை நகரத்துக்கிறைவன், செந்தமிழும் கீதக்கலையும் வல்லான் - செந்தமிழினும் சங்கீத வித்தையினும் சமர்த்தன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) கிரியில் - மலையில், நெடுங்காதல் கடல்வெள்ளம் - பெரிய ஆசையாகிய கடற்பெருக்கை, நீந்துதற்கு - நீந்திச் செல்வதற்கு, குடம் காட்டிய நீ - குடத்தைத் தந்த நீ, பேதம் - வேற்றுமையாக, கவலை ஒளித்தது என் - கவலையை மறைத்ததற்குக் காரணம் யாது, புகல் - சொல்வாய், பெண்கொடியே - பூங்கொடிபோலும் பெண்ணே; (எ - று).

இக்காலத்திலும் ஆற்றுப்பெருக்கு முதலானவைகளில் குடங்கொண்டு நீந்துதல் தென்னாட்டில் காணலாம். கவலை - நீரிறைக்குந் தோற்கூடை. 'பெண்கொடி' என்பதைக் 'கொடிபெண்' என முன்பின்னாக மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. இதற்குக் காமனது வெற்றிக் கொடி போன்ற மாதே என்றுரைப்பினுமாம்.

> "திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
> குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
> மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்
> துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே"

என்றார் திருவாதவூரடிகளும்.

### குறிப்புப் பொருள்

குடம் - தனம். 'பேது அக்கம் வலை'-நான் வருந்துதற்கு ஏதுவாகிய கண்ணாகிய வலை. 'குடங்காட்டிய நீ' என்றமையால் தனப்புறப்பாடும், பேது அக்கம் வலையொளித்து என்றமையால் கண்புதைத்தலும் தோன்றின. (112)

மொய்தோய் பகைஞர் வரையுரம் பாய்ந்து முழைப்படுத்துங்
கைதோய் கடாசலத் தான்ரகு நாதன் கரந்தைவெற்பின்
மெய்தோய நின்ற வுயிர்வாடு மென்பதும் விட்டிங்ஙனே
மைதோய் மழைக்கண் மறைத்தனன் றோசிலை வாணுதலே.

### வெளிப்படைப் பொருள்

(இ-ள்.)மொய்தோய் பகைஞர்-வலிமை பொருந்திய பகைவருடைய, வரை உரம் பாய்ந்து - மலைபோன்ற மார்பிற் பாய்ந்து, முழைப்படுத்தும் - மலைக்குகைபோலப் பள்ளமாக்குகிற, கைதோய் - துதிக்கையோடு கூடிய, கடாசலத்தான் - மதமலையையுடையவன் ஆகிய, ரகுநாதன் - ரகுநாதசேதுபதியின், கரந்தை வெற்பில் - கரந்தைமலையில்; மெய் தோய நின்ற - உடம்போடு கூடிநின்ற, உயிர்வாடும் என்பதும் விட்டு - உலகத்துயிர்கள் வாட்டமடையுமென்பதையும் ஆலோசியாமல்விட்டு, இங்ஙனே - இவ்வாறே, மைதோய் - கருமைபடிந்த, மழைக்கண் - மேகத்தின் கண்களை, மறைத்தல் நன்றோ - மூடுதல் நன்மையாமோ, சிலைவாள்நுதலே - வில்லைப் போன்ற ஒளியுள்ள நெற்றியை யுடையாளே ; (எ - று.)

· மதமலை - யானை. சுகதுக்கங்களை யநுபவித்தற்குரியது உடம்போடு கூடிய உயிரேயாதலால் 'மெய்தோய நின்ற உயிர் வாடும்' என்றார்.

### குறிப்புப் பொருள்

'மைதோய் மழைக்கண் மறைத்தல் - அஞ்சனம்படிந்த குளிர்ச்சியாகிய கண்களை மூடுதல் என்றமையால் கண்புதைத்தல் வெளியாயிற்று. 'உயிர்' என்றது என்னுயிர் எனக்கொள்க. சிலைவாணுதலே' என்பதற்குத் தனமலையையுடைய வாணுதலேஎனப் பொருளுரைத்துத் தனத்தின் வெளிப்பாடுங் கொள்க. (113)

வயத்துக் கிசைந்த புகழ்த்தள ராய்தந்த மைந்தன்மிக்க
செயத்துக் கொருதுங்க வேள்ரகு நாயகன் றேவையிலம்
புயத்துக் குவலயந் தார்புனை நீரிப் பொறையமைத்தா
னயத்துத் தருமனென் றேமட வீர்சொல்லு நானிலமே.

### வெளிப்படைப் பொருள்

**(இ-ள்.)** வயத்துக்கு இசைந்தபுகழ்-வெற்றிக்கிணங்கின புகழையுடைய, தளவாய் தந்த மைந்தன் - தளவாயீன்ற புதல்வன், மிக்க செயத்துக்கு - மிகு வெற்றிக்கு, ஒரு துங்கவேள் - ஒப்பற்ற உயர்ந்த மன்மதன், ரகுநாயகன் - ரகுநாத சேதுபதி, (அவனது) தேவையில் - தேவை நகரில், அம்புயத்து - அழகிய புயத்தில், குவலயம் தார்புனைந்தீர்-குவளை மலர்மாலையை யணிந்தீர், இப்பொறை அமைத்தால் - இந்தப் பொறுமையையும் அமைத்துக் கொள்வீராயின், மடவீர் - பெண்ணே, நயத்து தருமன் என்றே - நன்மையையுடைய தருமராஜனென்றே, நானிலம் சொல்லும் - இவ்வுலகம் உம்மைச் சொல்லும் ; (எ - று.)

மன்மதன் உருவிலியாயிருந்தும் சிவபெருமான் முதலியோரையும் கலங்கச் செய்து வெற்றி யடைந்தவனாதலால் "மிக்க செயத்துக் கொரு துங்க வேள்" என்றார்.

'தொடுக ரச்சிலை நொடப்பொ ருமலர் சுரும்புநா ணிடுவ தைந்துகோல்
அடுப டைத்தலை வருளர்வ சந்தமலை தென்றலே ருருவ மருவமாம்
முடுகு கொற்றமத வொருவ னிப்புவன முற்றும் வெற்றிகொள முடிவிலா
நெடும லர்க்க ணருள்சிறி தளித்தலைகொ ணீதி யேகர கபாலியே"

என்றார் பிறரும். இதற்கிவ்வாறன்றிச் சூராதிகளை வென்ற வெற்றி வேலன்" என்றுரைப்பினு மமையும்.

### குறிப்புப் பொருள்

அம்புயத்துக் குவலயந்தார் புனைந்தீர் - தாமரை மலரால் குவளை மலரை யலங்கரித்தீர். இப்பொறை அமைத்தால் - இந்த மலைகளையும் அடக்கிக் கொள்வீராயின். அம்புயம் - கை. குவலயம் - கண். பொறை - தனம். கண்புதைத்தலும் தனப்புறப்பாடும் காண்க. (114)

சேல்கொண்ட நீலக் கடல்சிவப் பேறச் சிலைதிணித்துக்
கால்கொண்ட தேவை ரகுநாதன் வெற்பிற் கருவிளம்பூ
மேல்கொண்ட காந்தட் குலத்தோடுங் கூட விளங்கிழையீர்
மால்கொண்ட காலத்து மென்னோ மணக்க மலர்ந்திலவே.

### வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** சேல்கொண்ட - சேல்மீன்களைத் தன்னிடத்துக் கொண்டிருக்கிற, நீலக்கடல் - கருங்கடலில், சிவப்பு ஏற - சிவப்பேறும்படி, சிலை

திணித்து - வில்லையுறுதியாகப் பற்றி, கால் கொண்ட - வளைத்த, தேவை - தேவை நகரிலுள்ள, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வெற்பில் - மலையில் உள்ள, விளங்கு இழையீர் - பிரகாசிக்கிற ஆபரணங்களையுடையவரே, கருவிளம் பூ - காக்கண மலர்கள், மேல்கொண்ட காந்தட்குலத் தோடும் கூட - தன்மேற் கொண்ட காந்தள்மலர்க் கூட்டத்துடன், மால்கொண்ட காலத்தும் - கார் காலத்திலும், மணக்க - பரிமளிக்கும்படி, மலர்ந்தில - விரிந்தில, என்றோ - இதற்குக் காரணம் யாதோ; (எ - று.)

நீலக்கடல் சிவப்பேறச் சிலை திணித்துக் கால்கொண்டது ராமாவதாரத்தில். மால் - மேகம். நீலக்கடல் சிவப்பேறுதல் பகைவ ருதிர யாறு விரைந்தோடி வீழ்தலாலெனக் கொள்க.

## குறிப்புப் பொருள்

கருவிளம்பூ - கண். காந்தட்குலம் - கைகள். கூடமால்கொண்ட காலத்தும் - கூட ஆசைப்பட்ட காலத்திலும், மணக்க - மணம்புணர, மலர்ந்தில - மலர்ந்து நோக்கிற்றில. 'வெற்பில்விளங்கிழையீர்' என்பதற்கு மலைச் சிகரம் போலுந் தனத்தின்மீது விளங்குகிற ஆபரணங்களை யுடையவரே எனப் பொருளுரைத்துத் தனத்தின் வெளிப்பாடுங் கொள்க. கண்புதைத்தலையும் அறிக. (115)

வெங்கயங் கேதம் பொருந்தா தருள்புகழ் வேந்துயர்த்த
செங்கையங் கேதன மால்ரகு நாயகன் றேவைவெற்பிற்
பங்கயங் கேகயம் போல்வீ ரமுதம் பசுங்கணின்ற
கொங்கையிங் கேவிட் டிருந்ததென் றோதண் குவலயத்தே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வெங்கயம் - வெவ்விய யானையானது, கேதம் பொருந்தாது அருள் - துன்பத்தை யடையாம லருள்புரிந்த, புகழ்வேந்து - புகழை யுடைய வேந்தனாகிய திருமால், உயர்த்த - தாங்கின, செங்கை அம் கேதனம் - செங்கையினிடத்ததாகிய அழகிய கருடக் கொடியையுடைய, மால் - பெரியோன் ஆகிய, ரகுநாயகன்-ரகுநாத சேதுபதியின், தேவை வெற்பில் - தேவை மலையில் உள்ள, கேகயம் போல்வீர் - மயிலை நிகர்ப்பவரே, பங்கயம் - தாமரை மலரானது, அமுதம் பசுங்கண் நின்ற - அமுதமும் பசுமையாகிய இடமும் பெற்றுநின்ற, கொங்கை - கொங்கு நாட்டை, இங்கே விட்டு - இவ்விடத்தே விட்டு, தண் குவலயத்தே இருந்தது என் - தண்ணிய பூமியிலிருந்ததற்குக் காரணம் யாது; (எ - று.)

'வெங்கயம்' என்றது கஜேந்திரனை. கேதம் பொருந்தாதருளியது, அதைப்பற்றி வருத்தின முதலையைச் சக்கரத்தாற் கொன்று அந்த ஆபத்தினின்றும் விடுவித்தது.

## குறிப்புப் பொருள்

பங்கயம் - தாமரை மலர் (கை). அமுதம் - பால், பசுங்கண் - பசுமையாகிய கண், கொங்கை - தனம், குவலயம் - குவளை. கண்புதைத்தலும் தனப்புறப்பாடும் உய்த்துணர்க. (116)

வங்கந் தழுவுங் கடல்சூழுந் தேவைக்கு வாய்த்ததள
சிங்கங் கருணை ரகுநாதன் செம்பொற் சிலம்பின்மலர்க்
கொங்கங் கமழுங் குழலீர் முகத்தைக் குபேரனெனச்
சங்கம் பதுமமும் வேண்டுமென் றேகண்ணிற் சார்கின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) வங்கம் தழுவும் கடல்சூழும் - மரக்கலங்கள் பொருந்திய கடலாற் சூழப்பட்ட, தேவைக்கு வாய்த்த-தேவை நகரத்துக்குக் கிடைத்த, தளசிங்கம் - தளசிங்கமாகிய, கருணை ரகுநாதன் - கருணையையுடைய ரகுநாத சேதுபதியின், செம்பொன் சிலம்பில் - செம்பொன் மலையில் உள்ள, மலர் கொங்கு அம் கமழும் குழலீர் - மலர் வாசனை அழகாக வீசுகின்ற கூந்தலையுடையீர், முகத்தைக் குபேரன் என - முகத்தைக் குபேரனென்று சொல்ல, சங்கம் பதுமமும் வேண்டும் என்றே - சங்கநிதியும் பதுமநிதியும் வேண்டுமென்று நினைந்துதானோ, கண்ணில் சார்கின்றது - கண்ணினிடத்துச் சென்றடைகின்றது; (எ - று)

குபேரனுக்குச் சங்க நிதியும் பதும நிதியும் உரியனவாதலால் "முகத்தைக் குபேரனெனச் சங்கம் பதுமமும் வேண்டும்" எனக் கூறினார்.

## குறிப்புப் பொருள்

குபேரன் - சந்திரன், சங்கம் - சங்க வளையல், பதுமம் - தாமரை (கை) இதனால் கண்புதைத்தல் கூறவே தனப்புறப்பாடு வெளிப்பட்டது. (117)

கடந்தோய் மதகளி றன்னைத் தம்பர கண்டன்முத்து
வடந்தோய் தனத்தியர் வேள்ரகு நாதன் வரையனையீர்
தடந்தோய முட்க ளமையாதென் றேநிறந் தாழுமல
ரிடந்தோய வின்று மதுகரங் கூடி யிருக்கின்றதே.

## வெளிப்படைப் பொருள்

**(இ-ள்.)** கடம் தோய் மதகளிறு அன்னான் - மதம் பொருந்திய மத யானையை யொப்பவன், நந் தம் பரகண்டன் - நமது பரகண்டன், முத்து வடம் தோய் தனத்தியர் - முத்து மாலைகள் பொருந்திய தனங்களையுடைய மாதருக்கு, வேள் - மன்மதன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வரையனையீர் - மலையை நிகர்ப்பவரே, தட தோயம் உள் கள் அமையாது என்றோ - பெரிய நீரிலுள்ள மலர்த்தேன் அமையாதென்று தானோ, நிறம் தாழும்மலர் இடம் தோய - நிறம் பொருந்திய தாமரை மலராகிய இடத்தைப் பொருந்துதற்கு, இன்று-இப்பொழுது, மதுகரம் கூடியிருக்கின்றது-வண்டுகள் சேர்ந்திருக்கின்றன; (எ - று.)

பரகண்டன் - பரராஜரைக் கண்டிப்பவன். "முத்துவடந்தோய்கனத்தியர் வேள்" என்றமையால், பெண்மையிற் சிறந்த மாதருக்கு விருப்பத்தை யுண்டாக்கும் அழகை யுடையவன் என்றதாயிற்று. மதுகரம் - பால்பகா வஃறிணை.

## குறிப்புப் பொருள்

மலர் - தாமரை (கை), மதுகரம் - வண்டு (கண்), இன்று உமது கரம் கூடி யிருக்கின்றது என்றும் பிரிக்கலாம். கண்புதைத்தல் கூறவே தனப் புறப்பாடு தோன்றிற்று. (118)

சீதகங் காதரற் கன்பாம் ரவிகுல சேகரன்பூ
மாதகஞ் சேர்புயத் தான்ரகு நாதன் மணிவரைக்கோ
மேதகஞ் சேர்குழை யீரரி மாவொடு மெல்லியகைப்
போதகஞ் சேர்ந்த பகையில்லை யோவுங்கள் பூம்புனத்தே.

## வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** சீத கங்காதரற்கு - குளிர்ச்சியாகிய கங்கையைத் தரித்தவனாகிய பரமசிவனுக்கு, அன்பு ஆம் - அன்பனாகிய, ரவிகுல சேகரன் - சூரிய குலத்துக்கு மகுடம் போல்பவன், பூ மா து - தாமரை மலராகிய ஆசனத்திலிருப்பவளாகிய விசய லக்ஷ்மி, அகம் சேர் - இடமாகக் கொண்டு சேர்ந்த, புயத்தான் - புயங்களையுடையவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) மணிவரை - அழகிய மலையின்மீதுள்ள, கோமேதகம் சேர் குழையீர் - கோமேதக ரத்திநங்க ளிழைத்த காதணியை யுடையவரே, அரிமாவொடு - சிங்கத்துடன், மெல்லிய கை - மென்மையாகிய துதிக்கையினையுடைய, போதகம் - யானைக்கு, சேர்ந்த - பொருந்திய, பகையில்லையோ - பகைக்குண மில்லையோ, உங்கள் பூம்புனத்து - உங்களுடைய அழகிய புனத்தின்கண் ; (எ - று.)

அரி - வண்டு, கடல் (கண்). கைப்போது - கைத் தாமரை. அகம் சேர்ந்த பகை - உட்பகை.

### குறிப்புப் பொருள்

"அரிமாவொடு மெல்லிய கை" என்றமையால் கண் புதைத்தலும், "மெல்லிய கைப்போதகம்" என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின. (119)

தருபாற் புதுமுத்துந் தொன்னாள் வயிரமுந் தந்துதெவ்வ
ரிருபாற் பரவும் ரகுநாதன் றேவையி லேமவெற்பில்
வருபாற் குறுந்தொடி யீருல வாவிந்து மண்டலத்தே
யொருபாற் கரனண்ணி னலென் படாதிவ் வுலகெங்குமே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தருபால் - வெண்ணிறத்தைத் தருகிற, புது முத்தும் - புதிய முத்துக்களையும், தொல் நாள் வயிரமும் - முதிர்ந்த வயிரத்தையும், தந்து - கொடுத்து, தெவ்வர் - பகைவர், இருபால் - இருபாரிசத்திலும் நின்று, பரவும் - வணங்குகின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தேவையில் - தேவை நகரிலுள்ள, ஏமவெற்பில் வரு - பொன்மலைமேல் தோன்றிய, பால் - வெண்மையாகிய, குறுந்தொடியீர் - சிறிய வளையலை யுடையவரே, ஒரு பாற்கரன் - ஒப்பற்ற சூரியனைவன், உலவா - கெடாத, இந்து மண்டலத்தே நண்ணினல் - சந்திர மண்டலத்திற் பொருந்தினல், இவ்வுலகெங்கும் - இந்த வுலக முழுவதும், என்படாது - என்ன பாடுபடாது ; (எ - று).

தொள்ளா வயிரமும் என்றும் பாடம், பொருள் துளைக்காத முழு வயிரம். சங்க வளைய லாதலால் "பாற்குறுந்தொடி" என்றார். "புஞ்ச மார் வெள்வளையீர்" என்றார் மேலோரும். சூரிய சந்திராதியர் தத்தம் நிலைமாறினல், இவ்வுலகத்துக்குக் கெடுதியா மாதலால் "இந்து மண்டலத்தே ஒரு பாற்கரன் நண்ணினலென் படாதிவ் வுலகெங்கும்" என்றார்.

### குறிப்புப் பொருள்

இந்து மண்டலம் - முகம், ஒருபால் - ஒரு பக்கத்திலிருப்பதாகிய கண். கரன் - கை, 'கரன்' போலி. கண்புதைத்தல் கூறவே தனப்புறப்பாடு தோன்றிற்று. (120)

நேர்கின்ற சிற்றிடை யீர்முகி னீருண்ண நீட்டுகைம்மா
வூர்கின்ற தேவை ரகுநாதன் வெற்பிலென் னுள்ளிரங்க
வார்கின்ற வஞ்சனக் கண்மறைத் தீரிந்த மாமறைத்தாற்
சார்கின்ற புண்ட ரிகத்தா லுமக்கென்ன தாழ்வுளதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நேர்கின்ற சிற்றிடையீர் - மெலிகின்ற சிற்றிடையையுடைய வரே, முகில் நீர் உண்ண - மேகநீரைப் பருகுதற்கு, நீட்டு - நீட்டுகின்ற, கை - துதிக்கையையுடைய, மா - யானையை, ஊர்கின்ற - நடத்துகின்ற, தேவை ரகுநாதன் வெற்பில் - தேவை ரகுநாத சேதுபதியின் மலைமீது, என் உள் இரங்க - என் மனமிரங்கும்படி, வார்கின்ற - நீளாநின்ற, அஞ்சனக் கண் மறைத்தீர் - அஞ்சன மென்னும் யானையின் கண்ணை மறைத்தீர், இந்த மா மறைத்தால் - இந்த யானையையும் மறைத்தனையாயின், சார்கின்ற - வந்தடைகின்ற, புண்டரிகத்தால் - புலியினால், உமக்கு என்ன தாழ்வு உளது - உமக்கென்ன தாழ்வுண்டு ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

அஞ்சனம் - மேற்றிசையானை. அஞ்சனக் கண் - கருங்கண், மையெழுதிய கண். மா - யானை (தனம்). புண்டரிகம் - தாமரை மலர் (கை). "என்னுள்ளிரங்க வார்கின்ற வஞ்சனக் கண் மறைத்தீர்" என்றமையால் கண் புதைத்தலும், "இந்த மா மறைத்தால்" என்றமையால் தனப் புறப்பாடும் தோன்றின, (121)

தோடார் பசுங்குழை யீர்துரை ராயன் சுரந்துநறை
யேடாருந் தாமன் ரகுநாதன் வெற்பி லிரவலர்க்கே
வீடாது குன்றத் திசையொளி தோன்ற விரும்பியத்தம்
வாடா தளித்த தனூற்சொல்ல லாமுமை வள்ளலென்றே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தோடு ஆர் பசுங்குழையீர் - தோடாகிய அரிய பசுமையாகிய காதணியை யுடையவரே, துரை ராயன் - துரைகளுக்குத் துரை, நறை சுரந்து - தேன் சுரந்து, ஏடு ஆரும் - இதழ்கள் நிறைந்த, தாமன் - மலர்மாலையை யுடையவனாகிய, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலைமீது, வீடாது - இடையறுமல், குன்றம் - குலகிரிகளுள்ள, திசை - அஷ்ட திக்குகளிலும், ஒளி தோன்ற - புகழ் தோன்றும்படி, விரும்பி - விருப்பங்கொண்டு, அத்தம் - திரவியத்தை, இரவலர்க்கே - யாசகர்களுக்கு, வாடாது அளித்ததனால் - வாடாமல் கொடுத்ததனால், உம்மை வள்ளல் என்றே சொல்லல் ஆம் - உம்மை வள்ள லென்றே கூறலாம்; (எ - று.)

பொற்குழை யாதலால் 'பசுங்குழை' யெனப்பட்டது. அன்றிக் குறிஞ்சிநில மாதர் தழைக்குழை யணிவது முண்டாதலால் இவ்வாறு கூறினரெனினுமாம். துரை - அரசு.

" கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்பர், இடித்து முழங்கிய தோர் யோசனையோர் கேட்பர், அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர், கொடுத்தா ரெனப்படுஞ் சொல்" என மேலோர் கூறுதலால், "இரவலர்க்கே வீடாது குன்றத் திசையொளி தோன்ற விரும்பியத்தம் வாடாதளித்ததனுற் சொல்லலாமுமை வள்ளலென்றே" என்றுர்.

## குறிப்புப் பொருள்

இரவலர் - இரவில் மலர்தலை யுடையதாகிய குவளை மலர் (கண்), அத்தம் - கை, குன்றம் - தனம், இசை ஒளி - அதன்மீதுள்ள முத்து வட முதலிய ஆபரண காந்தி, தோன்ற - காணப்பட இதனுல் கண்புதைத்தலும் தனப்புறப்பாடும் தோன்றின. (122)

அதிரா விருந்த விருட்குநல் லார்கலி யாம்பனிக்குங்
கதிரா யுதித்த ரகுநாதன் றேவையிற் கைம்மலர்க
ளெதிராய தாணுவிற் கேற்றால வஞ்ச மிமையவர்க்கு
முதிராத தீஞ்சொற் கிளியே புனைதன் முறையல்லவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அதிரா இருந்த இருட்கும் - மிகுதியாயிருந்த இருளுக்கும், நல்லார் - நல்லோருடைய, கலிஆம் பனிக்கும் - வறுமையாகிய பனிக்கும், கதிராய் உதித்த - சூரியனுய் உதயஞ்செய்த, ரகுநாதன் தேவையில் - ரகுநாத சேதுபதியின் தேவை நகரில், கைம்மலர்கள் - கையிலுள்ள மலர்களை, எதிராய தாணுவிற்கு ஏற்று - எதிரே தோன்றிய சிவபெருமானுக்கு ஏற்பிப்பாயாக, ஆல வஞ்சம் - நஞ்சாகிய வஞ்சகப் பொருளை, இமையவர்க்கு - தேவர்களுக்கு, புனைதல் - ஏற்பித்தல், முதிராத தீஞ்சொல் கிளியே - முதிராத இனிமையாகிய மொழிகளையுடைய கிள்ளையே, முறையல்ல - முறைமையன்று ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

தாணு வில் - சிவன் வில்லாகிய மேருமலை (தனம்). ஆலவஞ்சம் இமையவர் - ஆலகால விஷ மமைந்த இமைமையுடையவர் (கண்), கைம் மலர்கள் - தாமரை மலர்போலுங் கைகள். இதனுல் தனப்புறப்பாடும் கண் புதைத்தலும் தோன்றின. (123)

வஞ்சத் திசைமன்ன ரோடிட வாணர் வறுங்கலியு
மஞ்சக் கனகந் தரும்ரகு நாத னருட்கரந்தை
நெஞ்சத்தின் மாலென் றுணர்ந்திக் குடந்தந்து நீர்மலர்ப்பூங்
கஞ்சத் திளந்திரு வென்றேநற் பாவையைக் கைக்கொண்டதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வஞ்சம் - கபடத்தையுடைய, திசைமன்னர் ஓடிட - திக்கிலுள்ள அரசர் ஓடும்படியாகவும், வாணர் - கவிவாணரது, வறும் கலியும் அஞ்ச - வறுமையாகிய தரித்திரமும் அஞ்சும்படியாகவும், கனகம் தரும் - கனகத்தைக் கொடுக்கிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், அருள் கரந்தை - அருளுக்கிடமாகிய கரந்தையில், நெஞ்சத்தில் - உன் மனத்தில், மால் என்று உணர்ந்து - என்னைத் திருமாலென்று அறிந்து, இக் குடம் தந்து - இந்தக் குடக்கூத்தை யெனக்குத் தந்து, நீர் - நீர், மலர்ப்பூங் கஞ்சத்து - அழகாகிய தாமரை மலரிலுள்ள, இளந்திரு என்றோ - இளமையாகிய திருமக ளென்று நினைத்தோ, நல் பாவையைக் கைக்கொண்டது - அழகிய பிரதிமையைக் கைப்பற்றினது ; (எ - று.)

"மன்னரோடிட" என்பதற்குக் கனகம் கானகத்தின் குறுக்கலாகவாயினும், கல் நகம் எனப் பிரித்துக் கற்களையுடைய மலையென்றாயினும், கன - கம் எனப் பிரித்துப் பெரிய ஆகாய மென்றாயினும் பொருளுரைத்துக்கொள்க. பெரிய ஆகாயம் - வீர சொர்க்கம். "வாணர் வறுங் கலியு மஞ்ச" என்றமையால் கனகம் பொன் எனக் கூறுக.

## குறிப்புப் பொருள்

குடக்கூத்து - திருமால்கூத்து. பாவையைக் கைக்கொண்டு விளையாடுவது மாதருக்கு இயல்பாதலால் "கஞ்சத்திளந் திருவென்றோ நற்பாவையைக் கைக்கொண்டது" என்றார். மால் - விரும்பினேன். குடம் - கும்பம் (தனம்). பாவை - கட்பாவை. இதனால் கண்புதைத்தலும் தனப் புறப்பாடும் தோன்றின. (124)

வெல்லும் பதாகைத் தளவாய் குமாரன்கை வேழமும்போர்
மல்லுங் கடந்த ரகுநாதன் றேவையில் வல்லவர்க்குப்
புல்லும் படையென்ப தோகொலை நாட்டம் புதைமறைத்துச்
சொல்லும் பொழுதணங் கேகுயத் தானுந் துயர்செய்வதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வெல்லும் பதாகை - வெற்றிக் கொடியை யுடைய, தளவாய் குமாரன் - தளவாய் புதல்வன், கைவேழமும் - துதிக்கையையுடைய யானையையும், போர் மல்லும் - போர்த் தொழிலை யுடைய மல்லரையும், கடந்த - ஜெயித்த, ரகுநாதன் தேவையில் - ரகுநாத சேதுபதியின் தேவை நகரிலுள்ள, அணங்கே - தெய்வப் பெண்ணே, சொல்லும்பொழுது - சொல்லுங் காலத்தில், வல்லவர்க்குப் புல்லும் படையென்பதோ - வல்ல

வர்க்குப் புல்லும் ஆயுத மென்பது கொண்டோ, கொலைநாட்டு அம்பு கை மறைத்து - கொலைத் தொழிலைத் தன்னிடத்து நிலைபெறுத்தப்பட்ட அம்பைக் கையால் மறைத்து, குயத்தாலும் துயர்செய்வது - கொடு வாளினாலும் துன்பஞ் செய்வது; (எ - று.)

வேழம் - குவலயா பீடம் என்னும் யானை. இது கஞ்சனால் கண்ணன்மீ தேவப்பட்டது. மல் - சாணூரன், முஷ்டிகன் என்கிற இரண்டு மல்லர்கள். இவர்களும் அவனால் ஏவப்பட்டவர்களே. 'வல்லவர்க்கும் புல்லும் படை' என்பதோர் பழமொழி.

## குறிப்புப் பொருள்

கொலை நாட்டம் - கொல்லுந் தொழிலுள்ள கண், புகை மறைத்து - (என்மேல்) பாயாதபடி மறைத்து. (புகை - புகுதல்) குயம் - தனம். இதனால் கண்புதைத்தலும் தனப்புறப்பாடும் தோன்றின. (125)

செங்கைத் தருவி னிசைவல்லி சேர்தள சிங்கமலர்
மங்கைக் கினிய ரகுநாதன் றேவையில் வார்க்கடங்காக்
கொங்கைக்கு நேரில்லை யென்றோ விடுத்துவெங் கூர்விழிக்கு
மங்கைத் தலமின்று நேரென்று காட்டிய தாரணங்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) செங்கைத் தருவின் இசை வல்லி சேர் தள சிங்கம் - செங்கையாகிய தருவினிடத்துப் புகழாகிய கொடி படரப்பெற்ற தள சிங்கம், மலர் மங்கைக் கினிய ரகுநாதன் - திருமகளுக் கினியனான ரகுநாத சேதுபதியின், தேவையில் - தேவை நகரில் உள்ள, ஆர் அணங்கே - அருமையாகிய தெய்வப் பெண்ணே, வார்க்கு அடங்கா - கச்சுக் கடங்காத, கொங்கைக்கு நேர் இல்லை யென்றோ - தனத்துக்கு நிகர் பொருள் இல்லையென்று நினைத்தோ, விடுத்து - (அவற்றை) விடுத்து, வெம்கூர் விழிக்கும் - கொடுமையாகிய கூரிய கண்ணுக்கும், அங்கைத்தலம் - அகங்கையானது, இன்று நேர் என்று காட்டியது - இப்பொழுது நிகரென்று காட்டியது; (எ - று.)

## குறிப்புப் பொருள்

"வார்க் கடங்காக் கொங்கைக்கு நேரில்லை யென்றோ விடுத்து" என்றமையால் தனத்தின் புறப்பாடும், "கூர்விழிக்கும் அங்கைத் தலமின்று நேரென்று காட்டியது" என்றமையால் கண் புதைத்தலுந் தோன்றின. (126)

களிக்குங் கயல்வெடி போயுயர் வானவெண் கங்கைத்தெண்ணீர்
குளிக்குங் கரந்தை ரகுநாதன் வெற்பிற் குவலயங்காத்
தளிக்கும் படிபெண் ணரசே துணிவுற்றவ் வாழியுயி
ரொளிக்கும் படிவிட லாமோ நெறியன் றுனக்கிதுவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) களிக்கும் கயல் வெடிபோய் - களிக்கின்ற சேல்மீன்கள் துள்ளி, உயர்வு ஆன - உயர்வாகிய, வெண் கங்கை - வெண்மையாகிய கங்காநதியில், தெண்ணீர்-தெளிந்த நீரில், குளிக்கும்-குளிக்கின்ற, கரந்தை-கரந்தையில் உள்ள, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையில் உள்ள, பெண் அரசே - பெண்ணரசியே, குவலயங் காத்தளிக்கும்படி - பூமண்டலத்தைக் காக்கும்படி, துணிவுற்று - நிச்சயித்து, அவ்வாழி - அந்த ஆணைச் சக்கரத்தை, உயிர் ஒளிக்கும்படி - உயிர்கள் மறையும்படி, விடலாமோ - விடலாகுமோ, உனக்கு இது நெறி அன்று - உனக்கிது நன்னெறியல்ல; (எ - று.)

## குறிப்புப் பொருள்

குவலயம் - கருங்குவளை (கண்), காத்து - மறைத்து, ஆழி - சக்ரவாகப்புள் (தனம்). "குவலயங்காத்து" என்றமையால், கண் புதைத்தலும், "ஆழி யுயிரொளிக்கும்படி விடலாமோ" என்றமையால், தனப் புறப்பாடும் தோன்றின. (127)

தடமேவு தேவைப் பதிபுரப் போன்றளை வாய்மகிழத்
திடமேவு வெற்றி ரகுநாதன் வெற்பிற் சிறியவணு
வடமேரு வெற்புக் கெதிர்நிற்கு மோவரி வாளரவப்
படமேவு மல்குன்மின் னேயுய்யு மாறின்று பார்த்தருளே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தடம் மேவு தேவைப் பதி புரப்போன் - பெருமை பொருந்திய தேவை நகரத்தைக் காப்பவன், தளவாய் மகிழ-தளவாய் களிக்கும்படி, திடம் மேவு வெற்றி - உறுதி பொருந்திய வெற்றியையுடைய, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையில் உள்ள, வரி - நீட்சியும், வாள் - ஒளியுமுள்ள, அரவப் படம் மேவும் - பாம்பின் படம் போலப் பொருந்திய, அல்குல் - நிதம்பப் பிரதேசத்தையுடைய, மின்னே - மின்போல்வாளே, சிறிய அணு - சிறிய அணுவானது, வடமேரு வெற்புக்கு எதிர் நிற்குமோ - வடமேரு மலைக்கு எதிரில் நிற்க

வல்லதோ, உய்யுமாறு - யான் பிழைக்கும் வண்ணம், இன்று பார்த்தருள்- இப்பொழுது நோக்கி யருள்வாய் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

வடமேரு வெற்பு - முத்து வட மணிந்த பொன்மலை போன்ற தனம், சிறிய அணு - பரமாணு ரூபமாகிய உயிர். "பார்த்தருள்" என்றமையால், கண் புதைத்தலும், "சிறியவணு வடமேரு வெற்புக் கெதிர்நிற்குமோ" என்றமையால், தனப் புறப்பாடும் தோன்றின. (128)

வரமேந்து வெற்றி யரக்கர் பிரானுயிர் வாட்டவொற்றைச்
சரமேந்து தேவை ரகுநா யகன்றமிழ் வீரைவெற்பி
லுரமேந்து நுங்கள் குலத்தியல் போவனத் தூடுவரக்
கரமேந்தி நின்ற மடவீர் கலைகள வாகின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வரம் ஏந்து - வரங்களைத் தாங்கிய, வெற்றி - வெற்றியை யுடைய, அரக்கர் பிரான் - அரக்கர் கோனாகிய இராவணனது, உயிர் வாட்ட - உயிரை வருத்தும் பொருட்டு, ஒற்றைச் சரம் ஏந்து - ஒற்றை யம்பைக் கையிற் கொண்ட, தேவை ரகுநாதன் - தேவை ரகுநாத சேதுபதியின், தமிழ் வீரை வெற்பில் - தமிழ் வீரை மலையில், கரமேந்தி நின்ற மடவீர் - கையேந்தி நின்ற மடமையுடையவரே, உரம் ஏந்தும் - வலிமையைத் தாங்கிய, நுங்கள் குலத்து இயல்போ - உங்கள் குலத்தியற்கையோ, வனத்தூடு வர - காட்டில் வர, கலை களவாகின்றது - ஆடை களவு போவது ; (எ - று.)

வரம் - மேன்மை யெனினுமாம். கரம் - நஞ்சு எனினுமாம்.

## குறிப்புப் பொருள்

வனம் - நீர், அது கடலுக்காகி, அது கண்ணை யுணர்த்திற்று, கலை - மான். களவாகின்றது - மறைதல். உரம் - மார்பு. இது தனத்தை யுணர்த்திற்று. "உரமேந்து நுங்கள் குலத்தியல்போ" என்றமையால், தனப் புறப்பாடும், "கலை களவாகின்றதே" என்றமையால், கண் புதைத்தலும் தோன்றின. (129)

வரிவளை நாலு மறுகூ டுலாவி வயங்குமுத்தஞ்
சொரிதரு தேவை ரகுநாதன் வெற்பிற் சுருதிபயின்
றரிவளர் பூங்குழ லாய்தமி யேனையிங் காள்வதற்குக்
கரிவெளி தோன்றப் பிணையேன் றொடர்ந்தின்று கைக்கொள்வதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வரிவளை - கீற்றுக்களை யுடைய சங்குகள், நாலு மறுகூடு உலாவி - நான்கு தெருக்களினும் தவழ்ந்து, வயங்கும் - விளங்குகின்ற, முத்தம் - முத்துக்களை, சொரிதரு - சொரிகின்ற, தேவை ரகுநாதன் வெற்பில் - தேவை ரகுநாத சேதுபதியின் மலையில், சுருதி பயின்று - சுருதிகளிற் பழகிய, அரி வளர் - வண்டுகள் மொய்க்கின்ற, பூங் குழலாய் - மலரை யணிந்த கூந்தலை யுடையாளே, தமியேனை - தமியனேனை, இங்கு ஆள்வதற்கு - இவ்விடத்தாளும் பொருட்டு, கரி வெளி தோன்ற - யானை வெளியாய்த் தோன்றுநிற்க, பிணை - பெண்மானை, தொடர்ந்து இன்று கைக் கொள்வது - தொடர்ந்து போய் இப்பொழுது கைப்பற்றுவது, ஏன் - யாதுக்காக; (எ - று.)

## குறிப்புப் பொருள்

கரி - யானை (தனம்), பிணை - பெண்மான் (கண்).

"கரிவெளி தோன்ற" என்றமையால், தனப் புறப்பாடும், "பிணையேன் றொடர்ந்தின்று கைக்கொள்வதே" என்றமையால், கண் புதைத்தலும் தோன்றின. (130)

சொற்பா வலர்தங் கிளைவாழச் செம்பொன் சொரியும்வண்மை
நற்பேறு தேவை ரகுநாதன் வெற்பி னலந்தருமிப்
பொற்பாரு நங்கையைச் சேர்ந்தா லுயிரைப் புரப்பதல்லால்
விற்பா வியமணி வெங்கரத் தூடென்கொல் வீழ்விப்பதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சொல் - புகழையுடைய, பாவலர் தம் கிளை வாழ - வித்வான்களுடைய உறவினர் வாழும்படி, செம்பொன் சொரியும் - செம்பொன்னைப் பொழிகின்ற, வண்மை - கொடையையுடைய, நல் பேறு - நல்ல பிரயோசனத்தையுடைய, தேவை ரகுநாதன் - தேவை ரகுநாத சேதுபதி, (அவனது) வெற்பில் - மலையில், நலந்தரும் - நன்மையைத் தருகின்ற, இ - இந்த, பொற்பு ஆரும் - அழகு நிறைந்த, நங்கையைச் சேர்ந்தால் - பெண்ணைக் கூடினால், உயிரை புரப்பது அல்லால் - உயிரைக் காப்பதே அன்றி, வில் பாவிய மணி - ஒளிபரவிய மணியை, வெம் கரத்தூடு - விருப்பத்தை யுண்டாக்குகின்ற கையில, வீழ்விப்பது என்கொல் - விழுத்துவது என்னே; (எ - று.)

வண்மை நற்பேறு - கொடையா லுண்டாகிய நல்ல புண்ணியம்.

## குறிப்புப் பொருள்

விற் பாவிய மணி - ஒளி பரந்த கண், கரத்தூடு வீழ்விப்பது-கையினால் மறைத்தல். கண்புதைத்தல் கூறவே தனப் புறப்பாடு தோன்றிற்று. (131)

கார்த்தாம வார்குழ லீர்பசுந் தேனுமிழ் கானறுந்தார்
வேர்த்தாம முல்லை ரகுநா யகன்றமிழ் வீரையன்னீர்
பார்த்தா தரவொடு பார்ப்பார் மறையிற் பரிந்தகத்தே
சேர்த்தாரென் றேநற் றனத்தாரிவ் வேதஞ் செயுந்துணிவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தாமம் - பூமாலையை யணிந்த, கார் - மேகம் போன்ற, வார்குழலீர் - நெடிய கூந்தலை யுடையவரே, பசுந்தேன் உமிழ் - பசுமை யாகிய தேனை யுமிழ்கின்ற, கான் - மணமுள்ள, நறு தார் - நல்ல மலர் மாலையையும், வேர் தாமம் முல்லை - குறுவேர் மாலையையும் முல்லை மாலை யையுமுடைய, ரகுநாயகன் - ரகுநாத சேதுபதியின், தமிழ்வீரை அன்னீர் - தமிழ் வீரையை நிகர்ப்பவரே, பார்த்து - நோக்கி, ஆதரவொடு-ஆசை யுடன், பார்ப்பார் - பார்ப்பார், மறையில் - வேத வழியால், பரிந்து அகத்தே சேர்த்தார் என்றே - விரும்பித் தம் வீட்டில் சேர்த்தனர் என்றே, நல் தனத் தார் - நல்ல தனமுடையார், இ - இந்த, வேதம் செயும் துணிவு-வேதாத் தியயநத்தைச் செய்யுந் துணிவு ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

பார்ப்பார் - பார்ப்பவர் (கண்), தனத்தார் - தனம் - பொன் (தேமல்). மறையிற் பரிந்தகத்தே சேர்த்தல் - வேத வழியால் விரும்பிப் பிராயச் சித்தஞ் செய்து தம் மநத்திற் சேர்த்தல். மறையில் - இரகசியத்தில், "மறையிற் பரிந்தகத்தே சேர்த்தார்" என்றமையால், கண் புதைத்தலும், "நற்றனத்தா ரிவ்வேதஞ் செயுந் துணிவே" என்றமையால் தனத்தின் வெளிப்பாடுந் தோன்றின. இவ்வேதம் - இத் துன்பம், (இ+ஏதம்). (132)

சிந்தாட வந்தவர் தம்மோ டெழிலைத் தெரிந்துகொள்ள
வந்தாட வர்பணி மால்ரகு நாதன் வரையணங்கே
பந்தாடல் கண்டன மம்மானை யாடலும் பார்க்கவரந்
தந்தாடல் செய்யி லுனக்கெய்துங் காண்வெகு தன்மங்களே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சிந்து ஆட வந்தவர் தம்மோடு - சமுத்திர ஸ்நாநம் செய்ய வந்தவருடன், எழிலைத் தெரிந்துகொள்ள வந்து - அழகைத் தெரிந்து

கொள்ளும் பொருட்டு வந்து, ஆடவர் பணி - புருஷர் வணங்குகின்ற, மால் - பெரியோன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வரை அணங்கே - மலையிலுள்ள தெய்வப் பெண்ணே, பந்தாடல் கண்டனம்- பந்தாட்டத்தைப் பார்த்தோம், அம்மானை யாடலும் பார்க்க - அம்மானை யாட்டத்தையும் பார்க்கும்பொருட்டு, வரம் தந்து - வரங் கொடுத்து, ஆள்தல் செய்யில் - என்னை யாளுவையாயின், உனக்கு - உன்றனக்கு, வெகு தன்மங்கள் எய்தும் - அநேகமாகிய புண்ணியங்க ளுண்டாகும்; (எ - று.)

"சிந்து" என்றது தென் குமரியாற்றை. இவன் குமரித் துறைக்கு அதிபனுதலால், "சிந்தாட வந்தவர் பணிமால் ரகுநாதன்" என்ருர்.

## குறிப்புப் பொருள்

"பந்து ஆடல் கண்டனம்" என்றது தனங்களின் அசைதலைக் கண் டோம் என்றபடி. "அம்மானை ஆடல்" என்பதை, அ மான் ஐ ஆடல் எனப் பிரித்து, அந்த மானினது அழகிய ஆடல் எனப் பொருள் கொள்க. (மான் - கண்.) இதனுல் தனவெளிப்பாடும், கண்புதைத்தலும் தோன்றின.

இல்லாரைக் கற்பக மாக்கி யுடைய ரெனினுமிகப்
பொல்லாரைக் கொல்லுஞ் செயரகு நாதன் பொருப்பனையீர்
வல்லாரைக் கற்ப வகையறிந் தேமுன்னு வாகடமா
நல்லாரைக் கோரிய கையாந் தகரையு நாடுவமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) இல்லாரை - வறியாரை, கற்பகம் ஆக்கி - கற்பக மர மாகச் செய்து, உடையார் எனினும் - உடையவர் என்ருலும், மிகப் பொல் லாரை - மிகவும் பொல்லாதவரை, கொல்லும் - கொல்லுகின்ற, செயம் - வெற்றியையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், பொருப்பு அனை யீர் - மலையை நிகர்த்தவரே, வல்லாரைக் கற்பவகை அறிந்தோம்-வல்லா ரைக் கற்பத்தின் வகையை யுணர்ந்தனம், முன்னு வாகடம் ஆம் - முற் பட்ட வாகடங்களிலுள்ள, நல்லாரைக் கோரிய - நல்லோரால் விரும்பப் பட்ட, கையாந்தகரையும் - கையாந்தகரைக் கற்பத்தையும், நாடுவம் - இனித் தேடுவோம்; (எ - று.)

கையாந்தகரை - கரிசாலை. "நல்லாரை" உருபு மயக்கம்.

## குறிப்புப் பொருள்

வல் - சூதாடு கருவி. இது ஆர் விகுதி பெற்று நின்று தனத்தை யுணர்த்திற்று. "கையாந்தகரை" என்பதைக் கைய அந்தகரை எனப்

பிரித்து கையினிடத்து அடங்கி யிருக்கிற யமனை யெனப் பொருளுரைக்க. இது கண்ணை யுணர்த்திற்று. அந்தகர் என்பது நீட்டும் வழி நீட்டல்,

"வல்லாரை யறிந்தோம்" என்றதனால் தனப்புறப்பாடும் "அந்தகரை நாடுவம்" என்றதனால் கண்புதைத்தலும் தோன்றின. (134)

விலைப்பா ரரச ரறியக் குனித்திகல் வென்றுவந்த
சொலைப்பா வலர்புகழ் மால்ரகு நாதன் சொனவரைக்குத்
தலைப்பாகை துண்டமென் சோமன்முன் வத்திரந்த னிற்கலந்தால்
மலைப்பார மாவணச் சேலை யிலாத மணமெனவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பார் அரசர் அறிய - பூமியையுடைய வேந்தர் அறியும் படி, வில்லைக் குனித்து - வில்லை வளைத்து, இகல் வென்று வந்த சொல்லை - பகைவரை வெற்றிகொண்டு வந்த செய்தியை, பாவலர் புகழ் - வித்வான் கள் புகழ்கின்ற, மால் - பெரியோனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதி யின், சொன்னவரைக்கு - பொன்மலைமேல், தலைப்பாகை - தலைப்பாகை யையும், துண்டம் மென் சோமன் - துண்டமாகிய மெல்லிய சோமனையும், முன் வத்திரம் தன்னில் கலந்தால் - முன்னைய வஸ்திரத்துடன் கலந்தால், வண்ணம் சேலையில்லாத மணம் என்ன - அழகாகிய சேலையிலாத மண மென்று, மலைப்பார் - தடுப்பார்கள்; (எ - று.)

அம்மா - வியப்பிடைச் சொல். தலைப்பாகை - கையின் நுனியை, துண்டம்-நாசியோடு கூடிய, மென் சோமன் முன் - மெல்லிய சந்திர னென்று நினைக்கத் தக்க, வத்திரம் தன்னிற் கலந்தால் - முகத்திற் சேர்த் தால், அம் மா வண்ணம் சேலையிலாத - அந்தப் பெரிதாகிய நிறத்தை யுடைய சேலையுடைய நல்லாத எனவுமாம். மணம் - கூட்டம். என்ன - என்ன பயனைத் தரும். (பா - பரவிய, கை - கையின், தலை - நுனியை,)

## குறிப்புப் பொருள்

சேல் - மீன் (கண்). மலைப்பாரம் என்றமையால், தனத்தின் புறப் பாடுந் தோன்றிற்று. (135)

கண்டரி கம்ப வுவாவைத் தெறலிற் கருதலர்வாள்
கொண்டரி கம்ப மிலாரகு நாத குபேரன்வரைப்
பண்டரி கம்புள மின்னே பொரவற்றம் பார்த்திருந்த
புண்டரி கம்பினை மேற்பாயத் தந்தி புறப்பட்டதே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கம்ப உவாவை - கட்டுத் தறியிற் கட்டப்படுகிறயானையை, அரி கண்டு தெறலின் - சிங்கங் கண்டு கொல்லுதல் போல, கருதலர் வாள் கொண்டு-பகைவருடைய வாளாயுதத்தைக் கொண்டே, அரி - (அவர்களை) அறுக்கின்ற, கம்பம் இல்லா - நடுக்கமற்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதி யாகிய, குபேரன் வரை - குபேரனது மலையில், பண்டு அரி கம்பு உள்ள- பழையோனாகிய திருமாலின் சங்கையுடைய, மின்னே - மின்னற் கொடி போல்வாளே, பொர - போர் செய்ய, அற்றம் பார்த்து இருந்த - சமயம் பார்த்திருந்த, புண்டரிகம் - புலியானது, பிணைமேல் பாய - பெண் மான் மேற் பாயவே, தந்தி புறப்பட்டது - யானை வெளிப்பட்டது; (எ - று.)

"கம்பமிலா" என்றது வீரத்தை வற்புறுத்தற்கு. "கம்பஞ் சிவந்த சலந்தரனுகங் கறுத்ததில்லை நம்பன்" என்றார் பெரியாரும்.

### குறிப்புப் பொருள்

அரி கம்பு, திருமாலின் சங்காகிய பாஞ்சசந்நியம் போன்ற கண்டம். புண்டரிகம் - தாமரைமலர் போன்ற கை. பிணை - பெண்மான் போன்ற கண். "புண்டரிகம் பிணைமேற் பாய" என்றமையால், கண் புதைத்தலும், "தந்தி புறப்பட்டதே" என்றமையால், தனப் புறப்பாடுந் தோன்றின. (136)

தீனத்தை வென்ற கொடைப்புகழ் கேட்குஞ் செவிக்கமுத
பானத்தை யொத்த ரகுநாத சேது பதிவரைவாய்க்
கானத்தை வானத்தை நேர்சொல் லிடையொரு கன்னியத்த
மீனத்தை நாடிச் செலக்கும்ப ராசி வெளிப்பட்டதே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தீனத்தை வென்ற - (எளியாரது) வறுமையை யழித்த, கொடைப்புகழ் - கொடையின் புகழானது, கேட்கும் செவிக்கு - கேட்கின்ற செவிகளுக்கு, அமுதபானத்தை யொத்த - அமிர்தம் பருகுதல் போன்ற, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையி லுள்ள, கானத்தை வானத்தைநேர் - இசையையும் ஆகாயத்தையும் நிகர்க்கின்ற, சொல் இடை-மொழியையும் இடையையுமுடைய, ஒரு கன்னி - ஒப்பற்ற பெண்ணே, அத்தம் - அஸ்த நக்ஷத்திரமானது, மீனத்தை நாடிச் செல்ல - மீனராசியைத் தேடிப்போக, கும்பராசி வெளிப்பட்டது - கும்ப ராசியானது புறப்பட்டது, ஏ - இஃதென்ன வியப்பு ; (எ - று.)

கானத்தை வானத்தை நேர்சொல் இடை, முறைநிரனிறைது. இடையை ஆகாயத்திற்கு உவமை கூறியது அதன் சிறுமையை யுணர்த்துதற்கு.

## குறிப்புப் பொருள்

அத்தம் - கை. மீனம் - கண். கும்பம் - குடம் (தனம்). "ஒரு கன்னியத்த மீனத்தை நாடிச் செல" என்றமையால், கண் புதைத்தலும், "கும்பராசி வெளிப்பட்டதே" என்றமையால், தனப் புறப்பாடும் தோன்றின. (137)

மஞ்சாங் கருதலர் போர்ப்படை மேற்சண்ட மாருதம்போல்
விஞ்சாங்க மூல பலரகு நாதன் வியன்சிலம்பிற்
பஞ்சாங்க மோதி மறைகாட்டிச் சொர்க்கமிப் பாற்படுத்தி
யஞ்சாங் குலத்தவர் பார்ப்பாரைச் சேர்ந்த ததிசயமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கருதலர் - பகைவரது, போர்ப்படைஆம் - போர்ப்படையாகிய, மஞ்சுமேல் - மேகத்தின்மீது, சண்டமாருதம்போல் - பெருங்காற்றுப்போல, விஞ்சு - மேல்வீழ்ந்து செல்லுகின்ற, அங்கம் - படை வகுப்புக்களோடு கூடிய, மூலபலம்-மூலபலத்தையுடைய, ரகுநாதன்-ரகுநாத சேதுபதியின், வியன்சிலம்பில் - பெரிய மலையின்மீது, பஞ்சாங்கம் ஓதி - பஞ்சாங்கம் சொல்லி, மறைகாட்டி - வேதத்தைக் காட்டி, சொர்க்கம் இப் பால்படுத்தி - சொர்க்கத்தை யிப்புறப்படுத்தி, அஞ்சாங் குலத்தவர்-பஞ்சம குலத்தார், பார்ப்பாரைச் சேர்ந்தது - பார்ப்பாரைச் சேர்ந்தது, அதிசயம் - ஆச்சரியம்; (எ - று.)

பஞ்சாங்கம் ஓதி - ஐவகை மயிர்முடியை யுடையாளே.

## குறிப்புப் பொருள்

மறை - ரகஸ்யஸ்தானம்; மறைத்தற்குரியது, சொர்க்கம் - தனம், அஞ்சாங்குலத்தவர் - கை, பார்ப்பார் - கண்.

"மறைகாட்டிச் சொர்க்க மிப்பாற் படுத்தி" என்றமையால், தனப் புறப்பாடும், "அஞ்சாங்குலத்தவர் பார்ப்பாரைச் சேர்ந்தததிசயமே" என்றமையால், கண் புதைத்தலும் தோன்றின. (138)

பொருப்ப தெதிர்வரல்போற் கஞ்சனுல் வந்த போதகத்தின்
மருப்ப தொசித்த சயரகு நாதன் மணியருவிப்
பருப்பத மீது மலருஞ் செங்காந்தள் பரவையிற்பூத்
திருப்ப ததிசயங் காண்குன்ற வாண ரிளங்கொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பொருப்பு எதிர் வரல்போல் - மலையானது எதிரே வருதல்போல், கஞ்சனால் வந்த - கஞ்சனாலேவப்பட்டு வந்த, போதகத்தின் மருப்பு - குவலயா பீடமென்னும் யானையின் கொம்பை, ஒசித்த - ஒடித்த, செயம் - வெற்றியையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மணி அருவி - அழகிய அருவியாறுகளையுடைய, பருப்பத மீது - மலையின்மேல், மலரும் - அலர்கின்ற, செங்காந்தள் - செங்காந்தள் மலர், பரவையில் பூத்திருப்பது - கடலில் பூத்திருப்பது, அதிசயம் - ஆச்சரியம், குன்ற வாணர் இளங்கொடியே - குன்றவாணருடைய இளங் கொடிபோல்பவளே; (எ-று.)

"பொருப்பது" என்பதில் அது, பகுதிப்பொருள் விகுதி. காண் - அசை. காந்தள் குறிஞ்சிநிலத்துப் பொருளாதலால் "பருப்பத மீது மலருஞ் செங்காந்தள்" என்றும், அது நெய்தல்நிலத்து மலர்வது வியப்புக்குக் காரணமாதலால் "பரவையிற் பூத்திருப்பததிசயம்" என்றுங் கூறினார். மணி யருவி - மணிகளைக்கொழிக்கிற அருவி எனினுமாம். மணி யருவிப் பருப்பதம் - முத்துமாலை யணிந்த தனத்துக்குவமை. "மேருவின் குவட்டின் வீழும் விரிதிரைக் கங்கைநீர்போல், ஆரமுற்றிலங்குகின்ற அணியிழை மடவார் கொங்கை" என்றார் மேலோரும்.

## குறிப்புப் பொருள்

பருப்பதம் - தனம், செங்காந்தள் - கை, பரவை - கண். "மணி யருவிப் பருப்பதம்" என்றமையால் தனப் புறப்பாடும், "செங்காந்தள் பரவையிற் பூத்திருப்பததிசியம்" என்றமையால், கண் புதைத்தலும் தோன்றின. (139)

நாலாயு தத்தை யிகன்மேற் றயித்தியர் ஞாட்பிலெதிர்
மாலாயு தத்தைப் புரிரகு நாதன் வரையணங்கே
வேலாயு தத்தைக்கைக் கொண்டுநின் றூயெதிர் வெற்புமெய்தாற்
காலாயு தத்தைய னென்றுனை யேதொழுங் காசினியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) இகல் மேல்-பகைவர்மீது, நால் ஆயுதத்தை-நான்குவித மாகிய ஆயுதங்களையும், தயித்தியர் ஞாட்பில் - அசுர யுத்தத்தில், எதிர் - எதிர்ந்த, மாலாயுதத்தை - திருமால் பிரயோகிக்கிற ஆயுதமாகிய சக்கரப்படையையும், புரி - பிரயோகிக்கிற, ரகுநாதன்வரை அணங்கே - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள தெய்வப்பெண்ணே, வேலாயுதத்தை கைக்கொண்டு

நின்ருய் - வேலாயுதத்தை கையிற்ருங்கி நின்றனே, எதிர் வெற்பும் எய் தால் - எதிரே தோன்றுகிற மலேயையும் எய்தனேயாயின், காலாயுதத்து ஐயன் என்று - முருகக் கடவுளென்று, காசினி-உலகமானது, உன்னேயே தொழும் - உன்னேயே வணங்கும் ; (எ - று.)

"வெற்பு" என்றது கிரெளஞ்சகிரியை. "காலாயுதம்"—காலில் முள்ளாகிய ஆயுதத்தையுடைய கோழி. "காலாயுதத்தையன்" என்ப தற்குக் கோழிக் கொடியையுடைய கடவுள் என்று பொருளுரைக்க.

## குறிப்புப் பொருள்

வேலாயுதம் - கண், கைக்கொள்ளல் - புதைத்தல். வெற்பு - தனம். "வேலாயுதத்தைக் கைக்கொண்டு நின்ருய்" என்றதனுல், கண் புதைத்த லும், "எதிர் வெற்பு மெய்தால்" என்றதனுல், தனப்புறப்பாடும் தோன் றின. (140)

தொகுந்தள வாய்மகிழ் தெய்வீகத் தேவைத் துறைக்கரசச்
சகுந்தவி லோதனத் தான்ரகு நாதன் சயிலமின்னே
புகுந்திறை யைவர் தெரியாமன் மச்ச புரத்திருக்க
மிகுந்துரி யோதன பார வணிகள் வெளிப்பட்டவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தொகும் தளவாய் மகிழ் - கூடுகின்ற சேநாதிபதி மகிழ் கின்ற, தெய்வீகம் - தெய்வத்தன்மை யமைந்த, தேவைத்துறைக்கு அரசு - தேவைத் துறைக்கு வேந்தன், அ - அந்த, சகுந்த விலோதனத்தான் - கருடக் கொடியை யுடையவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) சயிலம் - மலேயிலுள்ள, மின்னே - மின்கொடிபோல்வாளே, இறை ஐவர் - வேந்தரைவரும், புகுந்து - பிரவேசித்து, தெரியாமல் - ஒருவருக்குந் தெரியாமல், மச்ச புரத்து இருக்க - மச்ச தேசத்திலிருக்க, மிகும் - மிகுந்த, துரியோதனன் - துரியோதனனது, பார அணிகள் - பெரிய படைவகுப்பு கள், வெளிப்பட்ட - வெளிப்பட்டன ; (எ - று.)

சகுந்தம் . பறவை. அஃது இவ்விடத்துக்கேற்பக் கருடப்பறவையை யுணர்த்திற்று, அரசச் சகுந்தம் - ராஜபக்ஷியாகிய கருடன் என்று பொருள் கூறினுமமையும். இப்பொருட்கு, துறைக்கு என்பதைத் துறை யில் என உருவு மயக்கமாக்குக.

## குறிப்புப் பொருள்

இறையைவர் - இறையையுடைய கை, மச்சபுரம் - மீன் வடிவு போன்ற கண், "தனபாரவணிகள் வெளிப்பட்ட" என்றதனுல், தனங்

களின் புறப்பாடும், "இறையவர் தெரியாமல் மச்சபுரத்திருக்க" என்றதனால், கண்புதைத்தலும் தோன்றின. (141)

அங்க கலிங்க மலையாள மீழ மனைத்தும்வென்ற
சிங்க விசய சயரகு நாதன் சிலம்பிற்பொன்னே
சங்கிலி யாரையுங் கண்டேன் பரவை தனையுங்கண்டான்
மங்கள சுந்தர னென்றெனை யேதொழு மண்டலமே.

## வெளிப்படைப்பொருள்

அங்க கலிங்க மலையாளம்-அங்க கலிங்க மலையாள தேசங்களும், ஈழம் - ஈழ தேசமுமாகிய, அனைத்தும் - எல்லாவற்றையும், வென்ற - செயித்த, சிங்கம் - சிங்கம் போன்ற, விசய சயம் - மிகு வெற்றியையுடைய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், சிலம்பில் - மலையிலுள்ள, பொன்னே - பொன்போல்வாளே, சங்கிலியையும் கண்டேன் - சங்கிலியாரையும் பார்த்தேன், பரவைதனையுங் கண்டால் - பரவையாரையும் பார்த்தால், மங்கள சுந்தரன் என்று - மங்கள சுந்தரனென்று புகழ்ந்து, மண்டலம் - பூமண்டலமானது, என்னையே தொழும் - என்னையே வணங்கும்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

சங்கிலியார் - பொற் சங்கிலி முதலியவற்றை யுடையவர், (தனம்.) பரவை கடல்-(கண்.) "சங்கிலியாரையும் கண்டேன்" என்றதனால், தனப் புறப்பாடும், "பரவைதனையும் கண்டால்" என்றதனால், கண்புதைத்தலும் தோன்றின.

மங்கள சுந்தரன் - மணக் கோலத்தையுடைய சுந்தரமூர்த்தி சுவாமிகள். (142)

ஆலங்கை யாத வமுதின்முன் னாளுண் டலகையைக்கொ
லேலங்கை யாதருண் மால்ரகு நாதன்வெற் பேந்திழையீர்
சேலங்கைக் கொண்டபின் னேமலை யாளமுந் திண்டிக்கல்லைப்
போலங்கை யாமலை தில்லாத போது புலப்படுமே.

## வெளிப்படைப் பொருள்

ஆலம் - விஷத்தை, கையாத அமுதின் - கைக்காத அமிர்தத்தைப் போல, முன் நாளுண்டு - முற்காலத்துண்டு, அலகையை - பூதகியை, கொல் ஏலம் கையாது அருள் - கொல்லுந்தொழில் ஏற்றலை வெறுக்காது செய்த,

மால் - பெரியோனாகிய, ரகுநாதன் வெற்பு - ரகுநாத சேதுபதியின் மலைமேலுள்ள, ஏந்திழையீர் - பெண்ணே, சேலங்கைக் கொண்ட பின்னே - சேலத்தைக் கைக் கொண்ட பிறகே, மலையாளமும் - மலையாள தேசமும், திண்டிக்கல்லைப் போல் - திண்டிக்கல்லைப் போல, அங்கையாம் - அங்கை யாகிய, அஃது - அது, இல்லாதபோது - இல்லாதபோது, புலப்படும் - காணப்படும்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

சேல் - மீன் (கண்), மலையாளம் - தனம். மலையாளமும் திண்டிக் கல்லைப்போல் வெளிப்பட்டதனால் தனப்புறப்பாடும், "சேலங் கைக் கொண்டபின் அஃதில்லாதபோது புலப்படும்" என்றதனால், கண்புதைத் தலும் புறப்பட்டன. (143)

பாவூர்சங் கிராம விசைசூதர் பாடப் பவனிவரு
மாவூர் நகுலனெ னும்ரகு நாதன் வரையனையீர்
கோவூர்முன் காட்டிய பின்குன் றத் தூர்வழி கூட்டியப்பா
னாவூர்நுங் காஞ்சி புரங்காட் டுதறொண்டை நாட்டியல்பே.

## வெளிப்படைப் பொருள்

பா ஊர் சங்கிராம இசை - கவிகளி லமைந்த போர்ப் புகழை, சூதர் பாட - பாணர் பாட, பவனிவரும் - உலாவருகின்ற, மாவூர் நகுலன் என்னும் - குதிரையேறி நடத்துதலில் நகுலனென்று சொல்லுதற்குரிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், வரை அனையீர் - மலையை நிகர்ப்பவரே, கோவூர் முன் காட்டிய பின் - கோவூரை முன்னே காட்டிய பிறகு, குன் றத்தூர் வழி கூட்டி - குன்றத்தூருக்கு வழியைக் கூடுவித்து, அப்பால் - அதற்குமேல், நாவூர் நும் காஞ்சிபுரங் காட்டுதல் - நடுவூராகிய உமது காஞ்சி புரத்தைக் காட்டுதல், தொண்டை நாட்டியல்பு - தொண்டை நாட்டினியற் கையாம்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

கோ - கண்ணாதலால், ஊர் என்பதைச் சேர்த்துக் கோவூர் என்றும், குன்று - மலை, அது மலை போலுந் தனத்தை யுணர்த்தலால், ஊர் என் பதைச் சேர்த்துக் குன்றத்தூர் என்றும், காஞ்சி என்னும் ஒருவகை யிடை யணி, அதனை யணிந்த இடையை யுணர்த்தலால், புரம் என்பதைச் சேர்த் துக் காஞ்சிபுரம் என்றும் கூறினர். "கோவூர் முன்காட்டியபின்" என்ற தனால், கண்புதைத்தலும், "குன்றத்தூர் வழிகூட்டி யப்பால் நாவூர் நுங் காஞ்சிபுரம் காட்டுதல்" என்றதனால் தனப்புறப்பாடுந் தோன்றின. (144)

எண்கட்டு மானபுற் றோன்று டலர்படை யேங்கவடுந்
திண்கட்டு வாங்குந் துரைரகு நாதவ சீரன்வரைப்
பண்கட்டு மென்மொழி யீர்நீர் மிகவும் பலரறியக்
கண்கட்டு வித்தையுஞ் செப்பிடு வித்தையுங் கற்றவரே.

## வெளிப்படைப் பொருள்

எண் கட்டு மானம் - மதித்தற்குரிய உறுதிப்பாட்டையும் பெருமையையுமுடைய, புல் தோன்று - புலியைப் போலத் தோன்றுகிற, ஆடலர் படை ஏங்க - போர் வீரருடைய படைகள் அஞ்சும்படி, அடும் - கொல்லுகின்ற, திண்கட்டு வாங்கும் - உறுதியாகிய காவலையழிக்கின்ற, துரை - பிரபு, ரகுநாத வசீரன் - ரகுநாத சேதுபதி யென்னும் துரை, (அவனது) வரை - மலையிலுள்ள, பண்கட்டும் மென் மொழியீர் - பண்ணைத் தடை செய்கின்ற மென் சொல்லை யுடையீர், நீர் - நீர், மிகவும் - மிகுதியும், பலர் அறிய - பலருமறிய, கண்கட்டு வித்தையும் செப்பிடு வித்தையும் கற்றவர் - கண்கட்டு வித்தையையும் செப்பிடு வித்தையுங் கற்றவர்; (எ - று.)

'ஆடவர்' எனப் பாடமோதி, மன்னரது படை யென்றுரைப்பினுமாம். ஏங்க - இரங்க எனினுமாம். 'பண்கட்டு' என்பதற்குப் பண்களினமைதி போலமைந்திருக்கின்ற என்றுரைத்தலு மொன்று.

## குறிப்புப் பொருள்

கண்கட்டு வித்தை - கண் புதைத்தல், செப்பிடு வித்தை - தனத்தை வெளிப்படுத்தல். "கண்கட்டு வித்தை" என்றதனால், கண் புதைத்தலும், "செப்பிடு வித்தை" என்றதனால் தனப்புறப்பாடுந் தோன்றின. (145)

தாவியங் கற்ற மிலாமற் பொருதச் சமரிலறை
கூவியங் கத்திகல் வெல்ரகு நாத குமுணன்வெற்பி
லோவியங் கற்பக வல்லியன் னீரிவ் வுலகியற்கை
காவியங் கற்றவர்க் கேயத்த மாகுங் கடபடமே.

## வெளிப்படைப் பொருள்

தாவி - மேற்சென்று, அங்கு அற்றம் இல்லாமல் பொருது - அவ்விடத்துச் சமயம் பாராமற் போர் செய்து, அச் சமரில் - அந்த யுத்தத்தில், அறைகூவி - பொரவழைத்து, அங்கத்து - சதுரங்கத்தை யுடைய, இகல் வெல் - பகைவரை வென்ற, ரகுநாத குமுணன் வெற்பில் - ரகுநாத குமுணனது மலையிலும், ஓவியம் - சித்திரப் பாவையையும், கற்பகவல்லி - கற்

பகக் கொடியையும், அன்னீர் - ஒப்பவரே, கடபடம் - கடபடம் என்பது, காவியங் கற்றவர்க்கே - காவியம் படித்தவர்க்கே, அத்தம்ஆகும் - பொருள் விளங்கும், இவ்வுலகியற்கை - (இதுவே) இந்த வுலக வியற்கை ; (எ - று.)

அங்கம் - ரதம், கஜம், துரகம், பதாதி என்னும் நால்வகை யங்கங்கள். கடபடம் - தர்க்க நூலார் நியாயம் விவகரித்தற்குரிய இரண்டு சொல். அவை கடம்படம் என்பன. இவற்றிற்கு முறையே குடம் ஆடை என்பது பொருள்.

## குறிப்புப் பொருள்

காவி - கருங்குவளை (கண்), அத்தம் - கை, கடபடம் - மதத்தையும் நெற்றிப் படத்தையுமுடைய யானை (தனம்). 'கடபடம்' என்பதனை 'படம் கடம்' என மாறி உத்தரீய மணிந்த குடம் என்றுரைப்பினும் பொருந்தும். காவி அற்றவர்க்கு - குவளை மலர் போலுங் கண்ணில்லாதவர்க்கு, 'கண்ணில்லாமை - கண் புதைத்தமை.' அங்கு - அசை, கண் புதைத்தலும் தனப் புறப்பாடு முய்த்துணர்க. (146)

கண்டரி தங்கை யுரத்தையு மூக்கையுங் காதையும்வாட்
கொண்டரி கொண்டல் ரகுநாதன் றேவைக் குலவரைப்பூ
வண்டரி கங்குற் குழலீர் நும்முந்தி மடியலையாற்
புண்டரி கங்கண் முழுகத் தெரியும் புளினங்களே.

## வெளிப்படைப் பொருள்

கண்டு - பார்த்து, அரி - பகைவனாகிய ராவணனது, தங்கை - தங்கையாகிய சூர்ப்ப நகையின், உரத்தையும் மூக்கையும் காதையும் - உரத்தையும் நாசியையும் செவியையும், வாள்கொண்டு அரி - வாள் கொண்டறுத்த, கொண்டல் - மேக வண்ணன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) தேவை - தேவை நகரத்திலுள்ள, குலவரை - உயர்வாகிய மலையினிடத்து, பூ - மலர்களை, வண்டு - வண்டுகள், அரி - உழுதற்கிடமாகிய, கங்குல் குழலீர் - இருள் போன்ற கூந்தலை யுடையீர், நும் உந்திமடி அலையால் - உமது கடலின் மறிகின்ற அலையால், புண்டரிகங்கள் முழுக - தாமரைகள் முழுக, புளினங்கள் தெரியும் - மணற் குன்றுகள் தோன்று கின்றன ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

உந்தி மடி அலையால் - தள்ளி மறிகின்ற கடலில் (கண்ணில்), புண்டரிகங்கள் முழுக - தாமரை மலர்கள் (கைகள்) படிய, புளினங்கள் தெரியும்- சக்ரவாகப் பறவையின் கூட்டங்கள் (தனங்கள்) தெரியும். இதனால், கண் புதைத்தலும் தனப்புறப்பாடும் தோன்றின. (147)

நாளத்தை யம்புய வன்னப் பணைச்செம்பி நாடன்சக்ர
வாளத்தை வென்ற புயரகுநாதன் மணிவரைவேள்
காளத்தை வெல்லுரை நாடகப் பாவையைக் காட்டுஞ்சும்மா
தாளத்தை யேந்திநின் றீர்மத் தளமுந் தருகுவனே.

## வெளிப்படைப் பொருள்

நாளத்து - நாளத்தையுடைய, ஐ - அழகாகிய, அம்புயம் - தாமரை மலர்கள் நெருங்கின, வன்னப் பணை - அழகிய வயல்கள் சூழ்ந்த, செம்பி நாடன் - சோழ நாட்டை யுடையவன், சக்ரவாளத்தை வென்ற - சக்ர வாளகிரியைச் செயித்த, புயம் - புயங்களை யுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) மணிவரை - அழகாகிய மலையில், வேள் காளத்தை வெல் உரை - மன்மதனது திருச்சின்னத்தை வெல்லுகிற சொல்லை யுடைய, நாடகப் பாவையை - நாட்டியப் பெண்ணை, காட்டும் - காட்டுவீர், சும்மா தாளத்தை ஏந்தி நின்றீர் - சும்மா தாளத்தைத் தாங்கிநின்றீர், மத்தளமுந் தருகுவன் - மத்தளத்தையுங் கொடுப்பேன்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

வேள்காளம் - குயில், நாடகப் பாவை - பார்த்தற்குரியதாய் உள்ளிருக்கிறகட் பாவை, தாளம் - தனம், மத்தளம் - தோள். 'நாடகப் பாவையைக் காட்டும்' என்றமையால், கண் புதைத்தலும், 'தாளத்தையேந்தி நின்றீர்' என்றமையால், தனப் புறப்பாடுந் தோன்றின. (148)

இடனாக மற்றை வலனாகச் சாரி யியற்றிடுவாட்
டிடனாக வமெச் சியல்ரகு நாதன் சிலம்பிற்பெண்ணே
கடனாகத் தந்த வரையெதி ரேவரக் கண்டுமுறி
யுடனே கொடுக்க வுடையார் பிணையை யொளிப்பதென்னே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) இடன் ஆக - இடமாகவும், மற்றை வலன் ஆக - மற்றவலமாகவும், சாரி இயற்றிடு - சாரிவருகின்ற, திடன் - உறுதியாகிய, வாள் ஆகவம் - வாட்போரில், மெச்சு இயல் - மெச்சுதற்குரிய இயற்கையை யுடைய, ரகுநாதன் சிலம்பில் பெண்ணே - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள மாதே, கடனாகத் தந்தவரை - பொருளைக் கடனாகக் கொடுத்தவரை, எதிரே வரக்கண்டு - எதிரில் வரப்பார்த்து, முறி - முறிச்சீட்டை, உடனே கொடுக்க - உடனே தர, உடையார் - பொருளுடையவர், பிணையை ஒளிப்பது என்னே - பிணையை மறைப்பதற்குக் காரணம் யாதோ; (எ-று.)

### குறிப்புப் பொருள்

கடன் நாகத் தந்த வரை - மதத்தை யுடைய யானைக் கொம்பு போன்ற மலை (தனம்). முறி உடையார்- மாந்தளிரின் தன்மையை யுடையார் (கை). பிணை - பெண்மான் (கண்). "கடனாகத் தந்தவரை யெதிரேவரக்கண்டு" என்றமையால், தனப்புறப்பாடும், "பிணையை யொளிப்பதென்னே" என்றமையால், கண்புதைத்தலுங் கோன்றின. (149)

படியு மமர ருலகமு மாசையும் பாதலமுங்
கெடிகொ ளிசை ரகு நாதவ சீரன் கிரியணங்கே
கொடியு முரசுங் கணையுஞ் சிலையுங் கொடாமலணி
முடிமாத் திரமத வேளுக் களித்தன் முறையல்லவே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) படியும் - பூவுலகமும், அமரர் உலகமும் - தேவருலகும், ஆசையும் - திசைகளும், பாதலமும் - பாதாளமும் ஆகிய, கெடி கொள் இசை - ஊர்களிற் பரவிய புகழையுடைய, ரகுநாத வசீரன் - ரகுநாத பூபதியின், கிரிஅணங்கே - மலையிலுள்ள பெண்ணே, மதவேளுக்கு - மன்மதனுக்கு, கொடியும் - கொடியையும், முரசும் - முரசத்தையும், கணையும் - அம்பையும், சிலையும் - வில்லையும், கொடாமல் - தாராமல், அணி - அலங்கரிக்கப்பட்ட, முடிமாத்திரம் அளித்தல் - மகுடத்தை மாத்திரம் கொடுத்தல், முறையல்ல - முறைமையல்ல ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

கொடி - மீன், முரசு - கடல், கணை - தாமரை மலர் அல்லது நீல மலர், இம் மூன்றும் (கண்), சிலை - வில் (புருவம்), முடி - கிரீடம் (தனம்.) 'கொடி முதலியவற்றைக் கொடாமல்' என்றமையால், கண்புதைத்தலும், 'முடி மாத்திரம் மதவேளுக்களித்தல்'? என்றமையால், தனப்புறப்பாடும் தோன்றின. மற்றச் செய்யுட்கும் இங்ஙனமே உய்த்துணர்க. (150)

கேட்டத் தகுவரு முட்கு மதுகைக் கிளர்புலவர்
பாட்டத் தகுதி ரகுநாத சேது பதிவரைவாய்
நாட்டத் தகுவளை வேழங் குவளை நளினமல்லி
காட்டத் தகுமிள நீரொன்று காட்டல் கணக்கல்லவே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்). அத் தகுவரும் கேட்டு உட்கும் மதுகை - அந்த அவுணரும் கேட்டு மனமுடைதற் கேதுவாகிய வலிமையோடு, கிளர்புலவர் - விளங்கு

கின்ற புலவரது, பாட்டத் தகுதி - பாட்டிற்குத் தகுதியாகிய, ரகுநாத சேது பதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், நாட்டத்தகு வள்ளை - நிலை பெறுத்தற்குரிய வள்ளைத்தண்டு, வேழும் - கரும்பு, குவளை - நீலமலர், அல்லி - செவ்வாம்பல் மலர், (ஆகிய இவைகளை) காட்டத்தகும் - காட்டுதல் தகுதியாம், இளநீர் ஒன்று காட்டல் கணக்கல்ல - இளநீ ரொன்றையுமே காட்டுதல் ஒரு கணக்கிற் பட்டதல்ல ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

வள்ளை - காது, வேழும் - தோள், குவளை - கண், அல்லி - வாய், இளநீர் - தனம். (151)

ஆரங் கராசல மாநிதி வீரர்க் களித்திகன்மேற்
போரங்க மாக வருரகு நாதன் பொருப்பனையீர்
பேரங்க மாகும்ப கோணத்திற் பாதியைப் பின்மறைத்தீர்
சாரங்க பாணி யெனும்பேரெவ் வாறு தகுமுமக்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஆரம் - முத்துமாலைகளையும், கராசலம் - கைம்மலைகளை யும், மாநிதி - பெரிய செல்வத்தையும், வீரர்க்கு அளித்து - வீரர்களுக்குக் கொடுத்து, இகல்மேல் - பகைவர்மீது, போர் அங்கம்ஆக வரு - போர் உறுப்பாக வருகின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், பொருப்பு அனையீர் - மலையை நிகர்த்தவரே, பேர் அங்கம் ஆக - பெரிய உறுப்பாக, கும்பகோணத்தில் பாதியை - கும்பகோணத்தில் அரைப்பங்கை, பின் மறைத்தீர் - பின்னே யொளித்தீர், உமக்கு - உமக்கு, சாரங்கபாணி எனும் பேர் - சாரங்கபாணி யென்கிற பெயர், எவ்வாறு தகும் - எப்படித் தகும் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

கும்பம் - குடம் (தனம்). சாரங்கம் - மான் (கண்). பாணி - கை. சாரங்கபாணி - கும்பகோணத்திலுள்ள திருமால். (152)

விலையை மறைக்குங் கனக கிரீடிவி வேகத்தெண்ணெண்
கலையை மறைக்கு மநுரகு நாதன் கவின்வரைவாய்ச்
சிலையை மறைக்கு நுதலீர்முன் னுகத் தெரிதலின்றி
வலையை மறைத்துவைத்தீர் பற்றவோ சக்ர வாகத்தையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) விலையை மறைக்கும் கனகம் - விலை மதிக்கப்படாத பொன்னாற் செய்யப்பட்ட, கிரீடி - முடியையுடையவன், விவேகத்து - தன்னறிவினால், எண்ணெண் கலையை மறைக்கும் - அறுபத்துநான்கு கலைகளையும் அடக்குகின்ற, மநு - மநு, ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) கவின்வரைவாய் - அழகாகிய மலையினிடத்து, சிலையை மறைக்கும் நுதலீர் - வில்லை வெல்லுகின்ற புருவத்தையுடையவரே, முன்னாகத் தெரிதலின்றி - முன்னாகத் தோன்றுதலில்லாமல், வலையை மறைத்து வைத்தீர் - வலையை யொளித்து வைத்தீர், (இப்படிச் செய்தது) சக்ரவாகத்தைப் பற்றவோ - சக்கிரவாகத்தைப்பற்றவோ ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

வலை - கண், சக்ரவாகம் - தனம், பற்றவோ-(நான்) பிடிக்கவோ. (153)

படமினி யார்வரைந் தெண்டிக்குங் காட்டெழிற் பார்த்திபன்கைத்
திடமினினீண் மந்த்ர வாள்ரகு நாதனற் றேவைவெற்பிற்
றொடமினி யோங்கு மணியீர்மை வாரியைத் தூர்த்தபின்பு
குடமினி யேதுக்கு நீரே வலியக் கொடுக்கினுமே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) இனியார் - நண்பர், படம் வரைந்து - படமெழுதி, எண்டிக்கும் காட்டு - எட்டுத்திசையினுங் காட்டுகின்ற, எழில் - அழகையுடைய, பார்த்திபன் - அரசன், கை - கையின்கண், திடம் - உறுதியாகிய, மின்னின் - மின்னலைப்போன்ற, நீள் - நீண்ட, மந்த்ரவாள் - மந்த்ரவாளையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின். நல்தேவை வெற்பில் - நல்ல தேவை மலையில், தொட மின்னி ஓங்கும் அணியீர் - தொடுதலும் மின்னி மிகவிளங்குகின்ற ஆபரணத்தையுடையவரே, மைவாரியைத் தூர்த்த பின்பு - கருங் கடலைத் தூர்த்த பிறகு, நீரே வலியக் கொடுக்கினும் - நீரே வலியக் கொடுத்தாலும், இனி குடம் ஏதுக்கு-இனிக்குடம் யாதுக்கு ; (எ -று.)

மந்திரவாள் - தைவாநுக்ர வரத்தாற் கிடைத்த வாள்.

### குறிப்புப் பொருள்

மைவாரி - கண், தூர்த்தபின்பு - மூடின பிறகு, குடம் - தனம். (154)

வெம்பிற் கரள மெனக்காய்ந் திகலை விடுத்துத்தன்னை
நம்பிற் கருணை புரிரகு நாதன் நரேந்த்ரன்வெற்பிற்
கெம்பிற் கனக மணியணி யீர்முனங் கேசவன்கை
யம்பிற் குரன்பட வெற்பர ணங்கள கப்பட்டவே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வெம்பின் - (ஒருவர்) கோவித்தால், கரளம் எனக் காய்ந்து - (அவரை) விஷம்போலக் கோவித்து, இகலே விடுத்து - பகைமையைவிட்டு, தன்னை நம்பின் - தன்னை நம்பினால், கருணைபுரி - (அவர்கள்மேல்) கிருபை செய்கிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியாகிய, நரேந்த்ரன் வெற்பில் - நரசிரேஷ்டனது மலையில், செம்பின் கனகம் மணி அணியீர் - செம்பினாலும் பொன்னாலு மியன்ற அழகிய ஆபரணத்தையுடையவரே, முன்னம் - முற் காலத்தில், கேசவன் கை அம்பின் - கேசவன் கை அம்பினால், கரன்பட - கரன் இறக்க, வெற்பு அரணங்கள் அகப்பட்ட - மலையரண்கள் எமக்குக் கிடைத்தன; (எ - று.)

'கேசவன்' என்றது ஸ்ரீராமரை.

### குறிப்புப் பொருள்

கேசவன் கை அம்பு - ராமபாணம் (கண்). கரன் பட - கைகள் பொருந்த. வெற்பரணங்கள் - தனங்கள். (155)

வல்லாரங் காட்டிய பம்பரத் திற்சுழல் வாம்பரிமேற்
செல்லாரங் காட்டு முரரகு நாதன்றன் றேவைவெற்பில்
வில்லாரங் காட்டு மணியீர் மதிப்பு மிகுந்ததனக்
கல்லாரங் காட்டிய நீரேகல் லாரமுங் காட்டினன்றே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வல்லார் அங்கு ஆட்டிய பம்பரத்தின் - வல்லவர் அவ் விடத்தாட்டிய பம்பரம்போல, சுழல் - சுற்றுகின்ற, வாம் பரிமேல் செல் - தாவுகின்ற குதிரைமீதேறிப் போகின்ற, ஆரம் காட்டும் உரம் - முத்து வடம் முதலியவற்றைக் காட்டுகின்ற மார்பையுடைய, ரகுநாதன்தன் தேவை வெற்பில் - ரகுநாத சேதுபதியின் தேவை மலையில், ஆரம்வில் காட்டும் அணியீர் - முத்துக்கள் ஒளியை வீசுகின்ற ஆபரணத்தையுடைய வரே, மதிப்பு மிகுந்த - விலை யுயர்ந்த, தனக்கல் ஆரம் காட்டிய நீரே - பொன்மாலையையும் முத்தையுங் காட்டிய நீரே, கல்லாரமும் காட்டின் நன்று - கல்ஹாரகிரியையும் காட்டுவையாயின் நன்மை யாம்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

கல்ஹாரகிரி - திருத்தணிகை மலை, மேருகிரி (தனம்). ஆரம் - முத்து மாலை, கல்லாரம் - செங்குவளை (கண்.) (156)

அலசத்தை வாளி யெனநேர் நவையை யகற்றியறி
நலசத்தை யேகொண் மதியூகி யாம்ரகு நாதன்வெற்பிற்
பலசத்தை நீடு மூவரி மடுத்தும் பருக்குவைத்த
கலசத்தைக் காட்டி யமுதத்தை யேது கரந்ததுவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அல் - உபயோகமல்லாத, அசத்தை - பழநெல்லை, வாளி யென - பதர்சேர்வதுபோல, நேர் - (நற்பொருளோடு வந்து) கலக்கிற, நவையை - தீப்பொருளை, அகற்றி - நீக்கி, அறி - அறிதற்குரிய, நல்ல சத்தையேகொள் - நன்மையைத் தருகிற சத்தான பொருள்களையே கிரகிக்கிற, மதியூகியாம் - மதியூகியாகிய, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையில், பல சத்தை நீடும் உவரிமதித்து - பல வுறுதிப்பொருள்கள் மிக்கிருக்கிற கடலைக் கடந்து, உம்பருக்கு வைத்த கலசத்தைக் காட்டி - தேவர்கள் பொருட்டு வைத்த அமிர்த கலசத்தைமாத்திரம் காட்டி, அமுதத்தை கரந்தது ஏது - அமிர்தத்தை மறைத்த தெற்றுக்கு ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

கலசம் - தனம், அமுதம் - கண். (157)

தவளையிற் செல்வளர் காவினிற் றாவத் தரளமுதிக்
கவளையிற் செல்செம்பி யாள்ரகு நாதன் கனகவரைத்
துவளையிற் செல்பவ ராமரை யீர்மலர் தோறுந்திரி
குவளையிற் செல்வண்டு கோங்கிற்செல் லாததென் கூறுகவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) தவளை-தவளைகள், இல் - தம்மிடத்தினின்றும், செல் வளர் காவினில் தாவ - மேகங்கள் தவழ்கின்ற சோலையின்மீது குதிக்க, வளை - (அவ்வோசைக் கஞ்சின) சங்குகள், தரளம் உதிக்க - (தாம் கருக் கொண்டிருந்த) முத்துக்கள் வெளிப்பட, இல் செல் - தம்மிடத்திற் செல்லுகின்ற, செம்பி - செம்பிநாட்டை, ஆள் - ஆளுகின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், கனகவரை - பொன் மலைமேல், துவளையின் செல்பவர் ஆம் அரையீர் - துவட்சியோடு கூடிய இடையையுடையவரே, மலர் தோறுந் திரி - எல்லா மலர்களிலுஞ் சென்றுழல்கின்ற, குவளையில்செல் - குவளை மலர்மீது செல்லுகின்ற, வண்டு - வண்டுகள், கோங்கில் - கோங்கின்மீது, செல்லாதது என் - செல்லாமைக்குக் காரணம் யாது, கூறுக - சொல்லுக ; (எ - று.)

'திரி,' 'செல்' என்பன காலங்கரந்த பெயரெச்சங்கள் 'வண்டு' என்னும் பெயர்கொண்டு முடிந்தன.

### குறிப்புப் பொருள்

குவளை - கண், கோங்கு - தனம், வண்டு - வளையல் (கை). (158)

வண்டிற கால வலர்முல்லை யான்கவி வாணர்செய்யுட்
கொண்டிற வீகைத் தருரகு நாதகு பேரன்வெற்பிற்
பண்டிற வாமருந் தன்னீர்வெந் தாகப் பசிதணிக்கக்
கண்டிற வாம லிளநீர் கொடுத்தென் கவையில்லையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வண்டு இறகு ஆல - வண்டினிறகுஅசைதலால், அலர் - மலர்கின்ற, முல்லையான் - முல்லை மாலையையுடையவன், கவிவாணர் செய்யுள்கொண்டு - வித்வான்களுடைய செய்யுட்களை யேற்றுக்கொண்டு, இற - (அவர்களுடைய ஆசை) கெடும்படி, ஈகை - (அவர்கள் வேண்டியவற்றை) கொடுத்தலையுடைய, தரு - கற்பகத் தருவை நிகர்த்த, ரகுநாத குபேரன் வெற்பில் - ரகுநாத சேதுபதியாகிய குபேரன் மலையில், பண்டு - அநாதியாயுள்ள, இறவா மருந்து அன்னீர் - சாவாமைக்குக் காரணமாகிய அமிர்தத்தை நிகர்த்தவரே, வெம்தாகம் பசி தணிக்க - கொடிய தாகத்தையும் பசியையும் தணிக்கும்பொருட்டு, இளநீர் - இளநீரை, கண்திறவாமல் கொடுத்து - கண் திறக்காமல் கொடுத்து, என் - பயன் யாது, கவை இல்லை - (அப்படிச் செய்வதில்) காரியமில்லை ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

வெம்தாகம் பசி - கொடிய காமவிடாயும் விருப்பமும். கண் திறவாமை - கண் புதைத்தல். இளநீர் - தனம். (159)

மித்திர மன்னர் மகிழப் பகைஞர்முன் வீழ்ந்து தொழச்
சத்திர மன்ன வருரகு நாதன் தராதரத்தில்
சித்திர மன்ன குயிலே தனத்தைத் தெரியவைத்துப்
பத்திர மன்ன லறிவுறிற் சேதம் படைத்தவர்க்கே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மித்திர மன்னர் மகிழ - (தன்னிடத்து) நண்புள்ள அரசர் மகிழவும், பகைஞர் - பகையரசர், முன்வீழ்ந்து தொழ - எதிரில் வீழ்ந்து வணங்கவும், சத்திரம் மன்ன - (தன்முடிமீது காவிக்குடை) நிலைபெற்றுப்

பொலியவும், வரு - உலாவருகின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தராதரத்தில் - மலையின்மீது, சித்திரம் அன்ன குயிலே - சித்திரப்பாவை போலுங்குயிலே, தனத்தைத் தெரிய வைத்து - திரவியத்தைத் தோன்றும் படி யெதிரில் வைத்து, பத்திரம் மன்னல் - உடைவாளைப்பற்றி நிற்றல், அறிவுறின் - பிறராலறியப்படுமாயின், சேதம் - (அந்தத்) திரவியத்தைப் படைத்தவர்க்கு நஷ்டமாகும் ; (எ - று.)

குயில், மொழியினுவமை.

குறிப்புப் பொருள்

தனம் - கொங்கை, பத்திரம் - வாள் (கண்) சயில வெற்பில் எனவும் பாடம். (160)

தளையாடு காலொடொன் னார்திறை கட்டுஞ் சமுகத்திற்போற்
கிளையாடு தேவைத் துரைரகு நாத கிரீடிவெற்பிற்
வளையாடு கைத்தலத் தீர்பாச் சிகைக்குண் மறைத்துமனம்
விளையாடச் சூதின் கனக வடங்கள் வெளிப்பட்டவே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தளையாடு காலொடு - விலங்கு பூட்டிய காலுடன், ஒன்னார் - பகையரசர், திறைகட்டும் சமுகத்திற் போல் - திறைப்பணம் கட்டுகின்ற சமுகத்திற்போல, கிளை ஆடு தேவை - உறவினர் நிறைந்து குலாவுகின்ற தேவை நகரத்துக்கு, துரை - பிரவுவாகிய, ரகுநாத கிரீடி வெற்பில் - ரகுநாத சேதுபதியென்கிற முடிவேந்தனது மலையில், வளையாடு கைத்தலத்தீர் - வளையலொலிக்கின்ற கைத்தலத்தை யுடையவரே, மனம் பாச்சிகைக்குள் மறைத்து - மனத்தைப் பாச்சிகைக்குள்ளே மறைத்து, விளையாட - விளையாடுதலும், சூதின் - சூதாட்டத்தின், கனம் - பெரிய, கவடங்கள் வெளிப்பட்ட - வஞ்சகங்கள் வெளிப்பட்டன ; (எ - று.)

சமுகத்தில் அரசரது ஒலிபோலக் கையில் வளையலின் ஒலியெனக் கொள்க.

குறிப்புப் பொருள்

பாச்சி - பொம்மை, (கண்) கைக்குள் மறைத்து - கையாற் புதைத்து, சூதின் கனக வடங்கள் வெளிப்பட்ட - சூதாடு கருவிபோன்ற தனத்தின் மீதணியப்பட்ட பொன்னரி மாலைகள் வெளிப்பட்டன. (161)

அனமிகத் தோன்று வயற்செம்பி நாட னயன்றந்தைவா
கனமிகத் தோன்று துசரகு நாதன் கனகவெற்பின்

மனமிகத் தோன்று மொருமா மலருண் மறைந்திடவி
தனமிகத் தோன்று மபிமான முள்ளவர் தங்களுக்கே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அன்னம் மிகத் தோன்று வயல் - அன்னங்கள் மிகவுங் காணப்படுகிற வயல் சூழ்ந்த, செம்பிநாடன் - சோணாட்டை யுடையவன், அயன் தந்தை வாகனம் - பிரமன் தந்தையாகிய திருமாலுக்கு வாகனமாகிய கருடன், மிகத் தோன்று துசம் - உயர்வாகத் தோன்றுகின்ற கொடியை யுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், கனக வெற்பில் - பொன் மலைமேல், மனம் மிகத் தோன்றும் - (யாவர்க்கும்) விருப்பம் மிகுதியாக வுண்டாகிற, ஒரு - ஒப்பற்ற, மா - திருமகள், மலருள் மறைந்திட தாமரை மலருக்குள்ளே மறைந்துபோக, அபிமானம் உள்ளவர் தங்களுக்கு - (அவ ளிடத்து) அபிமானமுள்ளவர்க்கு, மிக - மிகுதியாக, விதனம் தோன்றும் - விசனம் உண்டாகும் ; (எ - று.)

குறிப்புப் பொருள்

மா - மான், (கண்). மலருள் - தாமரை மலரில் (கைக்குள்), வி - தாமரைப் பூவினரும்புபோன்ற, தனம் - கொங்கை, தோன்றும் - காணப் படும். (162)

தேவு ளிருக்கும் வளர்செம்பி நாடனற் றேவையயாள்
பூவு ளிருக்கும் வளரகு நாதன் பொருப்பனமே
மாவு ளிறைவர்க் கெதிர்வைத்துக் காணல் வழக்கிதன்றிக்
கோவு ளிருக்கவிங் கேதுக் குமாலி குசக்கனியே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தே உள் இருக்கும் - தெய்வத்தன்மை தன்னுள்ளே தங்கி யிருக்கிற, வளர் - விருத்தியடைகின்ற, செம்பிநாடன் - சோழ நாட்டை யுடையவன், தேவையான் - தேவை நகரத்தை யுடையவன், பூவுள் இருக்கும் வளம் - நிலவுலகத்திலிருக்கும் எல்லா வளங்களையும், (ஒருங்கே யுடைய,) ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், பொருப்பு அன்னமே மலையிலுள்ள அன்னமே, மா உள் இறைவர்க்கு எதிர் வைத்துக் காணல் வழக்கு - பெருமையுள்ள வேந்தர்க் கெதிரில் வைத்துக் கண்டுகொள்ளல் வழக்காகும், இது அன்றி - இதுவே யல்லாமல், கோவுள் இருக்க - வேந்தன் உள்ளே யிருக்க, மா - அழகாகிய, லிகுசக்கனி - எலுமிச்சம் பழம், இங்கு ஏதுக்கு - இவ்விடத்தில் வைப்பது யாதுக்கு ; (எ - று.)

குறிப்புப் பொருள்

மா வுள்இறைவர் - கையிலடங்கிய மான் (கண்), கோ - கண், விருசக்கனி - எலுமிச்சம்பழம் (தனம்). (163)

சிற்றால வட்டங் குடைகொடி சாமரை சேரப்புடை
நற்றால மென்ன வருரகு நாதன்மைந் நாகமின்னே
கற்றார் பணிகற் றிரிகூட வெற்பெதிர் காட்டித்திருக்
குற்றால மாந்தல முங்காட்டி னனிட்டை கூடுவனே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சிற்றாலவட்டம் - சிற்றால வட்டங்களும், குடை - குடைகளும், கொடி - கொடிகளும், சாமரை - சாமரங்களும், சேர - ஒருங்கு, புடை - பக்கங்களில், நல்தாலம் என்ன வரு - அழகாகிய கூந்தற் பனைமடல் போலச் சூழ்ந்து வரப்பெற்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மைநாகம் மின்னே - கரிய மலைமீதுள்ள மின்னற் கொடிபோல்வாளே, கற்றார் - (அறிவு நூல்களைக்) கற்றவர், பணி - வணங்குகின்ற, நல் திரி கூட வெற்பு - நல்ல திரிகூட மலையை, எதிர்காட்டி - எதிரே காட்டி, திருக்குற்றாலம் ஆம் - திருக்குற்றாலமாகிய, தலமும் - தலத்தையும், காட்டின் - காட்டினால், நான் நிட்டை கூடுவன் - நான் நிஷ்டை கூடுவேன்; (எ - று.)

குறிப்புப் பொருள்

திரிகூடவெற்பு - திரிகூடமலை (தனம்). திருக்குற்றாலமாந்தலம் - திருக்கு என்னும் பெயரைப் பொருத்தி விஷம்போல்வதாகிய இடம் (கண்). நிட்டைகூடுவன் - மன மசைவற்றிருப்பேன். (திருக்கு - கண்).

வில்வழக் கத்திற் றனஞ்சயன் கன்னன் விதுரனெனச்
சொல்வழக் கந்துரை மால்ரகுநாத சுகுணன்வெற்பிற்
செல்வழக் கக்குழ லீர்சாட் சிகைப்பத் திரமிவையில்
வல்வழக் கிட்டு வெளிப்படு வார்முழு வம்பர்களே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வில்வழக்கத்தில் தனஞ்சயன் கன்னன் விதுரன் என - விற்பழக்கத்தினால் அருச்சுனன் கன்னன் விதுரன் என்று, சொல் வழக்கம் - அறிஞர் சொல்லுகின்ற சொல் வழங்குதலையுடைய, துரை - பிரபு, மால் - பெருமையுடையோன், ரகுநாத சுகுணன் - ரகுநாத சேதுபதியென்கிற சுகுணன், வெற்பில் - (அவனது) மலையிலுள்ள, செல்

வழக்கக் குழலீர் - மேகம்போலுங் கூந்தலை யுடையீர், சாட்சி - சாட்சியும், கைப் பத்திரம் - கையால் எழுதப்பட்ட பத்திரமும் ஆகிய, இவையில் - இவை யில்லை, (அங்ஙனமாகவும்) முழுவம்பர்கள் - முழு வம்பரானவர்கள், வல் வழக்கிட்டு - வலிய வழக்கைத் தொடுத்து, வெளிப்படுவார் - வெளி யேறுவார்கள் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

சாட்சி கைப் பத்திரம் - கையாகிய மாந்தளிரால் மூடப்பட்ட கண், (அட்சி-கண்). முழுவம்பர்கள் - பூர்ணமான கச்சை யணிந்த தனங்கள், (வம்பு - கச்சு). வல் வழக்கிட்டு வெளிப்படுவார் - வல்லின் தன்மையை யடைந்து வெளியேறுவார்கள், (வல் - சூதாடு கருவி). (ச + அட்சி). (165)

நிக்கிரக மேனை யநுக்கிரக மாமநு நீதிபுரி
யுக்கிரம காதள வாய்ரகு நாதன்வெற் போதிமமே
சக்கிலி யாயினர் பார்ப்பாருங் கைக்கொளச் சம்பந்தத்தா
லக்கிரம மென்று குயவ ரிதைவெளி யாக்கினரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நிக்கிரகம் - நிக்ரஹத்தையும், ஏனை அநுக்கிரகம் - மற்றை அநுக்கிரஹத்தையும், மா - பெருமைபொருந்திய, மநு நீதி புரி - மநு நீதியின்படியே செய்கின்ற, உக்கிரம் - கடுமையுள்ள, மகா தளவாய் - பெரிய தளவாயாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வெற்பு - மலையி லுள்ள, ஓதிமமே - அன்னமே, சம்பந்தத்தால் கைக்கொள்ள - சம்மந்தத் தால் கைக்கொள்ள, பார்ப்பாரும் சக்கிலிஆயினர் - பார்ப்பாருஞ் சக்கிலி யாயினர், குயவர் - குசவர், அக்கிரமம் என்று - முறைதவறென்று, இதை வெளியாக்கினர் - இவ் விஷயத்தை வெளிப்படுத்தினர் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

பார்ப்பார் - பார்க்குந் தொழிலுள்ளவர், (கண்). சக்கிலி யாயினர் - சக்ஷு இந்திரியமில்லாதவராயினர். குயவர் - தனங்கள். (166)

சொற்பதக் கற்பனை யோரெழுத் திற்கத்தஞ் சோர்வதிலா
மற்பதக் கத்தந் தருரகு நாத மகிபன்வெற்பி
னிற்பதக் கற்பக வல்லியன் னீர்வெகு நேர்த்திநுங்கைப்
பொற்பதக் கங்கொள மார்பிற் கடகம் புறப்பட்டதே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சொல் - சொல்லாற் றொடுக்கப்பட்ட, பதம் - அழகாகிய, கற்பனை - கற்பனைப் பாட்டின், ஓர்எழுத்திற்கு - ஒரு எழுத்துக்கு, அத்தம் சோர்வதுஇல்லாமல் - பொருட் சோர்வின்றி, பதக்கு அத்தம் தரு - பதக்குப் பொன் பணத்தைத் தருகின்ற, ரகுநாத மகிபன் வெற்பில் - ரகுநாத சேது பதியின் மலையில், நிற்பது - இருப்பதாகிய, அக் கற்பகவல்லி அன்னீர் - அந்தக் கற்பக மரத்தை நிகர்ப்பவரே, நும் கை பொன் பதக்கம் கொள - உமது கையில் பொற் பதக்கத்தைக் கொள்ளவே, கடகம் - கடகமானது, மார்பில் புறப்பட்டது - மார்பினிடத்துப் புறப்பட்டது, வெகு நேர்த்தி - (இது) மிகவும் நல்லது; (எ - று.)

பதக்கு ஓரளவு கருவி.

### குறிப்புப் பொருள்

நும்கைப் பொற்பது - உமது கை அழகானது, அக்கம் கொள - கண்ணை மறைத்துக்கொள்ள, (அக்கம் - கண்). கடகம் புறப்பட்டது - யானை வெளிப்பட்டது, (தனம்). (167)

பூமான் பெருஞ்செல்வம் பாமான் கலைகள் பொருட்கொடைக்குக்
காமான் கரதல மால்ரகு நாதன் கவின்வரைவாய்
மாமான் மதமயி லேயெதிர் கொள்பவர் வைத்தனரோ
கோமான் வெளிப்படு முன்னெதிர் பூரண கும்பங்களே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பூமான் பெருஞ்செல்வம் - திருமகள் பெருஞ் செல்வமும், பாமான் கலைகள் - நாமகள் கலைகளும் ஆகிய, பொருள் கொடைக்கு - பொருள்களைக் கொடுத்தலில், காமான் - கற்பகத் தருவை நிகர்க்கின்ற, கரதலத்தான் - கையையுடையவன், மால் - பெருமையுடையவன், ரகு நாதன் - ரகுநாதசேதுபதி, (அவனது) கவின்வரைவாய் - அழகிய மலையில் உள்ள, மா - அழகிய, மான்மதம் - கஸ்தூரியை யணிந்த, மயிலே - மயிற் சாயலை யுடையவளே, கோமான் வெளிப்படுமுன் - வேந்தன் புறப்படு முன்னமே, எதிர் - எதிரில், பூரண கும்பங்கள் - பூர்ண கலசங்களை, எதிர் கொள்பவர் வைத்தனரோ - எதிர் கொள்வோர் வைத்தார்களோ; (எ - று.)

பூமான் பெருஞ்செல்வம் - பெருஞ் செல்வத்தில் திருமகளை யொப்ப வன், பாமான்கலைகள் - கலைகளில் நாமகளை நிகர்ப்பவன், பொருட் கொடைக்கு - பிற பொருள்களைக் கொடுத்தலில், காமான்- கற்பகத்தருவை நிகர்க்கின்ற, கரதலம் மால் - கையையுடைய பெரியோன், என்றிவ்வா

றுரைப்பினும் பொருந்தும். 'மாமான் மத மயிலே' என்பதற்கு திருமகளை நிகர்க்கின்ற களிப்பையுடைய மயிலே யென்றுரைத்தலு மொன்று.

### குறிப்புப் பொருள்

கோ மான் - கண்ணாகிய மான், பூரணகும்பங்கள் - தனங்கள். மட மயில் எனவும் பாடம். (168)

போரூடு சென்று வலவனைப் போலத்தை புத்திரற்குத்
தேரூர் சலதர மால்ரகு நாதனற் றேவையன்னீர்
நீரூர்மை நோக்கரும் வெட்கி யொளிக்க நிதானத்திலே
யோரூசி மேலிரு பம்பர மாட்டு முபாயநன்றே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) போரூடு சென்று - பாரத யுத்தத்திற்குப் போய், வலவனைப் போல் - பாகனைப்போல, அத்தை புத்திரற்கு - தனது அத்தையின் புதல்வனாகிய அருச்சுனனுக்கு, தேர் ஊர் - தேரை நடத்திய, சலதரம் - நீல மேகம் போன்ற, மால் - திருமால், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) நல்தேவை அன்னீர் - நல்ல தேவை நகரத்தை நிகர்த்தவரே, நீர் ஊர் மை நோக்கரும் - நன்னீர்மை யமைந்த அஞ்சனப் பார்வையையுடையவரும், வெட்கி ஒளிக்க - வெட்கி மறைய, நிதானத்திலே - நிதானமாக, ஓர்ஊசிமேல் - ஒரு ஊசியின் மேல், இரு பம்பரம் ஆட்டும் உபாயம் நன்று - இரண்டு பம்பரங்களை யாட்டுகின்ற வுபாயமானது அழகிது; (எ - று.)

### குறிப்புப் பொருள்

மை நோக்கர் - கரிய கண், அஞ்சன மெழுதிய கண் எனினுமமையும், வெட்கி யொளிக்க - நாணிப் புதைக்க, ஓர் ஊசி - இடை, இரு பம்பரம் - இரண்டு தனங்கள். (169)

திசைபுகழ் கன்னன் குபேரன் விசயன் சிபியெனச்சொல்
லிசைரகு நாதன் மணிவரை மானனை யீருமது
வசைதீர் கரகர்ன வித்தையைப் பார்த்து மகிழ்ந்தனமேற்
பசையுறு கோகர்ன வித்தையெப் போதினிப் பார்ப்பதுவே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) திசை புகழ் கன்னன் - திக்குகளிலுள்ளார் யாவரும் புகழ்கின்ற கன்னன், குபேரன் - நிதிபதி, விசயன் - பார்த்தன், சிபி - சிபி

சக்ரவர்த்தி, என - என்று, சொல் - எல்லாரும் புகழ்தற்குரிய, இசை - கீர்த்தியையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மணி வரை - அழகிய மலைமீதுள்ள, மான் அனையீர் - மானை நிகர்த்தவரே, உமது - உம்முடைய, வசை தீர் - குற்ற மற்ற, கசகர்ன வித்தையைப்பார்த்து மகிழ்ந் தனம் - கஜகர்ண வித்தையைப் பார்த்து மனமகிழ்ச்சி யடைந்தோம், மேல் - இனி, பசை உறு - விருப்பத்துக்குரிய, கோகர்ன வித்தை - கோகர்ண வித்தையை, இனி எப்போது பார்ப்பது - இனி யெக்காலம் பார்ப்பது; (எ - று.)

## குறிப்புப் பொருள்

கசம் - யானை, (தனம்). கோ - கண், இவற்றைக் 'கசர்கன வித்தை,' 'கோ கர்னவித்தை' எனப் புனைந்துரைத்தார். (170)

முடுக்க வருதிறன் மல்லின ராவி முடியவறை
கொடுக்கு முரரகு நாதன் வரைமலர்க் கொம்பனையீர்
அடுக்குங் கொனீர்கணை யாழி முகத்திட் டடக்கியபி
னிடுப்பினிற் குண்டல மார்பிற் சிலம்புவந் தேறியதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) முடுக்க வரு - நெருக்க வந்த, திறல் மல்லினர் - வலிய மல்லர்களுடைய, ஆவி முடிய - உயிர் நீங்க, அறை கொடுக்கும் - அறை கொடுத்த, உரம் - பலமுள்ள, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையின்மேல், மலர்க்கொம்பு அனையீர் - பூங்கொம்பு போல்பவரே, நீர் - கடலை, கணையாழிமுகத்து இட்டு அடக்கியபின் - கணையாழியின்கண் வைத் தடக்கியபின், இடுப்பினில் குண்டலம் - இடையிற் குண்டலமும், மார்பில் சிலம்பு - மார்பிற் சிலம்பும், வந்து ஏறியது - வந்தேறியிருப்பது, அடுக்குங் கொல் - அடுக்குமோ; (எ - று.)

மல்லினர் - கஞ்சனால் ஏவப்பட்டு வந்த மல்லர்; இவர் - சாணூரன் முஷ்டிகன் என்பவர்.

## குறிப்புப் பொருள்

நீர் - கடல்,(கண்), கணையாழி முகம்-கணையாழிக் கிடமாகிய கை, குண் டலம் - ஆகாயம், (இடை), சிலம்பு - மலை, (தனம்). குண்டலம் காதைவிட்டு இடையிலிருப்பதும், சிலம்பு காலை விட்டு மார்பிலிருப்பதும் முறையன்றாத லால் "அடுக்குங்கொல்" என்றான். (171)

திடமு முரமு மிசையுங் கொண் டச்சமுந் தீமையுங்க
படமு மொழித்த ரகுநாத சேது பதிவரைவாய்க்
கெடவாத் தியமறி வித்தீ ரினியுங்கள் கீதத்தையு
மடவீ ரறிவிக்கி னன்கொட்டிக் காட்டுவன் மத்தளமே

வெளிப்படைப் பொருள்

(இ - ள்). திடமும் - உறுதியையும், உரமும் - பலத்தையும், இசையும் - புகழையும், கொண்டு —:—, அச்சமும் - பயத்தையும், தீமையும் - தீங்கையும், கபடமும் - கபடத்தையும், ஒழித்த - நீக்கிய, ரகுநாத சேது பதி வரைவாய் - ரகுநாதசேதுபதியின் மலைமேல், கெடவாத்தியம்அறிவித்தீர் - கடவாத்தியத்தைத் தெரிவித்தீர், இனி உங்கள் கீதத்தையும் - இனியுங்கள் கீதத்தையும், மடவீர் - மடமையுள்ளவரே, அறிவிக்கின் - தெரிவித்தால், நான்மத்தளம் கொட்டிக்காட்டுவன் - நான் மத்தளத்தைக் கொட்டிக் காட்டுவேன்; (எ - று.)

குறிப்புப் பொருள்

கெடம் - குடம், (தனம்). கீதம் - வண்டு, (கண்). 'மத்தளம் கொட்டிக் காட்டுவன்' என்றது இரு தனத்தையும் இரு தோள்களால் அணைத்து வருடுவேன் என்றபடி. (172)

சங்கை யிலாம விரப்போர்க் குதவவு தாரநிதிப்
பங்கய மன்ன ரகுநாத சேது பதிவரைவாய்
மங்கைநல் லீரிது நல்லாச் சரியமுண் மையுங்கணேக்
கங்கை கடக்குமுன் னே சித்திர கூடமென் கண்ணுற்றதே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சங்கை இல்லாமல் இரப்போர்க்கு உதவ - அச்சமில்லாமல் வந்து யாசிப்பவர்க்கு உதவும்பொருட்டு, உதாரம் - உதார குணத்தையுடைய, நிதிப் பங்கயமன்ன - பத்ம நிதியை நிகர்த்த, ரகுநாதசேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், மங்கைநல்லீர் - மங்கைப் பருவத்தையுடைய மாதரீர், இது நல் ஆச்சரியம் - இது நல்ல ஆச்சரியம், (என்னெனில்) கங்கைகடக்கு முன்னே - கங்கையைத் தாண்டுவதற்கு முன்னே, சித்திரகூடம் என் கண்ணுற்றது - சித்திரகூட பர்வதம் என் கண்ணுக்குப் புலப்பட்டது; (எ - று.)

பதுமநிதி - தாமரை யுருவாய்க் கிடக்கும் பொற்றிரள்.

### குறிப்புப் பொருள்

உண்மை - யதார்த்தமாக, உங்கள் நோக்கு - உங்கள் பார்வை, அங்கை கடக்கு முன்னே - அகங்கையிற் பொருந்துமுன்னே, சித்திரகூடம் - சித்திரகூடம் போன்ற தனம், என் கண்ணுற்றது - என் கண்ணுக்குப் புலப்பட்டது. (173)

வைம்மை யுடையகை வேலாலொன் னார்பொன் மணிமுடிக்குப்
பைம்மை யறுத்த ரகுநாத சேது பதிவரைவாய்
நைம்மை யுடைய நுசுப்பீர் வரச்சங்க நாடுவதிற்
கைம்மை யுடையவர்க் கேன ணிமைபெய்தங் கச்சிமிழே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வைம்மை உடைய - கூர்மையையுடைய, கைவேலால் - கை வேலினால், ஒன்னார் - பகைவருடைய, பொன் மணிமுடிக்கு - பொன்னும் மணியாலுஞ் சமைக்கப்பட்ட மகுடத்திலுள்ள, பைம்மை அறுத்த - பசு மையை யறுத்த, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், நைம்மை உடையநுசுப்பீர் - நைந்தலையுடைய இடையையுடைய வரே, வரச்சங்கம் நாடுவதில் - மேன்மையாகிய கூட்டத்தை நாடுவதில், கைம்மை உடையவர்க்கு - வைதவ்யமுடையவர்க்கு, அணி - அழகாகிய, மைபெய் - மைபெய்த, தங்கச்சிமிழ் ஏன் - தங்கச்சிமிழ் யாதுக்கு; (எ-று.)

### குறிப்புப் பொருள்

சங்கம் - கலவி, கை மை உடையவர்க்கு - கையின்கண் மையை யுடைய கண்களை யுடையவர்க்கு, அணிமை பெய் - சமீபத்திலிட்ட, தங் கச் சிமிழ் - தங்கச் சிமிழ் போன்ற தனம். (174)

இங்கித ரத்தினப் பகுதி கொணர்ந்துமு னெண்ணிமன்னர்
பங்கிடு முற்ற ரகுநாத சேது பதிவரைவா
யங்கித மாகத் தருசட கோபங்கண் டாச்சுதுமுன்
சங்கிடு தோளிட்ட சக்கரங் காட்டத் தருமினியே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) இங்கிதம் - குறிப்பறிந்து, ரத்தினப் பகுதி கொணர்ந்து - ரத் தங்களாகிய திறையைக் கொண்டு வந்து, முன் எண்ணி - எதிரில் எண்ணி, மன்னர் - வேறு தேசத்தரசர், பங்கிடும் - பாகிக்கிற, முற்றம் - முற்றத்தை

யுடைய, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், அங்கு இதம்ஆக - அவ்விடத்து நன்மை யுண்டாக, தரு - தந்த, சடகோபம் கண்டுஆச்சுது - சடகோபத்தைப் பார்த்தாயிற்று, முன் - முன்னே, சங்கு இடு தோள் இட்ட - சங்கணிந்த தோளிலிட்ட, சக்கரம் - சக்கரத்தை, இனி காட்டத்தகும் - இனிக் காட்டுதல் தகுதியாம்; (எ-று.)

அங்கு - பரம பதம்.

### குறிப்புப் பொருள்

சடகோபம் - தனம், சங்கிடு தோள் இட்ட - வளைய லணிந்த கையால் மறைத்த, சக்கு அரம் - அரம் போன்ற கண். (175)

அளையுண் டிடநவ நீதந் திருடிமுன் னாய்ச்சியர்கைத்
தளையுண்ட மெய்ரகு நாதன் சிலோச்சயத் தையனல்லீர்
வளைசெண்டு மீன்சொன் மதுரை யடைத்து வரிமுன்வென்றீர்
திளையுண்ட மேருவும் வென்றிடி னீரந்தத் தென்னவரே.

### வெளிப்படைப் பொருள்

(இ- ள்.) அளை உண்ட இடம் - தயிரைப் பருகின இடத்தில், நவநீதந் திருடி-வெண்ணெயைத் திருடி, முன் - முற்காலத்தில், ஆய்ச்சியர் கை - இடைச்சியர் கையால், தளையுண்ட - கட்டப்பட்ட, மெய் - திருமேனியை யுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், சிலோச்சயம் - மலையிலுள்ள, தையல் நல்லீர் - அழகுள்ள மாதரே, வளை செண்டுமீன் சொல் மதுரை அடைத்து - வளையும் செண்டும் மீனும்கொண்டு சொல்லப்பட்ட மதுரையில் கடலை யடைத்து, உவரிமுன் வென்றீர் - கடலை முற்காலத்தில் வென்று விட்டீர், திளையுண்ட மேருவும் வென்றிடின் - (எல்லா வளங்களும்) நிறைந்த மேருவையும் வென்று விட்டீராயின், நீர் அந்தத் தென்னவரே - நீர் அந்தப் பாண்டியரே யாவீர்; (எ-று.)

### குறிப்புப் பொருள்

வளை செண்டு மீன் சொல் மதுரை அடைத்து உவரிமுன் வென்றீர் - வளையலணிந்த கைத் தலத்தால் மீனென்று சொல்லுதற்குரிய கண்ணைமூடி அதன் கொடுமையை வென்றீர், திளையுண்ட மேருவும் வென்றிடின் - நெருங்கிய மேருமலை போன்ற தனத்தையுமூடி வெல்வீராயின். (176)

குமைய வரைநிமி டத்திலொன் னார்மெய் குவியக்கைம்மேற்
சமைய வரைநிரு பன்ரகு நாதன் றடவரைவா

யமைய வரையுயர் சொர்க்கமுன் காட்டி யருளியநீ
ரிமைய வரையொளிக் கத்தகு மோசொலு மேந்திழையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) ஒன்னார்மெய் - பகைவருடைய சரீரங்கள், அரை நிமிடத்தில் குமைய - அரை நிமிஷத்தில் துகைக்கப்படவும், கை - கைகள், மேல்குவியச் சமைய - சிரமீது குவிந்தமையவும், வரை - அவர்களுக்குக் கட்டளை யெழுதியனுப்புகிற, நிருபன் - வேந்தன்; ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) தடவரை வாய் - பெரிய மலையின் கண், அமைய வரை உயர் - பொருந்தும்படி அளவின்றி யுயர்ந்த, சொர்க்கம் - சொர்க்க லோகத்தை, முன்காட்டி யருளிய நீர் - முன்னே காட்டியருளின நீர், ஏந்திழையே - மாதே, இமையவரை - தேவர்களை, ஒளிக்கத் தகுமோ - மறைக்கத் தகுமோ, சொல்லும் - சொல்வீர்; (எ-று.)

ஏந்திழை - ஆபரணங்களைத் தாங்காநின்ற பெண்.

## குறிப்புப் பொருள்

சொர்க்கம் - தனம், இமையவர் - இமைகளோடு கூடிய கண். (177)

விளவாய் வருமிகல் கன்றா லெறிந்துமுன் வென்றுவந்த
தளவா யரசர் பிரான்ரகு நாதன் றடவரைவாய்க்
குளவாய் தனிலுங்கள் விற்குளச் சேல்கள் குதிக்குமென்றே
களவாய் மறைத்துவைத் தீர்மட வீரிரு கைப்பிடித்தே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) விளவு ஆய்வரும் - விளாங்கனி யுருவாகி வந்த, இகல் - பகைவனை, கன்றால் எறிந்து - கன்றினால் வீசி, முன் வென்று உவந்த - முற்காலத்தில் வென்று மகிழ்ந்த, தளவாய் - சேதுபதி, அரசர் பிரான் - அரசர் கோன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) தடவரைவாய் - பெரிய மலையிடத்துள்ள, குளவாய்தனில் - குளத்தினிடத்தில், உங்கள் விற்குள் - உங்கள் வில்லுக்குள்ளே யிருக்கிற, அச் சேல் குதிக்கும் என்றே - அந்தச் சேல் மீன்கள் குதிக்குமென் றெண்ணித்தானே, மடவீர் - பெண்ணே, இருகைப் பிடித்து - இருகையாற் பற்றி, களவாய் மறைத்து வைத்தீர் - கள்ளமாய் ஒளித்து வைத்தீர்; (எ-று.)

விளவாய் வந்த பகைவன் - தேனுகன், கன்று - வத்ஸன்; இவர் அசுரர்.

குறிப்புப் பொருள்

குளம் - நெற்றி, வில் - புருவம், சேல்கள் - கண்கள். (178)

கோவைத் துறைக்குப் பதினாயிரம்பொன் கொடுத்திசைகொ
டேவைத் துறைக்குத் துரைரகு நாதன் றிகிரிமின்னே
யேவைத் துறைக்குள் வெறிகொண்டு சங்கிலி யேந்துமத
மாவைத் துறைக்கு வெளியே விடிற்பழி வந்திடுமே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கோவைத் துறைக்கு - கோவைத் துறை யொன்றுக்கு, பதினாயிரம் பொன் கொடுத்து - பதினாயிரம் பொற் காசைப் பரிசிலாகத் தந்து, இசைகொள் - புகழைக் கொண்ட, தேவைத்துறைக்கு - தேவை நகர்த்துறைக்கு, துரை - பிரபு, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், திகிரி - மலையிலுள்ள, மின்னே - மின்னற்கொடி போல்பவளே, ஏ - அம்பை, உறைக்குள்வைத்து - உறைக்குள்ளிட்டு, வெறி கொண்டு சங்கிலி ஏந்தும் - வெறிகொண்டு சங்கிலியை யேந்துகின்ற, மத மாவை - மத யானையை, துறைக்கு வெளியே விடின் - துறைக்கு வெளியே விட்டால், பழி வந்திடும் - நிந்தை வந்திடும்; (எ-று.)

குறிப்புப் பொருள்

ஏ - கண், உறை - புருவம், வெறி - சந்தன முதலியவற்றின் மணம், சங்கிலி - பொற் சங்கிலி முதலிய ஆபரணங்கள், மத மா - யானை, (தனம்). துறை - இடம். (179)

கடைமுன்னர் நின்று முடிமேற் றமதிரு கைகுவித்துப்
படைமன்னர் போற்றும் ரகுநாத சேது பதிவரைவா
யிடைதான் குறைந்தது மச்சமுங் காட்டுவ தில்லையென்றான்
மடவீ ருமது தனத்தையெவ் வாறு மதிப்பதுவே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) படை மன்னர் - சேனைகளையுடைய அரசர், கடைமுன்னர் நின்று - வாயில் முன்னே நின்று, முடிமேல் - சிரசின்மீது, தமது இரு கை குவித்து - தமது இரண்டு கைகளையுங் கூப்பி, போற்றும் - வணங்குகின்ற, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையினிடத்து, இடைதான் குறைந்தது - இடைதான் குறைந்து போயிற்று, மச்ச

மும் காட்டுவது இல்லை என்றால் - மச்சத்தையுங் காட்டுவ தில்லையாயின், மடவீர் - மாதரே, உமது தனத்தை - உமது பொன்னை, எவ்வாறு மதிப்பது - எப்படி விலை மதிப்பது; (எ - று.)

இடை - எடை; மச்சம் - மாற்றறிய வெட்டும்பொன்.

## குறிப்புப் பொருள்

இடை - நுசுப்பு, மச்சம் - மீன், (கண்), தனம் - கொங்கை. (180)

அமரர் மனிதர் நரரமு தாசந ராகவுக்கிர
சமர்செய் செயரகு நாதன் சிலோச்சயத் தையனல்லீர்
நமனை யடக்கிக் கடவூருங் காட்டிய ஞாயத்தினு
லுமையிவ் வுலகி லமுதக டேசரென் றோதுவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அமரர் மனிதர் ஆக - தேவர் மனித ராகவும், நரர் அமுதாசநர் ஆக - மனிதர் தேவராகவும், உக்கிர சமர்செய் - உக்கிரமாகிய யுத்தத்தைச் செய்கின்ற, செயம் - வெற்றியையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், சிலோச்சயம் - மலையிலுள்ள, தையல் நல்லீர் - பெண்ணரசியாரே, நமனை அடக்கி - இயமனை அடக்கி, கடவூரும் காட்டிய ஞாயத்தினுல் - திருக் கடவூரையுங் காட்டிய நியாயத்தால், உம்மை - உங்களை, இவ்வுலகில் - இந்த வுலகத்தில், அமுத கடேசரென்று ஓதுவர் - அமிர்த கடேசரென்று சொல்லுவர்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

நமன் - கண், கடவூர் - குடமாகிய இடம், (தனம்). (181)

ஈரஞ்சு கண்ட னிறக்கவிண் ணோர்குடி யேறமகி
பாரஞ் சுமக்கும் ரகுநாத சேது பதிவரைவாய்
வீரஞ் சுதாரிப்ப தின்றிமுன் கேடகம் விட்டெறிந்து
போரஞ்சு வாரிற்கை வாளை யொளிப்பதென் பூங்கொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஈர்அஞ்சுகண்டன் இறக்க - தச கண்டத்தையுடைய ராவணன் மாளவும், விண்ணோர் குடியேற - தேவர்கள் குடியேறவும், மகி பாரம் சுமக்கும்-பூபாரந் தாங்குகிற, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், வீரம் - தமது வீரத் தன்மையை, சுதாரிப்பது இன்றி -

நிதானியாமல், முன் - முன்னே, கேடகம் விட்டெறிந்து - கேடகத்தை விட்டெறிந்து, போர்அஞ்சுவாரின் - போருக்குப் பயப்படுவார்போல, கைவாளை ஒளிப்பது - கைவாளை மறைப்பதற்குக் காரணம், என் - யாது, பூங்கொடியே - பூங்கொடி போல்பவளே; (எ - று.)

குறிப்புப் பொருள்

கேடகம் - பரிசை, (தனம்), கைவாள் - கையின்கண் மறைந்த வாள், (கண்). (182)

சென்றத்தைக் கண்டகப் போரிற் றினந்தள்ளிச் செய்யமர்நா
ணின்றத்தைக் கண்ட ரகுநாதன் மால்வரை நேரிழையீ
ரொன்றத்தைக் கண்டிருக் கச்சூர்செங் கற்பட் டுயர்ந்தகழுக்
குன்றத்தைக் கண்டனன் காண்பதெப் போதினிக் கோவளமே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கண்டகப் போரில் - வாட் 'போரில், சென்று - போய், அத்தை-அந்த வாட் போரை, தினம்தள்ளி - நாள் தோறும் சாய்த்து, செய் அமர் - செய்கின்ற யுத்தத்தில், நாண் நின்றத்தைக் கண்ட - (பகைவர்) வெட்கி நின்றதைப் பார்த்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மால் வரை - பெரிய மலையிலுள்ள, நேரிழையீர் - தையலீர், ஒன்று - பொருந்திய, அ - அந்த, தைக்கண் - தை மாசத்தின்கண், திருக்கச்சூர் - திருக்கச்சூரையும், செங்கற்பட்டு - செங்கற்பட்டையும், உயர்ந்த - உயர்வாகிய, கழுக்குன்றத்தை - திருக்கழுக்குன்றத்தையும், கண்டனன் - கண்டேன், இனி - இனி, கோவளம் - கோவளத்தை, காண்பது - காணுதல், எப்போது - எப்பொழுது; (எ-று.)

குறிப்புப் பொருள்

கச்சு - ரவிக்கை, செங் கல் பட்டு உயர்ந்த கழுக்குன்றம் - செங்காவிப் பட்டணிந்துயர்ந்த கழுக்குன்றம், கோவளம் - கண்ணினது வளம், திருக்கச்சூர் செங்கற்பட்டுக் கழுக்குன்றம், இவை தனத்தையும், கோவளம் கண்ணின் வளத்தினையு முணர்த்தின. (183)

செல்லூரப் பார்த்திப ராகுமொன் னுருயிர் தின்னநமன்
பல்லூரப் பாற்கொல் ரகுநாத சேது பதிவரையீ
ரல்லூரைப் பாற்பொன் னனையீரிப் போதுங்க ளத்திப்பட்டு
வல்லூரைப் பார்த்தனன் பார்ப்பே னினிநெய்தல் வாயலையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) செல் ஊர - இடியேற்றின் தன்மை பொருந்த, ஒன்னார் ஆகும் - பகைவராகிய, பார்த்திபர் உயிர் தின்ன - அரசருடைய உயிரைத் தின்னுதற்கு, நமன் பல் ஊர - இயமனுடைய பற்கள் ஊரும்படி, பால் கொல் - (அவர்களுடைய) வலியை யழித்த, ரகுநாத சேதுபதி வரையீர் - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ளீர், அல் ஊர் - கருமை பரந்த, ஐ பால் - ஐம்பாலையுடைய, பொன் அனையீர் - திருமகளை நிகர்ப்பவரே, இப்போது - இப்பொழுது, உங்கள் - உங்களுடைய, அத்திப்பட்டு வல்லூரைப் பார்த்தனன் - அத்திப்பட்டு வல்லூர் என்பவற்றைக் கண்டேன், இனி - இனி, நெய்தல் வாயலை-திருநெய்தல் வாயலை, பார்ப்பேன் - காண்பேன்; (எ-று.)

ஐம்பால் - கூந்தலின் வகையைந்து. அவை, முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்பன. இவற்றுள் - மயிரை உச்சியில் முடித்தல் முடி, பக்கத்தில் முடித்தல் கொண்டை, பின்னே செருகல் சுருள், சுருட்டி முடித்தல் குழல், பின்னி விடுதல் பனிச்சை.

## குறிப்புப் பொருள்

அத்தி - யானை, வல் - சூதாடு கருவி, இவ்விரண்டும் தனத்தையும், நெய்தல் - கரு நெய்தல் மலர், இது கண்ணையும் உணர்த்தின. (184)

செல்லக்கைம் மாறு படையார்க் குதவுமை சேரலரை
வெல்லக்கை போயவை வேல்ரகு நாதன் விலங்கற்பொன்னே
நல்லக்கை வைத்தப் படியெய்து மீளுவ னுமது
பல்லக்கைக் காட்டி யனுப்பு மெனைவெளிப் பாசறைக்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கைம்மாறு படையார்க்கு - பிரதியுபகாரம் கருதாதவர்க்கும், செல்ல உதவும் - தாராளமாகக் கொடுக்கின்ற, மை - மேகம், சேரலரை வெல்ல - பகைவரை வெல்லுதற்கு, கை போய - நன்றாகப் பழகின, வை வேல் - கூர்மையாகிய வேலாயுதத்தைத் தாங்கிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், விலங்கல் - மலையிலுள்ள, பொன்னே - திருமகளை நிகர்ப்பவளே, நான் - நான், நல் - நல்ல, லக்கை வைத்து - லக்ஷியம் வைத்து, அப்படி-அந்தப் பிரகாரமே, எய்து - அம்பெய்து, மீளுவன்-திரும்புவேன், உமது பல்லக்கைக் காட்டி - உமது தண்டிகையைக் காட்டி, எனை வெளிப் பாசறைக்கு அனுப்பும் - என்னை வெளிப்படை வீட்டுக்கு அனுப்பும்; (எ-று.)

### குறிப்புப் பொருள்

பல்அக்கு - இரு கண், (அக்கு - கண்). (185)

கோசிக மத்த மணிசூறை யிட்டெதிர் கூடலர்தம்
பாசறை யிட்ட ரகுநாத சேது பதிவரைவா
யாசிரி யத்தின்முன் கூவிளங் காட்டி யருளியநீர்
மாசில் கருவிள முங்காட்டிற் காரிகை வாசிப்பனே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கோசிகம் - பட்டாடைகளையும், அத்தம் - திரவியங்களை யும், மணி - ரத்நங்களையும், சூறையிட்டு - கொள்ளையிட்டு, எதிர் - எதிரில் வந்து, கூடலர் தம் - பொருந்தாதவராகிய பகைவரது, பாசறையிட்ட - படைவீட்டிலிட்ட, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையின்கண், ஆசிரியத்தில் - ஆசிரியப்பாவில், முன் - முன்னே, கூவிளங் காட்டி அருளிய நீர் - கூவிளத்தைக் காட்டி யருளின நீர், மாசு இல் - குற்ற மற்ற, கருவிளமும் காட்டின் - கருவிளத்தையுங் காட்டினால், காரிகை வாசிப்பன் - காரிகையைப் படிப்பேன்; (எ-று.)

### குறிப்புப் பொருள்

கூவிளம் - வில்வக்கனி, (தனம்), கருவிளம் - காக்கணம்பூ, (கண்). (186)

கார்நிரை யத்தைத் துரத்தி யெடுத்ததன் கைவரையாற்
பார்நிரை காத்த ரகுநாத சேது பதிவரைவாய்
நேர்நேர் நிரைநேர் நிரைநிரை மூன்றையு நீக்கிப்பின்னா
நேர்நிரை யொன்றையுங் காட்டிய வாறென்ன நேரிழையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கார் நிரை அத்தைத் துரத்தி - மேக வரிசையாகிய அத னைத் துரத்தி, எடுத்த - தூக்கிய, தன் கை வரை - தன் கையிலுள்ள மலை யைக்கொண்டு, பார் நிரை காத்த - உலகத் தொகுதியைக் காத்த, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், நேர் நேர் - நேர் நேரும், நிரை நேர் - நிரை நேரும், நிரை நிரை - நிரைநிரையுமாகிய, மூன் றையும் நீக்கி - மூன்றையுந்தள்ளி, பின் ஆம் - பின்னையதாகிய, நேர் நிரை ஒன்றையும் - நேர் நிரையாகிய ஒன்றை மாத்திரம், காட்டிய ஆறு என்ன- காட்டின விதமென்ன, நேரிழையே - பெண்ணே; (எ-று.)

வரை-கோவர்த்தனகிரி. நிரை- பசு மந்தையுமாம்.

## குறிப்புப் பொருள்

நேர் நேர் - தேமா, நிரை நேர் - புளிமா, நிரை நிரை - கருவிளம் (கண்). நேர் நிரை - கூவிளம், (தனம்.) (187)

சித்தியைக் கண்டமொன் பானிற்செய் வோருநற் சேதுவிற்செய்
பத்தியைக் கண்ட ரகுநாத சேது பதிவரைவாய்
நத்தியைக் கண்ட மணிகோ கனகம்பொன் னாடுமணி
யத்தியைக் கண்டன மாவுங்கண் டாலரி யாகுவமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கண்டம் ஒன்பானில் - நவகண்டங்களிலும், சித்தியை செய்வோரும் - சித்திகளைச் செய்பவர்களும், நல் - நன்மையைத் தருகிற, சேதுவில் செய் - சேதுவிற் செய்கிற, பத்தியைக் கண்ட-பத்தியைப் பார்த்த, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், நத்தியைக் கண்ட - நச்சுதலைக் கொண்ட, மணி - சிந்தாமணி, கோகனகம் - பதுமநிதி, பொன் - திருமகள், நாடும் மணி - விரும்புதற்குரிய கௌஸ்துபமணி, (என்பவற்றைத் தன்னிடத்தே யுடைய) அத்தியைக் கண்டனம் - கடலைக்கண்டோம். ஆவும் கண்டால் - காமதேனுவையும் பார்த்தால், அரிஆகுவம் - திருமாலாவோம்; (எ - று).

நத்தியைக் கண்ட - யாவருடைய விருப்பத்தையுங் கொண்ட, மணி - அழகிய, கோகனகம் - தாமரை யரும்பு போன்ற, பொன் ஆடும் மணி - பொன்னிற்செய்யப்பட்டு அசையாநின்ற மணிகட்டிய,அத்தியைக் கண்டனம் - யானையைக் கண்டோம், மாவுங் கண்டால் - மானையும் பார்த்தால் என வேறொரு பொருள்.

## குறிப்புப் பொருள்

இதில் அத்தி யென்பது தனத்தையும், மா என்பது கண்ணையும் குறித்து நின்றன. (188)

முத்த மரகத மாணிக்கஞ் சொன்ன முடிநிருபர்
நித்த மெதிர்பெய் ரகுநாதன் மால்வரை நேரிழையீர்
ருத்தம ராயினர் சாணுர்சண் டாள ருயர்மகுட
வத்தனர் தாழ்ந்தனர் பாருங் கலியுக வஞ்சனையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) முத்தம் - முத்துக்களையும், மரகதம் - மரகதங்களையும், மாணிக்கம் - மாணிக்கங்களையும், சொன்னம்-பொன்னையும், முடிநிருபர் - முடிவேந்தர், நித்தம் - நாள்தோறும், எதிர்பெய் - எதிரே கொண்டு வந்து பெய்கிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மால் வரை - பெரிய மலையி லுள்ள, நேரிழையீர் - நேரிய ஆபரணங்களை யணிந்தவரே, சாணுர் சண் டாளரும் - சாணுரும் சண்டாளரும், உத்தமர் ஆயினர் - மேலோராயினர், உயர் மருடவத்தனர் - உயர்ந்த மருட வர்த்தனர்கள், தாழ்ந்தனர் - தாழ்ந் தார்கள், கலியுக வஞ்சனை பாரும் - கலியுகத்தின் வஞ்சனையை நோக்கும்; (எ-று.)

சான்ரூர் என்பது சாணுர் என மரூஉவிற்று. சண்டாளர் - கபடத்தை யுடையவர்.

### குறிப்புப் பொருள்

சாணுர் - சாணங்குலத்தை யுடையவர், (கை). சண்டாளர் கபடத்தை யுடையவர், (கண்). 'மருடவத்தனர்' என்பது தனத்தையும், 'பாரும்' என்பது கண்புதைத்தலையும் குறித்தன. (189)

காலா லுலகை யளவிட்ட மாலெனக் கைவளர்செங்
கோலா லளவிட்ட மால்ரகு நாதன் குவட்டன்மே
மேலாம் வருணத்தர் மாலைமுன் காட்டி விதிப்படிப்பின்
ஞலாம் வருணத்தர் மாலையுங் காட்டுத னல்வழக்கே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) உலகை - உலகத்தை. காலால்அளவிட்ட - திருவடியால ளந்த, மால் என - திருமால்போல, கை வளர் செங்கோலால் - தன்கையிற் றங்கிய செங்கோலினால், அளவிட்ட - அளந்த, மால் - பெரியோனுகிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், குவட்டு அன்னமே - மலையிலுள்ள அன்னம் போல்பவளே, மேலாம் வருணத்தர் மாலை முன் காட்டி - மேற் குலத்தாரது பெருமையை முன்னே காட்டி, விதிப்படி - முறைப்படி, பின் - பின்னே, நாலாம் வருணத்தர் மாலையுங் காட்டுதல் - நான்காங் குலத்தினரது பெருமையையும் வெளிப்படுத்துதல், நல் வழக்கு - நல் வழக்காகும்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

மேலாம் வருணத்தர் - மேலாகிய ஒளியையுடையவர், (கண்). நால் ஆம் வருணத்தர் - முத்துமாலைகள் முதலியன தொங்கப்பெற்ற ஒளியையுடைய வர், (தனம்). (190)

திக்கச மாமை மகமே ரெனத்திரி சேடன் மகிழ்
மிக்க வளர்புகழ் வேள்ரகு நாதன்மை வெற்பணங்கே
கைக்களச் சாதிநன் னெய்தலைக் கொண்டது கண்டிடையர்
தக்கதென் றக்கண மேபாற் குடங்களைத் தாங்கினரே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) திக் கசம் என - திக்குயானை போலவும், ஆமை என - ஆதிகூர்மம் போலவும், மகமேரு என - மகா மேருவைப் போலவும், திரி - திரிகின்ற, சேடன் - ஆதிசேஷனும், மகிழ் - மகிழ்தற்குரிய, மிக்க வளர் புகழ் - மிகவும் விருத்தியடையாநின்ற கீர்த்தியையுடைய, வேள் - (அழகினால்) மன்மதன்போன்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மை வெற்புஅணங்கே - மேகங்கள் தவழ்கின்ற மலையிலுள்ள பெண்ணே, கைக்களச்சாதி-கைக்கோளச் சாதியார், நல் நெய்தலைக் கொண்டது கண்டு - நல்ல நெய்தற்றொழிலைக் கொண்டிருப்பதைப் பார்த்து, இடையர் - இடைச் சாதியார், தக்கது என்று - (நமக்கு இது) தகுதியான தொழிலென்று, அக் கணமே - அந்த க்ஷணமே, பால் குடங்களையுந் தாங்கினர் - பாற் குடங்களை யேந்தினர்; (எ - று.)

குறிப்புப் பொருள்

கைக் களச் சாதி - கையாகிய கள்ளச் சாதியார், நெய்தலைக் கொண்டது - நெய்தற் பூவைக் கவர்ந்து கொண்டது, (கண்புதைத்தது). இடையர் - இடை, பாற் குடங்களைத் தாங்குதல் - (தனங்களைச் சுமத்தல்). (191)

வென்றேந் தினமிக லென்றிறு மாந்தமர் வேந்தர்நிரு
பன்றேந் திகழ்மெய் ரகுநாத சேது பதிவரைவாய்
வன்றேந் திசையிசை யுஞ்சொனல் லீரண்டர் வாழ்த்தவுயர்
குன்றேந்தி மாலென மேலொளித் தீருயர் கோக்களையே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தினம் - நாள்தோறும், இகல் வென்றேமென்று - பகைவரை வென்றேமென்று, இறுமாந்துஅமர் - இறுமாந்திருக்கிற, வேந்தர் நிருபன் - அரசர்க் கரசன், தேம் திகழ் மெய் ரகுநாத சேதுபதி - மணம் விளங்குகின்ற சரீரத்தையுடைய ரகுநாத சேதுபதி, (அவனது) வரைவாய்-மலையின்கண், வன்று ஏந்து - வலிமைகொண்ட, இசை. இசையும் - இராகத்தை நிகர்க்கின்ற, சொல்-சொல்லையுடைய, நல்லீர் - நல்லவரே, அண்டர்

வாழ்த்த - ஆயர் வாழ்த்தும்படி, மால் என - திருமால் போல, உயர் குன்று மேல் ஏந்தி - உயர்ந்த மலையை மேலே தாங்கி, உயர் கோக்களை - உயர்ந்த பசுக்களை, ஒளித்தீர் - மறைத்துக் காத்தீர்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

குன்று - மலை, (தனம்). கோக்கள் - பசுக்கள்; கண்கள், (கோ - கண்). (192)

சொற்புத னுங்கல் வியிலென் றநுதினந் தோறுமன்னி
யற்புத மன்னர் பணிரகு நாத னணிவரைவாய்க்
கற்பு தருநகை யீர்நிலை யாமைமுன் காட்டவந்த
புற்புத நிற்க நிலையாமுந் நீரெங்குப் போக்கியதே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கல்வியில் - வித்தையில், சொல் - புகழையுடைய, புதன் ஆம் என்று - புதனாகுமென்று, அநுதினந் தோறும் - நாள்தோறும், அற்புத மன்னர் - அழகிய அரசர், மன்னி பணி-நிலைத்து வணங்குகின்ற, ரகுநாதன்-ரகுநாத சேது பதியின், அணி வரைவாய் - அழகிய மலையின்மேல், கற்பு தரும் நகையீர் - முல்லையரும்பை யொத்த பல்வரிசையை யுடையவரே, நிலையாமை - யாக்கை முதலியவற்றின் நிலையாமையை, முன் காட்டவந்த - முன் காட்டவந்த, புற்புதம் நிற்க - நீர்க்குமிழி யிருக்க, நிலையாம் - நிலையாகிய, முந்நீர் - கடல், எங்கு போக்கியது - எவ்விடத்துப் போயொளித்தது; (எ - று.)

### குறிப்புப் பொருள்

புற்புதம் - நீர்க்குமிழி, (தனம்). முந்நீர் - கடல், (கண்). (193)

சேதுவை யாளலர் மாதிரு நால்வளர் சேதுவையாண்
மாதள வாய்ரகு நாத கிரீடி வரைவருமுற்
பாதமின் னேதண் டுலம்வாங்கச் சொற்சுயம் பாகியென்றே
யோதனங் காட்டிய நீகழு நீரை யொளித்ததென்னே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சேதுவை ஆள்-சேதுவை ஆளாநின்ற, அலர் மாது இரு நால் வளர்-அஷ்ட லக்ஷிமிகள் விருத்தியடையாநின்ற, சேதுவை-சேது தீரத்தை, ஆள் - ஆள்கின்ற, மா - பெரிய, தளவாய் - சேனுபதி, ரகுநாத கிரீடி - ரகு நாதனென்னும் மகுடவர்த்தனன், (அவனது) வரை - மலையில், வரும் - தோன்றிய, உற்பாதம் - ஆச்சரியகரமான, மின்னே - மின்னற்கொடி

போல்வாளே, தண்டுலம் வாங்க - அரிசி வாங்க, சொல் - புகழையுடைய, சுயம்பாகி என்றே - ஸ்வயம்பாகியென்று சொல்லப்பட்டு, ஓதனங் காட்டிய நீ - சோற்றைக் காட்டிய நீ, கழுநீரை ஒளித்தது என் - கழுநீரை மறைத்ததற்குக் காரணம் யாது; (எ-று.)

### குறிப்புப் பொருள்

ஓ - ஆச்சரியம்.

தனம் - கொங்கை, கழுநீர் - ஆம்பல், (கண்). தண்டு உலம் வாங்க - தூண்போன்ற திரண்டகல்லை யொத்த தோள்களால் தழுவ. பாகி - பக்குவமுடையாள். (194)

நாகர முந்து தமிழோரின் மைக்கங்கு லையச்செய்தி
வாகர மைந்து மிகுரகு நாதன் வரைமினன்னீர்
சாகர முந்தி யடைத்தீ ரிலங்கைமன் சந்தமணிச்
சேகர முந்தகர்த் தாலுமை யேரவி சேயென்பரே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நாகரம்-நாகரத்திலும், முந்து தமிழ்-பழமையாகிய தமிழினும், ஓரின் - ஆராயின், மை கங்குல் ஐயச்செய் - கரிய இருளை அழிக்கின்ற, திவாகரன் மைந்து - சூரியனது வலிமையினும், மிகு - மேலான, ரகுநாதன்- ரகுநாத சேது பதியின், வரை - மலையிலுள்ள, மின்அன்னீர் - மின்னற் கொடியை நிகர்த்தவரே, முந்தி சாகரம் அடைத்தீர்-முற்பட்டுக் கடலை யடைத்தீர், இலங்கை மன் - இலங்காதிபனாகிய இராவணனது, சந்தம் - அழகாகிய, மணி சேகரமும் - ரத்ந கிரீடத்தையும், தகர்த்தால் - உடைத்துத் தள்ளினால், உமையே - உம்மையே, ரவி சேய் என்பர் - சூரிய புத்ரனாகிய சுக்ரீவனென்று உலகத்தார் சொல்வார் ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

சாகரம் - கடல், (கண்). மணிச் சேகரம் - இரத்தின கிரீடம், (தனம்). (195)

மானில மங்குமந் தாநிலந் தங்க மகிழ்செம்பியர்
கோனிலம் பாட்டைத் தெறுரகு நாதன் குவட்டணங்கே
கானிலா நார்கட வூர்கண்ட நாமக் கலையர்க்கண்டாற்
றேனிலங் கார்திருத் தொண்டத் தொகையுந் தெரிந்தவரே.

### வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) *மானிலம் எங்கும்-உலகமெங்கும், மந்த அநிலம் தங்க-மந்த மாருதம் நிலைபெற்றிருக்க, மகிழ் - மனமகிழ்கின்ற, செம்பியர் கோன் - சோழ தேசத்தார்க்கு அரசன், இலம்பாட்டை-வறுமையை, தெறு-அழிக்கின்ற, ரகு நாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) குவடுஅணங்கே - மலையிலுள்ள பெண்ணே, கானில் அங்கு ஆர் - காடாகிய அவ்விடத்தில் பொருந்திய, கடவூர் கண்ட நாம் - திருக்கடவூரைப் பார்த்த நாம், அ - அந்த, கலையர்க் கண்டால் - குங்கிலியக் கலைய நாயனரையும் பார்த்தோமாயின், தேனில் - தேனைப்போல, அங்குஆர் - அவ்விடத்துப் பொருந்திய, திருத்தொண்டத் தொகையும் - திருத்தொண்டத் தொகையையும், தெரிந்தவரே - அறிந்த வரேயாவோம்; (எ - று.)*

### குறிப்புப் பொருள்

*கான் இலங்கு ஆர் கடவூர் - மணந்தங்கி விளங்குகின்ற அரிய கடமாகிய ஊர், கடம் - கலசம், (தனம்). கலையர் - கலைய நாயனர்; கலை - மான், (கண்).* (196)

ஆவசி யம்பொன்னை யூர்வசி யூர்ப்பெய ரார்க்கருளிப்
பாவசி யங்கொள் ரகுநாத சேதுபதி வரைவாய்ப்
பூவசி யஞ்செய் தனவசி யந்தரப் பூண்டதுபோற்
கோவசி யந்தரப் பூண்பதெப் போதுசொற் கோகிலமே.

### வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) *ஆவசியம்-அவஸ்யமாகிய, பொன்னை-ஸ்வர்ணத்தை, ஊர்வசி- ஊர்வசி வாழ்கின்ற, ஊர் - ஊரார் என்கிற, பெயரார்க்கு அருளி - பெய ரையுடைய தேவர்களுக்குக் கொடுத்து, பா வசியங் கொள் - பாடலின் வசி யத்தைத் தன்னிடத்தில் கொண்ட, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், பூ வசியம் செய் - பூலோகத்தை வசியம் செய்யத் தக்க, தன வசியம் - தன வசியத்தை, தர பூண்டது போல் - கொடுக்கப் பூண்டுகொண்டது போல, கோ வசியம் தர - கோ வசியத்தைக் கொடுக்க, பூண்பது எப் போது - பூண்டுகொள்வது எப் பொழுது, சொல் - மதுர மொழியையுடைய, கோகிலமே - குயில் போல்பவளே; (எ - று.)*

*தேவர்களுக்கு - புலவர்களுக்கு.*

### குறிப்புப் பொருள்

*தன வசியம் - தனத்திறைற் செய்யும் வசியம், (தனம் - முலை). கோ வசியம் - கண்ணிறைற் செய்யும் வசியம், (கோ - கண்).* (197)

*பிங்களத் தால்வந் தடைந்தோர் குடும்பப் பிரதிட்டைசெய்யக்*
*கங்கணங் கட்டுசெங் கைரகு நாதன் கவின்வரைவாய்*
*மங்கைநல் லீருங்கள் ரத்நாக ரத்தை மறைத்துவரச்*
*சங்கடங் காட்டத் தகுமோ விரப்பவர் தங்களுக்கே.*

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) *பிங்களத்தால்* - பொன்னின்பொருட்டு, வந்து அடைந்தோர் - வந்தடைந்தவருடைய, குடும்பப் பிரதிட்டை செய்ய - குடும்பப் பிரதிஷ்டையைச் செய்யும் பொருட்டு, கங்கணம் கட்டு - கங்கணங் கட்டின, செங் கை - செங் கையையுடைய, ரகுநாதன்-ரகுநாத சேதுபதியின், கவின் வரைவாய்- அழகிய மலையின்மீதுள்ள, மங்கை நல்லீர் - பெண்களிற் சிறந்தவரே, உங்கள் ரத்நாகரத்தை மறைத்து - உங்களுடைய இரத்திநாகரத்தை மறைத்து, இரப்பவர் தங்களுக்கு - யாசிப்பவர்களுக்கு, வரச் சங்கடங் காட்டத் தகுமோ - மிகுந்த சங்கடத்தைத் தெரிவிக்கத்தகுமோ; (எ - று)

இரத்திநாகரம் - இரத்தினங்களை வைக்குமிடம்; கடலுமாம்.

குறிப்புப் பொருள்

ரத்நாகரம் - கடல், (கண்). சங் கடம் - விருப்பத்தையுண்டாக்குகின்ற குடம், (தனம்). (198)

தோமினி யார்செயி னுஞ்சிரஞ் சேதிக்கத் தோன்றுமுனை
மாமினி னீள்வடி வாள்ரகு நாதன் வரைமடவீர்
தேமினி தாமெய் யமலையைப் போற்றித் திவாமுன்முறை
யாமினி யேவன நீலியைப் போற்றுதும் யாமினியே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தோம்-குற்றத்தை, இனியார் செய்யினும்- இனியவர் செய்தாலும், சிரம் சேதிக்கத் தோன்றும்-அவருடைய சிரங்களை யறுக்க எழுகின்ற, முனை - கூர்மையையுடைய, மா - பெரிய, மின்னின் நீள் - மின்போல நீண்ட, வடி வாள் - வடித்த வாளாயுதத்தை யேந்திய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரை-மலையிலுள்ள, மடவீர் - மாதரே, தேம் இனிது ஆம் மெய் - தேன்போல இனிதாகிய உண்மை யுள்ள, அமலையை - பரிசுத்தையாகிய இலக்குமியை, திவா முன் போற்றி - பகற்பொழுதிற்றானே முற்பட வணங்கி, முறை - முறையே, யாம் இனி - நாம் இனி, யாமினியே - இராப்பொழுதில், வன நீலியைப் போற்றுதும்-வன துர்க்கையைத் தொழுவோம்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

தேம் இனிது ஆம் மெய் அமலை - மணத்தாலினிதாகிய மார்பி லுள்ள அழகிய மலை, (தனம்). வனம் நீலி - கடலிலுள்ள நீல நிறமுடைய வள், (கண்). (199)

மகமிலை மேவ வளர்செம்பி நாட்டிறை வாகுவென்று
நகமிலை வீர ரணகே சரிரகு நாதன்வெற்பிற்
சகமிலை யஞ்செய மேலா யுயர்ந்த தனம்படைத்தா
சுகமிலை யென்றுசொல் வாரோ வுலகிற் சுடர்த்தொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மகம்-வேள்விகள், இல்லை மேவ-வீடுகளிற் பொருந்த, வளர்-விருத்தி யடையாநின்ற, செம்பி நாட்டு இறை - சோழ நாட்டுக் கிறைவன், வாகு என்று - தோள்கள் என்று, நகம் மிலை - மலைகளைத் தரித்த, வீர ரண கேசரி - வீர ரண சிங்கம் ஆகிய, ரகு நாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதி யின் மலையில், சகம் இலயம் செய்ய - உலகத்தை யடக்க, மேலாய் உயர்ந்த - மேன்மையாகி உயர்ந்த, தனம் படைத்து - பொன்னைப் படைத் திருந்தும், ஆ - ஐயோ, உலகில் - உலகத்தில், சுகம் இல்லை என்று சொல் வாரோ - சுகமில்லையென்று சொல்வார்களோ, சுடர் தொடியே - ஒளியுள்ள வளையலை யணிந்தவளே; (எ - று.)

## குறிப்புப் பொருள்

சகம் இலயம் செய்ய - உலகத்தை யழிக்க, மேலாய் உயர்ந்த தனம்-மேன்மை பெற்றுயர்ந்த தனம், (தனம்-முலை). ஆசுகம்-அம்பு, (கண்.) (200)

வேற்சே ரலர்மச்சர் கொங்கர்வங் காளர் விறற்சமுகப்
பாற்சே ரபய ரகுநாத சேது பதிவரைவாய்
நூற்சே ரவையினு நூற்றிலொன் றூன நுசுப்புடையீர்
காற்சே ரளித்தரைக் காற்சேர் கொடாதது கைதவமே.

## வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) வேல் சேரலர்-வேலாயுதத்தை யுடைய சேரலரும், மச்சர்-மச் சரும், கொங்கர்-கொங்கரும், வங்காளர் - வங்காளரும், விறல் சமுகப்பால் - (தன்) வெற்றி பொருந்திய சமுகத்தில், சேர் - வந்தடைதற்குரிய, அபயம் - அச்சத்தை நீக்குகிற, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின்

மலையில், நூல் சேர் அவையினும் - நூலென்றுசொல்லப் பொருந்திய அவற்றினும், நூற்றில் ஒன்று ஆன - நூற்றில் ஒரு கூறாகிய, நுசுப்புடையீர் - இடையை யுடையவரே, கால்சேர் அளித்து - உழக்கைக் கொடுத்து, அரைக்கால் சேர் கொடாதது - ஆழாக்கைக் கொடாதிருப்பது, கைதவமே- வஞ்சனையே; (எ - று.) (201)

சேர் - ஓர் அளவு.

## குறிப்புப் பொருள்

காற் சேர் - காலை நோக்குவது, (தனம்). அரைக்காற் சேர் - எண் சாண் உடம்பில் ஒன்றாகிய முகத்தில் சேர்வது, (கண்). அரைக்கால் - எட்டிலொன்று.

குலத்தைத்தந் தேவர் கொளச்செம்பி நாட்டுக் குடிகளுக்கு
நலத்தைத்தந் தாளு மனுரகு நாதன்மைந் நாகத்திற்சை
வலத்தைத்தந் தார்குழ லீர்முன் பதக்க வலதென்றுள்ள
கலத்தைத்தந் தீரிரு தூணியுந் தாருங் கணக்குடனே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தம் தேவர் குலத்தைக் கொள்ள-தம்முடைய தேவர்கள் மேன்மையையடைய, செம்பி நாட்டுக் குடிகளுக்கு - சோழ நாட்டுக் குடிகளுக்கு, நலத்தைத் தந்து ஆளும்-நன்மையைக் கொடுத்தாள்கின்ற, மனு-மனுவாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மைந் நாகத்தில் - மைநாக மலையில், சைவலத்தைத் தந்து - கொடிப் பாசியின் தன்மையைப் பெற்று, ஆர்குழலீர் - நிறைந்த கூந்தலையுடையீர், முன் - முன்னே, பதக்கு அவலது என்று - பதக்கு அவலை யுடையதென்று வாயினாற் சொல்லி, உள்ள - உண்டாயிருக்கிற, கலத்தைத் தந்தீர் - கலத்தைக் கொடுத்தீர், கணக்குடனே-கணக்கோடு, இருதூணியும் தாரும் - இரு தூணியையும் கொடும்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

முன் - முன்னே, பதக்கம் - பதக்கத்தை யணிந்த, அ வலது என்று - அந்த சூதாடு கருவியை யுடையதென்று, உள்-உள்ள, அகலத்தைத் தந்தீர்- மார்பைக் கொடுத்தீர். வல் - சூதாடு கருவி, (தனம்). இரு தூணி - இரண்டு அம்புக்கூடு, (கண்). (202)

கருக்குஞ் சிலீமுக மன்சொலி நட்பைமுன் காத்திகலை
நருக்குஞ் சிலீமுக மன்னப் பொருரகு நாதன்வெற்பிற்

பருக்குஞ் சிலீமுகங் காட்டிய நீமறை பாணிக்குளே
யிருக்குஞ் சிலீமுகங் காட்டா திருப்பதென் னேந்திழையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கருக் குஞ்சில் - கருப்பத்தி லிருக்கிற குழந்தைப் பருவத்திற்றுனே, ஈ-ஈகைக்குரிய, முகமன் சொல்லி-இன்சொற்களைச் சொல்லி, நட்பை முன்காத்து-நட்பினரை முன்னே காத்து, இகலே நருக்கும்-பகைவரைச் சேதிக்கிற, சிலீமுகம் மன்ன - அம்புகள் பொருந்தும்படி, பொரு - போர் புரிகிற, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையில், பருக்கும் சிலீமுகம் காட்டிய நீ - பருத்த சிலீமுகத்தைக் காட்டிய நீ, மறை பாணிக்குள்ளே இருக்கும் சிலீமுகம் - மறைத்த கைக்குள்ளே யிருக்கிற சிலீமுகத்தை, காட்டாது இருப்பது என் - காட்டாம லிருப்பதற்குக் காரணம் யாது, ஏந்திழையே - பெண்ணே; (எ - று.)

### குறிப்புப் பொருள்

மூன்றும் அடியிலுள்ள சிலீமுகம்-முலைக்கண், காட்டிய என்பதனால், தனப்புறப்பாடும், நான்காம் அடியிலுள்ள சிலீமுகம் - அம்பு, (கண்). "காட்டாது இருப்பது" என்பதனால், கண்புதைத்தலும் தோன்றின. (203)

வேந்தாதி வேந்தர் பரவுஞ் சமூக விசயன்மனு
மாந்தாதை கள்புகழ் வேள்ரகு நாதன் வரைமடவீர்
காந்தாரி யாய்த்துரி யோதன மால்பெற்றுக் காட்டியவற்
காந்தாதை யைமுன்ன மேகாட் டியதிங் கதிசயமே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வேந்தாதி வேந்தர்-ராஜாதிராஜர், பரவும்-புகழ்கின்ற, சமூக விசயன் - சமூகத்தையுடைய விஜயன், மநு மாந்தாதைகள் புகழ்-மநுமாந்தாதைகள் புகழ்கின்ற, வேள்-குமரவேள் போன்ற, ரகுநாதன் வரை-ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள, மடவீர் - மடவரலீர், காந்தாரியாய் - காந்தாரியாகி, துரியோதன மால் பெற்றுக் காட்டி - துரியோதனனாகிய பெருமையுடையோனை யீன்று காட்டி, அவற்கு ஆம் தாதையை-அவனுக்குத் தந்தையாகிய திருதராட்டிரனை, முன்னமே காட்டியது - முன்பே காட்டினது, இங்கு அதிசயம் - இவ்விடத்து அதிசயமாகும்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

காந்து ஆரியாய் - பிரகாசிக்கிற ஆரங்களை யுடையதாகி, துரியம் - தாங்குகிற, தன மால் - பெரிய தனத்தை, பெற்றுக் காட்டி - கொண்டு காட்டி, அவற்கு ஆம் தாதை - அவற்கு ஆம் தந்தையாகிய திருதராட்டி

ரனை, (அந்தகனை). "தனமால் காட்டி" என்றமையால், தனத்தின் புறப்பாடும், "அவற்காந் தாதையைக் காட்டி" என்றமையால், கண் புதைத்தலும் தோன்றின. (204)

முன்னாரி யைச்சிலை யாகச்செய் தோன்வெட்க முன்சிலையைப்
பின்னாரி யாகச் செயும்ரகு நாதப் பிரபலன்வரைப்
பொன்னே தினநற் கரும்பைத் தராமற் புழுகிலகு
பன்னாடை மூடு குரும்பைதந் தாயென்ன பாக்கியமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) முன்-முற்காலத்தில், நாரியை-பெண்ணை, சிலையாகச் செய்தோன் - கல்லாகச் செய்தவனாகிய கௌதமன், வெட்க - நாணும்படி, முன்-முன்னே, சிலையை - கல்லை, பின் - பின்னே, நாரிஆகச் செயும் - பெண்ணாகச் செய்த, ரகுநாத பிரபலன் வரை - ரகுநாத சேதுபதியாகிய பிரசித்தனது மலையில் உள்ள, பொன்னே - திருமகளை நிகர்த்தவளே, தின்ன - தின்னுதற்கு, நல் கரும்பைத் தராமல் - நல்ல கரும்பைக் கொடாமல், புழுகு இலகு - புழுவினால் ஒளி செய்கின்ற, பன்னாடை மூடு - நெய்யரியால் மறைக்கப்பட்ட, குரும்பை தந்தாய் - குரும்பையைக் கொடுத்தாய், என்ன பாக்கியம் - என்ன பாக்கியம்; (எ - று.)

'புழுகு' என்பதில் குச்சாரியை, (புழு).

## குறிப்புப் பொருள்

தின்ன நற்கரும்பைத் தராமல் - சுவைத்தற்கு இனிமையாகிய கரும்பு இரதம் போன்ற அதரத்தைத் தாராமல், 'என்றமையால், கண்புதைத்தலும், புழுகு இலகு - புனுகு மணக்கின்ற, பன்ஆடை மூடு - புகழ்தற்குரிய ஆடையால் மூடப்பட்ட, குரும்பை தந்தாய் - தென்னங் குரும்பை போன்ற தனத்தைக் கொடுத்தாய் என்றமையால், தனப் புறப்பாடும் தோன்றின.

வஞ்சனை யாக வருங்கொடி யோர்கண் மணியிழக்க
வெஞ்சர மேவு செயரகு நாதன் வியன்சிலம்பிற்
கஞ்ச மலர்மனை விட்டுமுன் னான கனியளிய
நஞ்ச திடாமற்செந் தேங்காயை யேதுக்கு நல்கியதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வஞ்சனையாக வரும்-கபடமாக வந்த, கொடி-காகாசுரன், ஓர் கண்மணி இழக்க-ஒரு கண்மணியை யிழக்கும்படி, வெம் சரம் ஏவு-கொடிய அம்பைப் பிரயோகித்த, செய ரகுநாதன் - வெற்றியுள்ள ரகுநாத சேதுபதியின், வியன் சிலம்பில் - பெரிய மலையில், கஞ்ச மலர் மனைவிட்டு - தாமரை

மலராகிய வீட்டைவிட்டு, முன் ஆன கன்னி - எனக்கெதிராகிய கன்னியே, அளிய நஞ்சது இடாமல் - குழைய நைஞ்சைக் கொடாமல், செந் தேங்காயை ஏதுக்கு நல்கியது - செவ்விய தேங்காயை யாதுக்குத் தந்தது; (எ - று.)

கஞ்சமலர் மனைவிட்டு முன்னை கன்னி - திருமகள், கொடி - காகம்.

## குறிப்புப் பொருள்

அளி, நஞ்சு இரண்டும் கண்ணையும், தேங்காய் தனத்தையும் உணர்த்தின. (அளி - வண்டு, நஞ்சு - விடம்). (206)

சுரதத்தில் வேள்கல்வி யிற்போசன் றந்திற் றுவரையர்கோன்
சரதத்தில் ராம னெனும்ரகு நாதன் சயிலமின்னே
பரதத்தி லாவ தறிந்தோஞ் சிவனிசிப் பத்தர்புரி
விரதத்தி லாவது நீயே யறிவிக்க வேண்டியதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சுரதத்தில் வேள்-கலவியில் மன்மதன், கல்வியில் போசன்-வித்தையில் போஜ ராஜன், தந்தில் துவரையர் கோன்-தந்திரத்தில் துவாரகாநகரத்தார்க் கரசனாகிய கிருஷ்ணன், சரதத்தில் ராமன் - சத்தியத்தில் ஸ்ரீராமன், என்னும் - என்று சொல்லப்படுகின்ற, ரகுநாதன் - ரகு நாத சேதுபதியின், சயிலம் மின்னே - மலையிலுள்ள பெண்ணே, பரதத்தில் ஆவது அறிந்தோம் - பரத நாட்டியத்தில் உபயோகப்படுவதை யறிந்து கொண்டோம், சிவநிசி - சிவராத்திரியில், பத்தர்புரி விரதத்தில் ஆவதும் - பத்தர் செய்கின்ற விரதத்தில் உபயோகப் படுவதையும், நீயே அறிவிக்க வேண்டியது - நீயே யெமக்குணர்த்தத் தருவது; (எ - று.)

தந்து - தந்திரம்.

## குறிப்புப் பொருள்

பரதத்திலாவது - கைத்தாளம், (தனம்). சிவநிசிப் பத்தர் புரி விரதத்தி லாவது - கண் விழித்தல், (கண்). (207)

கலையைமுன் காட்டு மதிபோற் றவளக் கவிகைநிழ
லிலையைமுன் காட்டும் ரகுநாதன் மால்வரை நேரிழையீர்
மலையைமுன் காட்டி யடைத்தீர் கடலைநன் மந்திரத்தா
லலையைமுன் காட்டி யதுபோலக் காட்டு மனையின்றியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கலையை முன்காட்டு மதிபோல்-கலைகளையெதிரே காட்டுகின்ற சந்திரன் போல, தவளக் கவிகை நிழல் நிலையை முன்காட்டும்-வெண்கொற்

றக் குடை நிழலின் நிலையை யெதிரே காட்டுகின்ற, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், மால் வரை - பெரிய மலையிலுள்ள, நேரிழையீர் - நேரிய ஆபரணத்தை யணிந்தவரே, மலையை முன் காட்டி - மலைகளை முன்னே யிட்டு, கடலை அடைத்தீர் - கடலைத் தடுத்தீர், நல் மந்திரத்தால் - நல்ல மந்திரத்தினால், அலையை - (கடல்) அலையை, முன் காட்டியது போல - முன்னே காட்டினதுபோல, அனை இன்றி காட்டும் - மீனில்லாமல் காட்டும்; (எ - று.)

அனை - ஓர்வகை மீன்.

### குறிப்புப் பொருள்

மலை - தனம், கடல் - கண், அலை - வயிற்று மடிப்பு. (208)

தங்காவி யன்ன நிறைசெம்பி நாடன் சரணடைந்தோர்
பங்காவி யன்ன ரகுநாத சேது பதிவிருதாஞ்
செங்காவி யன்ன மணிதானை சேர்கசச் சேவகமுன்
கொங்காவி யன்ன குழலீ ரதுவுங் கொடுக்கினன்றே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்). தங்கு-நிலைபெற்ற, ஆவி-தடாகங்களில், அன்னம் நிறை-அன்னங்கள் நிறைந்த, செம்பி நாடன்-சோணாட்டை யுடையவன், சரண் அடைந்தோர் பங்கு - தன்னைச் சரணடைந்தவர் பங்கில், ஆவி அன்ன - உயிர் போன்ற, ரகுநாத சேதுபதி - ரகுநாத சேதுபதி, (அவனது) விருதுஆம் - விருதாகிய, செங்காவிஅன்ன - செங்காவி போன்ற, மணி தானை சேர் - மணியும் படையும் சேர்ந்த, கசச்சேவக முன் - யானைச் சேவகத்துக்கு முன்னே, கொங்கு ஆவி அன்ன குழலீர் - மணமும் அகிற்புகையுந் தங்கிய கூந்தலையுடையீரே, அதுவும் கொடுக்கின் நன்று - அதையுங் கொடுத்தால் நன்மையாம்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

கசம் - யானை, (தனம்). காவி - கண், அது என்றது கண்ணை. கசச் சேவகம் - யானையை யடக்கும் வீரத்திற்கு, மூக்கும் புருவமும் - அங்குசமாதலால், அதை மறைக்காது தந்தால் நன்று என்பது. (209)

கிடைக்குங் கிடைக்குங் கிளர்செம்பி நாடன் கெடிப்பயந்தன்
படைக்கும் படைக்கும் ரகுநாத சேது பதிவரையீர்
புடைக்கும் புடைக்குந் துரைத்தன நீர்தரப் பூரித்தநான்
கடைக்குங் கடைக்கு மமைச்சரை யுந்தரிற் கைக்கொள்வனே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கிடைக்கும் கிடைக்கும்-(எவ்வகை யுலகத்துக்கும்)உவமையாகப்பெறுகின்ற, கிளர் செம்பி நாடன் - விளங்குகின்ற சோழநாட்டை யுடையவன், கெடிப் பயம் - ஊர்ப்பயம், தன் படைக்கும் படைக்கும்-தன் படைகளுக்கு முண்டாக்குகின்ற, ரகுநாத சேதுபதி வரையீர் - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ளவரே, புடைக்கும் புடைக்கும் - வமிசபாரம் பரியத்துக்கும், நீர் துரைத்தனம் தர - நீர் துரைத்தனத்தைக் கொடுக்க, பூரித்த நான் - களித்த நான், கடைக்கும் கடைக்கும் - எப்போதைக்கும், அமைச்சரையும் தரின் - மந்திரிமாரையுங் கொடுத்தால், கைக் கொள்வன் - ஏற்றுக் கொள்வேன்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

புடைக்கும் புடைக்கும் துரைத் தனம் - மேன்மேலும் பெருக்கின்ற உயர்வாகிய தனம், அ மைச்சர் - அழகிய மீனின் தன்மையுடையவர், (கண்). மச்சர் என்பது மைச்சர் எனப் போலியாயிற்று. (210)

சூனந்தந் தீர மலிநதிச் செம்பியர் தோன்றலிசைக்
கானந்தந் தீரஞ் செவிரகு நாதன் கவின்வரைவாய்
வானந்தந் தீரென நுண்ணிடை யீர்நன் மணிக்கனக
தானந்தந் தீரினங் கோதான முந்தரிற் றானமெய்யே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சூல் நந்து - கருப்பங்கொண்ட சங்குகள், அம் தீரம் - அழகிய கரைகளில், மலி - நிறைந்த, நதி - யாறு சூழ்ந்த, செம்பியர் தோன்றல் - சோணாட்டார்க்கரசன், இசைக் கானம் தந்து ஈர் - இராகங்களை யுடைய சங்கீதம் நுழைகின்ற, அம் செவி - அழகிய செவிகளையுடைய ரகுநாதன் கவின் வரைவாய் - ரகுநாத சேதுபதியின் அழகாகிய மலையின் கண்ணுள்ள, வானம் என - ஆகாயம் போலவும், தந்து ஈர் என - நூலிழையின் வகிர் போலவும், நுண் இடையீர் - நுட்பமாகிய இடையையுடையவரே, நல் - நல்ல, மணி - மணிகளோடு, கனக தானம் தந்தீர் - சொர்ன தானம் செய்தீர், இன்னம் - இன்னமும், கோ தானமுந் தரின் - கோதானமும் செய்தால், தானம் மெய்யே-நீர் செய்யும் தானம் உண்மையே; (எ-று.)

## குறிப்புப் பொருள்

மணிக்கல் நகம் - மணிவடமணிந்த பொன் மலே, (தனம்). கோ - கண்.

பொன்னிக்குப் பொன்னித் திலமணி யீதண் புனற்செம்பியாள்
சென்னிக்குச் சென்னி யெனும்ரகு நாதனற் றேவையன்னீர்
வன்னிக்கு முன்றன மீந்தீர் சொற் காவியம் வாசிக்கநீ
ருன்னிக் கவிஞ ரெனக்காட்டிற் கூடற் குடையவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பொன்னிக்கு - காவேரிக்கு, பொன் - பொன்னையும், நித்திலம் - முத்தையும், மணி - ரத்நங்களையும், ஈ - கொடுக்கிற, தண் புனல் - குளிர்ந்த நீரையுடைய, செம்பி - சோழநாட்டை, ஆள் - ஆள் கின்ற, சென்னிக்கு - சோழனுக்கு, சென்னி என்னும் - முடியெனப்படுகிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், நல் தேவை அன்னீர் - நல்ல தேவை நகரத்தை நிகர்த்தவரே, வன்னிக்கு-பிரமசாரிக்கு, சொற் காவியம் வாசிக்க - சொற்களையுடைய காவியம் படிக்க, முன் தனம் ஈந்தீர் - முன்னே பொன் கொடுத்தீர், நீர் உன்னி - நீர் ஆலோசித்து, கவிஞர் என காட்டின் - கவிஞர் என்று காட்டினால், கூடற்கு உடையவரே - மதுரைக்கு உடைய வரே யாவீர்; (எ - று.)

வன்னி - தருமி.

## குறிப்புப் பொருள்

'தனமீந்தீர்' என்றமையால், தனத்தின் புறப்பாடும், காவியம் வாசிக்கக் காட்டின் - நீலோற்பலம் மணக்கும்படி காட்டினால், இதனால் கண் புதைத்தலும் விளங்கின. கூடற்குஉடையவர் - புணர்ச்சிக் குரிய வர். (212)

நடமுந் திசையெனப் பொற்சதங் கைத்தொனி நல்கமுன்ச
கடமுந்து பங்கசத் தான்ரகு நாதன் கவின்வரைவாய்
வடமொழி தென்மொழி யாஞ்சூத மாமுன்பின் மார்க்கப்படி
திடமுன்பு கண்டனம் பின்னென்று காணட்டுஞ் சேயிழையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நடம் முந்து இசை என - நடத்தின் முந்துகின்ற இசை போல, பொன் சதங்கைத் தொனி முன் நல்க - பொற் சதங்கை யொலி முன்னே யுண்டாக, சகடம் - வண்டியை, உந்து - உதைத்துத் தள்ளின, பங்கசத்தான் - திருவடித் தாமரை யுடையவன், ரகு நாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) கவின் வரைவாய்-அழகிய மலையின்கண், வடமொழி தென்மொழி ஆம் சூது - வடமொழி தென்மொழியாகிற சூது, அம்மா -

ஆச்சரியம், முன் பின் மார்க்கப்படி - முன் பின்னாய் வைக்கப்பட்டிருக்கிற நெறிப்படியே, திடம் முன்பு கண்டனம் - திடமானதை முன்னே கண்டோம், பின் ஒன்றுங் காணட்டும் - பின்னுள்ள ஒன்றையுங் காணட்டும், சேயிழையே - பெண்ணே; (எ - று.)

## குறிப்புப் பொருள்

வடமொழி - தனம், தென்மொழி - கண். வடமொழிக்குச் சூதும், தென்மொழிக்கு மானும் பொருத்துக. [சூது - தாமரை = தாவுகின்ற மரை (மான்)]. (213)

கித்திய மாண்மை யவுதா ரியநன்மை கீர்த்தியைந்து
நித்திய மாகும் ரகுநாதன் மால்வரை நேரிழையீர்
சத்திய மில்லை யளியில்லை மெய்யுண்மை சாட்சியில்லை
யத்தியும் வம்பு முடையீ ருமக்கிங் கரசில்லையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கித்தியம் - சத்க்ருத்யம், ஆண்மை - ஆண்டன்மை, அவுதாரியம் - ஔதாரியம், நன்மை - நன்மை, கீர்த்தி - புகழ் ஆகிய, ஐந்தும் - ஐந்தும், நித்தியம்ஆகும் - நித்தியமாயுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மால் வரை - பெரிய மலையிலுள்ள, நேரிழையீர் - நேரிய ஆபரணத்தையுடையவரே, சத்தியம் இல்லை - உண்மையில்லை, அளி இல்லை - அருளில்லை, மெய்யுண்மை சாட்சி இல்லை - உண்மையாகவே கண்ணோட்டமில்லை, அத்தியும் வம்பும் உடையீர் - கொலையும் வீண்காரியங்களையும் உடையவரா யிருக்கின்றீர், (ஆதலால்) உமக்கு - உமக்கு, இங்கு அரசு இல்லை - இவ்விடத்தில் அரசாட்சி இல்லை; (எ - று.)

## குறிப்புப் பொருள்

சத்திஅம் - வாளினழகு, அளி - வண்டு, மை சாட்சி - மையோடு கூடிய கண் இவை கண்ணையும், அத்தி - யானை, வம்பு - கச்சு, வாசனை இவை தனத்தையுங் குறித்தன. (214)

கொடைக்கஞ் சியமுகி லார்பொழிற் செம்பியர் கோமதலைத்
தொடைக்கஞ் சியமெய் ரகுநாதன் மால்வரைத் தோகையுன்ற
னடைக்கஞ் சியபிடி குத்துணப் பார்த்தன நாடட்டுமே
லிடைக்கஞ் சியதுடி கட்டுண் டடிபட் டிருப்பதுமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கொடைக்கு அஞ்சிய முகில் - தன் ஈகைக்கு அஞ்சிய மேகங்கள், ஆர் - தவழ்கின்ற, பொழில் - சோலைசூழ்ந்த, செம்பியர் - சோழ நாட்டாருக்கு, கோ - அரசன், மதலைத் தொடைக்கு அஞ்சிய - கொன்றைமலர் மாலைக்கு அஞ்சின, மெய் - சத்தியத்தையுடைய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) மால் வரை - பெரிய மலையிலுள்ள, தோகை - மயில்போல்வாளே, உன்றன் நடைக்கு அஞ்சிய - உன் நடைக்கு அஞ்சின, பிடி - பெண்யானை, குத்துணப் பார்த்தனம் - குத்துண்ணுதலை நோக்கினோம், மேல் - இனி, இடைக்கு அஞ்சிய துடி - உன் இடைக்கு அஞ்சிய உடுக்கை, கட்டுண்டு அடிபட்டிருப்பதும் - கட்டுண்டடிபட்டிருப்பதையும், நாடட்டும் - நான் நோக்கட்டும்; (எ - று.)

ஏ - அசை.

வரையாது கொடுக்கும் வள்ளன்மைக்கு மேகமும் பின்னிடுமென்றற்குக் 'கொடைக்கஞ்சிய முகில்' என்றார். மதலைத் தொடைக்கஞ்சுதலாவது முல்லை மலர்மாலையை யன்றி அதனைத் தரியாமை.

## குறிப்புப் பொருள்

பிடி-தனம். துடி கண் - துடிக்கின்ற கண், துண்டு அடிபட்டிருப்பது-துண்டாக மூடப்பட்டிருப்பது. (கண்). (215)

சத்துரு மித்துரு வித்துரு மம்பொற் றரளமிட்டு
நத்துரு நத்துரு வத்துரு வன்ரகு நாதன்வெற்பின்
மத்துரு வைத்தரி சித்தோமுன் னாழி மதித்தவன்செய்
பத்துரு வத்திலொன் றெப்போது காண்பது பைந்தொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சத்துருமித்துரு - நண்பரும் பகைஞரும், வித்துருமம் - பவளத்தையும், பொன் தரளம் - பொன்னையும் முத்தையும், இட்டு - எதிரில்வைத்து, நத்து - யாவரும் விரும்புதற்குரிய, உரு - நிறமுள்ள, நத்துருவத்து - நல்ல் திடத்தையுடைய, உருவன் - ரூபத்தையுடையவன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வெற்பில் - மலையிலுள்ள, பைந் தொடியே - பசும்பொன் வளையலை யுடையவளே, மத்து உருவைத் தரிசித்தோம் - மத்தினது ரூபத்தைத் தரிசனம் செய்தோம், முன் ஆழி மதித்தவன் - முற்காலத்தில் திருப்பாற்கடலை கடைந்த திருமால், செய் - செய்த, பத்து உருவத்தில் - பத்தவதாரங்களில், ஒன்று - ஒன்றை, எப்போது காண்பது - எப்பொழுது யான் பார்ப்பது; (எ - று.)

"சத்துரு மித்துரு வித்துருமம் பொற்றாளமிட்டு" என்பதற்கு ஒன்றற்கொன்று பகையும் நட்புமாகிய பவளத் தாழ்வடங்களையும் பொன்னுபரணங்களையும் முத்து வடங்களையும் அணியப்பெற்று என்றுரைப்பினு மமையும்.

## குறிப்புப் பொருள்

மத்து உரு - மந்தரமலையின் உருவம், (தனம்). ஆழிமதித்தவன் செய் பத்துருவத்திலொன்று : மீன், (கண்). (216)

மன்னு மரக்கனை முன்னாளைப் போரின் மகுடபங்கந்
தன்னாண்மை யாற்செய்த மால்ரகு நாதன் சயிலமின்னே
கொன்னுர் கலிங்கவங் கம்மலை யாளக் குடகுதந்தாய்
பின்னா டணிமச் சதேசமு மீயிற் பெருமையுண்டே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மன் ஆம் அரக்கனை - இலங்காதிபனாகிய ராட்சஸனை, முன்னாளைப் போரில் - முதல் நாள் யுத்தத்தில், தன் ஆண்மையால் - தன் வீரியத்தால், மகுட பங்கம் செய்த - மகுட பங்கம் பண்ணின, மால் ரகு நாதன் - பெரியோனாகிய ரகுநாத சேதுபதியின், சயிலம் - மலையிலுள்ள, மின்னே - மின்னற்கொடி போல்பவளே, கொன்னூர் - பெருமை பொருந்திய, கலிங்க வங்கம் மலையாளக் குடகு தந்தாய் - கலிங்கம் வங்கம் மலையாளம் குடகு என்பவற்றைக் கொடுத்தாய், பின் நாடு - இவற்றுக்குப் பின்னுள்ள நாடாகிய, அணி - அழகிய, மச்ச தேசமும் - மச்ச தேசத்தையும், ஈயின் - கொடுத்தால், பெருமை யுண்டு - உனக்குப் பெருமை யுளது; (எ - று.)

மன்னும் அரக்கன் - இராவணன்.

## குறிப்புப் பொருள்

கலிங்கஅங்கம் - ஆடையால் மூடுதற்குரிய உறுப்பாகிய, மலையாள் அக் குடகு - மலையின் தன்மையைக்கொண்ட அந்தக் குடக மலைபோன்ற தனம், நாடு அணி மச்சதேசம் - நோக்குதற்குரிய அழகிய மீன்போன்ற உறுப்பாகிய கண். (217)

கலமலி வேலை யலையலை வீறுசங் கத்துறைசேர்
தலமிகு தேவைத் துரைரகு நாத தனதன்வெற்பி
னலவன சத்திரு வன்னீரும் மாலிங்கு நாடொறுமுற்
பலமிலை மெத்த சலமுண்டி தென்னசம் பாவனையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கலம் மலி - மரக்கலங்கள் நிறைந்த, வேலே - கடலின், அலே - அசைகின்ற, அலே - அலேகள், வீறு - அதிகரித்த, சங்கம் - சங்குகள் தவழ்கின்ற, துறை சேர் - துறை பொருந்திய, தலம் மிகு - இடம் மிகுந்த, தேவை துரை - தேவ நகரத்தார்க்குப் பிரபு, ரகுநாதன் தனதன் - ரகுநாத சேதுபதியென்கிற குபேரன், (அவனது) வெற்பில் - மலேயில், நல - நல்ல, வனசம் - தாமரை மலரிலுள்ள, திரு அன்னீர் - இலக்குமியை யொத்தவரே, உம்மால் - உங்களால், இங்கு - இவ்விடத்து, நாள்தொறும் - தினந்தோறும், முன் பலம் இலே - முதன்மையாகிய பயன் இல்லே, மெத்த சலம் உண்டு - மிகுதியாக நீர் உண்டு, இது என்ன சம்பாவனே - இது என்ன காணிக்கை; (எ - று.)

சலம் - சஞ்சலமுமாம்.

## குறிப்புப் பொருள்

உற்பலம் - கருங்குவளே, (கண்), மெத்துஅசலம் - மென்மையாகிய மலே, (தனம்). (218)

நரியாடு மான்முச லான்போற் பகையஞ்ச நாடுகுய
வரியாட வர்தில கன்ரகு நாதன் வரையணங்கே
யரியாடு கூத்துமுன் காட்டிய நீயினி யம்புலிக்கோ
தரியாகு கூத்தையுங் காட்டிலுண் டாம்வெகு தன்மங்களே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நரி ஆடு மான் முசல் ஆன் போல் - நரி ஆடு மான் முசல் பசு இவற்றைப் போல, பகை அஞ்ச - பகைவரஞ்ச, நாடு - அவர்களேத் தேடுகின்ற, குயவரி - வேங்கைப் புலி, ஆடவர் திலகன் - புருஷ திலகன், ரகுநாதன் - ரகுநாத சேதுபதி, (அவனது) வரை - மலேயிலுள்ள, அணங்கே - தெய்வப் பெண்ணே, அரி ஆடு கூத்து - திருமால் ஆடின கூத்தை, முன்காட்டிய நீ - முன்னே காட்டின நீ, இனி - இனிமேல், அம்புலிக் கோ தரி - சந்திரனுகிய கண்ணேத் தரித்த சிவபெருமான், ஆடு கூத்தையும் - ஆடின கூத்தையும், காட்டில் - காட்டினல், வெகு தன்மங்கள் உண்டாம் - வெகு சுகுர்தங்கள் உனக்கு உண்டாகும்; (எ - று.)

"அம்புலிக் கோ தரி" என்பதற்குச் சந்திரனே அழகாகச் சிரசில் தரித்தவன் என்றுரைப்பினுமமையும்.

## குறிப்புப் பொருள்

அரியாடு கூத்து-குடக்கூத்து, அம்புலிக் கோ தரி யாடு கூத்து - கொடுகொட்டி. இவை முறையே தனத்தையும் கண்ணேயும் குறித்து நின்றன.

கொடுகோட்டி என்பதற்குப் பொருள் மிகவும் வளைவை யுடையது என் பது, (கண்). (219)

ஓதண்டர் நாட்டிற் குடிவாங்கப் பந்த ரொடுமணக்கான்
மீதண்ட நாட்டப் புரிரகு நாதனல் வெற்பணங்கே
கோதண்டங் குந்தமுன் னீந்துபின் மாம குடமுங்கட
வேதண்ட முந்தரி னனங்க தேசத்தை வெல்குவனே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஓது அண்டர் - சொல்லப்பட்ட தேவர்கள், நாட்டின் - தம் முலகில் நின்றும், குடி வாங்க - குடிவிட்டோட, பந்தரொடு - பந்தலோடு, மணக்கால் - மணக்கால்களை, மீது அண்ட - மீதே சென்று பொருந்தும்படி, நாட்டப் புரி - நாட்டச் செய்கின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், நல் வெற்பு - நல்ல மலையிலுள்ள, அணங்கே - பெண்ணே, கோதண்டம் குந் தம் - வில்லையும் கைவேலையும், முன் ஈந்து - முன்னே கொடுத்து, பின் - பிறகு, மா மகுடமும் - அழகிய கிரீடத்தையும், கட வேதண்டமும் - மத யானையையும், தரின் - கொடுத்தால், நான் - யான், அங்க தேசத்தை வெல் குவன் - அகங் தேசத்தை ஜெயிப்பேன்; (எ - று.)

குறிப்புப் பொருள்

கோதண்டம் குந்தம் இரண்டும் கண்ணையும், கட வேதண் டம் தனத்தையும் குறித்து நின்றன. அங்க தேசம் - உறுப்பாகிய பிரதேசம். கோதண்டம் - வில், (புருவம்). குந்தம் - கைவேல். வேதண்டம் - யானை, (தனம்.) வேதண்டம் - மலை; கடவேதண்டம் என்றதனால் யானையை யுணர்த்திற்று. (220)

புடவி கடந்த மிளவற்கு மெய்த்தவம் பூண்டுமுன்னே
யடவி கடந்த பதரகு நாத னசலமின்னே
குடவி கடந்தரல் காட்டிக் கலையைக்கைக் கொண்டொளித்த
கடவி கடந்தர லானுனை யுஞ்சொல்வர் கண்ணனென்றே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அம் இளவற்கு - அழகிய தம்பியாகிய பரதனுக்கு, புடவி கள் தந்து - ராச்சியங்களைக் கொடுத்து, மெய்த் தவம் பூண்டு - சத்திய விர தத்தை மேற்கொண்டு, முன்னே - பூர்வ காலத்தில், அடவி கடந்த - ஆரணி யத்தைத் தாண்டின, பதம் - பாதத்தையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேது பதியின், அசலம் - மலையிலுள்ள, மின்னே - மின்னற் கொடிபோல் பவளே, குட விகடந்தரல் காட்டி - குடக்கூத்தாடி, கலையைக் கைக் கொண்

டொளித்து - (கோபிகா ஸ்திரீகளின்) வஸ்திரங்களை அபகரித்துக்கொண்டு மறைத்து, அகட விகடம் தரலால் - அகட விகடம் பண்ணுதலால், உனையும் - உன்னையும், கண்ணனென்றே சொல்வர் - கண்ணனென்றே சொல்வார்கள்; (எ - று,)

## குறிப்புப் பொருள்

"குட விகடந் தரல் காட்டி" என்றமையால் தனத்தின் புறப்பாடும், "கலையைக் கைக்கொண்டு" என்றமையால் கண் புதைத்தலும் விளங்கின. கலை - மான், அகட விகடம் - வம்பு, (கச்சு.) (221)

பூணனை தந்தை தளைநீங்கி யானந்தம் பூணக்கஞ்ச
ஞணமுன் ஞக வருரகு நாதன்மைந் நாகமின்னே
பாணனை யோடி யொளிக்கவென் ருயங்க பந்தனையுங்
காணவென் ருலுனை யேதிரு மாலென்பர் கண்டவரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பூண் - பூண்ட, அன்னை தந்தை - தாய்தந்தைகள், தளை நீங்கி - விலங்கு நீக்கப்பெற்று, ஆனந்தம்பூண - இன்பத்தை யடையவும், கஞ்சன் நாண - கஞ்சன் வெட்கவும், முன்ஞக வரு - முற்காலத்தில் வந்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மை நாகம் - கரிய மலையிலுள்ள; மின்னே - மின்னற் கொடிபோல்வாளே, பாணனை - பாணனென்பவனை, ஓடி ஒளிக்க - ஓடி மறையும்படியாக, வென்ருய் - ஜெயித்தாய், அம்-அழகிய, கபந்தனையும் - கபந்த னென்பவனையும், காண வென்ருல் - பார்க்கும்படி ஜெயித்தால், கண்டவர் - பார்த்தவர், உனையே - உன்னையே, திருமாலென்பர் - திருமாலென்று சொல்லுவர்; (எ - று.)

திருமால் என்றது இவ்விடத்தில் ஸ்ரீராமனைக் குறித்தது.

## குறிப்புப் பொருள்

பாணன் - கண், அங்க பந்தன் - அவயவமாகிய தனம், பந்தன் - பந்தை யொத்தவன். (பாணம் - அம்பு; னகர யிறுதிப் போலி) (222)

செற்கோல வெம்பகு வாய்த்தா டகைபுத் திரர்களிரா
மற்கோ லுதவு தனுரகு நாதன் வரைமடவீர்
சொற்கோ லிலம்பையங் கோட்டூர்தற் கோலந் தொழுதந்திரு
விற்கோல முந்திரு வேற்காடு மேற்ருெழ வேண்டியதே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) செல் - நீலமேகம் போன்ற, கோலம் - அழகையும், வெம் பகுவாய் - கொடுமையாகிய பிளந்த வாயையுமுடைய, தாடகை புத்திரர்கள் - தாடகையின் புதல்வர்கள், இராமல் - இவ்வுலகில் இராத வண்ணம், கோல் உதவு - பாணத்தை யேவிய, தனு - கோதண்டத்தை யேந்திய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரை - மலையிலுள்ள, மடவீர் - மாதரே, சொல்கோல் இலம்பையம் - புகழ்சூழ்ந்த திருவிலம்பை யத்தையும், கோட்டூர் - திருக் கோட்டூரையும், தற்கோலம் - திருத் தற் கோலத்தையும், தொழுதம் - வணங்கினோம், திரு விற் கோலமும் - திருவிற் கோலமும், திரு வேற்காடும் - திரு வேற்காடுமே, மேல் தொழ வேண்டியது - இனி வணங்க யாம் விரும்பியது; (எ - று.)

அரக்கர் கருநிறமாதலால், "செற்கோலம்" என்றார். (செல் - மேகம்). தாடகை புத்திரர்கள் - சுபாகு மாரீசன் என்பவர்.

### குறிப்புப் பொருள்

கோட்டூர் தற்கோலம் - தனத்தையும், திரு விற்கோலம் - புருவத்தை யும், திருவேற்காடு - கண்ணையும் குறித்து நின்றன. (கோடு - யானைக் கொம்பு, கோலம் - சந்தன கோலம், வில், கோல், வேல் இவை தனத்தை யும், கண்ணையும் யுணர்த்தின.) (223)

குருவார்த்தை மேற்கொண் டடர்பிசி தாசநர் கோளைவென்று
பெருமகங் காத்த துரைரகு நாதன் பிறங்கன்மின்னே
திருநீல கண்டரை வன்னத் துடன்முன் றிலையிற்கண்டோங்
கரைதிருக் காளத்தி வேடரைப் போரொடுங் காண்குதுமே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) குருவார்த்தை மேற்கொண்டு - குரு வாக்கியத்தைச் சிரமேலேற்று, அடர் - நெருங்கிய, பிசிதாசநர் - அரக்கருடைய, கோளை வென்று - துன்பத்தை வென்று, பெரு மகங் காத்த - பெரிய யாகத்தை ரக்ஷித்த, துரை - இறைவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், பிறங்கல் - மலையிலுள்ள, மின்னே - மின்னற்கொடி போல்வாளே, திரு நீலகண்டரை - திருநீலகண்ட நாயனாரை, வன்னத்துடன் - நிறத்துடன், முன் - முன்னே, தில்லையில் கண்டோம் - தில்லை நகரிற் கண்டோம், கரை திருக்காளத்தி வேடரை - மனங்கரைந்த திருக்காளத்தி வேடரை, போரொடுங் காண்டுதும் - போர்க் கோலத்தோடும் பார்ப்போம்; (எ - று.)

குரு - குலகுருவாகிய வசிட்டர், பிசிதஅசநர் - மாமிச உணவை யுடையவர். பெரு மகம் - விசுவாமித்திரர் செய்த பெரிய யாகம்.

குறிப்புப் பொருள்

'திருநீலகண்டரை வன்னத்துடன்' என்பது தனத்தையும், 'திரு காளத்தி வேடர்' என்பது கண்ணையும் குறித்துநின்றன. நீலகண்ட - சூசுகம். காளம் - விடம், (கண்). (224)

வீடண ணுற்சொ லிலங்கைச் சுவேலைக்கும் வேலைக்குமேன்
மாடணை செய்யச் செயும்ரகு நாதன் வரைமடவீர்
கூட லிறைரத் தினம்பகர்ந் தாம குடஞ்செய்விளை
யாடல்கண் டோம்வலை வீசா டலுங்கண் டறிகுவமே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வீடணனால் - விபீஷணனால், சொல் - சொல்லப்பட்ட, இலங்கைச் சுவேலைக்கும்-லங்காத் தீபத்திலுள்ள சுவேலா பர்வதத்திற்கும், வேலைக்கும் - கடலுக்கும், மேல் மாடு அணை செய்யச் செய்யும் - மேற் பாகத்தில் அணைகோலச் செய்த, ரகுநாதன் - ரகு நாதசேதுபதியின், வரை மடவீர் - மலையிலுள்ள மாதரே, கூடல்இறை - திருவாலவா யுடையார், ரத்தினம் பகர்ந்து - இரத்தினத்தை விற்று, ஆம் மகுடம் செய் விளையாடல் கண்டோம் - அழகாகிய திருமுடி சூடிய திருவிளையாடலைக் கண்டோம், வலைவீசு ஆடலும் கண்டு அறிகுவம் - (இனி) வலைவீசிய திருவிளையாடலை யுங் கண்டறிவோம்; (எ - று.)

குறிப்புப் பொருள்

மகுடம் - தனத்தையும், வலை-கண்ணையும் குறித்து நின்றன. (225)

தருவா னகந்தொடு செம்பியிற் றேவைத் தலத்தளவா
யுருவா கியமனு வாம்ரகு நாதன்வெற் பொண்டொடியீர்
திருவானைக் காவுஞ் சிரகிரி யுந்தெரி சித்துவந்தோங்
கருவூர் திரியம் பகம்விருப் பாட்சியுங் காண்குதுமே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தரு - மரங்கள், வானகம் தொடு - ஆகாயத்தைத் தொடுகின்ற, செம்பியில் - சோழநாட்டில், தேவைத் தலம் - தேவை நகரத்திலுள்ள, தளவாய் உரு ஆகிய - தளவாயின் உருவமாகிய, மனு ஆம் - மனுவாகிய, ரகுநாதன் வெற்பு - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள, ஒண் தொடியீர் - ஒட்பமாகிய வளையலை யணிந்த மாதரே, திருவானைக்காவும் சிரகிரியும் தெரிசித்து உவந்தோம் - திருவானைக்காவையும், சிரகிரியையும் தரிசித்து மகிழ்ந்தோம், கருவூர் திரியம்பகம் விருப்பாட்சியும் காண்குதும்.

கருவூரையும், திரியம்பகத்தையும், விருப்பாட்சியையும் (இனிக்) காண் போம்; (எ-று.)

குறிப்புப் பொருள்

'திருவானைக்கா', 'சிரகிரி' என்பன தனத்தையும், 'கருவூர்', 'திரியம்பகம்', 'விருப்பாட்சி' என்பன கண்ணையும் குறித்து நின்றன. (கருமை நிறம், அம்பு, அட்சி.) (226)

காரா நிதிதரு சிந்தா மணிசுவர்க் கத்துடனிப்
பாராளு மிந்த்ர ரகுநாத சேது பதிவரைவாய்
வாரானை யம்புலி னுங்கஞ்சப் பாணி மணிவடமுந்
நீராடல் காப்புறு வோஞ்சொற்செய் வீரையெந் நேரிழையே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) காரா - பெரிய பசு, நிதி - இரு நிதிகள், தரு - கற்பகத் தரு, சிந்தாமணி - சிந்தாமணி, (இவைகள் யாவுமுள்ள) சுவர்க்கத்துடன் - சுவர்க்க லோகத்தோடு, இப் பாராளும் இந்திரன் - இப் பூவுலகத்தையும் ஆளுகின்ற இந்திரனாகிய, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேது பதியின் மலையில், வாரானை அம்புலி - வருகைப் பருவம் அம்புலிப் பருவம், கம் ஆம் சப்பாணி-முதன்மையாகிய சப்பாணிப் பருவம், மணி வடம்-ஊசற் பருவம், முந்நீர் ஆடல் - நீராடற்பருவம், காப்பு - காப்புப் பருவம், (என்ப வைகளையும்), உறுவோம் - (இனி) அடைவோம், சொல் செய் - புகழை யுடைய, வீரை - வீரை நகரத்திலுள்ள, எம் நேரிழையே - எமது விருப் புக்குரிய பெண்ணே; (எ - று.)

குறிப்புப் பொருள்

வார்ஆனை - கச்சணிந்த யானையின், அம் - அழகை, புல்லினும் - பொருந்தினோம், இது தனத்தையும், கஞ்சப் பாணி - தாமரை மலரோடு கூடிய கை, இது கண் புதைத்தலையும், மணி வடம் - அழகிய ஆலிலை, இது உதரத்தையும், முந்நீர் ஆடல் காப்பு - கடலசைவைக் காத்தல், இதுவும் கண் புதைத்தலையும் குறித்து நின்றன. (227)

கங்கை யிலேவிடு மோடத் தலைவன் களித்துத்தொழ
நங்களுக் கோர்துணை நீயென் றருள்ரகு நாதன்வரை
மங்கைநல் ர்தமை யன்றம் பியாமுறை மார்க்கப்படி
யங்குசம் போற்றரி சிக்கட்டு நாம வரவிலையே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கங்கையிலே - கங்கா நதியில், விடும் - கடக்கவிட்ட, ஓடத் தலைவன் - நாவாய்களுக்கு இறைவனாகிய குகன், களித்துத் தொழ -

மகிழ்ந்து வணங்க, நங்களுக்கு - எங்களுக்கு, ஓர் துணை - ஒப்பற்ற தோழன், நீ யென்றருள் - நீ யென்றருள் செய்த, ரகுநாதன் வரை - ரகுநாத சேதுபதியின் மலையில்உள்ள, மங்கை நல்லீர் - மாதரே, தமையன் தம்பிஆம் முறை மார்க்கப்படி - தமையன் தம்பியாகிய முறைமையின் வழியே, அங்குசம்போல் - அங்குசத்தைத் தரிசித்ததுபோல, நாம் - யாம், அ - அந்த, அர வில்லை - அரத்தோடுகூடிய வில்லை, தரிசிக்கட்டும் - கண்டு சேவிக்கட்டும் ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

"அங்குசம்" என்றதனை அம் குசம் எனப் பிரித்து, அழகாகிய தனம் எனப்பொருள் கொள்க. "அரம்" - கண்ணையும், "வில்" புருவத்தையும் குறித்தன. கண் அரம் போன்றதாதலால், அதனை "அரம்" என்றார். (228)

துரந்தர ராச புரந்தர னான துரையுலகு
புரந்தவை போக ரகுநாதன் மால்வரைப் பொன்னனையீர்
கரந்தொழு வேங்கடங் காட்டிய நீரினங் காட்டுமணி
யரங்கனை யாழி தரனை முகுந்தனை யப்பனையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) துரந்தர ராசபுரந்தரன் ஆன துரை-பூ பாரந்தாங்குகின்ற அரசர்களுக்கு இந்திரனாகிய பிரபு, உலகு புரந்த-உலகத்தைக் காத்த, வைபோகம் - சம்பத்தையுடைய, ரகுநாதன் - ரகு நாத சேதுபதியின், மால் வரை-பெரிய மலையிலுள்ள, பொன் அனையீர் - திருமகளை நிகர்ப்பவரே, கரம் தொழும் வேங்கடம் காட்டிய நீர் - கைகுவித்து வணங்குதற்குரிய வேங்கட மலையைக் காட்டிய நீர், இன்னம் - இன்னமும், அணி அரங்கனை - அழகிய ரங்கநாதனை, ஆழிதரனை - திருவாழியைத் தரித்தவனை, முகுந்தனை - முகுந்தனை, அப்பனை - எமது தந்தையை, காட்டும் - காட்டுவீர்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

வேங்கடம் - தனத்தையும், (கடம் - மலை). அணியரங்கன், (அரம் - கண்), ஆழிதரன் - ஆழி - சக்கரம், (சக்கு - கண்), முகுந்தன் - (குந்தம் - கைவேல்) - அப்பன் (அம்பு - அப்பு). என்பன கண்ணையும் குறித்து நின்றன. (229)

கனமான நீர்யௌ வனமோகை யீகைபொன் கல்விமேயவிற்
பனமாண்மை மீறு ரகுநாத சேது பதிவரைவாய்த்

தனரேகை காட்டிமெய் லட்சண முஞ்சொன்ன சாத்திரமெய்
யினமாநன் மச்சமுங் காட்டி யுரைக்கி லிளங்கொடியே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கனம் - கனதை, மானம் - மானம், நீர் - நற்குணம், யௌவ நம் - யவ்வநம், ஓகை - களிப்பு, ஈகை - கொடை, பொன் - செல்வம், கல்வி - வித்தை, மெய் - உண்மை, விற்பனம் - விற்பத்தி, ஆண்மை - ஆண் தன்மை, (இவற்றுள்) மீறு - சிறந்த, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகு நாத சேதுபதியின் மலையிலுள்ள, இளங்கொடியே - இளங்கொடி போல் பவளே, இனம்ஆம் - இனமாகிய, நல் மச்சமுங் காட்டி உரைக்கில் - நல்ல மச்ச ரேகையையும் காட்டிச் சொன்னால், தனரேகை காட்டி - தனரேகை யைக் காட்டி, மெய் லக்ஷணமும் சொன்ன சாத்திரம் - சரீர லக்ஷணத்தை யும் சொன்ன சாஸ்திரம், மெய் - உண்மையாம்; (எ - று.)

குறிப்புப் பொருள்

தன ரேகை என்பது - தனத்தையும், மச்சரேகை என்பது கண்ணை யும் குறித்தன. (தனம் - முலை). மச்சம் - மீன் (கண்). (230)

வெப்பளித் தாவ முறைபுங்க மெய்திகல் வேட்டிரத்தங்
கொப்பளித் தாகவஞ் செய்ரகு நாத குபேரன்வரை
யொப்பளித் தாவதில் லாவஞ் சனமணி யுண்மையிலாச்
செப்பளித் தாவ தெனப்பிர யோசனந் தேமொழியே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வெப்பு அளித்து - நெருப்பைக் கக்கி, ஆவம்உறை - அம் பறாத் தூணியில் வாழ்கின்ற, புங்கம் எய்து - அம்பைப் பிரயோகித்து, இகல் வேட்டு - போரை விரும்பி, இரத்தம் கொப்பளித்து - உதிரத்தைக் கொப் பளித்து, ஆகவம் செய் - யுத்தம் செய்கிற, ரகுநாத குபேரன் வரை - ரகு நாத குபேரனது மலையிலுள்ள, தேம் மொழியே - தேன்போலும் இன் சொல்லையுடையாளே, ஒப்பளித்து ஆவது இல்லா - உவமைதந்துரைத்து உவமையாவதொரு பொருளில்லாத, அஞ்சன மணி உண்மை இல்லா - நீல மணி உண்மையாகவில்லாத, செப்பு - வெறுமையாகிய செப்பினை, அளித்து- கொடுக்க, ஆவது என் - (அதனால்) ஆம்பயன் யாது, அப்பிரயோசநம் - பயனின்மையேயாம்; (எ - று.)

குறிப்புப் பொருள்

அஞ்சனமணி - கண்ணையும், செப்பு - தனத்தையும் குறித்தன.

(231)

காலை யிலாமலெக் காலையி லுஞ்செய் கடுங்கொலைவை
வேலை யிலார்தரு கோரகு நாதன் வியன்சிலம்பி
னூலை யிலாமற் செயுமிடை யீர்முன்பு நூதனமாஞ்
சேலை யிலாமற் றருவதுண் டோவெறுஞ் சீதனமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) காலை இல்லாமல் - நியமகால மொன்றில்லாமல், எக் காலையி லும்-எக்காலத்திலும், கடும் கொலை செய் - கொடிய கொலைத் தொழிலைச் செய்கிற, வை - கூர்மையாகிய, வேல் அயில் - வேலாயுதமும் சூலாயுதமும், ஆர்தரு கோ-தன் கையிற் பொருந்திய இறைவன், ரகுநாதன்-ரகுநாதசேது பதி, (அவனது) வியன் சிலம்பில் - பெரிய மலையில் உள்ள, நூலை இல்லா மற் செய்யும் இடையீர் - நூலென்பதொரு பொருளை உலகத்தில்லையாகச் செய்கிற இடையை யுடையவரே, முன்பு - முற்காலத்தில், நூதனம்ஆம் சேலை இல்லாமல் - புதுச்சேலை யில்லாமல், வெறுஞ் சீதநம் தருவது உண்டோ - வெறுமையாகிய சீதநத்தைக் கொடுப்பதுண்டோ; (எ - று.)

அயில் - ஐயில்; போலி.

## குறிப்புப் பொருள்

சேல் - கண்ணையும், சீதநம் - தனத்தையும் குறித்தன. (சீ-சிறந்த). சேலை என்பதில் ஐ - சாரியை (சேல் - சேல் மீன்.) (232)

நாலாம் பனுவ னவரசச் சொற்றமிழ் நாவலர்க்கு
மேலாம் பரிசருண் மால்ரகு நாத விதுரன்வெற்பிற்
பாலாஞ் சுயோதன மாருதிச் சண்டைமுன் பார்க்கநடு
நீலாம் பரனில்லை யேயுரைப் பாரெவர் நேரிழையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நுவல் - சொல்லப்பட்ட, நவரசம் - ஒன்பது ரசங்க ளமைந்த, சொல் - நூல்களைச் செய்த, தமிழ் நாவலர்க்கு - தமிழ் வித்து வான்களுக்கு, நால் ஆம்பல் - நான்கு ஆம்பலாகிய பொன்னை, மேல்ஆம்பரி சருள் - மேன்மையாகிய பரிசிலாக அருள்செய்த, மால் - பெருமையுள்ள, ரகுநாத விதுரன் வெற்பில் - ரகுநாத சேதுபதியாகிய விதுரனது மலையி லுள்ள, நேரிழையே - மாதே, பால்ஆம் - வலிமையாகிய, சுயோதன மாரு திச் சண்டை - துரியோதன பீமர்களுடைய போரை, முன்பார்க்க - எதிர் நின்று நோக்க, நடு - நடுவு நிலைமையுள்ள, நீலாம்பரன் இல்லையே - பல ராமன் இல்லையே, உரைப்பார் எவர் - (இருவருடைய பலாபலங்களைக் கணித்துச்) சொல்லவல்லார் யாவர்; (எ - று.)

ஆம்பல் - ஒரு பேரெண், அன்றி யானை யெனினும் பொருந்தும். நவ ரசமாவன - சிங்காரம், வீரியம், பெரு நகை, கருணை, இரௌத்திரம் குற்சை, சாந்தம், அற்புதம், பயம் என்பன. விதுரன் - தீரன், அன்றி ஞானவான் எனினுமாம். நீலாம்பரன் - நீலநிற ஆடையைத் தரித்தவன்.

## குறிப்புப் பொருள்

'சுயோதன மாருதி' என்பது சுயமாக மார்பிற்றோன்றிய தனத்தையும், 'நீலாம்பரன்' என்பது கண்ணையும் குறித்தன ; இதனை நீல அம்பு அரன் எனப் பிரித்துக் கருங் கடலெனவும் அரம் எனவும் பொருள்கோடலுமாம். (233)

சேலன மேதி சொரிசுதை யுண்பணைச் செம்பியன்செங்
கோலன பாயன் ரகுநாதன் மால்வரை கொண்டவரைப்
பாலன மென்மொழி யீர்முன் குசனைப் பணிந்ததுபோ
னீலனை யுந்தொழு தாலெய்த லாஞ்செல்வ நேத்தியதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சேல் - சேல் மீன்களும், அன்னம் - அன்னப் பறவைகளும், மேதி சொரி சுதை - எருமைகள் சொரிகின்ற பாலை, உண்-உண்ணுதற்கிடமாகிய, பணை - வயல்கள் சூழ்ந்த, செம்பியன் - செம்பி நாட்டையுடையவன், செங்கோல் - செங்கோலையுடைய, அனபாயன் - அனபாயனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மால் வரை - பெரிய மலையை, கொண்ட வரை - கொள்ளப்பட்ட எல்லையாகவுடைய, பால் அன்ன - பாலையொத்த, மெல் மொழியீர் - மிருது வசனத்தையுடையவரே, முன் - முன்னே, குசனை பணிந்ததுபோல் - குசனைத் தொழுததுபோல, நீலனையும் தொழுதால் - நீலனையும் வணங்கினால், நேத்தியது செல்வம் எய்தலாம் - மேன்மையாகிய பாக்கியத்தை யடையலாம் ; (எ - று.)

குசன் - அங்காரகன், நீலன் - சனி. எல்லை - சூண்டு இடம்.

## குறிப்புப் பொருள்

'குசன்' என்பது தனத்தையும், (குசம் - தனம்). 'நீலன்' என்பது கண்ணையும் குறித்தன. (நீலம் - கருங் குவளை). (234)

தம்பத மாதி யிறக்கநம் பாத தரியலர்க
ணம்பத சேட ரதிராகச் செய்ரகு நாதன்வெற்பிற்

*கம்ப தனமிடற் றீர்முன மாலெனக் காட்டியிகற்*
*கும்ப தனங்கண் டொளிப்பதென் னாந்தகங் கோவலரே.*

### வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** *தம் பதம் ஆதி இறக்க - தமது பதவி முதலானவை அழிய, நம்பாத - தன்னை யடையாத, தரியலர் கணம் - பகைவர் கூட்டங்கள், பத சேடர் - பாத சேவகராய், அதிர் ஆக - நடுங்கும்படி, செய் - செய்த, ரகு நாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள, கம்பு அன்ன மிடற்றீர் - சங்கையொத்த கண்டத்தையுடையவரே, கோவலர் - இடையர், முனம் மால் என இகல் காட்டி - முன்னே திருமால்போல வலிமையைக் காட்டி, கும்ப தனம் கண்டு - குடப்பணத்தைக் கண்டு, நாந்தகம் - வாளை, ஒளிப்பது என் - மறைப்பதென்ன;* (எ - று.)

### குறிப்புப் பொருள்

"கும்பதனம்" என்பது தனத்தையும், (கும்பம் - குடம்). "நாந்தகம்", "கோவலர்" என்பன கண்ணையும் குறிக்கின்றன. (நாந்தகம் - வாள், கோ - கண்). (235)

*வந்தன மாகத் தொழுவார்க்கு மந்திரம் வாய்த்ததிக்கு*
*பந்தன மாகும் ரகுநாத சேது பதிவரைவா*
*யிந்தன வத்திரத் தீர்கலி யாண மிசையிலிகு*
*சந்தன முன்கொடுத் தீர்கொடுப் பீரட் சதையினியே.*

### வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** *வந்தனமாகத் தொழுவார்க்கு - நமஸ்கார பூர்வகமாக வணங்குவோர்க்கு, மந்திரம் வாய்ந்த - மந்திரத்தோடு கூடிய, திக்கு பந்தநம் ஆகும் - திக்குப் பந்தநம் போன்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரைவாய் - மலையிலுள்ள, இந்து அன்ன - பூர்ணசந்திரனை யொத்த, வத்திரத்தீர் - முகத்தையுடையவரே, கலியாணம் இசையில் - விவாகம் கூடினால், இகு - குழைத்த, சந்தனம் முன் கொடுத்தீர் - சந்தநத்தை முன்னே கொடுத்தீர், இனிஅட்சதை கொடுப்பீர் - இனி அட்சதையையுங் கொடுப்பீர்;* (எ - று.)

### குறிப்புப் பொருள்

*இலிகுசம் - தனம், எலுமிச்சம்பழம் போன்ற தனம், இது தனத்தை யும், அட்சம் - கண், அட்சதை - மஞ்சள் கலந்த அரிசி; பார்வையுமாம். இது கண்ணையும் குறித்தன.* (236)

துருப்பத னைக்கொணர்ந் தன்றெதிர் விட்டுத் துரோணரெனுங்
குருப்பத மேத்து மனுரகு நாத குமுணன் வெற்பிற்
கருப்பத னல்லுரு வீர்முத ஞமல்லி கார்ச்சுனமாம்
பருப்பத மேத்தின மாடுது மேற்றுங்க பத்திரையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) துருப்பதனைக் கொணர்ந்து - துருபத ராஜகுமாரனைக் கொண்டுவந்து, அன்று - அந் நாளில், எதிர் விட்டு - எதிரில் விட்டு, துரோணர் என்னும் - துரோணாசாரிய ரென்கிற, குருபதம் ஏத்தும் - குருவின் பாதத்தைத் துதித்த, மனு - மனுவை நிகர்த்த, ரகுநாத குமுணன் வெற்பில் - ரகுநாத சேதுபதியாகிய குமுணனது மலையிலுள்ள, கருப்பதன் நல்லுருவீர் - கரும்பினது அழகிய வுருவத்தையுடையவரே, முதல் - முதலில், நாம் - யாம், மல்லிகார்ச்சுநம்ஆம் - மல்லிகார்ச்சுனம் என்கிற, பருப்பதம் ஏத்தினம் - பர்வதத்தைக் கண்டு துதித்தோம், மேல் - இனி, துங்க பத்திரைஆடுதும் - துங்கபத்திரா நதியில் மூழ்குவோம்; (எ - று.)

மனுவை நிகர்த்தலாவது - நீதி முதலியவற்றை வகுத்தலில் அவனை நிகர்த்தல், குமுணன் - முதலெழுவள்ளலிலொருவன். மனு - ஈண்டு அருச்சுனன்.

### குறிப்புப் பொருள்

மல்லிகார்ச்சுநமாம் பருப்பதம் - தனத்தையும், துங்கபத்திரை - கண்ணையும் குறித்தன. மல்லிகா - மல்லிகைப் பூ. அருச்சுநம் - பொன், வெண்மை. துங்கம் - உயர்ச்சி, பத்திரம் - அம்பு; வாளுமாம். (237)

மித்திர புத்திர னீகைக்கு வாகைக்கு மேவுபல
பத்திர னன்ன ரகுநாத சேது பதிவரைவாய்ச்
சித்திர மென்மொழி யீர்காமக் கோடை தெறுவெயிற்குச்
சத்திர முன்கொடும் பின்கொடு நீர்க்குடந் தாகத்திற்கே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஈகைக்கு - கொடைக்கு, மித்திரபுத்திரன் - கன்னனையும், வாகைக்கு - வெற்றிக்கு, மேவு - பொருந்திய, பலபத்திரன் - பலபத்திரனை யும், அன்ன - ஒத்த, ரகுநாத சேதுபதி - ரகுநாத சேதுபதியின், வரை வாய் - மலையிலுள்ள, சித்திரம் - ஆச்சரியகரமான, மெல் மொழியீர் - மிருது வசனத்தையுடையவரே, தெறு - வருத்துகின்ற, காமக்கோடை வெயிற்கு - காமமாகிய கோடை வெயிலுக்கு, முன் - முன்னே, சத்திரம் கொடும் - (ஒதுங்குதற்கு) சத்திரத்தை முன்னே தாரும், பின் - அதன்

பின்னே, தாகத்திற்கு - தாகத்துக்கு, நீர்க் குடம் கொடும் - நீர்க்குடத்தைத் தாரும்; (எ - று.)

மித்திரன் - சூரியன், கர்ணன் சூரியனுக்குப் புதல்வனுதலால், "மித்திர புத்திரன்" என்றார்.

## குறிப்புப் பொருள்

நீர்க்குடம் - தனத்தையும், சத்திரம் - கண்ணையும் குறித்தன. (சத்திரம் - வேல், அம்பு). (238)

தடமிருந் தென்ன வனஞ்சூழ்தென் றேவைத் தனிலெண்டிரு
நடமிருந் தென்ன முரசொலி செய்ரகு நாதன்வெற்பிற்
படமிருந் தென்ன வரையீர் மருந்துடன் பண்டிதவா
கடமிருந் தென்னமுன் சத்திர மிட்டபின் காண்குவமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தடம் இரும்-மிகவும் பெரிய, தென்ன வனம் சூழ் - தென்னஞ் சோலை சூழ்ந்த, தென் தேவைதனில் - தென் தேவை நகரத்தில், எண் திரு நடம் இருந்தென்ன - அஷ்டலக்ஷ்மி விலாசம் இருந்தாற் போன்ற, முரசு வொலிசெய் - (இடையருமல்) முரசம் ஒலிக்கப்பெற்ற, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள, படம் இருந்தென்ன அரையீர் - பாம்பின் படம் இருந்தாற்போன்ற நிதம்ப ப்ரதேசத்தையுடையவரே, மருந்துடன் - ஔஷதத்துடன், பண்டித வாகடம் - பண்டித வாகடங்கள், இருந்து என்ன - இருந்து பயனென்ன, முன் - முன்னே, சத்திரம் இட்டபின் - சத்திரஞ் செய்தபிறகு, காண்குவம் - அவற்றைப் பார்ப்போம்; (எ - று.)

சத்திரம் - அறுத்தல். பண்டித வாகடம் - வைத்திய சாத்திரம்.

## குறிப்புப் பொருள்

பண்டு இதவு ஆ கடம் - முன்னே இதமாகிய மலை. இது தனத்தையும், சத்திரம் - இது கண்ணையும் குறித்தன. (சத்திரம் - வேல், அம்பு). ஆ - ஆச்சரியம், (239)

அயனங் களித்த விருதிணை நாற்கதி யாமுயிர்க்கெண்
பயனங் களித்த ரகுநாத சேது பதிவரைவாய்க்
கயனங்க ளூர்நந் தனமென் றுரைத்தென்ன காட்டியென்ன
நயனங்க ளூர்க்களித் தாற்பயிர் செய்குவ நன்னுதலே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அயன் - பிரமதேவன், அங்குஅளித்த - அவ்விடத்துச்சிருட்டித்த, இருதிணை - இரு திணையாகிய, நாற்கதிலும் - நாற்கதிகளிற் பிறந்த, உயிர்க்கு - ஜீவராசிகளுக்கு, எண் - அவரவர் எண்ணிய, பயனை - பயனை, அங்கு-அவ்வாறே, அளித்த - கொடுத்த, ரகுநாத சேதுபதி வரைவாய்க்கு - ரகுநாத சேதுபதியின் மலைப் பக்கத்துக்கு, அயல் - அயலில், நங்கள் ஊர் - எங்கள் ஊரும்; நந்தனம் - நந்தனவனமும் உள்ளன, என்று உரைத்து என்ன - என்று சொல்லினுலென்ன, காட்டி என்ன - காட்டினுலென்ன, நங்கள் ஊர்க்கு - எங்களூருக்கு, நயன் அளித்தால் - நயன் கொடுத்தால், பயிர் செய்குவம் - பயிரிடுவோம், நன்னுதலே - மாதே; (எ - று.)

இருதிணை - உயர்திணை, அஃறிணை,

நாற்கதி - தேவகதி, நரககதி, மக்கட்கதி, விலங்குகதி, நன்னுதல் - அழகிய நெற்றியை யுடையவள்.

## குறிப்புப் பொருள்

'நந் தனம்' என்பது தனத்தையும், 'நயனங்கள்' என்பன கண்ணையும் குறித்தன. (240)

உடலை யுடலை யுளமா தவரி னுறுநரொடு
நடலை நடலை யிலாமற் புரிரகு நாதன்வெற்பின்
மடலை மடலை வசியர்க்குஞ் செய்யு மடவரலே
விடலை விடலை யிலாத்தன மேது வெளிப்பட்டதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) உடலை - சரீரத்தை, உடலை உள - வருத்துதலைப் பொருந்திய, மா தவரின் - பெரிய தவசிகள்போல, உறுநரொடும் - சுற்றத்தாரோடும், நடலை - நண்பு செய்தலை, நடலை இலாமல் புரி - பொய்யில்லாமல் செய்கின்ற, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையில், மடலை மடலை - மிகு மயக்கத்தை, வசியர்க்கும் செய்யும் - மன்மதனுக்கும் உண்டாக்குகின்ற, மடவரலே - இளமாதே, விடலை விடலை இல்லா தனம் - சிறிதும் வெளிப்படுத்தப்படுதல் இல்லாத பொருள், வெளிப்பட்டது ஏது - வெளிப்பட்டது யாது; (எ - று.)

வசியர் யாவரையும் வசியப்படுத்தும் காமதேவர். விடலை - ஆண்மகன்.

## குறிப்புப் பொருள்

**இதில் தனம் ஒன்றே குறிப்புப் பொருள்.** **(241)**

*சித்திரை யாவணி முன்போ னடுங்கச் செறுநர்வெலும்*
*பத்திரை யன்ன ரகுநாத சேது பதிவரைவா*
*யுத்திரை யன்ன மடவீர் பணப்பை யுடையர்வைச்ச*
*முத்திரை யில்லை யெனிலாந் தனத்துக்கு மோசங்களே.*

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) *சித்திரை ஆவணி* - சித்திரை ஆவணி மாசங்களின், *முன் போல்* - முற்பக்கத்தில் இலைகள் நடுங்குவதுபோல, *செறுநர் நடுங்க* - பகைவர் நடுங்கும்படி, *வெலும்* - வெல்லுகின்ற, *பத்திரை யன்ன* - பத்திரையை நிகர்த்த, *ரகுநாத சேதுபதி வரைவாய்* - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள, *உத்திரை அன்ன மடவீர்*-உத்திராதேவியை நிகர்த்தமாதரே, *பணப்பையுடையர்* - பணப்பையை யுடையவர், *வைச்ச முத்திரை இல்லை எனில்* - இட்ட முத்திரை இல்லையாயின், *தனத்துக்கு* - அப் பொருளுக்கு, *மோசங்கள் ஆம்* - மோசங்களுண்டாகும் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

"சமுத்திரை" என்பது கண்ணையும், "தனம்" என்பது தனத்தையும் குறித்தன. "சமுத்திரா" என்பது சமுத்திரை என நின்றது. (242)

*அடலை யுடையகிட் கிந்தையர் கோனை யடித்தசர*
*விடலை யெனுமெய் ரகுநாதன் மால்வரை மெல்லியலா*
*யிடலை விடுமணிக் குந்தன மேனெளி யேங்களுக்குக்*
*கடலை யவனுட னீந்தாலும் போம்பலன் கைகண்டதே.*

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) *அடலை உடைய* - வலியையுடைய, *கிட்கிந்தையர் கோனை* - கிஷ்கிந்தைக்கு இறைவனாகிய வாலியை, *அடித்த* - எய்து கொன்ற, *சரம்* - அம்பையுடைய, *விடலை என்னும்* - காளையாகிய, *மெய்* - சத்தியத்தை யுடைய, *ரகுநாதன்* - ரகுநாத சேதுபதியின், *மால்வரை* - பெரிய மலையிலுள்ள, *மெல்லியலாய்* - மாதே, *இடலை விடு* - கொடுத்தலை விடு, *மணிக்கும் தனம் எளியேங்களுக்கு ஏன்* - மணியோடு கூடியபொன் எளியோமாகிய எங்களுக்கு யாதுக்கு, *கடலை அவனுடன் ஈந்தால்*-கடலை அவனுடன்கலந்து

கொடுத்தால், உண்போம் - தின்போம், பலன் கை கண்டது - இது கை கண்ட பலனும்; (எ-று.)

குறிப்புப் பொருள்

மணிக்குந் தனம் - மணிமாலைகளோடுகூடிய தனம். கடல் - கண். அவல் - அந்தச் சூதாடுகருவி, (தனம்). (243)

அருணனை யுந்து மணியெயிற் றேவைக் கரசன்கொடைத்
தருணனை யாதருண் மால்ரகு நாதன் சயிலமன்னீர்
வருணனை முன்பு கடிந்தீ ரணிபணி வார்மொய்க்கும்ப
கருணனை யுந்தெறி னீர்நிசங் கோதண்டங் கைக்கொண்டதே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அருணனை உந்தும்-சூரியனை மழுங்கப்பண்ணுகிற, மணி-ரத்நங்களிழைத்த, எயில் - மதில் சூழ்ந்த, தேவைக்கு அரசன் - தேவை நகர்க்கிறைவன், கொடைத் தருணம்-கொடுத்தற்குரிய சமயத்தில், நையாது அருள்-(வறியர்) வருந்தாமல் அருள்செய்கிற, மால் - பெருமை வாய்ந்த, ரகு நாதன் சயிலம் அன்னீர் - ரகுநாத சேதுபதியின் மலையை நிகர்ப்பவரே, வருணனை முன்பு கடிந்தீர் - வருணனை முன்னே வென்றீர், அணி பணிவு ஆர் மொய் - அழகாகிய வணக்கம் பொருந்திய வலிமையுள்ள, கும்ப கருணனையும் தெறின் - கும்பகர்ணனையும் வென்றால், நீர் கோதண்டம் கைக்கொண்டது நிசம் - நீர் கோதண்டத்தைக் கையிற் கொண்டிருப்பது உண்மையாம்; (எ-று.)

குறிப்புப் பொருள்

வருணன் - கடல் (கண்). அணி பணி வார் மொய் கும்பகருணன் - அழகாகிய ஆபரணமணிந்து வாரினாலலங்கரிக்கப்பட்ட குடம் (தனம்). கோதண்டம் - வில், புருவம். கைக்கொண்டது - மறைத்தது. புருவம் கைக்கொண்டதெனவே கண்ணை யுணர்த்தியது. (244)

முல்லை யலங்கலின் மின்னார்கண் வண்டின மொய்க்கவவாய்ச்
செல்லு மிவுளித் துரைரகு நாதன் சிலம்பனையீர்
கொல்லமுன் னைக் குயவரி வந்து குதிக்கக்கண்டும்
பல்லைய மெங்கொளித் தீருங்கள் சேவகம் பாழ்த்ததுவே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) முல்லை அலங்கலின் - முல்லை மாலையையணிந்த, மின்னார் - மாதருடைய, கண் - கண்ணாகிய, வண்டினம் - வண்டின் கூட்டம்;

மொய்க்க - மொய்க்கும்படி, அவாய்ச் செல்லும் - தாவிச் செல்லுகின்ற, இவுளி - குதிரைப் பவனி வருகின்ற, துரை - பிரபுவாகிய, ரகுநாதன்-ரகுநாத சேதுபதியின், சிலம்புஅனையீர் - மலையை நிகர்த்தவரே, கொல்ல - கொல்லும் பொருட்டு, முன்னுகை - எதிராக, குயவரி - புலியானது, வந்து குதிக்கக் கண்டும் - வந்து குதிக்கப் பார்த்தும், பல்லையம் எங்கு ஒளித்தீர் - ஈட்டியை எங்கே மறைத்தீர், உங்கள் சேவகம் பாழ்த்ததுவே - உங்கள் சேவகம் பயனற்றதே ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

குயவரி - தனத்தின் சந்தனக் கோலம், இது தனத்தையும், பல்லையம் - கண்ணையும் குறித்தன. (சேவகம் - வீரம்.) (245)

நிற்கடங் காக்கொடி யாலவட் டம்படை நேரலர்கோ
விற்கடங் காணத் தெறுரகு நாதனல் வெற்பனையீர்
சொற்கடங் காத புகழ்முக ராமனிற் றோன்றியநீர்
மற்கடங் காண்பித்துத் தாவாமுன் வேலை மறைத்ததென்னே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நிற்குஅடங்கா-உனக்கு அடங்காத, கொடி-துவசத்தையும், ஆலவட்டம் - ஆலவட்டத்தையும், படை - படையையும் உடைய, நேரலர்-பகைவர், கடம் காண - காட்டை நோக்கிச் செல்லும்படி, கோ - அழகாகிய, வில் - வில்லினால், தெறு - வெல்லுகின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், நல் வெற்பு அனையீர் - நல்ல மலையை நிகர்த்தவரே, சொற்கு அடங்காத புகழ் முகம் - சொல்லுக்கு அடங்காத கீர்த்தியாகிய இடத்தையுடைய, ராமனின் - ஸ்ரீராமன்போல, தோன்றியநீர் - வெளிப்பட்டநீர், மற்கடம் காண்பித்து - வானரங்களைக் காட்டி, தாவா முன் - கடப்பதற்கு முன்னே, வேலை - கடலை, மறைத்தது என் - மறைத்ததற்குக் காரணம் யாது ; (எ-று.)

## குறிப்புப் பொருள்

மற்கடம் - வளமாகிய மலை (தனம்). வேலை - கடல், (கண்). (மல் - வளம்.) (246)

முனம்படைத் தீர ரெனவந்த நேரலர் மூடரைப்போல்
வனம்படைத் தோட விடுரகு நாதன் வரைமடவீர்
தனம்படைத் தீரிரண் டூர்படைத் தீரென்ன தாழ்ச்சியுண்ண
வனம்படைத் தீரில்லை சத்திர மேதுக் கடைத்ததுவே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) முனம் - முன்னே, படைத் தீரர் என வந்த - சேனைகளை யுடைய தைரியசாலிகள் என்று சொல்லும்படி வந்த, நேரலர்-பகைவர், மூடரைப்போல் - மூடர்போல, வனம் படைத்து ஓட - காட்டைத் தமக்கிடமாகக் கொண்டு ஓடும்படி, விடு - (அவர்களை) அனுப்புகின்ற, ரகுநாதன் வரை மடவீர் - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள மாதரே, தனம் படைத்தீர் - பொருள் படைத்தீர், இரண்டு ஊர் படைத்தீர் - இரண்டு ஊர்களைப் படைத்தீர், என்ன தாழ்ச்சி - என்ன குறை, உண்ண - உண்பதற்கு, அன்னம் படைத்தீரில்லை - சோறுபடைத் தீரில்லை. சத்திரம் ஏதுக்கு அடைத்தது - சத்திரத்தை யாது நிமித்தம் மூடி வைத்தது; (எ - று.)

### குறிப்புப் பொருள்

'தனம் படைத்தீர்' என்றதனால் தனத்தின் புறப்பாடும்; வனம்-கடல், இதனாலும்; சத்திரம்-வேல், இதனாலும்; 'அடைத்தது' என்னும் இதனாலும் கண்புதைத்தலும் அமைந்தன. 'இரண்டு ஊர்' என்றது இரு தொடை என்றபடி, ஊரு - தொடை, இது ஊர் என உகரம் குறைந்து நின்றது. குறிப்புப் பொருளுக்கு வனம் எனவும், வெளிப்படைக்கு அனம் எனவும் கொள்க. (247)

கொள்ள மறையவர்க் கெண்ணிரு தானங் கொடுத்தமைச்சர்
விள்ள மறைகொ ளுளரகு நாதன் வியன்சிலம்பிற்
புள்ள மறையீ தெனுங்குழ லீர்முன் புகல்கணக்கு
வெள்ள மறைய வுடனே பதுமம் வெளிப்பட்டதே.

### வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) கொள்ள-கொள்ளும்படி, மறையவர்க்கு-வேதியருக்கு, எண் இரு தானங் கொடுத்து - பதினாறு தானத்தையுங் கொடுத்து, அமைச்சர் - மந்திரிமார், விள்ள - சொல்ல, மறை - ரஹஸ்யார்த்தங்களை, கொள் - ஏற்றுக் கொள்ளுகிற, உளம் - மனத்தையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வியன் சிலம்பில் - விசாலமாகிய மலையிலுள்ள, புள் அம் அறை இது என்னும் குழலீர் - வண்டுகளுக்கு அழகாகிய இடமிதென்னும் படியாகிய கூந்தலை யுடையவரே, முன் புகல் கணக்கு - முதன்மையாகச் சொல்லப் பட்ட கணக்காகிய, வெள்ளம் மறைய - வெள்ள மறைதலும், உடனே பதுமம் வெளிப்பட்டது - உடனே பதுமம் வெளியாயிற்று; (எ - று.)

எண்ணிருதானத்தை, ஷோடச மஹாதாந மென்பர் வடநூலார்.

### குறிப்புப் பொருள்

வெள்ளம் - கடல் (கண்). பதுமம் - தாமரையரும்பு (தனம்). (248)

குத்திபல் லாரி புறுடில்லி யுச்சினி கோலகொண்டை
சித்திரக் கன்முதல் வெல்ரகு நாதன் சிலோச்சயவா
யத்திரி யைத்தரி சித்தோஞ் சரபங்க ளுச்சிரமச்
சித்திபெற் ருலினி நாமே யிராமனுஞ் சீதையுமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) குத்தி, பல்லாரி, புறு, டில்லி, உச்சினி, கோலகொண்டை, சித்திரக்கல் :—, முதல் - முதலானவைகளை, வெல் - வென்று கைப்பற்றின, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், சிலோச்சய வாய் - மலையின் கண், அத்திரியைத் தரிசித்தோம் - அத்திரி முனிவரைத் தரிசநம் பண்ணினோம், சரபங்கன் - சரபங்க மஹரிஷியின், ஆச்சிரமச் சித்திபெற்ருல் - ஆச்சிரமத்தை யடையப் பெற்றேமாயின். இனி - இனி, இராமனும் சீதையும் நாமே - ராமனுஞ் சீதையும் நாமே யாவோம் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

அத்திரி - மலை (தனம்). சரபங்கன் - அம்பை வென்றவன் (கண்).

(249)

கதக்குஞ் சரக்க ரினத்தைச் சினத்துக் கடித்துணவாய்
குதக்குஞ் சரக்குமு ணன்ரகு நாதன் குலவரைவாய்
மதக்குஞ் சரக்குழ லீர்தன பார மதிப்பறிந்தோ
மிதக்குஞ் சரக்குப்பை காட்டிமுன் கொண்ட விலைசொல்லுமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) கதக் குஞ்சு - கோவக் குஞ்சுகளாகிய, அரக்கர் இனத்தைச் சினத்துக் கடித்து உண்ண - ராக்ஷஸ கூட்டத்தைக் கோவித்துக் கடித்து உண்ணும் பொருட்டு, வாய் குதக்கும் - வாயைக் குதட்டுகின்ற, சரம் - அம்புகளை யுடைய, குமுணன் - குமுணனுகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், குல வரைவாய் - மேன்மையாகிய மலையினிடத்து, மதக்கும்-செருக்குகின்ற, சரக் குழலீர் - மலர் மாலையைத் தரித்த கூந்தலை யுடையவரே, தன பாரம் மதிப்பு அறிந்தோம் - பொன்னின் பளுவாகிய மதிப்பை யுணர்ந்துகொண்டோம், மிதக்கும் சரக்குப் பை - மிதவாநின்ற சரக்குப் பையை, முன் காட்டி - முன்னேகாட்டி, கொண்ட விலை சொல்லும் - கொண்ட விலையைச் சொல்லுவீர் ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

தனபாரம் - தனத்தையும், சரக் குப்பை - கண்ணையும் குறித்தன. வெளிப்படைக்குச் சரக்குப்பை எனவும், குறிப்புக்குச் சரக் குப்பை எனவும் கொள்க. சரம் - அம்பு. (250)

இடக்கு முறைசெய் கொடுங்கோ லரச ரினத்தைவெட்டி
யடக்கு முறைவடி வாள்ரகு நாத னணிவரைவாய்க்
குடக்கு வடக்கறிந் தோமதன் விற்குணக் குத்தக்கண
நடக்கு மிடமினி யாமறி யோமிங்ங னன்னுதலே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) இடக்கு முறை செய் - இடக்காகிய முறையைச் செலுத்துகிற, கொடுங் கோல் அரசர் இனத்தை - கொடுங் கோன்மையை யுடைய வேந்தரது கூட்டத்தை, வெட்டி - சேதித்து, அடக்கும் - அடக்குகின்ற, உறை - உறையோடு கூடிய, வடிவாள் - வடித்த வாளையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், அணி வரைவாய் - அழகிய மலையின்கண், குடக்கு வடக்கு அறிந்தோம் - மேற்கும் வடக்கும் அறிந்தனம், அதன்வில் - அதன் ஒளி பொருந்திய, குணக்குத் தக்கணம் - கிழக்குத் தெற்கில், நடக்கும் இடம் - நடக்கு மிடத்தை, இனி இங்ஙன் யாம் அறியோம் - இனி யிவ்விடத்தில் யாமறியோம், நன்னுதலே - அழகிய நெற்றியை யுடையவளே ; (எ - று)

### குறிப்புப் பொருள்

குடக் குவடு - மேற்றிசை மலை (தனம்). மதன்வில் - புருவம், அக்கு - கண். இது தொனிப் பொருள். (251)

திசையம் படிக்க வளர்செம்பி நாடன்மெய்த் தேவையர்கோ
னசையம் படிக்க வரும்ரகு நாதனன் னாட்டினுயர்ந்
தசையம் படிக்கவுங் காவேரி காணவுந் தந்தவுங்கள்
விசையம் படிக்க விடுங்கல்வி ஞன்கொள்ள மெல்லியரே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) திசை - திசையிலுள்ளார், அம் படிக்க - தன் கீர்த்தியைப் படிக்க, வளர் - விருத்தி யடையாநின்ற, செம்பி நாடன் - செம்பிநாட்டை யுடையவன், மெய் தேவையர் கோன் - உண்மையுள்ள தேவை நகரத்தார்க் கிறைவன், நசை அம்பு அடிக்க வரும் - (வறியரது) ஆசையாகிய கடலைச் சுவற்ற வந்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், நல் நாட்டில் - நல்ல நாட்டின்கண், உயர்ந்து அசை அம்பு அடிக்கவும் - உயர்ந்தசையா நின்ற அலை

மோதவும், காவேரி காணவும் - காவேரியைக் காணவும், தந்த - கொடுத்த, உங்கள் - உமது, விசை - வேகத்தோடு கூடிய, அம்பு - அம்பை, அடிக்க - பிரயோகிக்கவும், கல்வில் நான் கொள்ள - மலைவில்லை நான் கொள்ளவும், விடும் - விடுவீர், மெல்லியரே - மாதரே; (எ-று.)

காவேரியை - சோலையினது அழகையுடையதாகிய கூந்தலை.

## குறிப்புப் பொருள்

அம்பு - கண். கல் வில் - மலையிளொளி (தனம்). (252

போரண வாசி நடத்திய மாத்திரை புத்திரன்மெய்
யோரண வாசி முனரகு நாதன்வெற் பொண்டொடியீர்
வாரண வாசிமுன் கண்டுவந் தோநல்ல வாரிதிசேர்
காரண வாசி மணிகோ கனமென்று காண்பதுவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) போர் அண்ண - யுத்தம் சம்பவிக்க, வாசி நடத்திய - குதிரை நடத்திய, மாத்திரை புத்திரன் - மாத்திராதேவியின் புதல்வனாகிய நகுலன், மெய்யோர் அணவு ஆசி முன்ன-உண்மையை யுடையோர் செய்த ஆசீர்வாதம் முற்பட, ரகுநாதன் வெற்பு - ரகுநாத சேதுபதியின் மலையி லுள்ள, ஒண் தொடியீர் - ஒட்பமாகிய வளையலை யணிந்தவரே, வாரண வாசி - காசி க்ஷேத்திரத்தை, முன் கண்டு உவந்தோம் - முன்னே கண்டு மகிழ்ந்தோம், நல்ல வாரிதிசேர் - நன்மையாகிய கடலையடுத்த, காரணவாசி - முத்திக்குக் காரணமென்று சொல்லப்பட்ட, மணி கோகன்னம் - அழகிய கோகர்ண க்ஷேத்ரத்தை, என்று காண்பது - எப்பொழுது காணப் பெறுவது; (எ-று.)

## குறிப்புப் பொருள்

வாரண வாசி - யானையினழகு (தனம்). கோ கன்னம் - கபோலத் தோடு கூடிய கண். (கோ - கண்) (253)

படியிட்ட மாகம் புரந்தடங் காத பகையைவென்ற
வடியிட்ட வேற்கை ரகுநாத தீரன் மணிவரைவாய்த்
தொடியிட்ட செங்கை யிளம்பிடி நீநயந் தோன்றவுடம்
பிடியிட்ட போதல்ல வோநிச மாமுன் பிடியிட்டதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) படி - பூமியை, இட்டமாகப் புரந்து - அன்பாகக் காத்து, அடங்காத பகையை வென்ற - அடங்காத பகைவரை ஜெயித்த, வடியிட்ட

- வடித்த, வேல் - வேற்படையைத் தாங்கிய, கை - கையையுடைய, ரகு நாத தீரன் - ரகுநாத சேதுபதியாகிய தைரியசாலியின், மணி வரை வாய் - அழகிய மலையின்கண், தொடியிட்ட செங்கை - வளையலையணிந்த செவந்த கையை யுடைய, இளம்பிடி நீ - இளம்பெண் யானையாகிய நீ, நயந்தோன்ற - இன்பமுண்டாக, உடம்பிடி யிட்ட போது அல்லவோ - வேற்படையைத் தந்த போதன்றோ, முன்பிடியிட்டது நிசம் ஆம் - முன்பிடியிட்டது நிசமாகும்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

பிடி - பெண் யானை, கைப்பிடி (தனம்,) உடம்பிடி - வேல். (கண்.) (254)

குனிக்குமுன் னேசிலை யொன்னலர் வாய்ச்சொல் குளறவுமெய்
பனிக்கும்வெங் கண்ட ரகுநாத சேது பதிவரைவாய்ச்
சனிக்குமுன் னேதிரு வாரூர்க் கமலத் தடத்தைக்கண்டோ
மினிக்கண்டு போற்றுது மம்பல வாணன்மன் றேந்திழையே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சிலை குனிக்கு முன்னே - வில்லை வளைத்தற்கு முன்பே, ஒன்னலர் - பகைவரது, வாய்சொல் குழறவும் - வாய்ச்சொற்கள் தடுமாறவும், மெய் பனிக்கும் - சரீரம் நடுங்குகின்ற, வெங் கண்ட - முதுகைக் கொடுக்கச் செய்த, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில் உள்ள, ஏந்திழையே - பெண்ணே, சனிக்குமுன்னே - பிறத்தற்கு முன்னே, திருவாரூர் - திருவாரூரிலுள்ள, கமலத்தடத்தைக் கண்டோம் - கமலாலயத் தைக் கண்டோம், இனி - இனி, அம்பலவாணன் - அம்பலவாணனது, மன்று - பொற்சபையை, கண்டு போற்றுதும் - கண்டு வணங்குவோம்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

திருவாரூர் கமலத்தடம் - அழகுநிரம்பிய தாமரை யரும்புகளுள்ள ப்ரதேசம் (தனம்). அம்பலவாணன்மன்று - அழகிய அம்பின்றன்மை யமைந்த ப்ரதேசம் (கண்.) அம்பு + அல் + அ + வாணன்மன்று. (255)

துணிவார்க்கு மாபலி பாற்றுன மேற்றிடத் தோயத்தைமுன்
னணிவார்க்கு மாபுரி தேவைத் துறைரகு நாதன்வெற்பிற்
பணிவார்ச்குச் சொர்க்க மளித்தா யினியப் பரமபதந்
தணிவார்க்கு நீதரி லுண்டா மகிமை தளிரியலே.

### வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) துணிவு ஆர்க்கும் - ஈகைக்குத் துணிந்திருந்த, மாபலிபால் - மஹாபலியினிடத்து, தானம் ஏற்றிட - தானம் ஏற்பதற்கு, தோயத்தை - தாரநீரை, முன் - முன்னே, நண்ணி வார்க்குமாறு புரி - மனம் பொருந்தி வார்க்கும் வண்ணஞ்செய்த, தேவைத்துறை - தேவைத் துறையிலுள்ள, ரகுநாதன் வெற்பில் - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள, தளிரியலே - பெண்ணே, பணிவார்க்கு - வணங்குவார்க்கு, சொர்க்கம் அளித்தாய் - சுவர்க்கத்தைத் தந்தாய், இனி - இனி, தணிவார்க்கு - தாழ்வார்க்கு, அப் பரமபதம் நீ தரில் - அந்தப் பரமபதத்தை நீ தந்தால், மகிமை யுண்டாம் - பெருமையுண்டாம்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

பணி வார்க்குச் சொர்க்கம் - ஆபரணத்தையும் கச்சையுமணிந்த தனம். பரமபதம் - மேன்மையாகிய வைகுந்தம், (கூரிய பாணம்.) அது கண். (256)

சுகராலை யத்தையற் றோர்பணி தேவை தொழுமன்னர்சூழ்
நகராலை யத்தை ரகுநாத னாகமுன் னாட்டந்தந்தே
சிகராலை யத்தைமுன் காணப் பெற்றோம் வசுதேவர்தந்த
மகராலை யத்தையுங் காணிலுண் டாங்கதி வாணுதலே.

### வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) சுகரால் - சுகமுனியால், ஐயத்தை அற்றோர் பணி - சந்தேக மற்றவர்வணங்குகின்ற, தேவை - தேவை நகரில், தொழும் மன்னர் சூழ் - வணங்கும் அரசர் சூழ்ந்த, நகர் ஆலயத்தை - நகரக் கோயிலை, ரகுநாதன் ஆக - ரகுநாத சேதுபதியாக, முன் நாட்டம்தந்து - முன்னே கண்டு, சிகராலயத்தை - மலையை, முன் காணப் பெற்றோம் - முன்னே நோக்கப் பெற்றோம், வசுதேவர் தந்த - வசுதேவர் கொடுத்த, மகராலயத்தையும் காணில் - மகராலயத்தையுங் கண்டால், கதி உண்டாம் - நற்கதி யுண்டாகும், வாணுதலே - பெண்ணே ; (எ - று.)

மகராலயம் என்றது கண்ணனை.

### குறிப்புப் பொருள்

சிகராலயம் - மலை, (தனம்). மகராலயம் - கடல் (கண்). (257)

ஓகையை யூகை யுடனே கொண்டாதுலர்க் கோய்வதின்றி
யீகையை யீகை புரிரகு நாதன்வெற் பேந்திழையீர்

வாகையைக் காட்டி யதுபோலிப் போதுங்கண் மன்னவன்ப
தாகையைக் காண்பிக்கி னீரே யவர்க்குத் தளகர்த்தரே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) ஓகையை ஊகையுடனே கொண்டு - களிப்பை யூகத்துடனேகொண்டு, ஆதுலர்க்கு - இரவலர்க்கு, ஓய்வது இன்றி - ஓய்வில்லாமல், ஈகையை ஈகைபுரி - கொடையைக் கொடுக்கின்ற, ரகுநாதன் வெற்பு - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள, ஏந்திழையீர் - மாதரே, வாகையைக் காட்டியதுபோல - வெற்றியைக் காட்டினதுபோல, இப்போது - இப்பொழுது, உங்கள் மன்னவன் - உங்கள் அரசனது, பதாகையைக் காண்பிக்கின் - துவசத்தைக் காட்டினால், அவர்க்குத் தளகர்த்தர் நீரே - அவர்க்குச் சேனாதிபதி நீரே யாவீர்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

வாகை - வெற்றிக்குரிய அழகிய வுறுப்பு (தனம்.) பதாகை - மீன் (கண்). உங்கள் மன்னவன் என்றது மன்மதனை; அவன் கொடி மீனக்கொடி. (258)

நூதன மாகத் தருவிற் கனகநன் னூற்கவிக்குச்
சீதன மாகத் தருரகு நாதனற் றேவையன்னீர்
மாதன நாகமுன் காணவென் றுக்ர வழுதியைப்போற்
கேதனங் காட்டப் பயந்தா லுமக்கப கீர்த்திகளே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நல்நூல் கவிக்கு-நல்ல பிரபந்தத்துக்கும் கவிக்கும், சீதனமாக - பரிசாக நூதனம் - புதுமையாகிய, மாகத் தருவின் - சுவர்க்க லோகத்துக் கற்பகத் தருவைப் போல, கனகம்தரு-பொன்னைச் சொரிகிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், நல் தேவை யன்னீர் - அழகிய தேவை நகரத்தை நிகர்த்தவரே, மாதன நாகம் முன்காண வென்று - கந்தமாதந பர்வதத்தை முன்னே யாவருங் காணும்படி வென்று, உக்கிரவழுதியைப்போல் - உக்கிர பாண்டியன் போல, கேதனங் காட்டப் பயந்தால் - கொடியைக்காட்ட அஞ்சினால், உமக்கு அபகீர்த்திகளே - உமக்கு அபகீர்த்திகளே யுண்டாகும்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

மாதனநாகமுன்காண - பெரிய தனமாகிய மலை எதிரில், காண, காண என்றமையால் தனப் புறப்பாடும், கேதனம் - கொடி; மீன் (கண்). கேதனம் காட்டப் பயந்தமை என்றமையால் கண் புதைத்தலும் தோன்றின. (259)

நெருப்புஞ் சதாகதி யுங்கலந் தாலென நேரலர்மேற்
றிருப்புஞ் சமர்வடி வேல்ரகு நாதனற் றேவையன்னீர்
கருப்புங் கலக மு‌மையம் புகலுநல் காதுநற்பால்
பருப்புந் தனம்பணி யார மளித்ததென் பாக்கியமே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நெருப்பும் சதாகதியும் கலந்தாலென - நெருப்புங் காற்றும் கூடினாற்போல, நேரலர்மேல் - பகைவர்மீது, திரும்பும் - திரித்தெறிகின்ற, சமர் - போர்க்குரிய, வடிவேல் - வடித்த வேற்படையைத் தாங்கிய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், நல் தேவையன்னீர் - அழகிய தேவை நகரத்தை நிகர்த்தவரே, கருப்பும் - பஞ்சத்தையும், கலகமும் - கலகத்தை யும், ஐயம் புகலும் - பிச்சை புகுதலையும், நல்காது - தாராமல், நற்பால் - நல்ல பாலையும், பருப்பு உந்து அன்னம் - பருப்பொடு கூடிய சோற்றை யும், பணியாரம் - பணியாரத்தையும், அளித்தது - தந்தது, என்பாக்கியம் - என் பாக்கியமாகும்; (எ - று).

குறிப்புப் பொருள்

கருப்பும் - கருப்பு வில்லும், கலகமும் - அதனால் விளையுங் காமப் போரையும், ஐ அம்பு உகலும் - பஞ்ச பாணங்கள் சிந்துதலையும் (கண்.) பருப்பு - பருத்தலையுடைய, உம்தனம் - உமது தனத்தையும், பணிஆரம் - அதன்மீதணிந்த ஆபரணங்களையும் ஆரங்களையும் (தனம்). (260)

காலைத்தந் தத்தியை யாறிடு மாப்படைக் காவலன்செங்
கோலைத்தந் தத்தியைச் செய்ரகு நாத குமுணன்வரைப்
பாலைத்தந் தத்தியை வாய்மட வீர்முன் பரமனைப்போற்
றோலைத்தந் தத்தியை யெங்கொளித் தீர்தரிற் றேற்றுவனே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) காலைத்தந்து - காலாட்களைக் கொண்டு, அத்தியை-பகை வர் செய்யுங் கொலை, ஆறிடும் - தணிக்கின்ற, மாப்படைக் காவலன் - பெரிய தளகர்த்தன், செங்கோலைத் தந்து - செங்கோன்மையைச் செலுத்தி, அத்தியைச் செய் - துஷ்டரைக் கொலை செய்கின்ற, ரகுநாத குமுணன் வரை - ரகுநாத குமுணனாகிய சேதுபதியின் மலையிலுள்ள, பால் - வெள் ளிய, ஐ - அழகாகிய, தந்தத்து இயை - பல்வரிசையோடு கூடிய, வாய் - வாயினையுடைய, மடவீர் - மாதரே, முன் - முன்னே, பரமனைப்போல் - பரமசிவனைப்போல, தோலைத் தந்து - தோலைக்கொடுத்து, அத்தியை -

எலும்பை, எங்கு ஒளித்தீர் - எவ்விடத்து மறைத்தீர், தரின் - (அதையும்) தருவீராயின், தோற்றுவன் - காணத்தருவேன் ; (எ - று.)

குறிப்புப் பொருள்

தோல் - யானை, (தனம்). அத்தி - கடல், (கண்.) (261)

மாட்டாங் குளப்படி போலொன் னலர்படை வாரிகடந்
தீட்டாங் குளத்தி னிதிரகு நாதன்வெற் பேந்திழையீர்
நாட்டாங் குளமலை யாங்குளங் கண்டன நாமினிமேற்
காட்டாங் குளத்தையுங் காண்பதெப் போது கழறுகவே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மாட்டாங் குளப்படிபோல் - மாட்டின் குளப்படி நீர்போல, ஒன்னலர் - பகைவருடைய, படைவாரி - சேநா சமுத்திரத்தை, கடந்து - தாண்டி, இட்டு - திரவியத்தை யிட்டாநின்ற, ஆங்கு உளத்தின் - அப்படிப் பட்ட மனோதைரியத்தையுடைய, நிதி-நிக்ஷேபம் போல்பவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வெற்பு - மலையிலுள்ள, ஏந்திழையீர் - மாதரே நாட்டு ஆங்கு உள - நாட்டின்கண் அவ்விடத்திலுள்ள, மலையாங்குளம் கண்டனம் - மலையாங் குளத்தைக் கண்டோம், நாம் - யாம், இனிமேல் - இனிமேல், காட்டாங் குளத்தையும் காண்பது - காட்டாங் குளத்தையும் பார்ப்பது, எப்போது - எப்பொழுது, கழறுக - சொல்லுக; (எ - று.)

குறிப்புப் பொருள்

மலையாங்குளம் - மலைப்பிரதேசம் (தனம்). காட்டாங்குளம் - அது, பார்க்கத்தக்க இடம் (கண்.) (குளம் - இடம்.) (262)

அடம்பிடிக் கைதை வளர்செம்பி நாட்டி லரசுநன்மை
யிடம்பிடிக் கைதரச் செய்ரகு நாதன்வெற் பேந்திழையீர்
கடம்பிடிக் கைதை வருமுங்க ளூர்ப்பயிர் காணக்குடி
யுடம்பிடிக் கைதரு முன்வா ரகந்தந்த துத்தமமே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அடம்பிடி - அடம்பங் கொடிகளோடு, கைதை-தாழை, வளர்-விருத்தியாகாநின்ற, செம்பி நாட்டில் - செம்பி நாட்டின்கண், நன்மை - நன்மைகள் யாவும், இடம்பிடிக்கை தர - இடம்பிடிக்கும்படி, அரசுசெய் - அரசு செய்கின்ற, ரகுநாதன் வெற்பு - ரகுநாத சேதுபதியின் மலையி

லுள்ள, ஏந்திழையீர் - மாதரே, கடம்பிடிக்கை தைவரும் - காடடர்தல் மிகுந்த, உங்கள் ஊர் பயிர்காண - உம்மூரிற் பயிர்களைக்காண, குடிஉடம் பிடிக்கை தருமுன் - குடி யுடம்பிடிக்கை தருவதற்கு முன்பே, வாரகம் தந்தது - குடிவாரம் கொடுத்தது, உத்தமமே - உத்தமந்தான், (எ - று.)

## குறிப்புப் பொருள்

உடம்பிடி - வேல் (கண்). வாரகம் - கச்சைத்தரித்த இடம் (தனம்.)

தடம்பணி லஞ்செறி யுஞ்செம்பி நாட்டிற் றரியலருய்
யிடம்பணி கேட்டுத் தொழுரகு நாதன்மெய் யேமவெற்பிற்
கடம்பணி யாங்கு குடமுன்கண் டோமயில் காணிலன்றே
திடம்பணி வோமயில் வாகன னென்றுனைத் தேமொழியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தடம் - வயல் வரம்புகளில், பணிலம் செறியும் - சங்குகள் நெருங்குகின்ற, செம்பிநாட்டில் - செம்பி நாட்டின்கண், தரியலர் - பகைவர், உய் - தாம்பிழைத்தற்குரிய, இடம் - இடம்பார்த்து, பணி கேட்டு - கட்டளையைக் கேட்டு, தொழு - வணங்காநின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மெய் - உண்மை விளங்குகின்ற, ஏம வெற்பில் - பொன் மலையிலுள்ள, தேம் மொழியே - தேன் போன்ற இன்சொல்லை யுடையாளே, கடம்பு அணி ஆம் - கடப்ப மலர்மாலையை ஆபரணமாகப்பெற்ற, குகுடம் - கோழியை, முன் கண்டோம் - முன்னே பார்த்தோம், மயில்காணில் அன்றே - மயிலைப் பார்த்தாலல்லவோ, உன்னை - உன்னை, மயில்வாகனன் என்று - மயில்வாகனத்தை யுடையோனாகிய முருகக் கடவுளென்று, திடம் பணிவோம் - உறுதியாக வணங்குவோம்; (எ - று.)

குக்குடம் என்பது குகுடம் எனத் தொகுத்தலாயிற்று.

## குறிப்புப் பொருள்

கடம் - யானைக்கூட்டம், பணி ஆம்குகுடம் - ஆபரணமணிந்த குடம் இவை தனத்தையும், அயில் - வேல், கண்ணையும் குறித்தன. குகுடம் என்பதில் 'கு' உபசர்க்கம். மயில் என்பதைக் குறிப்புப் பொருளுக்கு அயில் எனப் பிரிக்க. (264)

ஊனைமுன் காட்டிப் புறவினுக் காக வுதவுமனுக்
கோனைமுன் காட்டத் தகுரகு நாத குபேரன்வரை
யானையின் மேல்வைத்துக் கோலமுன் காட்டி யருளிவட
மீனையுங் காட்டிலன் றேகலி யாணமெய் மெல்லியலே.

### வெளிப்படைப் பொருள்

(**இ-ள்.**) ஊனை - தன் மாமிசத்தை, முன்காட்டுப்புறவினுக்காக உதவும்- முற்காலத்தில் காட்டுப்புறுவின் பொருட்டுக் கொடுத்த, மனுக்கோனை - சிபிச் சக்கரவர்த்தியை, காட்டத்தகு - முதன்மையாகிய உவமையாக எடுத்துக் காட்டத் தகுந்த, ரகுநாத குபேரன் வரை - ரகுநாத சேதுபதியாகிய குபேர னது மலையிலுள்ள, மெல்லியலே - பெண்ணே, யானையின் மேல் வைத்து - யானையின் மீது வைத்து, கோலம் முன் காட்டி யருளி - மணக்கோலத்தை முன்னே காட்டி யருளி, வடமீனையுங் காட்டில் அன்றோ - அருந்ததியையுங் காட்டினாலல்லவோ, கலியாணம் மெய் - விவாஹம் உண்மையாகும்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

யானையின் மேல் வைத்துக் கோலங் காட்டுதல் - தனத்தின் மீதுள்ள சந்தனக் கோலத்தைக் காட்டுதல். (யானை - தனம்) வடமீன் என்பதில் (மீன் - கண்). (265)

நாலார் கலிப்படை யேலா ருயிர்கொ ணமனெனவே
வேலார் கரதல மால்ரகு நாதன் விலங்கன்மின்னே
மாலார் திருக்கச்சி யத்தி கிரிகண்டு வாழ்ந்தவரைம்
பாலாறு சேர்திருப் பாற்கடல் கண்டு பணிதனன்றே.

### வெளிப்படைப் பொருள்

(**இ - ள்.**) ஆர்கலி - கடல் போன்ற, நாற்படை - சதுரங்க சேனையை யுடைய, ஏலார் பகைவருடைய, உயிர்கொள் - உயிரைக் கவர்கின்ற, நமன் என - யமன்போல, வேல் ஆர் - வேற்படை பொருந்திய, கரதலம் - கைத்தலத்தையுடைய, மால் - பெருமை பொருந்திய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின்; விலங்கல் மின்னே - மலையிலுள்ள மின்கொடி போல் வாளே, மால் ஆர் - திருமால் எழுந்தருளி யிருக்கின்ற, திருக்கச்சி அத்தி கிரி கண்டு வாழ்ந்தவர் - திருக்கச்சி ஹஸ்திகிரியைக் கண்டு வாழ்ந்தவர் கள், ஐம்பால் ஆறு சேர் - ஐந்து பாலிநதிகள் கூடிய, திருப்பாற் கடலைக் கண்டு பணிதல் - திருப்பாற்கடலைக்கண்டு வணங்குதல், நன்று - நன்மை யாகும்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

மால் ஆர் திருக்கச்சி அத்திகிரி - ஆடவர்க்கு ஆசையை உண்டாக்கு கின்ற அழகிய கச்சைத் தாங்கிய யானைமலை, (தனம்). ஐம்பால் ஆறு சேர் திருப்பாற்கடல் - ஐம்பாலினிடத்தை யடுத்த அழகிய கடல், (கண்.) ஐம் பால் - கூந்தல். (266)

வெருவிடந் தைக்கோ லலட்சிய மாகக்கை வேல்கொண்டிக
லுருவிடந் தைக்கப் பொருரகு நாதன்வெற் பொண்டொடியீர்
மருவிடைந் தைப்பணி யீர்திரு நீர்மலை மாலைக்கண்டோர்
திருவிடந் தைக்கு மயிலைக்கும் போவர் தெரிசிக்கவே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வெரு - அஞ்சுதற்குரிய, விடம் - நஞ்சு பூசிய, தை - தைக்கின்ற, கோல் - பாணங்கள், அலட்சியம் ஆக - அலக்ஷ்யமாக, கைவேல் கொண்டு - தன் கை வேலினால், இகல் - பகைவருடைய, உருவுஇடம் - பட்டு உருவுதற்குரிய இடங்களில், தைக்க - தைக்கும்படி, பொரு - போர் புரிகின்ற, ரகுநாதன் வெற்பு - ரகுநாத சேதுபதியின் மலையினுள்ள, ஒண்டொடியீர் - ஒட்பமாகிய வளையலையணிந்த மாதரே, மருவு இடம் தைப் பணியீர் - பொருந்திய இடங்களில் தங்குதலையுடைய ஆபரணத்தை யுடையவரே! திருநீர்மலை மாலைக்கண்டோர் - திருநீர்மலையி லெழுந்தருளி யிருக்கிற திருமாலைச் சேவித்தவர், திருவிடந்தைக்கும் மயிலைக்கும் தெரிசிக்கப் போவர் - திருவிடந்தைக்கும் மயிலைக்கும் தெரிசிக்கச் செல்லுவர்; (எ-று.)

குறிப்புப் பொருள்

திருநீர்மலை மால் - அழகாகிய தன்மையுடைய மலையின் பெருமை, மலை - ஆகுபெயர். (தனம்). திருவிடந்தைக்கும் மயிலை - அழகிய விஷத் தன்மை படிந்த மீன் (கண்). (மயிலை - மீன்). (267)

தரைக்குத் தரையென வாழ்செம்பித் தேவைத் தலத்தர்மகிழ்
துரைக்குத் துரைரகு நாதன் சிலோச்சயத் தோகையன்னீர்
வரைக்கு வரையுள தென்றுமுன் காட்டி வரினுமவை
திரைக்குத் திரையிடு வாரோ வுலகிற் றெரிந்தவரே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தரைக்குத் தரை என - பூமிக்குட் சிறந்த பூமி யென்னும் படி, வாழ் - வாழ்கின்ற, செம்பி - செம்பிநாட்டிலுள்ள, தேவைத்தலத்தர் - தேவை நகரத்தார், மகிழ் - மகிழ்தற் கேதுவாகிய, துரைக்குத் துரை - துரைகளுக்குத் துரையாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், சிலோச்சயம் - மலையிலுள்ள, தோகை அன்னீர் - மயிலை நிகர்த்தவரே, வரைக்கு வரை உளது என்று - மலைக்குட் சிறந்த மலை யுண்டென்று, முன் காட்டி வரினும் - முன்னே காட்டிவந்தாலும், உலகில் தெரிந்தவர் - உலகத்தில் தெரிந்தவர்கள், அவை - சபையில், திரைக்குத் திரை இடுவாரோ - திரைக்குத் திரையிட்டு மூடுவரோ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

வரைக்கு வரை - மலைக்கு அளவு (தனம்). திரைக்குத் திரை - கடலுக்கு மறைவு (கண் புதைத்தல்)! (268)

மஞ்சலை யிஞ்சி தளிவளர் செய்யொடு மஞ்சளிஞ்சி
விஞ்சுமெய்த் தேவைத் துரைரகு நாதன் விலங்கன்மின்னே
துஞ்சு முனேமுசு குந்த னிலாமற் றுரத்தியநீ
கஞ்சனை யுந்தொலைத் தாற்றொழு வாருனைக் கண்ணனென்றே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மஞ்சு அலை - மேகங்கள் தவழ்கின்ற, இஞ்சி - மதிலும் தளி - கோயிலும், வளர் - விருத்தி யடையாநின்ற, செய்யொடு - வயல்களோடு, மஞ்சள் இஞ்சி - மஞ்சளும் இஞ்சியும், விஞ்சும் - அதிகரிக்கின்ற, மெய் - உண்மை பயில்கின்ற, தேவைத்துரை - தேவை நகரத்திற் கிறைவனாகிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், விலங்கல் - மலையிலுள்ள, மின்னே - மின் கொடிபோல்வாளே, துஞ்சு முன்னே - தூங்கு முன்னே, முசுகுந்தன் நில்லாமல் துரத்திய நீ - முசுகுந்தன் நிற்காமல் துரத்தின நீ, கஞ்சனையுந் தொலைத்தால் - கஞ்சனையும் வென்றால், உன்னை கண்ணன் என்று தொழுவார் - உன்னைக் கண்ணனென்று வணங்குவார் (உலகத்தார்);. (எ - று.)

### குறிப்புப் பொருள்

குந்தம் - கைவேல், இது குந்தன் என நின்றது (கண்). கஞ்சம் - தாமரை. இது கஞ்சன் என நின்றது (தனம்). (269)

கேட்டந்த மன்ன ரிசைவீர மாண்மை கிளர்புகழ்பூண்
சூட்டந்த மாமெய் ரகுநாதன் றேவைச் சுடர்க்கிரிவாய்க்
காட்டந்த மாஞ்சொற் கடைமருந் தீர்பெருங் காயமென்று
கோட்டந்தந் தீர்க்கடுக் காய்ப்பூவு நீர்தரக் கோருவனே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அந்தம் மன்னர் - அழகாகிய வேந்தர், கேட்டு - கேள்விப் பட்டு, இசை - சொல்லுகின்ற, வீரம் - வீரத்தையும், ஆண்மை - ஆண்மையையும், கிளர்புகழ் - விளங்குகின்ற புகழையும், பூண்சூட்டு - ஆபரணமாகப் பூண்ட, அந்தம் ஆம் மெய் - அழகாகிய சத்தியத்தையுமுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், சுடர்க்கிரிவாய் - ஒளியுள்ள மலையின்

கண், காட்டு அந்தம் ஆம் சொல் - காட்டப்பட்ட அழகாகிய சொல், கடை மருந்தீர் - பாற்கடலில் கடைந்தெடுத்த அமிர்தத்தை நிகர்த்தவரே, பெருங் காயம் என்று - பெருங்காயமென்று சொல்லி, கோட்டந்தந்தீர் - கோஷ்டத் தைக் கொடுத்தீர், கடுக்காய்ப் பூவும் - கடுக்காய்ப் பூவையும், நீர்தரக் கோருவன் - நீர்தர வேண்டுகின்றேன்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

பெருங்காயம் என்று - பெரிய உடம்பிலுள்ளதென்று சொல்லப் பட்ட, கோட்டுஅம் - யானைக்கொம்பின் அழகு - (தனம்). கடுக்காய்ப்பூ - விஷங் காய்க்கின்ற மலர், அன்றி விஷம்போல வருத்துகின்ற மலர் (கண்). (270)

குச்சிலை யெய்தப் பெறுதவ ரேனுந்தற் கோரிவந்தான்
மச்சிலை யெய்தச் செயும்ரகு நாதன் வரைமடவீர்
நச்சிலை யென்ப தறிந்தோநும் பாலினி நாங்களுய்யக்
கச்சிலை யென்பதுஞ் செய்தால் வெகுநன்மை காணுமக்கே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) குச்சு இல்லை எய்தப் பெறுதவரேனும் - குச்சு வீட்டை யடையப்பெறுதவராயினும், தன் கோரி வந்தால் - தன்னை விரும்பி வந்தால், (அவர்) மச்சு இல்லை - மச்சுவீட்டை, எய்தச் செயும் - அடையச் செய்கிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வரைமடவீர் - மலையிலுள்ள மாதரே, நும்பால் - உம்மிடத்து, நச்சு இல்லை என்பது அறிந்தோம் - நச்சு இல்லை என்பது அறிந்து கொண்டோம், இனி நாங்கள் உய்ய - இனி நாங்கள் பிழைக்க, கச்சு இல்லை என்பதும் செய்தால் - கசத்தல் இல்லையென்பதையுஞ் செய்வீராயின், உமக்கு வெகு நன்மை - உமக்கு மிகுதியாகிய நன்மை யுண்டாம்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

நச்சு - விஷம், (கண்). கச்சு - முலைக்கட்டு, (தனம்). (271)

அஞ்சை யிலேவெரு வேலென் றெளியரை யாதரிக்கு
மஞ்சை யிலேசெனச் செய்ரகு நாத மகிபன்வரைப்
புஞ்சை யிலேது வரையென்று காட்டியிப் போதழகா
நஞ்சை யிலேயென லாமோபெண் ணேபொன்னி நாட்டினிதே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அஞ்சையிலே - அஞ்சும்பொழுது, வெருவேல் என்று அஞ்சாதே என்று, எளியரை ஆதரிக்கும் - ஏழைகளை யாதரிக்கிற; மஞ்சை இலேசு எனச் செய் - மேகங்களையும் தன் கொடையால் நொய்தென்னும் படி செய்கின்ற, ரகுநாத மகிபன் வரை - ரகுநாத சேதுபதியாகிய மஹீபதியின் மலையிலுள்ள, பெண்ணே - மாதே, துவரை புஞ்சையிலே என்று காட்டி - துவரை புஞ்சை நிலத் துண்டென்று காட்டி, இப்போது - இப்பொழுது, அழகு ஆம் - அழகாகிய, நஞ்சையிலே எனல் ஆமோ - நஞ்சை நிலத்திலே யுண்டென்று காட்டுதல் கூடுமோ, பொன்னி நாட்டினிது - காவேரி நாட்டில் இனிது; (எ - று.)

குறிப்புப் பொருள்

வரை - மலை (தனம்). நஞ்சு - விஷம், (கண்). இல்லே யெனலாமோ - இல்லை யென்று மன்ருடவுங்கூடுமோ. (272)

சந்தனு போச னளன்மா தவனரிச் சந்திரன்போல்
வந்தனு மான மறுரகு நாதன் வரைமடவீ
ரெந்தனு வெய்த மறிமா விரண்ட திலக்குத்தப்பி
வந்தி லொன்றை மறைத்தொன்றைக் காட்டனன் மார்க்கமன்றே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சந்தனு - சந்தனு மஹாராஜன், போஜன் - போஜமகாராஜன், நளன் - நளமகாராஜன், அரிச்சந்திரன், - ஹரிச்சந்திர மகாராஜன், போல - இவர்களைப்போல, வந்து - தோன்றி, அநுமானம் அறு - சந்தேகமற்ற, ரகுநாதன் வரைமடவீர் - ரகுநாதன் சேதுபதியின் மலையிலுள்ள மாதரே, எம் தனு எய்த - எமது வில்லா லெய்த. மறிமா இரண்டு - மறிமா என்னு மிரண்டு, அது இலக்குத் தப்பி வந்ததில் - அது குறிபிழைத்து வந்ததில், ஒன்றை மறைத்து - ஒன்றை யொளித்து, ஒன்றைக் காட்டல், நன்மார்க்கம் அன்று - நன்மார்க்கமல்ல; (எ - று.)

குறிப்புப் பொருள்

மறி - மான் (கண்) மா - யானை (தனம்). இதில் நெடுநீ விருதலென்னுந் துறையும் அமைந்துள்ளது. (273)

தாக மிருந்த வறியோர்க் கமுதந் தருதலிற்றி
யாக மிருந்த கரரகு நாத னணிவரைவாய்
மாக மிருந்த நடுவீர் துரோண வருபதும
பூக மிருந்துஞ் சயினிய மோடி யொளித்ததென்னே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தாகம் இருந்த வறியோர்க்கு - தாகங் கொண்டிருந்தவறியவர்க்கு, அமுதந் தருதலின் - அமிர்தத்தைக் கொடுத்தல் போல, தியாகம் இருந்த - ஈகை தங்கிய, கரம் - கையையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், அணி வரைவாய் - அழகிய மலையின்கண், மாகம் இருந்த நடுவீர் - ஆகாயத்தின் உருவமிருந்த இடையையுடையவரே, துரோண வரு பதும யூகம் இருந்தும் - வில்லைத் தாங்கிய விருத்தியடையா நின்ற பதும யூகம் இருந்தும், சயினியம் - படைகள், ஓடி ஒளித்தது என் - ஓடி ஒளிந்ததற்கு காரணம் யாது; (எ - று.)

### குறிப்புப் பொருள்

பதுமயூகம் - தாமரை யரும்பினிணை, யுகம் யூகமென நீண்டது, யுகம் இரண்டு, இது தனத்தையும், சயினியம் - நால்வகைப்படை, இதிற் பயில்வது வில் வாள் வேல் முதலியன ஆதலால், இது கண்ணையுங் குறித்தன. (274)

வீரரண் போர்க்கு வெருவி முன்சந்தி விடினுமொப்பாத்
தீர ரணமத மாரகு நாதன் சிலம்பனையீர்
நீரரண் கைக்கொண்டு வெற்ப ரணைத்தள்ள னீதியன்று
பாரர ணம்மிலை யுங்க ளரமனை பாழென்பரே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வீரர் அண் போர்க்கு வெருவி - வீரர்கள் நேர்ந்த யுத்தத்துக் கஞ்சி, முன் - முன்னர், சந்தி விடினும் - சந்தி செய்யத் தூதனுப்பினும், ஒப்பா - சம்மதியாத, தீர ரணமதமா - தைரியத்தையுடைய ரணகளத்திற் பயின்ற மதயானைகளையுடைய, ரகுநாதன் - ரகுநாதசேதுபதியின், சிலம்பு அனையீர் - மலையை நிகர்த்தவரே, நீர் அரண் கைக்கொண்டு - நீரரணைக் கைப்பற்றி, வெற்பு அரணைத் தள்ளல் - மலை யரணை நீக்குதல், நீதியன்று - நியாயமல்ல, பார் அரணம் இல்லை - உலகத்தில் (உங்களுக்குச்) சிறந்த அரணில்லையாதலால், உங்கள் அரமனை பாழ் என்பர் - உங்களுடைய அரமனை பாழென்று சொல்லுவர்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

நீரரண் கண்ணையும், வெற்பரண் தனத்தையும் குறித்தன. (275)

வாட்டானை கொண்ட கடற்றானை மண்ட வருமகத
நாட்டானை வென்ற செயரகு நாத நரேந்திரன்வரைக்
காட்டானை வென்றகட் டீர்கிள்ளை யேந்திமுன் காணுமயிற்
கோட்டானை வென்ற கரும்பினை யாதுரங் கோகிலமே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வாள்தானை கொண்ட - வாட்படையைக் கொண்ட, கடல் தானை - கடல்போன்ற சேனைகள், மண்ட வரும் - நெருங்க வருகின்ற, மகத நாட்டானை வென்ற - மகத தேசத் தரசனை வென்ற, செயம் - வெற்றியை யுடைய, ரகுநாத நரேந்திரன்வரை - ரகுநாத சேதுபதியாகிய நரபதியின் மலையில், காட்டானை வென்ற கட்டீர் - காட்டானையை வென்ற மலைப்பக்கத்தையுடையவரே, கரும்பிள்ளை - காக்கைகள், கிள்ளையேந்தி - கிளியை யேந்தி, முன் காணும் - முன்னே தோன்றுகின்ற, மயில் கோட்டானை வென்ற - மயிலையும் கோட்டானையும் வென்றன, (ஆதலால் இவற்றுள்) உரம் யாது - வலியது யாது, கோகிலமே - குயில்போல்வாளே! (நீ சொல்); (எ - று.)

கற்பகத்தருவை யொத்த கைகளில் கிள்ளையை யேந்தி அக்கைகளால்) முன்காணும் அயிலாகிய படையை (மறைத்து) வென்ற கரும்பு என்க.

கட்டு - மலைப் பக்கம்.

குறிப்புப் பொருள்

"காட்டானை வென்ற கட்டீர்" என்பது தனத்தை, (கட்டீர் - இடத்தையுடையீர், கண் - இடம்) இது தனத்தைக் குறிப்பித்தது. "கிள்ளை யேந்தி முன் காணும் அயில் கோள்தானை வென்ற கரும்பு" என்பது கண்ணையும் குறித்தன. அயில் - வேல் (கண்). காட்டானை வென்ற இடம் என்றது தனத்தை என்க. (276)

கூட்டிட நட்பைப் பிரிக்கப் பிரித்ததைக் கூட்டிப் பின்னு
மீட்டிடச் செய்தந் திரரகு நாதன் விலங்கலன்னீர்
நாட்டிடைச் செட்டி யுரத்தைமுன் காண்பித்து நஞ்சத்தைப்பின்
காட்டிட வோமறைத் தீருங்கள் வாணிபங் கைகண்டதே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கூட்டிட - சேர்க்கவும், நட்பைப் பிரிக்க - நட்பைப் பிரித்து விடவும், பிரித்ததைக் கூட்டி - பிரித்ததைச் சேர்த்து, பின்னும் மீட்டிட - பின்னும் மீட்கவும், செய் - செய்கிற, தந்திரம் - உபாயத்தையுடைய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், விலங்கல் அன்னீர் - மலையை நிகர்த்தவரே,

நாட்டிடை - நாட்டில், செட்டி உரத்தை முன் காண்பித்து - செட்டியின் விவேகத்தை முன்னே காட்டி, நஞ்சத்தை - விஷத்தை, பின் காட்டிடவோ மறைத்தீர் - பின்னே காட்டுதற்கோ ஒளித்தீர், உங்கள் வாணிபங் கைகண்டது - உங்கள் வர்த்தகங் கைகண்டது ; (எ - று.)

குறிப்புப் பொருள்

உரம் - மார்பு. இது தனத்தையும், நஞ்சம் - விஷம். இது கண்ணையுங் குறித்தன. (277)

கிள்ளை மறைசொலக் கோகிலங் கேட்டுக் கிளர்பொழில்சூழ்
வள்ளை வயற்செம்பி யாள்ரகு நாதன் வரைமடவீர்
பிள்ளைமுன் பெண்டந்த தானங்கண் டோமந்தப் பிள்ளை சைவங்
கொள்ளை யிடச்சம ணேடிட்ட துங்கண்டு கொள்வதென்றே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்) கிள்ளை மறை சொல - கிளிகள் வேதங்களைச் சொல்ல, கோகிலங் கேட்டு - குயில்கள் கேட்டு, கிளர் - மனமகிழ்தற்கிடமாகிய, பொழில்சூழ் - சோலை சூழ்ந்த, வள்ளை வயல் - வள்ளைக்கொடி படர்ந்த வயல்களையுடைய, செம்பி - செம்பி நாட்டை, ஆள் - ஆள்கின்ற, ரகு நாதன் வரை - ரகுநாத சேதுபதியின் மலையிலுள்ள, மடவீர் - மாதரே, பிள்ளை - திருஞானசம்பந்தப் பிள்ளையார், முன் - முன்னே, பெண் தந்த - பெண்ணை யுண்டாக்கிக் கொடுத்த, தானம் - இடத்தை, கண்டோம் - பார்த்தோம், அந்தப்பிள்ளை - அவர், சைவங் கொள்ளையிட - சைவசமயத்தைச் சூறையாட, சமண் நேடிட்டதும் - சமணரைத் தேடினதும், கண்டு கொள்வது என்று - காண்பது எப்பொழுது ; (எ - று.)

குறிப்புப் பொருள்

தந்த தானம் - யானை கொம்பாகிய இடம்-(மூலை), அது தனத்தையும், சமண் நேடிட்டது - சமணரைத் தேடியது கண் (வினைப்பெயர்) அது கண்ணையும் குறித்தன. (278)

கலையிருந் தாலு முளத்திற் றருமங் கழறுமனு
நிலையிருந் தால மகிழ்ரகு நாத நிருபன்வெற்பிற்
சிலையிருந் தாவதென் னேகட்டி யப்பரைச் சேர்க்கமுன்னே
யலையிருந் தாலல்ல வோசொல் லுவாயினி யங்கனையே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கலை இருந்து ஆலும் - கலைகளிருந்து பயில்கின்ற, உள்ளத்தின் - மனத்தின்கண்ணுள்ள, தருமம் கழலும் - அறப்பயனைக்கூறுகின்ற,

மனுநிலை - மனுநீதியின் நிலையை, இரு தாலம் - பெரிய உலகத்தார், மகிழ் - மகிழ்கின்ற, ரகுநாத நிருபன்வெற்பில் - ரகுநாத சேதுபதியாகிய வேந்தனது மலையில், சிலை இருந்து ஆவது என் - மலையிருந்தாவது யாது, அப்பரைக் கட்டிச் சேர்க்க - அப்பரைச் சேர்த்துக் கட்டுதற்கு, முன்னே - முன்னே, அலையிருந்தாலல்லவோ - கடலிருந்தாலல்லவோ, இனி சொல்லுவாய் - இனிச் சொல்வாயாக, அங்கனையே - பெண்ணே; (எ - று.)

## குறிப்புப் பொருள்

'அப்பரைக் கட்டிச் சேர்க்கச் சிலையிருந்தாவதென்னே' எனக் கூட்டுக. சிலை - தனத்தையும், அலை - கண்ணையும் குறித்தன. (அலை - கடல், ஆகுபெயர்). (279)

நாதக மம்பு கதையீட்டி மாரத நாகமன்செய்
சாதக மன்னு முரரகு நாத தயாளன்வெற்பிற்
பேதக மின்னற் பெருந்துறை காட்டிய பின்னலவோ
போதகங் காட்டத் தகுமடி யார்கட்குப் பூங்கொடியே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நாதகம் - வாள், அம்பு - அம்பு, கதை - தண்டு, ஈட்டி - ஈட்டி, மா - குதிரை, ரதம் - தேர், நாகம் - யானை, (என்னு மிவைகளில்), மன் செய் - மிகுதியாகச் செய்கிற, சாதகம் மன்னும் - பழக்கம் நிலைபெற்ற, உரம் - வலியுள்ள, ரகுநாத தயாளன் வெற்பின் - ரகுநாத சேதுபதியாகிய கிருபையாளனது மலையில், பூங்கொடியே - பூங்கொடி போல்வரே, பேதகம்இல் - வேற்றுமை யில்லாத, நல்பெருந்துறை - நன்மையாகிய திருப்பெருந்துறையை, காட்டியபின் அல்லவோ - காட்டியபின் பன்றோ, அடியார்கட்கு - அடியார்கட்கும், போதகம் காட்டத்தகும் - ஞானத்தை யுபதேசிக்கத்தகும்; (எ - று.)

நாந்தகம் நாதகம் எனக் குறைந்தது. உம்மை - விகாரத்தாற் றொக்கது.

## குறிப்புப் பொருள்

பெருந்துறை - கடல்; இது கண்ணையும், போதகம் - யானை; இது தனத்தையுங் குறித்தன. (280)

வான்சிந்திப் பூநிக ரில்லாக்கைம் மாறுடை வள்ளல்செம்பிக்
கோன்சிந்திப் பாவலர் சொல்ரகு நாதன் குவடனையீர்
தேன்சிந்திப் போமென் றளித்தீர்முன் பானையத் தேனைத்தந்தா
ளுன் சிந்திப்பேனென்றுந் தித்திக்கக் கொண்டுங்க ளுமத்தையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வான்சிந்தி - மேகம்போலச் சொரிந்து, பூ - உலகில், நிகர் கைம்மாறு இல்லா உடை-சமானமும் கைம்மாறும் இல்லாமையை யுடைய, வள்ளல் - வள்ளல், செம்பிக்கோன் - செம்பி வேந்தன், இப் பாவலர் சிந்து சொல் - இந்தப் புலவர்கள் சிந்துகளைப் பாடுகின்ற. ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், குவடு அனையீர் - மலையை நிகர்த்தவரே, தேன் சிந்திப்போமென்று - தேன் சிந்திப்போருமென்று, முன் பானை அளித்தீர் - முன்னே பானையைத் தந்தீர், அத் தேனைத் தந்தால் - அந்தத் தேனைக் கொடுத்தால், நான் - நான், உங்கள் நாமத்தை - உங்கள் பெயரை, தித்திக்கக்கொண்டு - இனிக்க வுட்கொண்டு, சிந்திப்பேன் - சிந்தனை செய்வேன்; (எ-று.)

### குறிப்புப் பொருள்

முன்பு ஆனை அளித்தீர் - முன்னே யானையைத் தந்தீர், இது தனத்தையும், தேன் - வண்டு, இது கண்ணையும் குறித்தன. (281)

கட்டணக் கோட்டை நிதியொடு மன்னர்தங் கைகுவித்துக்
கொட்டணக் கோட்டை விடுரகு நாத குபேரன்வரை
யுட்டணக் கோட்டை நிகர்களத் தீர்தரு முங்கள்பெரும்
பட்டணக் கோட்டையைப் போற்சந்தைப் பேட்டையைப் பார்க்கட்டுமே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கட்டணக் கோட்டை நிதியொடு - கட்டடத்தையுடைய கோட்டை திரவியம் இவற்றுடன், மன்னர்தம் கைகுவித்து - வேந்தர் தமது கைகூப்பி, கொட்டணக் கோட்டை விடு - நெற்கோட்டைகளையும் திரையாக விடுதற்குரிய, ரகுநாத குபேரன் வரையுள் - ரகுநாத சேதுபதி யாகிய குபேரனது மலையில், தண் அ கோட்டை நிகர் - குளிர்ந்த அந்தச் சங்கத்தை நிகர்த்த, களத்தீர் - கண்டத்தையுடையவரே, தரும் - கொடுக்கின்ற, உங்கள் பெரும் பட்டணக் கோட்டையைப்போல் - உங்கள் பெரும் பட்டணக் கோட்டையைப் பார்த்ததுபோல, சந்தைப் பேட்டையைப் பார்க்கட்டும் - சந்தைப் பேட்டையையும் நான் பார்க்கட்டும்; (எ - று.)

கொட்டணம் - திரை.

### குறிப்புப் பொருள்

பெரும் பட்டு அண் அக் கோட்டு ஐயைப்போல் - பெரிய பட்டாடை யணிந்த அந்த யானைக் கொம்பினது அழகைப்போல், இது தனத்தையும், சந்தைப்பேட்டை - சந்து ஐ பேடு - தூது செல்லுதற்குரிய அழகிய பெட்டை வண்டு; இது கண்ணையும் குறித்தன. (282)

குஞ்சத்தை வெள்ளைக் குடையைத் தமிழ்க்குக் குலவுசப்பிர
மஞ்சத்தை யீயுங் கொடைரகு நாத மகிபன்வரை
யஞ்சத்தை வென்னடை மானேமுன் பந்தரை யாதரித்த
கஞ்சத்தைச் சேர்ந்தனன் சேர்வ தெப்போதுவங் காளத்தையே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) குஞ்சத்தை - குஞ்சத்தையும், வெள்ளைக்குடையை - வெண் குடையையும், குலவு சப்பிரமஞ்சத்தை - விளங்குகின்ற சப்பிர மஞ்சத்தை யும், தமிழ்க்கு - தமிழ்ப்பாடலுக்கு, ஈயும் - பரிசிலாகக் கொடுக்கிற, கொடை - ஈகையையுடைய, ரகுநாத மகிபன் - ரகுநாத சேதுபதியாகிய மகீபதியின், வரை - மலையில், அஞ்சத்தை வெல் - அன்னத்தை வெல்லு கின்ற, நடை - நடையையுடைய, மானே - மான்போல்வாளே, முன் - முன் னே, பந்தரை ஆதரித்த - பந்தரைச் சேர்ந்த, கஞ்சத்தைச் சேர்ந்தனன் - கஞ்சத்தை அடைந்தேன், வங்காளத்தைச் சேர்வது எப்போது - வங்கா ளத்தை அடைவது எப்பொழுது ; (எ-று.)

குறிப்புப் பொருள்

கஞ்சம் - தாமரையரும்பு (தனம்). அம் காளம் - அழகாகிய நஞ்சு (கண்). (283)

விண்புவி பூடண மாடைபொன் னுடை விபவமென்று
நண்புவி பூடணர் செய்ரகு நாத நரேந்த்ரன்வெற்பிற்
பண்புவி பூதி யனையீ ரிருகொங்கை பாலித்தநீ
ருண்புவி பூசனை யாற்கொள்ளு வாரை யுதவலிரே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) விண் - சொர்க்கலோக இன்பமும், புவி - பூலோக இன்ப மும், பூடணம் - ஆபரணமும், ஆடை - வஸ்திரமும், பொன்னுடை - பீதாம் பரமும், விபவம் என்று - எல்லா வைபவமும் இவரே யாமென்று, விபூட ணர் - விபீஷணாழ்வான், நண்புசெய் - நட்புக்கொண்ட, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியாகிய, நரேந்த்ரன்வெற்பில் - நரேந்திரனது மலையில், பண்பு - குணம், விபூதியனையீர் - விபூதியை நிகர்த்தவரே, இருகொங்கை பாலித்த நீர் - இரு தனங்களைக் கொடுத்த நீர், பூசனையால் - ஆராதனத்தால், உண் புவி - உண்ணுதற்குரிய உலகத்தை, கொள்ளுவாரை - விழுங்குவோராகிய கண்ணபகவானை, உதவலிர் - கொடுத்தீரில்லை ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

சத்துவகுணம் வெண்மையாதலால், "பண்பு விபூதியனையீர்" என்றார். "இருகொங்கை பாலித்தவர்" யசோதைப்பிராட்டியார். "இருகொங்கை" என்பது தனத்தையும் "உண்புவி பூசனையாற் கொள்ளுவார்" என்பது கண்ணனையும் குறித்தன. "கண்ணன்" என்பதில் அன் நீக்கிக் கண் மாத்திரம் கொள்க. (284)

பம்புவி யாக ரணங்கலை ஞானங்கொள் பண்டிதரா
னம்புவி யாழ மெனும்ரகு நாதன்மைந் நாகமின்னே
கொம்புவி யாசர் கதையெழு தேடு கொடுத்ததுமெய்
யம்புவி யாள வரமுந்தந் தாற்கலி யாணமெய்யே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பம்பு - பரவிய. வியாகரணம் - வ்யாகரணத்தையும், கலைஞானம் - கலைஞானங்களையும், கொள் - உணர்ந்துகொண்ட, பண்டிதரால் - புலவரால், நம்பு - நம்பப்பெற்ற, வியாழம் எனும் - பிரகஸ்பதி பகவான் என்று சொல்லுதற்குரிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மைநாகம் - மேகங்கள் படிகின்ற மலையிலுள்ள, மின்னே - மின்னற் கொடிபோல்வாளே, கொம்பு - கொம்பாகிய எழுத்தாணியையும், வியாசர் - வேதவ்யாசர், கதை - பாரதகதையை, எழுது - எழுதுதற்குரிய, ஏடு - ஏடாகிய மேருமலையையும், கொடுத்தது மெய் - தந்தது உண்மை, அம்புவி ஆள் - உலகத்தையாள், வரமும் தந்தால் - வரத்தையுங் கொடுத்தால், கலியாணம் மெய்யே - சுபகாரியம் உண்மையே; (எ - று.)

### குறிப்புப் பொருள்

"கொம்பு" என்பதும், "வியாசர் கதையெழு தேடு" என்பதும் தனத்தையும், "அம்புவியாளவரமும்" என்பது கண்ணையுங் குறித்தன. அம்பு, வியாளம், (வியாளம் - பாம்பு: நஞ்சு) அரம்; இவை ஆகு பெயராய்க் கண்ணை யுணர்த்தின. (285)

உருமாலை யிட்டிக வேதா விபவத் துருப்பசிக்கோ
தருமாலை யிட்ட விரல்ரகு நாதன் தடவரைவாய்
வருமாலை மென்குழ லீர்செய் குவார்கை வரினுமெய்யாக்
கருமாலை யின்றி யமையாது காண்கும்ப காரனுக்கே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) உரு - நிறத்தினால், மால் - பெரிய, நைட்டிகம்-நிஷ்டையை யுடைய, வேதா - பிரமனால், விபவத்து - விபவத்தையுடைய, உருப்

பசிக்கு - ஊர்வசிக்கு, ஓது அரு - சொல்லுதற்கரிய, மால் நைபிட்ட - மயக்கத்தை ஒழித்தலைச் செய்த, விரல் - விரலையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், தடம் வரைவாய் - பெரிய மலையினிடத்து, வரு - உண்டாகிய, மால் நை - மேகங்கள் கண்டு வருந்துதற்குரிய, மெல் குழலீர் - மெல்லிய கூந்தலையுடையவரே, செய்குவார் கைவரினும் - செய்யும் வழியார் வந்தாலும், மெய்யா - உண்மையாக, கருமானை இன்றி - கருமானையில்லாமல், கும்பகாரனுக்கு - குயவனுக்கு, அமையாது - காரியம் நிரம்பாது ; (எ - று.) காண் - அசை.

## குறிப்புப் பொருள்

"கருமான்" என்பது கண்ணையும், "கும்பகாரன்" என்பது தனத்தையும் குறித்தன. கருமான் - கரியமான். கும்பம் - குடம் கும்பகாரன்- குடத்தின் றன்மையைக் கொண்டவன். (286)

கங்கையைக் கண்டவர் கங்கையைக் கண்டு கருதுமவர்
சங்கையைக் கண்டனை செய்ரகு நாதன் சயிலவரை
யிங்கையைக் கண்டசொற் றேன்வஞ்சி கூட லிறைகொல்வஞ்சி
கொங்கையைக் கண்டனன் பாணரை யுங்கண்டு கொள்ளுவனே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கங்கையைக் கண்டவர் - கங்காநதியைக் கண்டவரும், கங்கையைக் கண்டு - கங்காநதியைப் பார்த்து, கருதுமவர் - (இது முத்தியைத் தருமோ தராதோ என்று) நினைப்பவருமா இவர்களுடைய, சங்கையை - சந்தேகத்தை, கண்டனை செய் - கண்டனஞ் செய்த, ரகுநாத - ரகுநாத சேதுபதியின், சயிலவரை - மலையின் எல்லையாகிய, இங்கு - இவ்விடத்தில், ஐயைக்கண்ட - அழகைக்கண்ட, சொல் தேன்- மொழியாகிய தேனையுடைய, வஞ்சி - கொடிபோல்பவளே, வஞ்சி - சேரன், கூடல் இறை கொல் - கூடற்கு இறைவனோ, கொங்கு ஐயை கண்டனன் - கொங்குநாட்டின் அழகைப் பார்த்தேன், பாணர்ஐயுங் கண்டு கொள்ளுவன் - பாணருடைய அழகையும் கண்டு கொள்ளுவேன் ; (எ-று.)

## குறிப்புப் பொருள்

"கொங்கை" என்பது தனத்தையும், "பாணர்" என்பது கண்ணையுங் குறித்தன. "பாணர்" என்பதை, பாண் - அர் எனப் பிரித்து வண்டுகள் எனப் பொருள் கொள்க. பாண்-வண்டு; ஆகுபெயர். (287)

வானங் குலவரை யெங்குந்தன் சீர்த்தி வளரவுமை
கோனங் குலப்பணி செய்ரகு நாத குமுணன்வரைத்
தானங் குலவு மினன்னீர்முன் பெற்றவர் தங்களுக்கு
மானங் குலமெய்தப் பண்ணுமுன் னேவந்த மாதங்கமே.

## வெளிப்படைப் பொருள்

(இ-ள்) வானம்-சுவர்க்கலோகமும், குலவரை-குலாசலங்களுமாகிய, எங்கும் - எவ்விடத்தும், தன் சீர்த்திவளர - தன்புகழ் விருத்தியடைய, உமைகோன் - உமாதேவி நாயகனுகிய சிவபெருமானது, அம் - அழகாகிய, குலம் - உயர்வையுடைய, பணிசெய் - திருப்பணியைச் செய்கின்ற, ரகு நாத குமுணன் - ரகுநாத சேதுபதியாகிய குமுணனது, வரைத்தானம் - மலையினிடத்தில், குலவும் - விளங்குகின்ற, மின்அன்னீர் - மின்கொடி போல்பவளே, முன் - முன்னே, பெற்றவர் தங்களுக்கு - பெற்றோர்க்கு, மானம் குலம்-பெருமையும் உயர்வும், எய்தப் பண்ணு முன்னே - கிடைக்கச் செய்தற்குமுன்பே, மா தங்கம் - பெருமை பொருந்திய சொர்ணம், வந்த - உண்டாயிற்று; (எ - று.)

## குறிப்புப் பொருள்

மான் - மானை, அங்குலம் எய்தப் பண்ணு முன்னே - கை விரல்கள் பொருந்தச் செய்வதற்கு முன்னே, மாதங்கம் வந்த - யானை தோன்றிற்று. மான் - கண்ணையும், மாதங்கம் - தனத்தையுங் குறித்தன. (288)

தென்ன வரைவில் லவரை மனுவிற் றிருத்தியிசை
மின்ன வரைசு புரிரகு நாதன் விலங்கலன்னீர்
சொன்ன வரையறிந் தோமுங்கள் காவியஞ் சூத்திரமா
மென்ன வரைய மறையாம லீந்திடு மெங்களுக்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ-ள்.) தென்னவரை - பாண்டியரையும், வில்லவரை - சேரரையும், மனுவின் திருத்தி - மனுநூல் முறையினால் திருந்தச் செய்து, இசைமின்ன- கீர்த்தி பிரகாசிக்கும்படி, அரைசுபுரி - அரசு செய்கின்ற, ரகுநாதன் - ரகு நாத சேதுபதியின், விலங்கலன்னீர் - மலையை நிகர்த்தவரே, சொன்ன வரை யறிந்தோம் - சொல்லிய அளவும் உணர்ந்து கொண்டோம், உங்கள் காவியம் - உங்கள் காவியமானது, சூத்திரம் ஆம் என்ன - சூத்திரரூபமா யிருந்த தென்னும்படி, வரைய - எழுதுவதற்கு, மறையாமல் - ஒளியாமல், எங்களுக்கு ஈந்திடும் - எங்களுக்குக் கொடும்; (எ-று.)

## குறிப்புப் பொருள்

சொன்னவரை - பொன்மலை, இது தனத்தையும், காவியம் - நீலோற் பல மலரின் அழகு, இது கண்ணையும் குறித்தன. (289)

திறையடிக் கும்பல தீவுங் கலிப்பகை தீரவென்று
பறையடிக் கும்பொன் ரகுநாத சேது பதிவரைவாய்க்
கறையடிக் கும்ப முனிகாட்டக் காணுந்தொல் காப்பியத்தின்
மறையடிக் கும்பன் முடிக்கு முரையொன்று வாணுதலே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) திறைஅடிக்கும் - அலைகள் மோதுகின்ற, பல தீவும் - பல தீவுகளிலுமுள்ள, கலிப்பகை தீர வென்று - வறுமையாகிய பகை நீங்கும் படிசெயித்து, பறையடிக்கும் - பறையை முழக்குகின்ற, பொன் - அழகாகிய, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையின் கண்ணுள்ள, வாணுதலே - பெண்ணே, கறை - புகழுக்கு, அடி - மூல மாகிய, கும்பமுனி - அகத்தியர், காட்டக் காணும் - காட்ட விளங்குகின்ற, தொல்காப்பியத்தின் - தொல்காப்பியத்தோடு, மறை அடிக்கும் - வேதத்தின் ஆதிக்கும், பன்முடிக்கும் - புகழ்தற்குரிய அந்தத்திற்கும், உரை ஒன்று - பொருள் ஒன்றேயாம்; (எ - று.)

திரை - அலை; திரை என்பது திறை எனப்பட்டது. தொல்காப்பியம் - பழமையாகிய இலக்கணக் காப்பியம்; போக்குத் தொல்காப்பிய மென்னும் இலக்கணம். கறை - கரை (உரை - சொல்: புகழ்).

## குறிப்புப் பொருள்

கறையடி - யானை, கும்பமுனி - குடமுனி, இவ்விரண்டுங் தனத்தை யும், காணும் தொல்காப்பியம் - பார்க்கின்ற பழைய காவியம், இதில் காவியம் என்பது கப்பியமென நின்றது. காவிஅம் - நீலோற்பல மலரின் அழகு, இது கண்ணையும் குறித்தன. (290)

சிந்துரத் தந்தள மேற்கொண் டிடப்பர சேனையைமொய்
சிந்துரத் தந்தள வேல்ரகு நாதன் சிலம்பிற்பொன்னே
சிந்துரத் தந்தச்சந் தங்கண் டனமொன்று சேரையடிச்
சிந்துரத் தந்த மிகுகீத முங்கண்டு தேர்வதென்றே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சிந்துரத்து - யானைகளின், அம் - அழகிய, தளம் - தன் சேனையானது, மேற்கொண்டிட - மேற்கொண்டு செல்ல, பரசேனையை -

பிறதேசத்தரசருடைய சேனைகளை, மொய் சிந்து - வலி யழிக்கின்ற, உரத்து - பலத்தையுடைய, அம் தளம் - அழகையும் கனத்தையும்கொண்ட வேல் - வேற்படையைத் தாங்கிய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், சிலம்பில் - மலையிலுள்ள, பொன்னே - பொன்போல்வாளே, சிந்துரம் தந்தம் - யானைக்கொம்பினது, சந்தம் - அழகை, கண்டனம் - பார்த்தோம், ஒன்று - பொருந்திய, சேரை - சேரங்கை என்கின்ற, அடி சிந்துரத்து - அடியில் செந்நிறமுள்ள, அந்தம் மிகு - அழகு மிகுந்த, ஷீதமும் - வண்டுகளையும், கண்டு - பார்த்து, தேர்வது என்று - தெளிவதெக்காலம்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

"சிந்துரத் தந்தச் சந்தம்" என்பது அழகிய யானைக்கொம்பு; தனத்தையும், "ஷீதம்" என்பது வண்டு; கண்ணையும் குறித்து நின்றன. (291)

நிசிசர னன்றுமெய் யென்னும்வெங் கூற்றை நிமிடத்திற்கொல்
விசிகர மன்றொடு வேல்ரகு நாதன் வியன்சிலம்பில்
ருசிகர மென்றயின் மோகன தம்பன ரூபமின்னே
வசிகர மென்றறி விப்பாய் முன்பேதனம் வாய்த்தவர்க்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மெய் - உண்மையாக, நிசிசரன் அன்று என்னும்-அரக்கன் அல்லவென்று சொல்லப்பட்ட, வெம் கூற்றை - கொடிய யமன்போன்ற ராவணனை, நிமிடத்தில் - நிமிஷகாலத்தில், கொல் - கொல்லுகின்ற, விசிகம் - பாணத்தையுடைய, ரமன் - ஸ்ரீராமன், தொடு - பிரயோகித்தற்குரிய, வேல் - வேலையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வியன் சிலம்பில் - பெரிய மலையினிடத்து, ருசிகரமென்று அயில் - சுவை மிகுதியென்று அனுபவித்தற்குரிய, மோகன தம்பன ரூபம் - மோகன ஸ்தம்பன வடிவத்தையுடைய, மின்னே - மின்போல்வாளே, முன் - முன்னே, பேதனம் வாய்த்தவர்க்கு - பேதனம் கிடைக்கப் பெற்றவருக்கு, வசிகரம்- வசிகரத்தையும், என்று அறிவிப்பாய் - எப்பொழுது உணர்த்துவாய்; (எ - று.)

ராமன் என்பது "ரமன்" எனக் குறுகி நின்றது.

## குறிப்புப் பொருள்

"தனம் வாய்த்தவர்க்கு" என்பது தனத்தையும், "வசிகரம்" என்பது கண்ணையும் குறித்தன. வசிகரம் - வாளின் தொழிலைச் செய்வது வசி - வாள்.) (292)

மச்சுப்பெய் வீடு நிதியா மறையவர் வாழ்த்தவொரு
மிச்சுப்பெய் தான ரகுநாதன் மால்வரை மின்னனையீர்
கச்சுப் பயோதர வண்ணப்பொன் மாலைமுன் காட்டியநீர்
நச்சுப்பொய் கைத்தலத் தைவரை மீட்டிடி னன்மையுண்டே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மச்சுப்பெய் வீடு - மச்சுப் போட்ட வீட்டையும், நிதி - திரவியத்தையும், ஆ - பசுக்களையும், மறையவர் வாழ்த்த - வேதியர் ஆசீர் வதிக்க, ஒரு மிச்சு - ஒரு மிக்க, பெய் - (அவர்களுக்குக்) கொடுத்த, தானம் - கொடையையுடைய, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மால் வரை - பெரிய மலையிலுள்ள, மின்அனையீர் - மின்கொடி போல்பவரே, கச்சு - வெறுத்து, பயோதர வண்ணம் - மேக நிறத்தையுடைய, பொன் - அழகிய, மாலை - கண்ணபிரானை, முன் காட்டியநீர் - முன் காட்டின நீர், நச்சுப் பொய் கைத்தலத்து - நச்சுப் பொய்கை யிடத்தும், ஐவரை மீட்டி டின் - பஞ்ச பாண்டவரை மீட்டுவிட்டால், நன்மை யுண்டு - உங்களுக்கு நன்மை யுளது ; (எ - று.)

குறிப்புப் பொருள்

"கச்சுப் பயோதர வண்ணப் பொன்மாலை" - வாரணிந்த தனத்தின் மீதுள்ள ஒளி பொருந்திய சொன்ன மாலை, இது தனத்தையும், நச்சு - விஷம், இது கண்ணையும், கைத்தலத்து ஐவர், இது விரல்களையும் குறித் தன. (203)

தனதடம் பத்தி செலுத்த லரற்கெனுந் தர்மவுள்ளத்
தனதடம் பத்தி தருரகு நாதன் சயிலமன்னீர்
தனதடம் பத்திபந் தந்தீ ரினியஞ் சனவைவச்சு
தனதடம் பத்தி யதிகார முந்தரத் தக்கவரே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) தன - தன்னுடைய, தடம் பத்தி செலுத்தல் - பெரிதாகிய பத்தியைச் செலுத்துதல். அரற்கு எனும் - சிவபெருமானிடத்தே யென் கின்ற, தர்ம உள்ளத்தன் - தர்ம மனத்தை யுடையவன், அது அடு அம்பு - அதுவாகிய கொல்லுகின்ற அம்பை, அத்தி தரு - சமுத்திர ராஜன்மீது பிர யோகித்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், சயிலம் அன்னீர் - மலையை நிகர்த்தவரே, தன தடம் - பொன் மலையையும், பத்து இபம் - பத்து யானை களையும், தந்தீர் - கொடுத்தீர், இனி - இனி, அஞ்சனம் - கருமையாகிய, வைவச்சுதனது - வைவஸ்வத மநுவினது, அடம்பு அத்தி - டம்ப சமுத்திர

மாகிய, அதிகாரமும் - அதிகாரத்தையும், தரத் தக்கவர் - கொடுத்தற் குரியவர் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

தன தடம், இபம், இவை இரண்டும் தனத்தையும், தனதடம் - பொன் மலை; இபம் - யானை. " வைவச்சு தனதடம் பத்தி யதிகாரம் " - யமனது மிருதியாகிய அதிகாரம், இது கண்ணையும் குறித்து நின்றன. (வைவச்சு - யமன்.) (294)

வைப்போ தகத்தை மரமா நிதிமணி மானுமெய்யி
சைப்போ தகத்தை வரரகு நாதன் சயிலமன்னீர்
நைப்போ தகத்தை நுசுப்பீ ரினிதுட னுங்கள்பொய்
கைப்போ தகத்தையுங் கைப்போ தகமெனக் காணட்டுமே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்) வைப்பு - உலகத்தார், ஓது - எடுத்துப் புகழ்தற்குரிய- அகத்து ஐ - ஔதாரிய மனத்தினழகில், மரம் - கற்பக மரத்தையும், மா நிதி - பெரிய சங்கநிதி பதுமநிதிகளையும், மணி - சிந்தாமணியையும், மானும் - நிகர்க்கின்ற, மெய் இசை - உண்மையாகிய புகழையுடைய, போதகத்துஐ - ஞானமாகிய அழகையுடைய, வரம் - மேன்மையுள்ள, ரகுநாதன் - ரகுநாதசேதுபதியின், சயிலம் அன்னீர் - மலையை நிகர்த்த வரே, நை - மெலிந்த, போதகத்து ஐ - சிங்கக்குட்டியின் அழகு வாய்ந்த, நுசுப்பீர் - இடையையுடையவரே, நான் - யான், இனிதுடன் - இனிமை யாக, உங்கள் - உமது, பொய்கைப் போதகத்தையும் - நதிசரமாகிய யானை யையும், கைப் போதகம் எனக் காணட்டும் - துதிக்கையையுடைய இரு யானையைப் பார்த்தாற் போலப் பார்க்கட்டும்; (எ - று) .

## குறிப்புப் பொருள்

பொய்கைப்போது - நீர்ப்பூவாகிய தாமரை, இது கண்ணையும், கைப் போதகம் - துதிக்கையையுடைய யானை, இது தனத்தையுங் குறித்தன. (295)

பண்டுதந் தீர்வையில் லாமற் குடிகட்கும் பற்றலர்மெய்
விண்டுதந் தீர்படச் செய்ரகு நாத விசயன்வெற்பில்
வண்டுதந் தீர்வை கியகுழ லீர்கொண்டை மாலைமணச்
செண்டுதந் தீர்சர முந்தரக் கோருமென் சிந்தனையே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பண்டு - பூர்வத்தில், குடிகட்கு - குடிகளுக்கு, தம் தீர்வை யில்லாமல் - தமது தீர்வை செலுத்தாதிருக்கவும், பற்றலர் மெய் - பகைவருடைய உடம்புகள், விண்டு தந்து ஈர் பட - பிளவு பட்டும் அறுபட்டும் விழவும், செய் - செய்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியாகிய, விசயன் வெற்பில் - வெற்றியுள்ளோனது மலையில், வண்டு தந்து - வண்டுகளைப் பொருந்தி, ஈர் வைகிய - குளிர்ச்சி தங்கிய, குழலீர் - கூந்தலையுடையவரே, கொண்டைமாலை மணச்செண்டு தந்தீர் - கொண்டைமாலையாகிய பரிமளச் செண்டைக் கொடுத்தீர், என் சிந்தனை - என் மனமானது, சரமும் தரக் கோரும் - சரத்தையுங் கொடுக்க வேண்டுகிறது; (எ - று).

### குறிப்புப் பொருள்

"மணச்செண்டு" என்பது தனத்தையும், "சரம்" என்பது கண்ணையும் குறித்தன. (சரம் - அம்பு). (296)

வருமலை வென்ற ரவிபோற் பகையை மடித்துக்கொடைத்
தருமலை வெய்தத் தருரகு நாதன் சயிலமன்னீர்
பொருமலை யீசத் தியையொழித் தீருப் புரிவலியை
யிருமலை யுந்தவிர்த் தானீர் மருத்துவ ரெங்களுக்கே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வரும் - விருத்தியடையா நின்ற, அல்லை வென்ற - இருளை வென்ற, ரவிபோல் - சூரியன்போல, பகையை மடித்து - பகைவரை மடியச் செய்து, கொடை - ஈகையிற் சிறந்த, தரு - கற்பகத் தருவும், மலைவு எய்த - மலைவடைய, தரு - கொடுக்கின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், சயிலம் அன்னீர் - மலையை நிகர்த்தவரே, பொருமலை ஈ - பொருமலைக் கொடுக்கிற, சத்தியை ஒழித்தீர் - சத்தி நோயை நீக்கினீர், உப்புரி வலியை - உப்புரி நோயையும், இருமலையும் - இருமல் நோயையும், தவிர்த்தால் - நீக்கினால், எங்களுக்கு - எமக்கு, நீர் மருத்துவர் - நீரே வைத்தியர் ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

"பொரும் அலை ஈ சத்தி - மோதுகின்ற அலைகளையுடைய கடலின் தன்மை, இனி, பொருமலை ஈ சத்தி - கொல்லத் தக்கவேல் - இது கண்ணையும், உ புரி வல் இயை இரு மலை - இந்த விரும்புதற்குரிய சொக்கட்டான் காயை நிகர்த்த இரண்டு மலைகள், இது தனத்தையும் குறித்தன. (297)

அல்லாரைக் குண்டல வில்லாரை மந்திரத் தாற்செம்பிநா
டெல்லாரை யுந்தொட வாழ்ரகு நாதன்வெற் பேந்திழையீர்
நல்லாரைப் போல்வருங் கல்லாரை விட்டெந்த ஞாயஞ்சொல்லு
மில்லாரைக் காய்கின்ற வல்லாரைக் காட்டுத லெங்களுக்கே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) அல்லாரை - பகைவரையும், குண்டல வில்லாரை - வட்ட மாகிய வில்லையுடையவரையும், மந்திரத்தால் - மந்திரத்தினால், செம்பி நாடு எல்லாரையும் - செம்பி நாட்டிலுள்ள எல்லாரையும் (யாவரையும்), தொட - வெல்ல, வாழ் - வாழ்கின்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், வெற்பு - மலையிலுள்ள, ஏந்திழையீர் - மாதரே, நல்லாரைப் போல் வரும் - நல்லோரைப்போல வருகிற, கல்லாரை விட்டு - மூடரை விட்டு, இல்லாரைக் காய்கின்ற - வறியவரைக் கோபிக்கிற, வல்லாரை - வல்லோரை, எங்களுக்குக் காட்டுதல் - எங்களுக்குக் காட்டுதல், எந்த ஞாயம் - எந்த நியாயம், சொல்லும் - சொல்வீர் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

கல்லாஹாரம் - செங்குவளை, இது கல்லாரை யென நின்றது. இது கண்ணையும் ; வல்லார் - சொக்கட்டான் காயின் உருவத்தை யுடையவர், இது தனத்தையும் குறித்தன. (வல் - சொக்கட்டான் காய்). (298)

உடலை யிருதலை யுற்றோன் பழிதொடர்ந் தோடிவர
வடலையும் வென்ற ரகுநாதன் றேவை யணிவரைவாய்
மடலை மிலைந்த குழலீர்நற் சர்க்கரை வட்டுத்தந்தீர்
கடலையும் விட்டுக் கலந்தாலல் லோருசி காண்பதுவே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) உடல் - போர்புரிய வந்த, ஐயிரு தலையுற்றோன் - பத்துத் தலைகளையுடையவனாகிய ராவணனது, பழி தொடர்ந்து ஓடி வர - பழி தொடர்ந்து ஓடி வருதலும், அடலையும் வென்ற - அதன் வலியையும் வென்ற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், அணிவரைவாய் - அழகிய மலையினிடத்து, மடலை மிலைந்த குழலீர் - பூவிதழ்களை யணிந்த கூந்தலை யுடையவரே, நல் சர்க்கரை வட்டுத் தந்தீர் - அழகிய சர்க்கரைத் திரளை யைக் கொடுத்தீர், கடலையும் விட்டுக் கலந்தாலல்லோ - கடலையையுமிட்டுக் கலந்தாலல்லவோ, ருசி காண்பது - சுவை காண்பது ; (எ - று.)

### குறிப்புப் பொருள்

"வட்டு" - பளுட்டு, இது தனத்தையும்; "கடல்" என்பது கண்ணை யும் குறிக்கின்றன, கலத்தல் - கூடுதல், ருசி காண்பது - காம வின்பத் தைக் காண்பது. (299)

வளமேவு தேவை ரகுநாத பூபன் வரையிடத்தே
குளமேவு செஞ்சொற் குயிலனை யீர்நுங் கொடுவிரக
முளமேவு காம சுரதாகந் தீர்ந்திட வும்மிடத்தா
மிளநீரைத் தந்தினிக் கண்டிற வாவிடி லென்பலனே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வளம்மேவு தேவை ரகுநாத பூபன் - வளம் பொருந்திய தேவை நகரிலுள்ள ரகுநாத சேதுபதியின், வரையிடத்தே - மலையின் கண்ணே, குளம் மேவு செஞ்சொல் - வெல்லம் போன்ற செவ்விய சொற் களையுடைய, குயில் அனையீர் - குயிலை நிகர்த்தவரே, நும் கொடு விரகம் - நுமது கொடிய விரகமானது, உளம்மேவு - என் மனத்திற் பொருந்துதலா லுண்டாகிய, காமம் சுர தாகம் தீர்ந்திட - காம சுரத்தாலுளதாகிய தாகம் நீங்க, உம்மிடத்து ஆம் - உம்மிடத்திலுள்ள, இளநீரைத் தந்து - இள நீரைக் கொடுத்து, இனி கண் திறவாவிடில் - இனி அதன் கண்ணைத் திறவா விட்டால், என் பலன் - எனக்கு யாது பிரயோசனம்; (எ - று.)

### குறிப்புப் பொருள்

இளநீர் - தனத்தையும், கண் திறத்தல் - விழி திறத்தலையும் குறித் தன. (300)

நித்தங்கும் பிட்டுப் பரராசர் பற்கெஞ்சி நிற்பப்பொன்னை
வைத்தங் கிருக்கும் ரகுநாதன் றேவை மணிவரைவாய்
நத்தங்கும் பிட்ட குழலீ ரதிசய நன்றுநன்றிங்
கத்தங்கும் பத்தைவிட் டப்பா விராசிநட் பானதுவே.

### வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பர ராசர் - வேறு தேசத்தரசர், நித்தம் - நாடோறும், கும் பிட்டு - நமஸ்கரித்து, பல் கெஞ்சி நிற்ப - பல்லைத்திறந்து கெஞ்சி நிற்க, பொன்னை வைத்து - திருமகளைத் தன்னிடத்து வைத்து, அங்கு இருக்கும் - அவ்விடத்திலிருக்கிற, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், மணி வரை

வாய் - அழகிய மலையின்கண், நத்தம் கும்பிட்ட குழலீர் - இருளானது நமஸ்கரித்த கூந்தலையுடையவரே, இங்கு - இவ்விடத்து, அத்தம் - ஹஸ்த நக்ஷத்திரம், கும்பத்தை விட்டு - கும்ப ராசியை விட்டு, அப்பாலி ராசி - மீன ராசியை, நட்பு ஆனது - நட்புக் கொண்டதாகிய, அதிசயம் - ஆச்சரிய மானது, நன்று நன்று - அழகிது அழகிது; (எ - று).

## குறிப்புப் பொருள்

அத்தம் - கை, கும்பம் - குடம் (தனம்). அப்பால் ராசி - மீனராசி ; (மீன் - கண்). (301)

*பையா டரவம் புனைரா மலிங்கர் பதம்பணியு*
*மையா னெனுஞ்சொற் றுசரகு நாதன்மைந் நாகமன்னீர்*
*செய்யா ததிசெயஞ் செய்தீர் தனத்தைத் திறந்தளித்துக்*
*கையாற் கடலடைத் தீர்திரு மாறிறங் காட்டியதே.*

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) பைஆடு அரவம் புனை - படமெடுத்தாடுகின்ற பாம்பை யணிந்த, ராமலிங்கர் - ராமலிங்கரது, பதம் பணியும் - திருவடியை வணங்கு கின்ற, மையான் என்னும் சொல் துசம் - (கொடையால்) மேகத்தின் தன்மையையுடையவன் என்னுஞ் சொல்லையே துவசமாகவுடைய, ரகு நாதன் - ரகுநாத சேதுபதியின், மைநாகம் அன்னீர் - மைநாக மலையை நிகர்த்தவரே, செய்யாத அதிசயம் செய்தீர் - செய்ய வொண்ணாத அதிசயத் தைச் செய்தீர், (என்னெனின்) தன் நத்தைத் திறந்து அளித்து - தன் சங் கத்தை வெளிப்படவூதி, கையால் கடல் அடைத்தீர் - கையினுற் கடலை அணைகட்டித் தடுத்தீர், (இந்தச் செய்கை) திருமால் திறம் காட்டியது - திரு மாலின் குணத்தைக் காட்டி விட்டது; (எ - று).

## குறிப்புப் பொருள்

"தனத்தைத் திறந்து" என்றதனால் - முலையையும், "கடலடைத்தீர்" என்றதனால் - கண்ணையும் குறித்தன. (302)

*திரைவந்த முத்தும் வரைவந்த பொன்னுந்தெவ் வேந்தர்தந்து*
*நிரைவந்து போற்றும் ரகுநாதன் தேவையி னேரிழையீ*
*ருரைவந்து தேற்ற வுணர்த்தீரென் னெஞ்ச முழலவைத்த*
*வரைவந் தலரியென் கண்ணனை தென்னகண் மாயமிதே.*

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) திரை வந்த முத்தும் - கடலிற் றோன்றிய முத்துக்களையும், வரை வந்த பொன்னும் - மலையிற் றோன்றிய பொன்னையும், தெவ்வேந்தர் தந்து - பகையரசர் கொணர்ந்து கொடுத்து, நிரை வந்து போற்றும் - வரிசையாய் வந்து வணங்குகிற, ரகுநாதன் - ரகுநாதசேதுபதியின், தேவையில் - தேவை நகரத்திலுள்ள, நேரிழையீர் - நேரிய ஆபரணங்களை யணிந்தவரே, உரை வந்து தேற்ற உணர்த்தீர் - சொற்கள் வந்து என்னைத் தெளிவிக்க அறிவுறுத்தீர், என் நெஞ்சம் உழல வைத்தவரை - என் மனஞ் சுழல வைத்தவரை, அலரி வந்து - பூவாக வரச்செய்து, என்கண் ஆனது - (அவர்) என் கண்ணுக்குக் காணப்பட்டது, இது என்ன கண்மாயம் - இது என்ன கண் மாயமாகும்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

என் நெஞ்சம் உழல வைத்த வரை - என்மனம் உழலும்படி முன் தோன்றிய மலை (கல் - முலை), அலரி வந்து - (பின்) பூ (தாமரை) ஆகத் தோன்றி, என்கண் ஆனது - என் கண்ணுக்குக் காணப்பட்டது, இது என்ன கண்மாயம் - இஃது என்ன கண் மாயமாகும். இனி, வரை வந்து - (முன்), வரை (முலை) தோன்றி (பின்) அல் அரி என் கண்ணனது - இருண்ட வண்டென்று சொல்லப்பட்ட கண்ணனது, கண் மாய மிதுவென்ன - என் கண்ணுக்குத் (தோன்றுதது) இது என்ன மாயம். வரைவந்து - எனவே தனப் புறப்பாடும், அல்அரி என் கண்ணனது என்ன மாயமிதே எனவே கண் புதைத்தலும் பெறப்பட்டன. (303)

சுளைப்பார முட்குட மூற்றுசெந் தேறல் சுனைப்பரந்து
திளைப்பார் கரந்தை ரகுநா யகன்தமிழ்த் தேவையன்னீர்
முளைப்பாரை யென்றும் புதைக்கப் படாதென்று மூதுணர்ந்தோர்
விளைப்பாரை யின்று புதைத்தே தனத்தை விடுகின்றதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சுளைப்பாரம் - சுளைகளின் பாரத்தையுடைய, முட்குடம் - முட்குடம் போலும் பலாப்பழங்கள், ஊற்று - ஊற்றுகின்ற, செந்தேறல் - செந்தேனனது, சுனை பரந்து - சுனைகளிற் பரவி, திளைப்புஆர் - நிரம்புதல் பொருந்திய, கரந்தை ரகுநாயகன் - கரந்தை ரகுநாதசேதுபதியின், தமிழ்த் தேவையன்னீர் - தமிழ்த் தேவையை நிகர்ப்பவரே, முளைப்பாரை - முளைக்கின்றவரை, என்றும் - எப்பொழுதும், புதைக்கப்படாதென்று - மறைக்கப்படாதென்று, மூதுணர்ந்தோர் - பேரறிவினர், விளைப்பார் -

எடுத்துச் சொல்லுவார்கள் (அதனால்), ஐ இன்று புதைத்து - அழகிய கண்ணை இதுபொழுது புதைத்து, தனத்தை விடுகின்றது - தனத்தை விடுவது, ஏ - என்னே ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

மூளைப்பாரை - மார்பில் முளைக்கின்றவர், (தனம்) 'மூளைப்பாரைப் புதைப்பாருண்டா' என்பது மூதுரை. ஐ இன்று புதைத்து - கண்ணை இன்று பொத்தி. ஐ - கண் (ஆகுபெயர்). இனி, விளைப்பாரை - கலகம் விளைப்பாரை (கண்) எனினுமாம். இதனால் தனப்புறப்பாடும் கண் புதைத்தலும் விளங்கின. (304)

சேண்டவர் வாழ்திருத் தேவையை யாளுந் திருமணிமார்
பாண்டவர் தூதன் ரகுநாத சேது பதிவரைவாய்
நாண்டவர் முன்னிட் டதுவே யொளித்துத்தன் னற்பெயரைப்
பூண்டவர் தானத்தைத் நான்வாங்கிக் கொள்ளப் புறப்பட்டதே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) சேண் தவர் வாழ் - உயர்ச்சியாகிய தவசிகள் வாழ்கின்ற, திருத்தேவை ஆளும் - திருத்தேவை நகரத்தை யாள்கின்ற, திருமணிமார் - இலக்குமியையும் கௌஸ்துப மணியையும் மார்பிலுடைய, பாண்டவர் தூதன் - பாண்டவர் தூதனாகிய, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், (நெஞ்சு - மனமே!) நாண்தவர் - நாணுடைய வில் (தனுசு), முன்னிட்டது - (அதனை) முன்னிட்டது மகரம் (ஆகிய இவற்றை), மறைத்து - ஒளித்து, தன் நல்பெயரை பூண்டவர் - தனது மென்னடையையே தனக்குரிய மந்தன் என்னும் நல்ல பெயராகப் பூண்டவராகிய சனி யென்னும் கோள், தானத்தை - (அவரது) இடமாகிய கும்பத்தை, நான் வாங்கிக்கொள்ள - யான் பெற்றுக்கொள்ள, புறப்பட்டது - வெளிப்பட்டது (நன்று) இப்பெண் ; (எ - று.)

## குறிப்புப் பொருள்

நாண்தவர் முன்னிட்டது மறைத்து - நாணுடைய வில் ; அது தனுசு (புருவம்) அதனை முன்னிட்டது மகரம் (அது கண்), அவற்றை மறைத்து என்றமையால், கண் புதைத்தலும் ; தன் நல்பெயரைப் பூண்டவர் தானம் - தனது மென்னடையையே தனக்குரிய மந்தன் என்னும் நல்ல பெயராகப் பூண்டவராகிய சனி என்பவரது இடமாகிய கும்பத்தை (முலையை), நான் வாங்கிக்கொள்ளப் புறப்பட்டது என்றமையால், தனப் புறப்பாடும் தோன்றின.

**(விசேடக் குறிப்பு.)** நெஞ்சு - முன்னிலை யெச்சம். சேண்தவர் - மேனிலையிலுள்ள தவசியர் எனினுமாம், மார் - மார்பு; சிதைந்தது எனினு மாம், தன் நற்பெயரைப் பூண்டவர் - தன் நற்பெயர் - மென்னடை. இப் பெயரைப் பூண்ட மென்னடையார் - சனி என்னுங் கோள். இக்கோளுக்கு மெல்ல நடப்பவன் என்பது பெயர். இப்பெயர் பூண்டவர் தானம்-கும்பம்; இது மூலை. மகர மீனை ஒளித்து வைத்து அஃதில்லாமல் வெறும் பானையை நான் வாங்கிக்கொள்ளப் புறப்பட்டது என்க. "உள்ளதைக் கொடுத்து உல்லம் கொள்" என்பதுபோல "மக்களை விற்று மகரத்தை வாங்கு" என்பது ஒரு பழமொழி சனியின் வீடு மகரமும் கும்பமும் ஆகும். இவ் விரண்டில் ஒன்றை யொளித்து ஒன்றை வாங்கிக்கொள்ளச் செய்வது முறையன்று என்பதாம். (305)

விட்டங் கொடுக்கு முனிவைமுன் னம்பிய வீடணற்குப்
பட்டங் கொடுக்கும் ரகுநாத சேதுபதி வரைவாய்
வட்டங் கொடுக்கும் பணத்துக்கு மேற்றனம் வண்டர் நட்பா
லிட்டங் கொடுக்குமை மேனாட் டவர்க்கும்வந் தெய்தியதே.

## வெளிப்படைப் பொருள்

**(இ - ள்.)** அங்கு ஒடுக்கும் முனிவை விட்டு - அங்குப் பகையை ஒடுக்கும் வெகுளியை விட்டு, முன் நம்பிய - முன்னர்த் தன்னை அடைக்கல மாக நம்பிய, வீடணற்கு - விபீஷணனுக்கு, பட்டங்கொடுக்கும் - இலங்கை நகரத்திற்குக் கிரீடாதிபதியாக்கும், ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையிடத்து, (நெஞ்சு - மனமே,) வட்டம் கொடுக்கும் பணத் துக்கு மேல் தனம் - வாசி கொடுக்கும் காசுக்கு மேல் காசு (பொருள்), வண்டர் நட்பால் - துட்டருடைய நட்பினால், இட்டம் கொடுக்கும் - விருப் பத்தைத் தரும், மைமேல் நாட்டவர்க்கும் - மேகத்தை யுவமையாக நாட்டு கின்ற அவ் வள்ளியோர்க்கும், வந்து எய்தியது-வந்து அடைந்தது (நன்று); (எ - று.)

## குறிப்புப் பொருள்

வட்டம் கொடுக்கும் பணத்துக்குமேல் தனம் - வளைவினைத் தரும் அரவின் படத்துக்கு மேலுள்ள முலை, வந்தெய்து என்றமையால், தனப் புறப்பாடும்; வண்டர் நட்பால் - வண்டாகிய கண்ணின் சேர்க்கையால், (வண்டு + அர் = போலி), மை மேல் நாட்டவர்க்கும் வந்தெய்தியது - மேகத்தின் மேலுள்ள சுவர்க்கத்திலுள்ள தேவர்களின் கற்பகத் தருவை யொத்த கைக்கும் கூட்டுறவு வந்தெய்தியது என்றமையால், கண் புதைத் தலும் தோன்றின.

(வி - கு.) நெஞ்சு - முன்னிலையெச்சம். வட்டம் - வாசி + வளைவு. பணம் - பொருள் + பாம்பின் படம் (கடிதடம்). தனம் - பொருள் + முலை. வண்டர் நட்பினால் - இழிந்தவர் நட்பினால் + வண்டாகிய கண்ணின் சேர்க்கையால், மைமேல் நாட்டவர் - மேகத்தின் மேலுள்ள நாட்டவர் - (தேவர்). வண்டர் - வண்டு போன்ற சஞ்சல இயல்புடையார் எனினுமாம். துட்டருடைய கூட்டுறவால் வள்ளியோர்க்குச் செல்வம் அழியாது வந்தெய்தியது மிக்க வியப்பு என்பதாம். "வந்தெய்தியது" என்பது 'தனம்' என்பதனோடும், "மை மேனாட்டவர்க்கும்" என்பதனோடும் கூட்டப்பட்டது. (305)

நூலா யிருக்கு நர்க் கத்த நிதஞ்சத நூறளிக்கு
மாலா யிருக்கும் ரகுநாதன் றேவை வரைமயிலே
மேலா யிருக்கினும் பார்ப்பா ரிரவலர் மேலன்றிக்கீழ்
போலா யிருக்கினு மீகைத் தனத்தர் புரவலரே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) நூல் - சாத்திரங்களை, ஆய் - ஆராய்கின்ற, இருக்குநர்க்கு - இருக்கு வேதத்தை யுரிமையாகக்கொண்ட வேதியர்க்கு, அத்தம் - பொன்னை, நிதம் - நாடோறும், சதம் நூறு அளிக்கும் - நூறு நூறாக (பதினாயிரமாக)க் கொடுக்கும், மாலாய் இருக்கும் - திருமாலின் அமிசமாயிருக்கும், ரகுநாதன் தேவை - ரகுநாதன் தேவை நகரத்தின், வரை மயிலே - மலையின்கணுள்ள மயில் போல்பவரே!, பார்ப்பார் - பார்ப்பார், மேலாய் இருக்கும் - மேற் பிறப்பினை யுடையவராயினும் (முன்னவராயினும்), இரவலர் - யாசிக்குந் தொழிலுடையவரேயாவர், புரவலர் - அரசர், மேல்அன்றி - மேன்மையுடையரன்றி, கீழ் போலாய் இருக்கினும் - கீழாயினர் போலிருப்பினும் (பின்னவராயினும்), ஈகைத் தனத்தர் - கொடுக்குந் தன்மையுடையவராவர்; (எ - று.)

## குறிப்புப் பொருள்

பார்ப்பார் மேலாய் இருக்கினும் - பார்ப்பாராகிய கண்கள் மேலிடத்தினவாய் இருந்தாலும், இரவுஅலர் - இரவில் மலரும் நீல மலர்களே, மேலன்றி - (அவை) மேன்மையுடையன வன்றி, கீழ் மேலாய் இருக்கினும்-கையின் கீழிடத்துப் பொத்தப்பட்டிருக்கினும் என்றமையால், கண் புதைத்தலும்; ஈகைத் தனத்தார் - பொன்போன்ற தேமற் படர்ந்த தனத்தார் (முலையார்), புரம் வல் அர் - நகரங்களில் ஆடும் சூதாடு கருவியாக யுள்ளார் என்றமையால், தனப் புறப்பாடும் தோன்றின.

(வி - கு.) மேலாயிருக்கினும் - மேலிடத்திருப்பினும் எனினுமாம். இரவலர் - இராப்பூ - இரவில் மலரும் நீலம், கீழ் போலாயிருக்கினும் -

கீழாயிருக்கினும். போல் - அசை. ஈகைத் தனத்தர் - கொடைத்தன்மை யர், பொன் முலையார். (பொன் - தேமல்). புரவல்லர் - புரத்தல் வல்லவர் + நகரங்களில் ஆடும் வல் ஆய் உள்ளவர், வல் - சூதாடுகருவி. கண் மேலிடத்திருத்தலும் முலை அதன் கீழிடத்திருத்தலும் நினைக, பார்ப்பார்க்கு மேல் - மேல்பிறப்பு; ஈகைதனத்தார்க்குக் கீழ் - கீழ்பிறப்பு. (307)

வல்லியத் தானையி லொன்னலர் கேட்டுப்பின் வாங்கவரு
பல்லியத் தானை ரகுநாத சேது பதிவரைவாய்ச்
சொல்லியத் தானை யழைக்குமுன் மாமி தொடருதல்போ
லெல்லியத் தானை யிசையாம லேதுக் கெறிகயிறே.

## வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வல்லியத்தானையில் - புலி போன்ற சேனையில், ஒன்னலர் - பகைவர், கேட்டு - கேள்வியுற்று, பின்வாங்க - பின்னிடும்படி, வரு - வருகின்ற, பல் இயம் தானை - பல வாத்திய முழக்கத்தோடுகூடிய சேனையையுடைய, ரகுநாத சேதுபதி வரைவாய் - ரகுநாத சேதுபதியின் மலையில், அணங்கே) :—, சொல்லி - (தோழியால்) சொல்லி, அத்தானை அழைக்குமுன் - அத்தானை (தலைவனை) யழைப்பதற்குமுன், மாமி தொடருதல் போல் - மாமியானவள் பின் தொடருதல் போல, எல்லி அத் தானை - இரவில் அவ்வுடை, இசையாமல் - இயையாமல் (மேற் போர்வையாகக் கொள்ளாமல்), எறி கயிறு ஏதுக்கு - எறியத்தக்க நாண் (கொண்டது) எதன் பொருட்டு; (எ - று.)

அவ்வுடை என்றது அவ்விரவை யொத்த ஆடையை; அது காராடை என்க. அணங்கே என்பது கேட்போர்; அது எஞ்சி நின்றது.

## குறிப்புப் பொருள்

நாயகனை அழைத்த சமயத்தில் மாமி தொடருதல் புணர்ச்சிக்கு இடையூறுதல் போல இச்சமயம் நாணம் நினக்குத் தொடருதல் புணர்ச்சிக்கு இடையூறுகும் என்பதாம். இஃது இடையூறு கிளத்தல். இங்ஙனம் கூறவே நாணிக்கண் புதைத்தலாகும். ஆகவே கண் புதைத்தல் விளங்கவே தனப்புறப்பாடும் தானே தோன்றியது.

(வி - கு.) ஆனையில் ஒன்னலர் கேட்டுப் பின்வாங்க வல்லியத்து வரும் பல்லியத்தானை ரகுநாதன் எனினுமமையும், இரவில் உடையிலார்க்கு நாண் ஏதுக்கு என்பது மற்றொரு பொருள். நாண் - கயிற்றுக்கும் நாணத் திற்கும் பெயர். அவ்வமயம் மாமி தொடருதல் புணர்ச்சிக்கு இடையூறு

தல் போல இவ்வமயம் நாணம் தொடருதல் புணர்ச்சிக்கு இடையூறுகும் என்பதாம். (308)

வனசம் பழனம் வளர்செம்பி நாடன் மலிசெல்வத்துட்
பனசம் பழனம் ரகுநாத சேது பதிவரைவாய்க்
கனசம் பழனம்புயர்கோப் பொருளிடங் கண்டுகொண்டோ
மனசம் பழனம் பனதா ளிடமு மறிவ தென்றே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) வனசம் - தாமரைகள், பழனம் வளர் - வயல்களில் விருத்தியடையாநின்ற, செம்பி நாடன் - சோழநாட்டையுடையவன், மலி- நிறைந்த, செல்வத்துள் - செல்வத்தில். பனசம் பழன் - பலாக்கனியை நிகர்த்தவனுகிய, நம் ரகுநாத சேதுபதி வரைவாய் - நம்முடைய ரகுநாத சேதுபதியின் மலையில், கனசம்பு - பெருமையையுடைய சம்பு என்னும் பெயரையுடையவரும், நம்பு உயர் அழல்கோப் பொருள்-விரும்பும் உயர்ந்த அக்கினிக் கண்ணையுடைய பரம் பொருளுமாகிய சிவபெருமானது, இடம் கண்டுகொண்டோம் - இடமாகிய கைலைமலையைக் கண்டுகொண்டோம், (இனி) அன்னம் சம் - அன்ன வடிவமாய், பழமை - பழமையான வேதத்தைப் பிரமனுக்கு அருளிய, நம்பனது - நம்பனுகிய திருமாலினது, ஆள் இடமும் - ஆளுமிடமுமாகிய பாற்கடலையும், அறிவது என்று - எப்போது அறிவது; (எ - று.)

குறிப்புப் பொருள்

கைலை போலும் தனம்; கடல்போலும் கண் என்க. பொருளிடம் கண்டுகொண்டோம் என்றனல், தனப் புறப்பாடும், நம்பனது ஆளிடமும் அறிவது என்று என்றதனல், கண் புதைத்தலும் தோன்றின.

(வி - கு.) மலி செல்வத்துட் புனசம் பழன் நம் ரகுநாதன் - நிறைந்த செல்வத்துள் பலரோடுண்ணும் பலாப்பழமாகவுள்ளவன் நம் ரகுநாதன் எனினும் அமையும்; கனசம்பு - பெருமையையுடைய சம்பு பகவான், அழல்நம்பு உயர்கோ - அழலென்று நம்பிய உயர்ந்தகோ ஆகிய பொருள். இடம் - அண்ணமலை, (மூலை) எ - று. அன்ன அழன் நம்பனது சம்பு ஆளிடமும் - அத்தகைய பூதநாதனது நரியை ஆண்ட இடமும், அது ஆலவாய். ஆலவாய் - விடமுள்ள இடம், (கண்) எ - று. நோய் நோக்கும் உடைமையால் கூறினர். அழன் - பூதம், பேய் இவைகட்குப் பெயர்; "அழற்கொடியட்டான்" - பூதனையைக் கொன்றன் என்ப. ஆலவாய்க் கடவுள் பூதத்துடன் வந்தது அறிவர். அங்கே, சம்பு - நரியை ஆண்டதும் அறிவர். (309)

மாதண்ட காரண்ய வாசிகண் முன்னிகல் வாய்க்கிலென்வில்
காதண்டு மென்றருள் செய்ரகு நாதன் கவின்வரைவாய்க்
கோதண்டக் குந்தமிங் கின்மைமெய் யாகிற் குடமலேத
லேதண்ட ராகவ மோதலங் கார விளங்கொடியே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) மா - பெருமை பொருந்திய, தண்டகாரண்ய வாசிகள் முன் - தண்டகாரண்ணிய வாசிகளாகிய ருஷிகளுக்குமுன்னே, இகல் வாய்க்கில் - போர் நேரிட்டால், என்வில் - என் வில்லானது, காது அண்டும் - காதைப் பொருந்தும், என்று அருள்செய் - என்று அருளிச் செய்த, ரகுநாதன் - ரகுநாத சேதுபதியின், கவின் வரைவாய் - அழகிய மலேயி னிடத்து, ஓது அலங்கார இளங் கொடியே - சொல்லுகின்ற அலங்காரங் களேயுடைய இளமைவாய்ந்த பூங்கொடி போல்பவரே! கோதண்டம் குந்தம் இங்கு இன்மை - வில்லோடுகூடிய வேல் இவ்விடத்து இல்லாமை, மெய்யாகில் - உண்மையானல், அண்டர் ஆகவம் - தேவர் போரில், குட மலேதல் - குடங்களேக் கொண்டு பொருதல், ஏது - யாது பயன்; (எ - று.)

குறிப்புப் பொருள்

கோதண்டம் குந்தம் இன்மை - வில்லோடுகூடிய வேல் இல்லாமை. (குந்தம் - வேல்) எனவே புருவத்துடன் உள்ள கண் இல்லாமை. இங்ஙனம் கூறவே கண் புதைத்தலும்; குடம்மலேதல் - குடங்கள் பொரு தல், எனவே முலேகள் பொருதல். இங்ஙனம் கூறவே தனப்புறப்பாடும் தோன்றின.

(வி - ரு.) இகல் என்றது அரக்கர்களுடைய போரை. என் வில் காது அண்டும் என்றது இராகவன் அரக்கர்களேக் கொல்லுதலே. குடவர் போர் என்பதில், குடவர் - இடையர், அவர்க்குக் குடவர் என்பதும் பெயர். அண்டர் ஆகம் ஓது - இடையர் போர் என்று சொல் எனினுமாம். (310)

கோவைத் துறையொன்றி ஞனூறு கொண்டமைக் கொண்டலெங்க
டேவைத் துரைதள வாய்ரகு நாதன் சிலம்பின்மத
னேவைக் கொடியை முரசைவின் ஞணேயென் பால்வனசப்
பாவைக் கமுதனே யீர்மறைத் தீரென் பகையென்னவே.

வெளிப்படைப் பொருள்

(இ - ள்.) கோவைத் துறை ஒன்றில் - கோவைத்துறை யொன்றிற் ருனே, நானூறு கொண்ட - நானூறு பாடல்களேக் கொண்ட, மைகொண்

டல் - கரிய மேகத்தை நிகர்த்தவன், எங்கள் தேவைத்துரை - எம்முடைய தேவைநகர்க்கிறைவன், தளவாய் ரகுநாதன் - தளவாயாகிய ரகுநாத சேதுபதி, (அவனது) சிலம்பில் - மலையில், வனசப் பாவைக்கு - மலர்மக ளாகிய இலக்குமிக்கும், அமுது அனையீர் - அமுதத்தை நிகர்த்தவரே, என் பகை என்ன - என் பகை யென்று நினைத்து, மதன் ஏவை - மன்மதனது அம்பையும், கொடியை - அவனது கொடியையும், முரசை - அவனது முர சத்தையும், வில் நாணை - அவனது வில் நாணையும், என்பால் மறைத்தீர் - எனக்கு ஒளித்தீர், என் பகை என்ன - என்மீது உமக்கு பகை யென்னை; (எ - று.)

## குறிப்புப் பொருள்

மன்மதனது அம்பு என்றது, இவ்விடத்தில் தாமரை (நீலோற்பலம் என்பனவற்றை. கொடி யென்றது மீனை. முரசு என்றது கடலை. வின்நாண் என்றது வண்டினை. இவை யாவும் கண்ணைக் குறித்தன; உவமைப் பொருள்களாதலால் இவ்வாறு கூறினர் தனப்புறப்பாடு தானே விளங்கிற்று. (400)

ஒருதுறைக்கோவை முற்றும்

---

* இடையிலுள்ள 89 செய்யுட்கள் அகப்படவில்லை.

† "திரை வந்த முத்தும்" என்னும் முதற்குறிப்பையுடைய 303-வது செய்யுள் முதல் இறுதிச் செய்யுள் வரை பிரம்மஸ்ரீ - ஐயங்கார் சுவாமிகள் எழுதிய விசேஷக் குறிப்புகள்.

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 7 | தை கொண்டு | கை கொண்டு |
| 8 | 4 | லங்காரம் | லலங்காரம் |
| 58 | 1 | புறப் | புறப்பாடு |
| 69 | 27 | துரியோதான | துரியோதன |
| 70 | 13 | வேற்பேற | வெற்பேற |
| 89 | 28 | வினையச்சமா | வினையெச்சமா |
| 160 | 5 | நக்ரத்தார் | நகரத்தார் |
| 161 | 16 | அகங்தேசம் | அங்கதேசம் |
| 161 | 20 | கைலே் | கைவேல் |

## இந்நூலில் வரும் வேறுதுறைகள்

| பக்கம் | செய்யுள் எண் | சில செய்யுட்களில்வரும் வேறு துறைகள் |
|---|---|---|
| 6 | 4 | வழி விறுதல் |
| 7 | 5 | நடுங்கநாட்டம் |
| 9 | 7 | புறவொடு புலம்பல் |
| 17 | 16 | மடற்றிறம் |
| 39 | 39 | பொருள்வயிற் பிரிவு |
| 191 | 272 | கெடுதி விறுதல் |

| பக்கம் | செய்யுள் எண் | சில செய்யுட்களின்பின் இரண்டடிகளில்வரும் ஊரின் பெயர்களும் நாட்டின் பெயர்கள், வேறு பெயர்கள் முதலியன |
|---|---|---|
| 2 | 2 | சேலம், வல்லம் |
| 38 | 38 | கோட்டூர், கமலாலயம் |
| 46 | 47 | கூடல், திருப்பரங்குன்றம் |
| 74 | 84 | தனுக்கோடி |
| 109 | 134 | வல்லாரைக் கற்பம், கையாந்தகரை கற்பம் |
| 114 | 141 | மச்சபுரம், துரியோதனன் |
| 115 | 142 | சங்கிலியார், பரவையார், சுந்தரன் |
| 115 | 143 | சேலம், மலையாளம், திண்டிக்கல் |
| 116 | 144 | கோவூர், குன்றத்தூர், நாவூர், காஞ்சிபுரம் |
| 121 | 152 | கும்பகோணம், சாரங்கபாணி |
| 128 | 164 | திரிகூடம், குற்றாலம் |
| 133 | 173 | கங்கை, சித்திரகூடம் |
| 135 | 176 | மதுரை |
| 138 | 181 | கடவூர், அமுதகடேசர் |
| 139 | 183 | திருக்கச்சூர், செங்கற்பட்டு, கழுக்குன்றம், கோவளம் |
| 139 | 184 | அல்லூர், அத்திப்பட்டு, வல்லூர், நெய்தல் வாயல் |
| 146 | 196 | கடவூர், நாமக்கல், திருத்தொண்டத் தொகை |
| 159 | 217 | கலிங்கம், வங்கம், மலையாளம், குடகு, மச்ச தேசம் |
| 162 | 223 | இலம்பையங்கோட்டூர், தற்கோலம், திருவிற் கோலம், திருவேற்காடு |
| 164 | 226 | திருவானைக்கா, சிரகிரி, கருவூர், திரியம்பகம் விருப்பாட்சி |
| 171 | 237 | மல்லிகார்ச்சுனம், துங்கபத்திரை |
| 178 | 249 | அத்திரி, சரபங்கன் |
| 181 | 253 | வாரணவாசி, கோகனம் |
| 181 | 255 | திருவாரூர், கமலத்தடம், அம்பலவாணன் |
| 182 | 256 | சொர்க்கம், பரமபதம் [மன்று |
| 185 | 262 | நாட்டாங்குளம், மலையாங்குளம், காட்டாங் குளம் |
| 187 | 266 | திருக்கச்சி, அத்திகிரி, பாலாறு, திருப்பாற் |
| 188 | 267 | திருநீர்மலை, திருவிடந்தை, மயிலை [கடல் |
| 189 | 269 | முசுகுந்தன், கஞ்சன் |
| 189 | 270 | பெருங்காயம், கோஷ்டம், கடுக்காய்ப்பூ |
| 195 | 280 | பெருந்துறை |
| 196 | 282 | சந்தைப்பேட்டை |
| 197 | 283 | பந்தரை, கஞ்சத்தை |
| 198 | 286 | கருமானை, கும்பகாரன் |
| 199 | 287 | கூடவிறை, பாணரை |

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| முதற் குறிப்பு | பக்கம் |
|---|---|
| அ | |
| அங்கலிங்கமலை | 115 |
| அஞ்சையிலேவெரு | 190 |
| அடம்பிடிக்கைதை | 185 |
| அடலையுடைய | 174 |
| அதிராவிருந்தவிருட் | 102 |
| அமரர் மனிதர் | 138 |
| அயனங்களித்த | 172 |
| அருணையுந்து | 175 |
| அலசத்தைவாளி | 124 |
| அலம்பணிவீரை | 83 |
| அல்லாரைக்குண்டல | 206 |
| அளையுண்டிடநவ | 134 |
| அறங்காவல்கொண்ட | 55 |
| அனமிகத்தோன்று | 126 |
| ஆடகமாமதில் | 46 |
| ஆடியதோகையன்னார் | 52 |
| ஆயுந்தமிழினும் | 3 |
| ஆரங்கராசலமா | 121 |
| ஆரத்தொடையிடை | 10 |
| ஆரியர்போற்று | 63 |
| ஆர்க்குங்கலாப | 90 |
| ஆலங்கையாதவமுதின் | 115 |
| ஆவசியம்பொன்னை | 147 |
| ஆவியும் பூவும் | 37 |
| இங்கிதரத்தின | 134 |
| இடக்குமுறை செய் | 179 |
| இடஞகமற்றைவல | 119 |
| இயத்தலைபெற்ற | 12 |
| இலையே தழைத்து | 64 |
| இல்லாரைக்கற்ப | 109 |
| ஈரஞ்சுகண்ட | 138 |
| உடலையிருதலையுற் | 206 |
| உடலையுடலை | 172 |
| உருமானையிட்ட | 188 |
| ஊனிடமானமுனை | 74 |
| ஊனைமுன்காட்டு | 186 |
| எண்கட்டுமானபுற்றோன் | 117 |
| ஒன்றாருயிர் | 92 |
| ஓகையையூகை | 182 |
| ஓதண்டர் நாட்டிற் | 161 |
| க | |
| ககராசவீரவெங்கேதன | 24 |
| கங்கமுஞ்சீனமும் | 47 |
| கங்கையிலேவிடு | 165 |
| கங்கையைக் கண்டவர் | 199 |
| கடந்தோயமதகளிறன் | 98 |
| கடைமுன்னர் நின்று | 137 |
| கட்டணைக் கோட்டை | 196 |
| கண்டரிகம்பவுவாவை | 110 |
| கண்டரிதங்கையுரத்தை | 118 |
| கண்டேயெனுஞ்செங் | 73 |
| கதக்குஞ்சர | 178 |
| கம்பக்கருணையங்தேனூறு | 25 |
| கருக்குஞ்சிலீ முகமன் | 150 |
| கலமலிவேலை | 159 |
| கலைக்கேநெடுங்கட | 79 |
| கலையிருந்தாலு | 278 |
| கலையை முன் காட்டு | 153 |
| கல்லொன்றிரண்டிளநீர் | 31 |
| களிக்குங்கயல்வெடி | 105 |
| கனமான நீர் | 166 |
| கன்னித்திரைச்சங்கு | 40 |
| காக்குங் கருணையும் | 87 |
| காரணவுங்கொடை | 82 |
| காராநிதிதரு | 165 |
| கார்த்தலந்தோயுங் | 68 |
| கார்த்தாமவார் | 108 |
| கார்நிறையைத்தைத் | 141 |
| கார்பூத்தபுன்னை | 34 |
| காலாலுலகையள | 143 |
| காலைத்தந்தத் | 184 |
| காலையிலாமலெக்காலை | 168 |
| கானேர் பொருப்பு | 75 |

| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| கிடைக்குங் கிடைக்குங் | 154 |
| கித்தியமாண்மை | 157 |
| கிள்ளைமறை சொல | 194 |
| கீதங்குழல்கஞ்சம் | 27 |
| குச்சிலை யெய்தப் | 190 |
| குஞ்சத்தை வெள்ளை | 197 |
| குத்தி பல்லாரி | 178 |
| குமையவரை நிமிட | 135 |
| குருவார்த்தை மேற்கொண்ட | 163 |
| குலத்தைத்தந்தேவர் | 150 |
| குனிக்குமுன்னே | 181 |
| கூட்டிட | 193 |
| கேட்டத்தருவருமுட் | 120 |
| கேட்டந்த மன்னர் | 189 |
| கொத்தார் குழலியர் | 53 |
| கொடைக்கஞ்சிய முகிலார் | 157 |
| கொள்ள மறையவர் | 177 |
| கோங்கார் முகிழ் | 71 |
| கோசிகமத்தமணி | 141 |
| கோட்டந்தவிர்த்த | 24 |
| கோவைத்துறைக்கு | 137 |
| கோவைத்துறையொன் | 215 |
| **ச** | |
| சங்கேகொடைத்தருவே | 39 |
| சங்கையிலாமவிர | 133 |
| சத்தந்தெளிக்குங் கலை | 60 |
| சத்துருமித்துரு | 158 |
| சந்தனு போச | 191 |
| சந்தேறியதடம் | 33 |
| சித்தியைக் கண்ட | 142 |
| சித்திரையாவணி | 174 |
| சிந்தாடவந்தவர் | 108 |
| சிந்துரத்தந்தளமேற் | 201 |
| சிற்றுலவட்டங்குடை | 128 |
| சினத்தாமரைய | 92 |
| சீதகங்காதரற் | 99 |
| சீதக்கமலவயற் | 94 |
| சீலத்துமிக்க தளவாய் | 76 |
| சுகராலையத்தை | 182 |
| சுரதத்தில் வேள் கல்வி | 153 |
| சுளைப்பார முட்குட | 209 |
| சூலங் கைக்கொண்ட | 2 |

| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| சூனந்தந்திரமலி | 155 |
| செங்கைத்தருவினி | 104 |
| செந்தாதும்பூவுஞ் | 19 |
| செம்பேந்திய மதில் | 66 |
| செய்க்கஞ்சனந்தும் | 72 |
| செல்லக்கைம்மாறு | 140 |
| செல்லூரப் பார்த்தி | 139 |
| செற்கோலவெப்ப | 162 |
| சென்றத்தைக் கண்ட | 139 |
| சேண்வர்வாய்திரு | 210 |
| சேதுவையாள | 145 |
| சேயென்று வந்ததளவாய் | 23 |
| சேலனமேதி | 169 |
| சேல்கொண்டநீல | 96 |
| சொற்பதக் கற்பனை | 129 |
| சொற்பாவலர்தங் | 107 |
| சொற்புதனுங் கல்வி | 145 |
| சொற்பேறு பெற்ற | 70 |
| **த** | |
| தங்காவியன்ன | 154 |
| தடமிகுந்தென்னவனஞ் | 172 |
| தடமேவுதேவைப் | 105 |
| தடம்பணிலஞ்செறியுஞ் | 186 |
| தம்பதமாதியிறக்க | 169 |
| தரியார்வணங்கும் | 93 |
| தரைக்குத் தரையென | 188 |
| தருபாற்புதுமுத்து | 100 |
| தருவானகந்தொடு | 164 |
| தவளையிற் செல்வளர் | 124 |
| தளையாடுகாலொடொன் | 126 |
| தனதடம்பத்தி | 203 |
| தன்னம்புயத்திற் | 18 |
| தாகமிருந்த | 191 |
| தாருஞ்சிலையுஞ்சிலையுங் | 67 |
| தார்கொண்டபாடலம் | 17 |
| தாவியங்கற்றமிலா | 117 |
| திக்கசமாமைமக | 144 |
| திசைபுகழ்கன்னன் | 131 |
| திசையம்படிக்க | 179 |
| திடமுமுரமுமிசை | 133 |
| திரையோங்கு பாற்கடல் | 42 |
| திரைவந்தமுத்தும் | 208 |

| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| திவளக்களிவண்டி | 91 |
| திறையடிக்கும்பல | 201 |
| தீனத்தைவென்றகொடை | 111 |
| துணிவார்க்குமாமலி | 181 |
| துரந்தரராச | 166 |
| துருப்பதனைக்கொணர் | 171 |
| தூதேநடந்த | 71 |
| தெளியேகவொண்குடை | 89 |
| தென்னவரைவில்ல | 200 |
| தேசிகப்போதணி | 51 |
| தேவுளிருக்கும்வளர் | 127 |
| தேனூர்மணமுல்லை | 6 |
| தொகுத்தளவாய்மகிழ் | 114 |
| தொடைகாட்டும் பூங்குழலார் | 54 |
| தொடைபெற்றகொண்டல் | 26 |
| தோடார்பசுங்குழை | 101 |
| தோமினியார்செயினுஞ் | 146 |
| **ந** | |
| நங்காமதேனுவென | 56 |
| நடமுத்திசையென | 156 |
| நடுப்பதுமாலய | 76 |
| நடைநலஞ்சாதிகுல | 11 |
| நரியாடுமான்முச | 160 |
| நல்லார் நகைக்கு | 62 |
| நறைபெற்ற மாலை | 45 |
| நாகஞ்செறிமலர் | 15 |
| நாகரமுந்து | 146 |
| நாதகமம்புகதை | 195 |
| நாலாம்பனுவனவரச | 168 |
| நாலாயுதத்தையிகன் | 113 |
| நாலார் கலிப்படை | 187 |
| நாளத்தையம்புயவன் | 119 |
| நிக்கிரகமேனை | 129 |
| நிசிசரனன்று | 202 |
| நிதிகொண்டவண்மை | 83 |
| நித்தங்கும்பிட்டு | 207 |
| நிலையேந்துமாளிகை | 57 |
| நிற்கடங்காக்கொடி | 176 |
| நீதநந்தாததளவாய் | 74 |
| நீலக்கரும்புய | 22 |
| நூதனமாகத்தருவிற் | 183 |
| நூலாயிருக்குநர் | 212 |
| நூலுந்துடியுங் | 48 |
| நெய்க்கின்றகூந்தற் | 80 |
| நெய்வாய்த்திகன் | 65 |
| நெருப்புஞ்சதாகதி | 184 |
| நேர்கின்ற சிற்றிடை | 100 |
| **ப** | |
| படமினியார்வரைந் | 122 |
| படியிட்டமாக | 180 |
| படியுமம்ரருலக | 120 |
| பண்டுதந்தீர்வையில்லா | 204 |
| பண்டேந்தியசங்கினம் | 7 |
| பண்ணூர்குதலை | 32 |
| பண்மூடியசெங்கனி | 27 |
| பம்புவியாகரணங்களை | 198 |
| பலவுங்கமுகுங் | 86 |
| பணையேதடங்கண்டு | 80 |
| பன்னுந்தமிழ் | 88 |
| பாகந்தருமிசை | 14 |
| பாரேழ்கழனியும் | 20 |
| பால்வாய்ப்பசுந்தமிழ் | 35 |
| பாவாய்நிறைகின்ற | 29 |
| பாவுக்கிசையும் | 66 |
| பாலூர்சங்கிராம | 116 |
| பிங்களத்தால்வந்த | 148 |
| பிறியாததெவ்வர்க்கும் | 81 |
| புடவிகடந்த | 161 |
| பூணைதந்தை | 162 |
| பூமான்பெருஞ்செல்வம் | 130 |
| பூமேவுதெய்வத் | 1 |
| பூவளர்வாவிப் | 55 |
| பையாடரவம்புனை | 208 |
| பொருப்பதெதிர்வரல் | 112 |
| பொற்பணைவேழம் | 58 |
| பொன்னிக்குப்பொன்னி | 156 |
| போரணவாசி | 180 |
| போராயினுகம்புலி | 41 |
| போரூடுசென்று | 131 |
| போரேறுவெங்கணரக்கன் | 8 |
| போற்றுங்கமடம் | 44 |
| **ம** | |
| மகக்கண்ணிற்சில | 49 |
| மகமிலைமேவவளர் | 149 |

| முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|
| மச்சுப்பெய்வீடுநிதி | 203 |
| மஞ்சணையிஞ்சி | 189 |
| மஞ்சாங்கருதலர் | 112 |
| மடற்கேதகைசுற்று | 68 |
| மதிசேரமுதவிதழியஞ் | 43 |
| மலைவேலிவையம் | 50 |
| மல்குங்கிரணமணி | 49 |
| மழையணிவார்குழல் | 84 |
| மன்னுமரக்கனை | 159 |
| மாட்டாங்குளப்படி | 185 |
| மாதண்டகாரண்ய | 215 |
| மாவானசூரனிருப்பை | 16 |
| மானூர்விழியென | 60 |
| மானிலமெங்கு | 146 |
| மித்திரபுத்திர | 171 |
| மித்திரமன்னர்மகிழ | 125 |
| முகைகாட்டியமுன்றில் | 51 |
| முடுக்கவருதிரண் | 132 |
| முத்திக்குவேலி | 85 |
| முத்துமரகத | 142 |
| முல்லையலங்கலின் | 175 |
| முள்ளார்வெங்கானஞ் | 44 |
| முரையுந்தருமமும் | 78 |
| முனம்படைத்தீரரென | 176 |
| முன்னூரியைச்சிலையாக | 152 |
| முன்னீர்சொரிமுத்தம் | 60 |
| மெய்ம்மலரானை | 77 |
| மேகந்தருமணி | 28 |
| மேவியதூதின் | 69 |
| மைம்மாநிகர்த்தமலை | 10 |
| மையாழிவையம் | 86 |
| மொய்தோய்பகைஞர் | 95 |
| **ய** | |
| யாழுங்குழலும் | 21 |
| **வ** | |
| வங்கந்தழுவுங் | 98 |
| வஞ்சத்திசைமன்ன | 102 |
| வஞ்சனையாக | 152 |
| வணங்காததெவ்வை | 78 |
| வண்டிறகாலவலர் | 125 |
| வந்தனமாகத்தொழுவார் | 170 |
| வயத்துக்கிசைந்த | 95 |
| வரமேந்துவெற்றி | 106 |
| வரிவளைநாலுமறு | 106 |
| வருமலைவென்றரவி | 205 |
| வரைசேர்மருமத்திரு | 13 |
| வல்லாரநகாட்டிய | 123 |
| வல்லியத்தானை | 213 |
| வழியும்பிரசமலர் | 59 |
| வளமேவுதேவைரகுநாத | 207 |
| வாட்டானை | 193 |
| வனசம்பழனம் | 214 |
| வாவிக்குளொற்றை | 38 |
| வாளும்பரசும் | 63 |
| வானங்குலவரை | 200 |
| வானைச்சுரபியை | 8 |
| வான்சிந்திப்பூநிகரில்லா | 195 |
| விட்டங்கொடுக்குமுனி | 211 |
| விண்புவிபூடண | 197 |
| விலைப்பாரரசரறிய | 110 |
| விலையைமறைக்கு | 121 |
| வில்லிளங்காளைமயில் | 30 |
| வில்வழக்கத்திற்றனஞ் | 128 |
| விளவாய்வருமிகன் | 136 |
| வீடணனுற்சொலி | 164 |
| வீரரண்போர்க்கு | 192 |
| வீரைக்குள்வந்த | 58 |
| வெங்கயங்கேதம் | 97 |
| வெப்பளித்தாவமுறை | 167 |
| வெம்பிறகரணமென | 122 |
| வெருவிடந்தைக்கோல | 188 |
| வெல்லும்பதாகை | 103 |
| வென்றேந்தினமிக | 144 |
| வேந்தாதி வேந்தர் | 151 |
| வேரிப்பசுந்துணர் | 90 |
| வேற்சேரலர்மச்சர் | 149 |
| வைப்போதகத்தைமரமா | 204 |
| வைம்மையுடைய கை | 134 |